பேசி விடு மனமே பேசி விடு...!

ஜெய்சக்தி

பேசி விடு மனமே பேசி விடு...!

பேசி விடு மனமே பேசி விடு...!

ஜெய்சக்தி

EDU MANAME PESIVEDU.

sakthi

ition: September, 2012

ages: 328

ed: 11.6 White

ரூ. 145/-

EN PATHIPAGAM
, New No:23
malai Road,
olony,
e - 641 011.
4202731.
2 32646.

By : TamilThen Pathipagam.

AHA OFFSET, CHENNAI

பேசிவிடு மனமே பேசிவிடு...!

அத்தியாயம் -1

"நல்ல படியா போயிட்டு வரணும்யா. காரெல்லாம் செக் பண்ணிட்டியா?" என்று கேட்டான் சாமித்துரை, தனது பி.ஏ.விடம்

"அதெல்லாம் சரி பண்ணிட்டேன் சார். எல்லாம் பார்த்துட்டேன். நேத்தே வொர்க்ஷாப் போய் எல்லாம் பார்த்தாச்சு." என்றான் சாமிதுரையினுடைய பி.ஏ. விசுவா.முழுப்பெயர் விசுவநாதன்.

"அதெல்லாம் வாய் கிழிய இந்தக் கடைசிக்கும், அந்தக் கடைசிக்கும் பேசுவே. அப்புறம் பார்த்துக்க. நடுவுல ஏதாவது பிரச்சினை வந்தது... நான் சும்மா இருக்க மாட்டேன்." என்றார் சாமிதுரை அலையஸ் வனமாலி.

"அப்படியெல்லாம் ஒண்ணும் வராது சார். நான் பொறுப்பு." என்றான் விசுவா மறுபடியும்.

"ஆமாமா. நீ பொறுப்பு. எனக்குத் தெரியாதா? எத்தனை தடவை நான் பார்த்திருக்கேன்." என்று மறுபடியும் மட்டம் தட்டினான் சாமிதுரை.

"இந்தத் தடவை பாருங்க சார். போயிட்டு வந்ததுக்கு அப்புறம் நீங்களே சொல்லப் போறீங்க. சூப்பர் ட்ரிப்புயா! அப்படின்னு." என்றான்.

வனமாலிக்கும் லேசாக புன்னகை மலர்ந்தது. "என்னவோ எனக்கும் வேற வழியில்லை. உன்னைக் கட்டிட்டு அழறேன்." இப்படியே மட்டம் தட்டினாலும் விசுவாவைப் போல தனக்கு விசுவாசமான ஊழியர் யாரும் கிடைக்க மாட்டார்கள் என்று அவனுக்குத் தெரியும்.

திரும்பி உள்ளே பார்த்து, "ஏய் சரசு! சர...சுவ.தி. எல்லாம் ரெடியா இருக்கா?" என்று கேட்டான்.

"எல்லாம் ரெடியா இருக்குங்க. விசுவா கொண்டு போயி கார்ல கூட வெச்சிட்டாரு." என்றாள் சரசுவதி.

"உல்லன் வேர்ஸ் எல்லாம் எடுத்து வெச்சிருக்கியா?" என்றான்.

"அதெல்லாம் நேத்தே பாக் பண்ணி வெச்சுட்டேன். நீங்க சொன்ன டிரெஸ்ஸெல்லாம் கூட எடுத்து வெச்சிட்டேன்." என்றாள்.

"சரி. சரி. வழக்கம் போல எதையாவது ஒண்ணை சொதப்பி வைக்காதே. அங்க போய் எனக்கு மூட் அவுட் ஆச்சுன்னா போற விஷயமே சொதப்பிரும்." என்றான்.

"இல்லைங்க. எல்லாமே ரெடியா இருக்கு." என்றாள்.

"ம்.. ஏற்காடு ஒண்ணும் ரொம்ப குளிரு இல்லை. இருந் தாலும் நான் எடுக்கிறதெல்லாம் எடுத்து வெச்சிட்டேன்." என்றாள் சரசுவதி.

"உன்னைக் கேட்டேனா நான்? குளிரடிக்குமா, அடிக்காதான்னு கேட்டேனா? எதுக்கு அதிகப்பிரசங்கித் தனமா பேசறே?" என்றான்.

சரசுவதி ஒன்றும் பேசவில்லை. பேசாமல் அந்தப் பக்கம் நகர்ந்து விட்டாள்.

"சரி. சரி. சூடா ஏதாவது கொண்டு வா." என்றான்.

"காஃபி, டீ.. என்ன வேணும்?" என்றாள்.

"டீயே கொண்டு வா. இனி கொஞ்ச நாளைக்கு உன் டீயில இருந்து தப்பிச்சுக்கலாமில்லே. புறப்படறதுக்கு முன்னாடி கஷாயம் மாதிரி குடிச்சுக்கறேன்." என்று அவளையும் மட்டம் தட்டினான்.

சரசுவதிக்கு இதழ்க்கடையோரத்தில் புன்னகை மலர்ந்தது. "அதே கஷாயமாம். அதை எதுக்கு ஆசையா கேட்குறாரு...?" என்று வாய்க்குள்ளாக முணுமுணுத்துக் கொண்டாள்.

"என்னடி முணுமுணுப்பு?" என்றான் அங்கிருந்து.

"ஐயய்யோ. முணுமுணுக்கவெல்லாம் இல்ல சாமி." என்று அதையும் முணுமுணுப்பாக சொல்லிவிட்டு, அவனுக்கென்று வழக்கமாக தயாரிக்கும் ஏலக்காய் டீ தயாரித்துக் கொடுத்தாள்.

ஹாலில் அமர்ந்து ஓய்வாக பத்து நிமிடங்களுக்கு மேல் அதை அனுபவித்துக் குடித்தான். சரசுவதி விசுவாவைப் பார்த்து கண்ணாலேயே பேசினாள். "என்னமோ வேண்டாம்னு சொன்னாரு. இப்பப் பாருங்க. எப்படி குடிக்கிறாருன்னு.." என்று.

அவன், "பேசாம இருங்கக்கா." என்று கண்ணாலேயே பதில் சொன்னான்.

"என்னடா? அக்காளும், தம்பியும் என்ன செய்தி பரிமாறிக்கிறீங்க?" என்றான்.

"இல்லை. பத்திரமா பார்த்துக்கங்க அப்படின்னு அக்கா சொன்னாங்க. நானும் சரிக்கா. பத்திரமா பார்த்துக்கறேன், அப்படின்னு சொன்னேன்." என்றான்.

"ரெண்டு பேரும் செமையா டிராமா போடுவீங்கடா." என்றான்.

இரண்டு பேரும் மழுப்பலாக சிரித்துக் கொண்டார்கள்.

"இதைப் பார்றீ. குழந்தைங்களைப் பத்திரமா பார்த்துக்கோ. அதுவும், இதுவும் ஏதாவது பிரச்சினை பண்ணிக்கிட்டிருக்காதே." என்றான்.

அவள் தலையை உருட்டிக் கொண்டாள்.

எப்போதுமே அவன் வெளியூர்களுக்குச் செல்லும்போது, அவள்தான் பார்த்துக் கொள்கிறாள். அது மட்டுமா? உள்ளூரில் இருந்தால் மட்டும் என்ன? அவன் குடும்பத்தைக் கவனித்து விடுகிறானா? எப்போதுமே குடும்பப் பொறுப்பை அவள்தான் பார்த்துக் கொள்கிறாள்.

சாமிதுரையினுடைய தொழிலும் அந்த மாதிரி. திரைப் படத்துறையில் கதாசிரியர்.

வழக்கமாக கதாசிரியர்களுக்கு இருக்கிற மதிப்பை விட வனமாலிக்குக கூடுதலான மதிப்பு இருந்ததென்று சொல்ல வேண்டும். ஏனென்றால், நாடறிந்த எழுத்தாளன் அவன்.

அவனுக்கென்று ஒரு பெரிய வாசகர் கூட்டமே இருந்தது. திரைக்கதை அமைப்பதிலும் அவன் மிகப் பெரிய கில்லாடி என்ற கருத்து இருந்தது.

"மேட்டரை மட்டும் வனமாலிகிட்ட கொடுத்திருங் கப்பா. செஞ்சிருவாப்ல." என்று ஒரு பரவலான பேச்சு இருந்தது. அதனால் வனமாலிக்கும் தன்னைப் பற்றிய கணிப்பு கொஞ்சம் உயர்வாகவே இருந்தது. நேரடியாகச் சொன்னால் உயர்வு மனப்பான்மை இருந்தது என்று சொல்லலாம்.

இப்பொழுது கூட ஒரு பெரிய பட கம்பெனியிலிருந்து கதை கேட்டிருந்தார்கள்.

அதற்காக எல்லாவிதமான நிபந்தனைகளையும் போட்டிருந்தான்.

தேநீரை அருந்திக் கொண்டிருந்தவன் திடீரென்று நினைவுக்கு வந்தது போல, "ஏம்ப்பா விசுவா. எல்லா ஐட்டமும் ரெடியா வெச்சிருக்கியா?" என்று கேட்டான்.

"எல்...லாம்... உங்களுக்கு வேணும்கிறது எ....ல்லாம் எடுத்து வெச்சிருக்கேன்."

உடனே இப்படியும், அப்படியும் பார்த்துவிட்டு, "எத்தை வெச்சு அடிக்கலாம்னு "பார்க்கறேன்." என்றான்.

"ஏன்? ஏன்?" என்றான் விசுவா பரபரப்பாக.

"ஏன்யா, நம்ம வீட்டு சரக்கை எடுத்து கொண்டுபோயி நாம எதுக்கு செலவு பண்ணனும்? ஞாபகம் வெச்சுக்கோ. கார், நம்ம காருன்னு அந்த புரொடியூசர்கிட்ட சொல்லக் கூடாது. டிராவல்ஸ் காருன்னு சொல்லி, டிராவல்ஸ் பில் போட்டு கொடுத்துரணும்." என்றான்.

விசுவா தலையை உருட்டினான். "இல்லை. அதே மாதிரிதான். அவங்களைக் கேட்டா என்ன சரக்கு வாங்கிக் கொடுப்பாங்களோ? அங்க நல்ல சரக்கு கிடைக்குமோ என்னமோ? அதனாலதான் நம்ம பொறுப்புல இருக்கிற சரக்கையே எடுத்துக்கிட்டேன். பில்லு மட்டும் வெளியில இருந்து கொடுத்துரலாம் சார்." என்றான்.

"அதானே பார்த்தேன். ரெண்டு வருஷமா எங்கூட இருந்து இதைக் கூட கத்துக்கலைன்னா என்ன அர்த்தம்?" என்றான்.

விசுவா மறுபடியும் அசடு வழிய புன்னகைத்தான்.

''சரசுவதி!'' என்று மறுபடியும் அழைத்தான். சரசு ஓடோடி வந்தாள்.

''ஸ்நாக்ஸ் எல்லாம் வெச்சிருக்கியாடி?'' என்று கேட்டான்.

அதற்குள் விசுவா இடையில் நுழைந்து, ''அதெல்லாம் அக்கா கொடுத்திருக்காங்க. வேணும்கிறதை கொடுத்திருக் காங்க. நல்லா பாக் பண்ணி வெச்சிருக்கேன்.'' என்றான்.

''சரி. சரி. எதையும் மிஸ் பண்ணாதே, அங்க போய் அதைக் காணோம், இதைக் காணோம்கிற வேலையே இருக்கக் கூடாது. திருப்பி ஃபோன் பண்ணி இங்க இருந்து அனுப்பு, அங்க இருந்து அனுப்புங்கிற வேலையெல்லாம் இருக்கக் கூடாது. நான் வர்றதுக்கு இருபது நாளைக்கு மேலதாண்டி ஆகும். கேர்ஃபுல்லா பார்த்துக்க எல்லாத்தையும்.'' என்றான்.

இத்தனைக்கு நடுவிலும் தனது கணவன், ''நீ உடம்பைப் பார்த்துக்கோ.'' என்று ஒரு வார்த்தை சொல்லவில்லை என்பது அவளுக்கு உறுத்தலாக இருந்தது. எப்போதும் நடப்பதுதானே என்று எண்ணிக் கொண்டு,

''சரிங்க.'' என்றாள்.

''சரி. சரி. சும்மா பராக்குப் பார்த்துக்கிட்டு, அங்கே போனேன், இங்கே போனேன்னுட்டு எந்த விஷயத்தையும் கோட்டை விட்ராம மேனேஜ் பண்ணு.'' என்றான்.

''எதுக்கு சார் அலட்டிக்கிறீங்க. அக்காதான் அதெல்லாம் கரெக்ட்டா பார்த்துருவாங்களே..'' என்றான் விசுவா.

''நீ பேசாதய்யா. நீ என்ன அவளுக்கு எப்பப் பாரு சப்போர்ட்டு?'' என்றான்.

''ஐயய்யோ. இல்லை சார்.'' என்று அவன் வாயைப் பொத்திக் கொள்வது போல நடித்து விட்டு போர்ட்டி கோவில் போய் நின்று கொண்டான்.

''குழந்தைங்க வந்ததுக்கப்புறம் கிளம்புவீங்களா?'' என்று அவள் கேட்டாள்.

''இல்லையில்ல. நான் இப்பவே கிளம்பறேன். பெருசு ஒரு பக்கம் அழும். சின்னது ஒரு பக்கம் அழும். சமாதானப் படுத்திட்டு உட்கார்ந்திருக்கணும். நான் கிளம்பறேன். இன்னும் ஒரு ஹாஃப் ஆன் ஹவர்ல வந்துருவாங்களா? அப்ப சரி. நான் இப்பவே கிளம்பறேன்.'' என்று அவன் கிளம்பினான்.

அவள் கார் வரையிலும் வந்து, மறுபடியும் ஒரு முறை கார் டிக்கைத் திறந்து, பொருட்களெல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்து விட்டு, ''பாத்து... உடம்பைப் பார்த்துக்குங்க.'' என்றாள்.

''ம்ம்.ம்ம்'' என்றான்.

அவள் மெதுவாக விசுவாவிடம், ''விசுவா!'' என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்க

''என்ன? ரொம்பப் போடாம பார்த்துக்கம்பே. அதெல்லாம் எங்களுக்குத் தெரியும்.ஓவரா ஃபிலிம் காட்டாதே.'' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

காரில் ஏறிக் கொண்டான் சாமிதுரை. விசுவா டிரைவருக்கு அருகிலே இருக்கிற சீட்டில் போய் அமர்ந்து கொண்டான்.

"போயிட்டு வருகிறேன்." என்பது போல, முழுமையான தலையசைப்பு இல்லாமல், அரைகுறையான ஒரு தலையசைப்பை அவளை நோக்கி செலுத்தினான்.

அவள் பயந்தவள் போல வேகமாகத் தலையை உருட்டினாள்.

கார் கிளம்பியது.

சரசுவதி திரும்பவும் உள்ளே வந்தாள். சாதாரணமாக கணவன் வெளியே போனால் வீட்டிலே ஒரு வெறுமை நிலவுமே, அப்படி எதுவும் அவளுக்குத் தோன்றவில்லை. மாறாக ஒரு விடுதலை உணர்ச்சி தோன்றியது.

பல நாட்களுக்குப் பிறகு ஹால் ஸோஃபாவிலே அமைதியாக அமர்ந்தாள். அந்த அமைதி அனுபவிப்பதற்கு இனிமையாக இருந்தது.

இனி வருகிற இருபது நாட்களுக்கு இப்படி அவள் அமைதியாக ஹால் ஸோஃபாவிலே அமர முடியும்.

குழந்தைகளெல்லாம் ஹால் முழுக்க, ஓசை எழுப்பிக் கொண்டு, இரைச்சலாய் படித்துக் கொண்டு, வீட்டிலே வளைய வர முடியும். என்ன? ஒரேயடியாக குப்பை போட்டு வைப்பார்கள். இருந்தாலென்ன? அதையெல்லாம் சுத்தம் செய்வது கூட ஒரு சந்தோஷமான விஷயம்தான்.

மெள்ள தனக்குத் தானே ஒரு குட்டு வைத்துக் கொண்டாள். "தமிழ்நாட்டினுடைய மிக பிரபலமான ஒரு கதாசிரியனுடைய மனைவியா நீ? கதாசிரியன் வெளியே போனால் நன்றாக இருக்கிறது, என்று எண்ணிக் கொள்கிறாயே..." என்று தனக்குத் தானே பேசிக் கொண்டாள்.

உள்ளதைத் தானே சொல்லுகிறது மனது என்று அவள் எண்ணிக் கொண்டிருக்கையில், அவளுடைய குழந்தைகள் இருவரும், "அம்மா!" என்று ஓடி வந்தார்கள். அவர்களை அழைத்து வருவதற்காக இன்னொரு கார் போயிருந்தது. யூனிஃபார்மில் இருந்து ஓடி வந்து அவளுடைய இரண்டு பக்கமும் நின்று கொண்டார்கள்.

பெரியவளுக்கு எட்டு வயது. சின்னவனுக்கு ஆறு வயது. பெரியவளுடைய பெயர் நிவேதிதா. சின்னவனுடைய பெயர் வெங்கட்.

"எதுக்கு இப்படி ஸோஃபாவுல தொப்புன்னு உட்கார்றீங்க." என்று மிரட்டினாள்.

"அம்மா! அப்பா போயாச்சா ஊருக்கு?" என்றார்கள் இரண்டு பேரும் ஆர்வமாக.

சரஸ்வதியின் உள்ளத்தின் ஒரு பக்கத்தில் லேசாக வலித்தது. "அப்பா போய்விட்டாரா?" என்று குழந்தைகள் ஆர்வமாகக் கேட்கிற மாதிரி இருக்கிறதே நிலைமை" என்று அவளுக்கு வருத்தமாக இருந்தது.

"ஏண்டி! அப்பா இருபது நாள் இருக்க மாட்டாரு. எனக்கே கஷ்டமா இருக்கு. உங்களுக்கு அப்பா போய்ட்டாருன்னு சந்தோஷமா இருக்கா?" என்று மிரட்டினாள் சரஸ்வதி.

"போம்மா. அப்பா இருந்தா இங்க உட்காராதே. அங்க உட்காராதே. விளையாடக் கூடாது. சைலன்ஸ். இதையே சொல்லிக்கிட்டிருப்பாரு. இப்பத்தான் ஊட்டிக்கா..? எங்க போறாரு?"

"ஏற்காடு போறாருடி." என்றாள்.

"ஏற்காடு போய், நல்லா எல்லா சைலன்ஸ்லயும் உட்கார்ந்து எழுதிட்டு வரட்டும். நாங்க இங்க எங்க கதையை எழுதிக்குவோம்." என்றாள் நிவேதிதா.

"ஏண்டி. அப்பா இல்லைன்னு நினைச்சு, எல்லா குறும்பும் பண்ணலாம்னு ஐடியா பண்ணாதீங்க. இந்த தடவை யெல்லாம் அம்மா விட மாட்டேன். ஒழுங்கா ஹோம் ஒர்க் பண்ணனும். அதுக்கு அப்புறம்தான் விளையாட்டு." என்றாள் சரஸ்வதி.

"அம்மா, ப்ளீஸ்மா. ஒரு சின்ன சேஞ்ச்?" என்றாள் நிவேதிதா.

"என்ன சேஞ்சு?" என்றாள் சரஸ்வதி முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு.

"முதல்ல விளையாட்டு. அப்புறம் படிப்பு." என்றாள்.

"ஆஹா. இப்படித்தான் சொல்லுவீங்க. அப்புறம் விளையாடப் போனா கூப்பிட்டா வரவே மாட்டீங்க." என்றாள் கடுப்பாக.

"இல்லைம்மா. கண்டிப்பா இல்லை. டூ அவர்ஸ் விளையாட்டு. டூ அவர்ஸ்தான். அதுக்கப்புறம் படிப்பு." என்றாள்.

"ம்ஹூம். டூ ஹவர்ஸ்னா? எத்தனை மணி வரைக்கும்?" என்றாள்.

"ம்... அஞ்சு மணியிலிருந்து ஏழு மணி வரைக்கும்." என்றாள்.

"நோ. நோ. நோ. ஒன் அண்ட் ஹாஃப் அவர்ஸ்." என்றாள் சரஸ்வதி பேரம் பேசுவது போல.

"அப்ப எத்தனை மணிக்கு?" என்றாள்.

"அஞ்சு மணிக்குப் போனா ஆறரைக்கு வந்துரணும்." என்றாள் அம்மா.

"அப்ப வெளியே எங்கயாவது போய் விளையாட லாமா?"

"ஓ.கே. டிரைவரை அனுப்பி விடறேன். பார்க்ல போய் விளையாண்டுட்டு வாங்க." என்றாள்.

"அய்யோ. அம்மா யூ ஆர் வெரி ஸ்வீட்." என்று கொஞ்சியிழுத்தான் வெங்கட்.

"ஆமாடா. இப்ப ஸ்வீட்டுதான். அப்புறம் உங்க அப்பா வந்து காரமா அதிகாரம் பண்ணும்போது தெரியும். நான் இல்ல வாங்கிக் கட்டிக்கிறது?"." என்றாள்.

"பரவாயில்லைம்மா. எங்களுக்காக." என்று வெங்கட் சொல்லும்போது, நிவேதிதா ஒற்றை விரலால் கன்னத்தில் தட்டிக்கொண்டு, "இது நல்லாருக்கே." என்றாள்.

"எது?"

"காரமா அதிகாரம்.." என்றாள்.

"ம். அப்பா புத்தி அப்படியே இருக்குமே. வார்த்தைக்கு வார்த்தை தொளைஞ்சு மீனிங் எடுக்கிறது" என்று சிரித்தாள் சரஸ்வதி.

உண்மையாகவே தான் பயன்படுத்திய சொற்றொடர் அவளுக்கே சிரிப்பை வரவழைத்தது.

"சரி. என்ன சாப்பிடறீங்க. ஹார்லிக்ஸ், பூஸ்ட்.. என்ன வேணும் உங்களுக்கு?" என்று கேட்டுக்கொண்டே சமையலறையில் போய் குழந்தைகளுக்காக, தின்பண்டங் களையும், அவர்கள் பருகுவதற்காக பானத்தையும் தயாரிக்கும் பொழுது, அவளுக்குத் தோன்றியது.

"உண்மைதான் அதிகாரம் கொஞ்சம் காரமாகவே தூள் பறக்கும். இப்படியே பத்துப் பன்னிரெண்டு வருடங்கள் ஓடிவிட்டது."என்று எண்ணிக்கொண்டாள்.

கணவன் வெளியே போனால், "எப்போதடா வருவான்?" என்று காத்திருக்கிற நிலைமை போய், "மெது வாக வரட்டும் என்று தான்தான் நினைக்கிறோமென்றால், குழந்தைகளும் கூட அப்பா எப்போது வெளியே போவார் என்று கேட்கின்றார்களே... இது நல்லதுக்கா, கெட்டதுக்கா?" அவளுக்குப் புரியவில்லை.

இந்தக் கோபத்தை சரி செய்வதற்குத் தான் என்ன செய்ய வேண்டும்?

முதல் முதலாக அவளுக்குள் ஒரு கவலை தோன்றியது. அதே நேரத்தில் சாமிதுரையிடமிருந்து ஒரு ஃபோன் வந்தது.

ரிஸீவரைக் கையில் வைத்துக்கொண்டு அதிர்ந்து போய் நின்றாள் சரஸ்வதி.

அத்தியாயம் -2

அடுப்பு மேடையைத் துடைத்துக் கொண்டிருந்தான் பாரி, பைந்தமிழ்ப் பாரி.

தனது எளிமையான உணவை இரவு நேர உணவை முடித்துக் கொண்டான். அளவாக ஒரு ஐந்தாறு சப்பாத்திகள் போட்டு, அதற்கேற்ற வகையில் டால் எனப்படும் பருப்புக் கூட்டு தயார் செய்து உண்டு முடித்தான்.

எச்சரிக்கையாக எப்போதும் அளவான பாத்திரங் களையே பயன்படுத்துவான். அதனால் கையோடு கழுவி

எடுத்து வைத்து விடலாம் என்று அதில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தான்.

"ஒரு பெட் ரூம் அபார்ட்மெண்ட். தமிழில் சொன்னால் எப்படிச் சொல்ல வேண்டும். ஒற்றை படுக்கையறை அடுக்ககம்." என்று எண்ணிக்கொண்டு மெள்ள முறுவலித்துக் கொண்டான்.

சிந்தனை பின்னோக்கி ஓடியது. அக்காவுக்குத் திருமணமாகி ஓராண்டு இருக்கும்.

அதற்கு பின்புதான் அவன் சென்னைக்கு வந்தது. அப்போது கல்லூரி படிப்பை முடிப்பதற்காக சென்னைக்கு வந்தான்.

பட்ட மேல்படிப்பு வணிகவியலில் முடித்தான், சென்னையில்.

அப்போது சாமிதுரை, ஆரம்ப கட்டத் தேடலில் இருந்தார். ஏதோ ஒரு படமோ, இரண்டு படமோ கதை எழுதி முடித்திருந்தார். வனமாலி என்ற புனைப் பெயரிலே கதைகளை எழுதிக் கொண்டிருந்தார்.

வனமாலியினுடைய கதைகள் ஒன்றிரண்டு திரைக்கதை களாக வந்தவுடனேயே வார இதழ்களிலும் அவருடைய கதைகள் நிறைய வர ஆரம்பித்தன. வனமாலி என்ற பெயர்எல்லோராலும் அறியப்பட்டதாக இருந்தது. அப்போ தெல்லாம் பாரிக்கு பத்திரிக்கையாளன் ஆக வேண்டு மென்று ஆசை. அதனால் வணிகவியல் படித்துக் கொண்டே ஏதோ ஒரு தனியார் நிறுவனத்தில் அஞ்சல் வழி மூலமாக இதழியல் படித்தான்.

எத்தனை வற்புறுத்திக் கேட்டும் தன் சகோதரியின் வீட்டில் அவன் தங்கவில்லை. ஒரு சனி, ஞாயிறு ஊருக்குப்

போய் விடுவான். ஒரு சனி, ஞாயிறு சகோதரியின் வீட்டில் தங்குவான்.

அவர்களுடைய பெற்றோர்களுக்கு அவர்கள் இரண்டு பேர் மட்டும்தான். அக்காவுக்கு சரஸ்வதி என்று பெயர் வைத்த அப்பா, தனக்கு பைந்தமிழ் பாரி என்று பெயர் வைத்த விஷயம் இப்போதும் அவனுக்கு வியப்புக்கு உரியதாகத்தான் இருந்தது.

''எப்படிப்பா இப்படி ஒரு பேர் வெச்சீங்க?'' என்று கேட்பான்.

''இல்லைப்பா. உங்க ஸ்கூல் வாத்தியாருதான் உனக்கு இந்த பேர் வைக்கலாம்னு சொன்னாரு. அதனால வெச்சுட்டேன்.'' என்பார்.

அந்தப் பெயர் அவனை பெருமைப் படச் செய்த பெயர். அந்த பெயரை அவன் மிகவும் நேசித்தான் என்பதுதான் உண்மை. அப்பாவும், அம்மாவும் ஈரோட்டுக்குப் பக்கத்திலே ஒரு சிறிய கிராமத்திலே இருக்கிறார்கள். விவசாயம் பார்க்கிறார்கள். ஒரு பத்து ஏக்கர் நிலம் இருக்கிறது. நல்ல கிணறு. மஞ்சள் பயிர் செய்து கொண்டிருந்தார்கள். பணப் பயிர்கள் அடிக்கடி பயிர் செய்தார்கள். ஓரளவு வசதியாகவே இருந்தார்கள்.

பைந்தமிழ் பாரி ஒரு நாள் அப்பாவிடம் அமர்ந்து பேசினான். ''அப்பா நிறைய பணம் சம்பாதிக்கிற வணிகத்துறையில ஏதாவது நான் கால் பதிக்கணுமா? இல்லை, எனக்கு மனசுக்கு பிரியமா, ஆத்ம திருப்திக்கு ஏற்ற மாதிரி நான் ஏதாவது செஞ்சுக்கட்டுமா?'' என்று கேட்டான்.

அப்பாவுக்கு படிப்பறிவு இல்லையென்றாலும் அனுபவ அறிவு. ஜன்னல், ஜன்னலாக இருக்கின்ற அந்த கை வைத்த

பனியனை அணிந்து கொண்டு, லேசாக நரைத்த மீசையை தடவிக் கொண்டு, வெள்ளை வேட்டியுடன், கையில் குடையுடன் அவர் இறங்கி எந்த ஒத்தையடிப் பாதையில் போனாலும் எதிரில் வருகிறவர்கள் வணக்கம் செலுத்துகிற மாதிரியான மரியாதையைத்தான் வைத்திருந்தார். ஐம்பத்தைந்து வயதிலும் பைக் ஓட்டுவார்.

அவர் மகனுடைய தோளை தட்டிக் கொடுத்துவிட்டு சொன்னார், ''தம்பி! இந்த வாழ்க்கையை வாழறது ஒரு தரம். அதுல எதை நாம தேடறோம்னு முடிவு செஞ்சுக் கணும். உனக்கு பணம்தான் தேடலா இருந்தா பணம் பண்ற தொழிலுக்குப் போ. ஆத்ம திருப்திதான் வேணுமா இருந்தா உனக்கு எது பிடிச்சுதோ அதை செய். என் காலத்துக்கு நான் இந்த சொத்தைக் காப்பாத்தி உனக்கு கொடுப்பேன். ஆனா அதை வெச்சு காப்பாத்தற அளவுக்கு புத்திசாலித் தனத்தையும், பொறுப்பையும், பக்குவத்தையும் நீ வளர்த்துக்கணும். இதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன்.'' என்றார்.

மகன் சிரித்தான். ''உங்க காலத்துக்கும் நான் இந்த சொத்தை எதிர்பார்க்கமாட்டேன். என் கடமையையும் நான் செய்வேன். அக்காவுக்கும் ஒரு பங்கிருக்கு மறந்துராதீங்க.'' என்றான்.

''அக்காவுக்குத்தான் அந்த பக்கம் கொஞ்சம் வாங்கிப் போட்டிருக்கில்ல. அதை அவளுக்குக் கொடுத்தர வேண்டியதுதான். இதைப் பிரிக்க மாட்டேன்பா. இந்த நிலத்தை. ஏற்கனவே நம்ம ஊர்ல நிலத்தை எல்லாம் துண்டு போட்டு, துண்டு போட்டு விவசாயத்துக்கே ஏத்தா இல்லாம பண்ணி வெச்சிருக்காங்க. எனக்கு ஆனா ஒரே ஒரு உறுதிமொழி நீ கொடுக்கணும்.'' என்றார்.

"என்னப்பா?" என்றான்.

"இதைக் கூறு போட்டு வித்துராதே. இதை அப்படியே காப்பாத்தி அடுத்த தலைமுறைக்குக் கொண்டு போ. உனக்குத் தெரியுமா? நான் கேள்விப்பட்டிருக்கேன். வெளிநாட்டுல எல்லாம் இப்படி துண்டு, துண்டாவே நிலம் இருக்காதாமே.. நூறு ஏக்கர், ஆயிரம் ஏக்கர் இப்படி பெருசாதான் வெச்சிருப்பாங்களாம்." என்றார்.

"இதெல்லாம் எப்படிப்பா உங்களுக்குத் தெரியும்?" என்றான்.

"எல்லாம் பசங்க சொல்றாங்களே. வயசுப் பசங்க உட்கார்ந்துகிட்டு சொல்றாங்கள்லே. படிச்சவங்க நாலு பேரு நமக்குப் பழக்கம் இருக்கிறாங்க. வாத்தியார் இருக்கிறாரு. எல்லாரும் சொல்லுவாங்க." என்றார்.

பாரி சிரித்துக் கொண்டான். "சரிப்பா. காசுக்கு பஞ்சம் இல்லாம என்னால ஒரு வாழ்க்கை நடத்த முடியும். ஆனா நான் பெரிய சொத்துக்காரன் ஆவேனான்னு எனக்குத் தெரியாது. நாலு பேருக்கு உபகாரமா ஒரு வாழ்க்கை வாழணும்னு மட்டும் நினைக்கிறேன்."

அப்பா பெருமிதமாக மீசையை தடவிக் கொண்டார். "செய்டா ராஜா. அதுதான் முக்கியம்." என்றார்.

"மகன் நாலு பேருக்கு பிரயோஜனமா இருக்கான்னு கேள்விப்பட்டாலே போதும். அதுவே எனக்கு சந்தோஷம்." என்றார்.

அப்படி அப்பாவிடம் பேசிவிட்டுத்தான் ஊருக்குக் கிளம்பி வந்தான். படிப்பு முடித்ததற்குப் பிறகும் கூட இதே குடியிருப்பில்தான் ஒரு அபார்ட்மெண்ட்டில் வாடகைக்கு இருந்தான்.

எல்.ஐ.சி. அலுவலகத்தில் அவனுக்கு வேலையும் கூட கிடைத்தது. ஒரு ஆறு மாதங்கள் போயிருப்பான். அதற்குப் பிறகு, இது போல ஓரிடத்திலே முடங்கிக் கிடக்கிற தன்மை தனக்கு இல்லை என்பது அவனுக்குப் புரிந்தது. தன்னுடைய இயற்கை வேறு, இந்த அலுவலகத் தொழில் வேறு. இந்த நைன் டு ஃபைவ் ஜாப் தனக்கு ஒத்து வராது என்று முடிவெடுத்தான்.

வெளியே வந்து விட்டான். அந்த காலத்தில் அது ஒரு பெரிய பைத்தியக் காரத்தனமாக அவனுடைய ஊரில் பேசப்பட்டது. அதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. ஆனால் தன்னுடைய மேலதிகாரியிடம் பேசி எல்.ஐ.சி. முகவராக மாறிக் கொண்டான்.

இந்த பத்தாண்டுகளில், முப்பதை நெருங்கிக் கொண்டிருக்கிற இந்த காலகட்டத்தில், ஓரளவுக்கு மாத வருமானம் வரக்கூடிய அளவுக்கு அவன் பாலிசிகளைச் சேர்த்து விட்டான்.

மாத வருமானத்திற்கான வழி இருக்கிறது என்பதினால் அவன் ஓய்ந்துவிடவில்லை.

தன்னுடைய ஆர்வமான பத்திரிகை துறையையும் அவன் விட்டு வைக்கவில்லை.

பத்திரிகைகளில் ஃப்ரீலான்ஸ் ரைட்டிங் என்பார்களே அது போல அவன் பேட்டிகள் எடுத்துக் கொடுப்பதும், கட்டுரைகள் கொடுப்பதும் ஆக அங்கேயும் அவன் பாரி என்ற பெயரினிலே, பைந்தமிழ் பாரி என்ற பெயரினிலேயே கால் பதித்திருந்தான். ஆனால், அக்காவின் கணவர் ஒரு பெரிய எழுத்தாளராக இருக்கிறார் என்பதை எங்கேயும் அவன் சொல்லிக்கொண்டது இல்லை.

அக்காவின் கணவருடைய பெயரைச் சொல்லி, தன்னுடைய இடத்தைத் தக்க வைக்கவோ, ஏன் நுழையவோ கூட அவன் முயற்சிக்கவில்லை. அதிலே வனமாலிக்குக் கொஞ்சம் வருத்தம் கூட உண்டு.

படிக்கிற காலத்தில் சனி, ஞாயிறு போய் அக்கா வீட்டில் இருப்பதில் அவன் ஒரு சில விஷயங்களைப் புரிந்து வைத்திருந்தான். இப்போது கூட அக்கா முழுமையான மகிழ்ச்சியோடு இருக்கிறாளா? என்பது குறித்து அவனுக்கு சில சந்தேகங்கள் இருந்தன. ஆனால், குடும்ப வாழ்க்கையில் நுழையக் கூடாது என்ற காரணத்தினாலும், தன்னைக் காட்டிலும் அக்கா மிகவும் பக்குவமானவள் என்பதினாலும் அவன் அக்காவிடம் இது பற்றி எதுவும் பேசாமல்தான் இருந்தான்.

எத்தனையோ பெண்களைப் போல அவள் குடும்ப வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தன்னுடைய சுயத்தைத் தியாகம் செய்துதான் வாழ்ந்துகொண்டிருக் கிறாள் என்பது அவனுக்குப் புரிந்திருந்தது.

அது குறித்துப் பேசப் போனால் அக்கா பெரியதொரு கோடு போட்டு விடுகிறாள் என்பது அவனுக்குத் தெரிந்தது.

''ஏதோ ஒன்றைக் கொடுத்துத்தான் ஒன்றை வாங்கிக் கொள்ளவேண்டும் தம்பி.'' என்று அவள் அடிக்கடி சொல்லுவாள்.

அதற்கான மறுமொழி அவனிடத்திலே இருந்தது. ஆனால், அதைச் சொன்னால் அக்கா வருத்தப்படுவாள், என்று அக்காவிடம் எதுவும் பேச மாட்டான்.

தாய், தந்தையரிடம் எவ்வளவுக்கெவ்வளவு மரியாதையும், அன்பும் இருந்ததோ, அதே அளவுக்கு

சகோதரியிடம் அவனுக்கு நேசம் இருந்தது. அதே அளவுக்கு அவனுக்கு சமுதாயத்தின் மேலும் கூட பெரிய அக்கறை இருந்தது. அதனால் அவன் இன்னொரு தொழிலையும் கூட புதிதாக உருவாக்கினான் என்றுதான் சொல்ல வெண்டும்.

ஒரு பத்துப் பேரை, அதாவது அஞ்சல் வழிக் கல்வியில் பயிலக் கூடிய ஒரு பத்துப் பேரை தேடி எடுத்திருந்தான். பத்திரிகைத் துறையில் இருப்பதால், இதெல்லாம் அவனுக்கு சுலபமாக இருந்தது. அந்த பத்துப் பேரும் சேர்ந்து இவனோடு இவனுக்குக் கீழாக ஒரு அற்புதமான சேவையைச் செய்துகொண்டிருந்தார்கள்.

தன்னுடைய அந்த அமைப்புக்கு ''நாங்கள் இருக்கிறோம்'' என்று பெயர் வைத்திருந்தான்.

அவனுடைய பத்திரிகைத் துறையில் இருக்கக்கூடிய நண்பர்கள் கூட அதைக் கேட்டுவிட்டு புன்னகைத்தார்கள். என்னங்கடா செய்யப் போறீங்க?'' என்றார்கள்.

''பொறுத்திருந்து பாருங்க.'' என்றான் அவன். பொறுத் திருந்து பார்த்துவிட்டு அவர்களே கொஞ்சம் வியந்துதான் போனார்கள்.

பல நடுத்தரக் குடும்பங்களிலே பிள்ளைகள் வெளி யூரிலோ, அல்லது வெளிநாட்டிலோ வேலை செய்து கொண்டிருப்பார்கள். எல்லாப் பெற்றோர்களும் படித்தவர் களாகவோ, அல்லது இண்டெர்நெட் உபயோகிக்கக் கூடியவர்களாகவோ இருப்பதில்லை என்பதால் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த பத்து பேரும் உதவி செய்வார்கள்.

அதற்காக கண்டிப்பாக ஒரு தொகை பெற்றுக் கொள்வார்கள். மாதத்திற்கு ஒரு தொகையை அவர்களிடம்

வசூலித்துக் கொண்டு, அவர்களுடைய பில் கட்டுவது, வங்கி தொடர்பான வேலைகளைச் செய்து கொடுப்பது, ஏதாவது பொருட்கள் வாங்க வேண்டு மென்றால் வாங்கிக் கொடுப்பது, ஏதாவது ரிப்பேர் செய்ய வேண்டுமென்றால் நம்பிக்கையான ஆட்களின் மூலமாகக் கூட இருந்து செய்து கொடுப்பது என்று இந்த பத்து பேரும் கிட்டத்தட்ட ஒரு இருநூறு குடும்பங்களுக்கு செல்லப் பிள்ளைகளாக இருந்தார்கள்.

இப்பொழுது பத்து பேர் அவனுக்குப் போதாமல் இருந்தது. இன்னும் கூட ஐந்து பேர் எடுக்க வேண்டும் என்ற உத்தேசத்திலே இருந்தான்.

''நாங்கள் இருக்கிறோம்'' என்கிற அமைப்பு கூட இப்போது கொஞ்சம் கொஞ்சமாக புகழடைந்து கொண்டிருந்தது.

இதையெல்லாம் எண்ணிக் கொண்டே அவன் அடுப்பு மேடையைத் துடைத்து முடித்தான். கேஸ் ஸ்டவ்வையும் துடைத்து முடித்தான்.

''அத்தான் எங்கோ வெளியூர் போற மாதிரி சொல்லிக் கிட்டிருந்தாரே..'' என்று நினைத்துக் கொண்டிருக்கை யிலேயே சகோதரியிட மிருந்து ஃபோன் வந்தது.

செல்ஃபோனை எடுத்து காதுக்குக் கொடுத்தான். அந்த புறமிருந்து சரஸ்வதி பேசப் பேச அவன் முகம் மலர்ந்தது.

''வெரி குட் சான்ஸ். விட்டுருவேனா? கவலையே படாதே.'' என்று இவன் பதில் சொல்லிவிட்டு, உற்சாகமாக ஃபோனை வைத்தான்.

அப்படி ஃபோனை வைக்கும் பொழுது இந்த கடைசிக்கும், அந்த கடைசிக்குமாக அவன் முகத்திலே

பெரியதொரு புன்னகை எழுந்தது. ஆனால், இந்த முறை அவன் வழக்கம் போல இருக்கிறாற் போல இருக்கப் போவதில்லை என்பதும், அதிர்ச்சிகள் சில காத்திருக்கின்றன என்பதும் அப்போது அவனுக்குப் புரியவில்லை.

அத்தியாயம் -3

கண்களைச் சுற்றி சுழல விட்டான் சாமித்துரை ஆகிய வனமாலி.

''பாரய்யா! என்னா சூப்பர் கட்டிடம் பாரு. ம்ம்.. நாம கதை கொடுக்கிறது. அந்தக் கதையை டெவலப் பண்ணி டைரக்டர் ஒரு பக்கம் சம்பாதிச்சுக்குவாரு. ஹீரோ ஒரு பக்கம் சம்பாதிச்சுக்குவாரு. புரொடியூசர் ஒரு பக்கம் சம்பாதிச்சுக்குவாரு. ஆனா நமக்கு நாலணாவுக்குகூலி கேட்டா காலணா கொடுக்கிற மாதிரி இத்துனூண்டா ஒட்ட வெச்சர்றாங்க. ம்.. இந்த கம்பெனிக்கே நாம எத்தனை கதை கொடுத்திருக்கிறோம். பத்துக் கதை கொடுத்திருக்கிறோம். எப்படி சம்பாதிச்சிருக்கிறாங்க பாரு.'' என்று புலம்பினான் வனமாலி.

''அதென்னமோ நிஜம்தான் சார். உங்க திறமைக்கு பேசாம நீங்க டைரக்ஷன் கூட பண்ணலாம்.'' என்றான் விசுவா.

''பண்ணலாம்யா. பண்ணலாம். பொறு. ரெண்டு வருஷத்துக்குள்ள டைரக்டர் ஆகிட வேண்டியதுதான்.'' என்றார் வனமாலி.

''பாருங்க சார். ஒவ்வொரு பெட் ரூமும் எப்படி இருக்கு. சாண்டிலியர் விளக்கென்ன? ஏ.சி... அதுவும் குளிர் ஜாஸ்தியா ஏ.சி.'' என்று சிரித்தான் விசுவா.

"இருக்கட்டுமேன்யா. கொஞ்சம் சூடு வேணும் கிறப்போ எடுத்து யூஸ் பண்ணிக்கலாம்ல, ஹீட்டர்." என்று சுற்றி கண்ணைத் திருப்பிய பக்கமெல்லாம் வளம் கொழித்த காட்சிதான் தெரிந்தது.

ஹாலில் போட்டிருக்கிற ஸோஃபாக்களெல்லாமே லட்சக்கணக்கில் விலை வரும் போல இருந்தது. அதே போல ஒவ்வொரு படுக்கை அறையும் அவ்வளவு வசதி களோடு இருந்தது. மொத்தமே நான்கு படுக்கையறைகள் தான் என்றாலும் அந்த கட்டிடம் வெளியே இருந்து பார்ப்பதற்கு மிகப் பெரிய கட்டிடமாக இருந்தது.

"சரி, சரி. பார்க்கலாம்." என்றவன், "எந்த ரூம்யா எனக்கு?" என்று கேட்டான்.

அங்கே இருந்த அந்த கட்டிடப் பொறுப்பாளரான செக்யூரிட்டி, "ஐயா உங்களுக்கு இந்த ரூம் கொடுக்கச் சொல்லி புரொடியூசர் ஐயா ஃபோன் பண்ணினாங்க." என்றான்.

பக்கத்திலேயே இருந்த ஒரு சிறிய அறை விசுவாவுக்காக ஒதுக்கப்பட்டது.

"இங்க பாருப்பா. வேற யாரும் வந்து இங்கே தங்குவாங்களா? இடையில ஒரு நாள், ரெண்டு நாள் அவங்க, இவுங்கன்னு எல்லாம் வந்து தங்கினா எனக்கு ஒத்து வராது. செட்டியார்ட்ட சொல்லிடு! ஃபுல் அண்ட் ஃபுல்லா இந்த பில்டிங்குக்கு உள்ளே நான் ஒருத்தன்தான் இருக் கணும். நினைச்சா வெளியே போவேன். நான் நினைச்சா வருவேன். என் இஷ்டத்திற்கு இருக்க விட்டாத்தான் எனக்கு மூடு வரும். கதை எழுத முடியும். சொல்லிடு செட்டியார்கிட்டே." என்றான்.

"ஐயா! அதை ஐயாவே சொல்லிட்டாங்க. அவருக்கு எப்படி வசதியோ அவர் இருக்கட்டும். இங்க யாரும் வந்து தங்க மாட்டாங்க. என்ன வசதி வேணும்னாலும் செஞ்சு கொடு, அப்படின்னு சொல்லியிருக்காங்கய்யா." என்றான் செக்யூரிட்டி பயந்தவனைப் போல கையைக் கட்டிக்கொண்டு.

"எத்தனை பேருக்கு முன்னாடி இப்படி நடிச்சிருப் பானோ.." என்று நினைத்து சிரித்துக் கொண்டான் விசுவா.

"ம்... அது." என்று பெருமிதமாக சொல்லிவிட்டு தன்னுடைய அறைக்குப் போய்விட்டான் வனமாலி.

"இன்னைக்கு எல்லாம் ரெஸ்ட்டுயா. இன்னைக்கு எல்லாம் ஒண்ணும் மூடு வராது. டிராவல் பண்ணிட்டு வந்த போது, அப்படியே நோட் பண்ணிட்டு வந்த சில காட்சிகள்லாம் இருக்கு. அதை எல்லாம் ஒரு பக்கம் ஜாட் டவுன் மட்டும் பண்ணி வைக்கிறேன். எனக்குக் கொஞ்சம் சூடா ஏதாவது கொடுக்கச் சொல்லு." என்றார்.

விசுவா, "ஆஹா. ஆரம்பிச்சுட்டான்யா." என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு,

"இந்த இருபது நாளும் இந்த ஆளுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கே சரியாக போகும்." என்று எண்ணிக்கொண்டான்.

"ஆனாலும் கடைசியிலே கையிலே ஒரு தொகை கொடுப்பார் என்பதால் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது. என்ன செய்யறது! ஒரு பையனும், புள்ளையும் காலேஜில படிக்கிறாங்க. நாப்பத்தஞ்சு வயசுக்கு மேல போய் எங்க தொழில் தேடறது? அதான் சம வயசுள்ள இந்த ஆள்கிட்ட வாயா, போயான்னு பேச்சு வாங்கிட்டு

செய்ய வேண்டியதிருக்கு.'' என்று உள்ளுக்குள்ளே புலம்பிக்கொண்டான் விசுவா.

''ஆனா ஆள் கெட்டிக்காரன்தான். அதிலெல்லாம் ஒண்ணும் சொல்ல முடியாது.திறமை, திறமைதான்.'' என்று அதையும் மனதுக் குள்ளேயே சொல்லிக்கொண்டான்.

''என்னய்யா மனசுக்குள்ள புலம்பிக்கிட்டிருக்கிறே.'' என்றான் வனமாலி.

''இல்லை சார், இன்னைக்கு உங்களுக்கு லஞ்சுக்கு என்ன செய்யறது? அதெல்லாம் சொல்லிரணும்லே.'' என்றான்.

''சமையல்காரர் இருக்கறாப்லயா. கேளு.'' என்றான்.

''ம்.. கிச்சன் கொஞ்சம் பில்டிங்குல பின்னால இருக்கும் சார். அங்க சமையல் காரங்கள்லாம் இருக்காங்களாம். பின்னாடி அவுட் ஹவுஸ்லயே சமையல்காரங்க குடியிருக் காங்க போல இருக்கு சார்.'' என்றான்.

''அதானே பார்த்தேன். ஏதாவது வேணும்னா நடுவுல என்ன செய்யறது? சரி நல்லா ஏதாவது, ம்ம்... மட்டனோ, சிக்கனோ அந்த மாதிரி ஏதாவது பண்ணச் சொல்லு.'' என்றான் வனமாலி.

''அதெல்லாம் சிக்கன் மட்டன் எல்லாம் நல்லா பண்ணுவா. என்ன வேணுமோ? மெனு கொடுங்க.'' என்றான் வாட்ச்மேன்.

''உங்கிட்ட என்னய்யா மெனு கொடுக்கிறது! சமையல்காரரை வரச் சொல்லு. போ.'' என்றான்.

செக்யூரிட்டி, ''முதலாளி கூட இப்படியெல்லாம் ஆர்டர் போட மாட்டாரு.'' என்று மனதுக்குள் புலம்பிக்கொண்டு நகர்ந்தார்.

சமையல்காரர் வந்து பவ்யமாக நின்றார். விருந்தாளிகள் இது மாதிரி அவ்வப்போது வந்து தங்குவதும், சில பேர் அமைதியாக இருந்து வேலையை முடித்துக் கொண்டு போவதும், சில பேர் இப்படி ஆர்ப்பாட்டம் செய்வதும் அவர்களுக்குப் பழக்கம் என்பதால், பணிவாகவே வந்து நின்று,

''சாருக்கு என்ன வேணும்? எந்த நேரத்துல வேணும்னு கேட்டாலும் நான் பண்ணித் தருவேன். செட்டிநாடு நம்ம ஊரு. செட்டிநாட்டுச் சமையல் வேணும்னாலும் பண்ணித் தருவேன். எது வேணும்னாலும் செஞ்சு தருவேன்.'' என்றார்.

''ஓ.கே. இன்னைக்கு சிக்கன், மட்டன் ஏதாவது பண்ணு. நாளைக்கு வான்கோழி பண்ணு. டெய்லி ரிபீட் ஆகக் கூடாது. வேற வேற டிஷஸ்தான் கொடுக்கணும். அப்புறம் நான் பெல் அடிச்சாதான் வரணும். சரியா ஒரு மணிக்கு எனக்கு சாப்பாடு ரெடி ஆயிடணும். ஏம்ப்பா விசுவா புரோகிராம் எல்லாத்தையும சொல்லிடு.'' என்றார்.

''அதெல்லாம் நான் சொல்லிக்கிறேன் சார். நீங்க ஏன் கவலைப்படறீங்க?'' என்றான்.

''இப்ப நல்ல காஃபி எனக்கு நல்லா வந்துரணும். அஞ்சு நிமிஷத்துல.'' என்றார்.

''இதோ நானே கொண்டு வந்திட்டேன் சார்.'' என்றான் அ'வன் கப், அண்ட் ஸாசரை நீட்டியபடி.

''தட்ஸ் குட். இன்னொரு ஹாஃப் ஆன் ஹவர்ல லஞ்ச் ரெடியாகிடுமா?'' என்றான்.

''ஏற்கனவே எல்லாம் ரெடியா இருக்கு சார். நீங்க எப்போ சொல்றீங்களோ நாங்க அப்போ பரிமாற தயார்.'' என்றான்.

"சரி. நான் குளிச்சுட்டு வந்தர்றேன். ஏம்ப்பா ஹீட்டர் இருக்குல்ல? ஹாட் வாட்டர் எல்லாம் நல்லா கிடைக்கும் இல்ல. அப்புறம் எனக்கு அந்த,.. அந்த பிராண்டு சிகரெட் சொல்லிட்டியா?" என்றான்.

"எல்லாம் வாங்கி வெச்சிருக்குங்கய்யா. செட்டியாரய்யா எல்லாம் விவரமா சொல்லிட்டாரு." என்றான்.

"அதானே பார்த்தேன். அதனாலதான் செட்டியாரய்யா வுக்கு பத்து கதை கொடுத்திருக்கேன் இது வரைக்கும்." என்றான்.

"சொன்னாங்கய்யா. செட்டியாரய்யா உங்களை நல்லா கவனிச்சுக்கணும்னு சொன்னாரு." என்றான்.

"ஆமாய்யா. நல்லா கவனிச்சுட்டு ஆனா நாமம் மட்டும் பெருசா சாத்திருவீங்க." என்று விசுவாவிடம் முணு முணுத்துக்கொண்டான் வனமாலி.

"அய்யா என்ன சொல்றீங்க?" என்றான் சமையல்காரன்.

"உனக்கொண்ணும் சொல்லலை. நான் இங்க பேசிக் கிறேன். நீ போலாம்." என்று

அவரை அனுப்பிவிட்டு, "பரவாயில்லையே. செட்டியார் நமக்கு என்னென்ன தேவைன்னு எல்லாம் தெரிஞ்சு வெச்சிருக்காரு." என்றான்.

"ஆமா சார். இப்ப நீங்க மார்க்கெட்ல டாப்ல இல்ல இருக்கீங்க. உங்ககிட்ட இருந்து ஒரு த்ரில்லர் கதை வாங்கினா எப்படி பிச்சுக்கிட்டு ஓடும்னு அவருக்குத் தெரியாதா? நீங்க கொஞ்சம் ரேட்டை ஜாஸ்தி பண்ணி கேளுங்க." என்றான்.

"அடப் போய்யா. நமக்கு எந்த அளவுக்கு மார்க்கெட் இருக்கோ, அந்த அளவுக்கு காம்படிஷன் இருக்குய்யா. ஓவரா பகைச்சுக்கக் கூடாது." என்றான் வனமாலி.

"அதுவும் உண்மைதான்." என்றான் விசுவா.

அதே நேரத்தில் சமையல்காரருடைய செல்ஃபோன் ஒலித்தது.

செட்டியார் அங்கிருந்து சமையல்காரரிடம், "என்னய்யா, ரொம்ப அலம்பல் பண்றானா அந்த ஆளு?" என்று கேட்டார் சிரித்துக்கொண்டே.

"ஆமாங்கய்யா." என்றான்.

"நல்லா வேணும்கறதை கொடுத்து விடு. நமக்கு வேலை ஆகணுமில்லே. இருபது நாள், இருபத்தஞ்சு நாள், எத்தனை நாள் தங்கறானோ தங்கட்டும். ஆனா மூடு வந்துச்சுன்னா நல்லா எழுதிக் கொடுப்பான்யா. நமக்கு அடுத்ததை உடனே தயாரிக்க ஆரம்பிச்சுரணும். அதனால நீ தாங்கற தாங்குல தான் இருக்கு. புரியுதா? இந்த மாதிரி ஆளுங்களை எல்லாம் சாப்பாடு, தண்ணியிலதான் அமுக்கணும்." என்றார் செட்டியார்.

"சரிங்கய்யா. சரிங்கய்யா. நாங்க பார்த்துக்கறோம். ஒரு குறையுமில்லாம பார்த்துக்கறோங்கய்யா." என்றான் சமையல்காரன்.

"ஆமா. இந்த படம் மட்டும் நல்லா ஓடட்டும். உனக்குக் கண்டிப்பா ஒரு அமவுண்ட் தருவேன்." என்றார் செட்டியார்.

சமையல்காரனுடைய உச்சி குளிர்ந்து விட்டது. அந்த பக்கம் ஆனால் செட்டியார்,

"இந்த தொழிலுக்காக எவனெவனைத் தாங்க வேண்டி யிருக்குது. என்று முணுமுணுத்துக் கொண்டே செல்ஃ போனை எடுத்து அதன் ஸ்டாண்டில் வைத்தார்.

"ம்ம்..." என்று லேசாக உறுமிக்கொண்டு, மீண்டுமொரு முறை அந்த படுக்கையறையைப் பார்த்தான். சொர்க்க லோகம் போல இருந்தது.

"பேசாம அவளையும் கூட்டிட்டு வந்திருக்கலாம்." என்று நினைத்தான். மனைவி கூட இருந்தால் நன்றாக இருக்கும் போல இருந்தது. ஆனால், அவனுக்கு ஏனோ இந்த மாதிரி தனிமை, அப்படித்தான் எழுத வரும் என்பது போன்ற ஒரு எண்ணமும் ஆழத்தில் இருந்தது.

"சரிய்யா. ஒரு ஹாஃப் ஆன் ஹவர்ல குளிச்சிட்டு வந்தர்றேன். சாப்பாடு ரெடியா இருக்கட்டும்." என்று சொல்லிவிட்டு குளிக்கப் போனான்.

அந்த பாத் டப்பில் குளிப்பதே அவ்வளவு சுகமாக இருந்தது. அவன் வீட்டிலும் எல்லா வசதிகளும் இருந்தன என்றாலும், இது மாதிரி ஒரு சூழலில், புதிய இடத்தில் இது மாதிரி சுகங்களை அனுபவிப்பது என்பதும் ஒரு விதத்தில் மனதுக்கு உற்சாகத்தைத் தருகிற விஷயம்தானே!

வனமாலிக்கு எத்தனை பலவீனங்கள் இருந்தாலும் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அவன் கெட்டி. மதுவை அருந்துவான். விதவிதமாக சாப்பிடுவான். ஊதாரித்தனமாக செலவு செய்ய மாட்டான்.

அதே போல பெண்கள் விஷயத்திலும் அவன் இது வரையிலும் சரஸ்வதியைத் தவிர வேறு ஒரு பெண்ணையும் தொட்டதில்லை. அதனால் விசுவாவுக்குங் கூட வனமாலியைப் பொறுத்தவரை அந்த விஷயத்தில் மிகுந்த மரியாதைதான்.

சரஸ்வதியிடம் கூட சொல்லுவான் தனிமையில், "அக்கா! என்ன வேண்ணா சொல்லுங்கக்கா. எவ்வளவு மோசமா திட்டினாலும், உங்களை எப்படித்தான் நடத்தி னாலும் உங்களைத் தவிர வேற ஒரு பொண்ணை திரும்பியும் கூட அவர் பார்த்ததில்லைக்கா. உங்களுக்கு இந்த ஃபீல்டைப் பத்தி தெரியும். இங்க வேணும்னு கேட்டா எதுவும் கிடைக்கும். ஆனா இதுவரைக்கும் அந்த ஒரு விஷயத்தில மட்டும் சார் வாயைத் திறந்து நான் பார்த்ததில்ல. அது மாதிரி வாய்ப்பு வந்தாலும் அதைப் பத்தி கேர் பண்ணிக்கிட்டதில்லை." என்று.

அதனால்தானோ என்னவோ சரஸ்வதிக்கு உள்ளூர ஒரு பெருமிதம் இருந்தது.

அதனால்தான் பெரும்பாலும் அவனை, அவனுடைய அட்டகாசத்தை, அவனுடைய அதிகாரத்தை எல்லாம் அவள் பொறுத்து கொண்டுதான் போவாள்.

சுகமாகக் குளித்துவிட்டு வந்த வனமாலிக்கு சூடான பதார்த்தங்களுடன் அருமையான விருந்தே தயாராக இருந்தது. ஒரு வெட்டு வெட்டினான். அதற்குப் பிறகு,

"நியூஸ் பேப்பர்லாம் வருதா?" என்றான். செய்தித் தாள்களை எல்லாம் எடுத்து கொஞ்ச நேரம் பார்த்தான்.

"டி.வி.டி. பிளேயர் இருக்குதாயா?" என்று கேட்டான்.

"இருக்குங்க." என்றான்.

சற்று நேரம் ஒரு பழைய ஆங்கிலப் படத்தைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு ஒரு அருமையான கரு உதயமானது.

"சரி. நாளையில இருந்து ஓர்க் பண்ணிர வேண்டியது தான்." என்று எண்ணிக்கொண்டு நன்றாகப் படுத்து உறங்கினான்.

மாலை மறுபடியும் எழுந்து மாலைச் சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தான்.

"விசுவா! கார்டன் பக்கம் போய்ட்டு வரலாம்." என்று கிளம்பினார்கள்.

சற்று நேரம் கார்டன் பக்கமாகப் போனார்கள். மனிதர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டு அமர்ந் திருந்தான் விசுவா, சற்று ஒதுக்குப்புறமாக. ஏனென்றால் அவனும் ஓரளவு பிரபலமாக இருந்தான். தன்னைத் தெரிந்துகொண்டு வந்து பேசினார்களென்றால், தன்னால் வேலை செய்ய முடியாது. தான் இருப்பது தெரிந்தால், அது வேறு தொல்லையாக இருக்குமென்று எண்ணிக் கொண் டான்.

இன்று முழுவதும் ஓய்வு என்று முடிவு செய்து கொண்ட தனால், அந்த பெரிய ஏரியிலே போட்டிங் சென்றுகொண்டு வருகிறவர்களை எல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தான்.

ஊட்டி அளவுக்குப் பெரிய ஏரியில்லை என்றாலும், கொடைக்கானல் அளவுக்கு இல்லையென்றாலும் இதுவும் ஓரளவுக்குப் பெரிய ஏரிதான் என்று அவனுக்கு தெரியும். அன்றைய நாளை முழுமையான ஓய்வுக்காக ஒதுக்கி, அனுபவித்து மீண்டும் அறைக்கு வந்தான்.

ஒரு ஏழு மணி இருக்கும். அவனுடைய செல்ஃபோன் ஒலித்தது. கையிலே எடுத்தான். அந்தப் பக்கமிருந்து தமிழகத்தின் புகழ்பெற்ற அந்த பத்திரிகையினுடைய ஆசிரியர் தொடர்புக்கு வந்தார்.

"சார், வணக்கம். வணக்கம்." என்றான் இவன்

"வணக்கம் வனமாலி. எப்படி இருக்கீங்க?" என்றார் அவர்.

"நல்லா இருக்கேன் சார், உங்க புண்ணியத்துல." என்றான்.

"நீங்க வேற. உங்களை மாதிரி படைப்பாளிங்க புண்ணியத்துலதான் நாங்க நல்லா இருக்கிறோம்." என்றார் அவர் முகமன் கூறுவது போல.

"அப்புறம் சார். என்ன விஷயம்?" என்றான்.

அந்தப் புறம் அவர் ஏதோ சொன்னார்.

"அடடே! அப்படியா சார்? நான் இன்னைக்குதானே ஏற்காடு வந்தேன். இங்க கொஞ்சம் ஹெல்ட் அப்பா இருக்கேனே.." என்றான்.

அதற்கு அவர் என்ன சொன்னாரோ தெரியவில்லை. ஓரிரு நிமிடங்கள் பேசிவிட்டு, ஃபோனை வைக்கும் போது அவன் முகத்திலே ஆழ்ந்த சிந்தனை ஓடியது.

குழப்பம் மேலோங்கியிருந்தது. குழப்பத்தோடேயே ஃபோனைக் கீழே வைத்தான்.

"எவ்வளவு பெரிய வாய்ப்பு? இதை எப்படி விடுவது? என்ன செய்வது?" என்று தெரியாமலேயே ஃபோனைக் கீழே வைத்தான்.

அத்தியாயம் -4

"என்னய்யா விசுவா? இப்படி பிராப்ளமா இருக்கு." என்றான் வனமாலி.

"என்ன சார் ஆச்சு?" என்றான்.

செல்ஃபோனை ஆஃப் செய்து வைத்துவிட்டு ஒரு நிமிட யோசனைக்குப் பிறகு வனமாலி புலம்புகிறாற் போன்ற

தொனியில் இப்படிச் சொல்லவும் விசுவாவுக்குக் கொஞ்சம் ஆச்சர்யமானது.

"அதை ஏன்யா கேட்கறே? ரெண்டு மாசம் ஃப்ரீயா இருந்தேன். அப்ப யாரும் வரலை. இப்ப வரிசையா ஆப்ளிகேஷன்ஸுக்கு வர்றாங்க." என்றான்.

"என்ன சார் ஆச்சு? கொஞ்சம் தெளிவா சொல்லுங்க." என்றான் விஷ்வா.

"இல்லைய்யா, தமிழ்நாட்டுலயே நம்பர் ஒண்ணா போய்ட்டிருக்கில்ல அந்த வாரப் பத்திரிகை. அதுல இருந்து ஒரு இது கேட்கறாங்க. ஏதோ திரைக்கதைப் போட்டியாம். அந்தப் போட்டிக்கு நான் ஜட்ஜா இருக்கணும்னு கேட்கறாங்க. மாட்டேன்னு எப்படி சொல்றது?"

"அந்த பத்திரிகையிலிருந்து ஆப்பர்ச்சுனிட்டி வர்றதே பெரிய விஷயம்யா. அவங்ககிட்ட போய் மாட்டேன்னு சொல்லக் கூடாதே..." என்றான் வனமாலி.

விசுவாவும் கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு யோசிக்கிறாற் போல நடித்தான்.

"ஆமா அவங்ககிட்டயெல்லாம் மாட்டேன்னு சொல்லக்கூடாது சார். வேற ஏதாவது ஒரு விதத்துல... அவங்க பிராப்ளம்... சேச்சே அதெல்லாம் பண்ண மாட்டாங்க. ஆனா இன்னொரு சமயத்துல நாம எதுக்காவது போக வேண்டியிருக்கும் போது செஞ்சு தர மாட்டாங்க." என்றான் விஷ்வா.

"அதான்யா எனக்கும் பெரிய குழப்பமா இருக்கு. ஆயிரக்கணக்குல கதைகள் வரும். அத்தனை கதையையும் படிச்சு... நமக்கு டைம் வேணும்ல. இப்ப செட்டியார்கிட்ட

வேற கமிட் பண்ணியாச்சு. அவருக்கு இந்த மாசத்துக்குள்ள கதை குடுத்தாகணும்." என்றான் வனமாலி.

"பிரச்சினைதான் சார். என்ன டைமுக்குள்ள கேட்கிறாங்க?" என்றான் விசுவா, அதற்கு மாற்றாக ஏதாவது செய்ய முடியுமா என்று பார்த்தபடி.

"ரெண்டு மாசம் டைம்கறாங்க." என்றான் வனமாலி.

"ஒண்ணு செய்வோமா? செட்டியார்கிட்ட பேசுவோம். எப்படி இருந்தாலும் செட்டியார் இந்த ரெண்டு மாசத்துக்கு எதுவும் பண்ண மாட்டார். ஏன்னா சபரிமலைக்கு போவாரு. அப்புறம் வந்து ஒரு பத்து, இருபது நாள் ஓய்வெடுப்பாரு. ஒரு டூ மன்த்ஸ் டைம் கழிச்சுத்தான் வேலையை ஆரம்பிப்பாரு. அப்ப நான் செஞ்சு தர்றேன்னு சொல்லிப் பார்ப்போமா?" என்றான் விசுவா.

வனமாலி ஒரு பெருமூச்சு விட்டான். "அது சரிய்யா. ஆனா அங்க திரைக்கதையெல்லாம் நூத்துக்கணக்குல வருமே. அத்தனையும் உட்கார்ந்து நமக்குப் படிக்கிறதுக்கு நேரம்?" என்றான் வனமாலி.

விசுவா மறுபடியும் யோசித்தான். "சார்! ஒரு ஐடியா சொல்றேன்." என்றான். "நீங்க முதல்ல செட்டியார்கிட்ட பேசி பர்மிஷன் வாங்குங்க. அவர்கிட்ட இந்த விஷயத்தையும் சொல்லுங்க. ஒத்துக்குவாரு. ஏன்னா அந்த பத்திரிகைன்னா எல்லோரும் கொஞ்சம் வளைஞ்சு கொடுத்துத்தான் போவாங்க." என்றான் விசுவா.

"ஓ.கே. செட்டியார்கிட்ட பர்மிஷன் வாங்கியாச் சுன்னு வையி. அவங்க கேட்கிற ஆப்ளிகேஷனை எப்படிப்பா முடிச்சுக் கொடுக்க முடியும்?" என்றான்.

"சார், அதுக்கு இன்னொரு வழி சொல்றேன். கேளுங்க." என்றான்.

"சொல்லு, சொல்லு, சொல்லு." என்றான் வனமாலி உற்சாகமாக.

"இப்படி சொல்லுங்க சார். ஃபர்ஸ்ட் ரவுண்டுல யாரை யாவது பார்த்து ஃபில்டர் பண்ணி ஒரு நூறு கதையை எடுக்கச் சொல்லுங்க. செகண்ட் ரவுண்ட் ஃபில்டர் பண்ணி ஒரு இருபத்தைஞ்சு கதை எடுக்கச் சொல்லுங்க. இந்த இருபத்தைஞ்சு கதையை நான் பாத்து செலகட் பண்ணிக் கொடுத்தர்றேன்னு சொல்லுங்க. படிக்கிறதுதானே சார். ஒன் மன்த் போதுமில்ல. நீங்க ஃபாஸ்ட் ரீடர்தானே. ஒரு நாளைக்கு ஒரு கதை பார்த்துருவீங்களே." என்றான்.

"இது ஐடியாய்யா. பரவாயில்லையய்யா. உனக்குப் கொடுக்கிற சம்பளம் வேஸ்ட் இல்லை." என்று சிரித்தான் வனமாலி.

"அப்பாடா பெரிய பிரச்சினை முடிஞ்சது." என்று உற்சாகத்துடன் முதலில் செட்டியாரிடம் பேசினான்.

"என்ன தம்பி இப்படி சொல்றீங்க. மூணு மாசம் தள்ளிப் போற மாதிரியா சொல்றீங்க?" என்றார்.

"இல்லை சார். நீங்க மூணு மாசம் கழிச்சுத்தான் ஷூட்டிங்கே ஆரம்பிக்கப் போறதா சொன்னீங்க. அதுக்குள்ள நீங்க சபரிமலை போவீங்க. அப்புறம் ஒன் மன்த் ரெஸ்ட் எடுப்பீங்க. அந்த பீரியடுக்குள்ள கண்டிப்பா நான் உங்களுக்கு செஞ்சு தந்தர்றேன்." என்றான்.

"அதுக்கப்புறம் தவணை சொல்ல மாட்டியே? உங்கிட்ட மூணு மாசம்னு சொன்னது தப்பா போச்சு. ம்ம்.." என்று அந்த பக்கம் சிரித்தார்.

"இல்லை சார். நீங்களே சொல்லுங்க. அது பெரிய பத்திரிகை. அவங்க ஒரு ஆப்ளிகேஷன் கேட்கும்போது, நாம செஞ்சு கொடுக்கலைன்னா, அது... உங்களுக்குமே நல்லதில்லை. வேணும்னே நாளைக்கு உங்க படத்தைப் பத்தி சும்மா ரெண்டு லைன் இடையில தப்பா விட்டாங்கன்னு வைங்களேன். அவங்க விமர்சனத்துக்கு வெய்ட்டேஜ் இருக்கு சார்." என்றான்.

செட்டியார் அந்தப் பக்கம் யோசனையுடன், "ஆ...மா தம்பி. நீங்க சொல்றதும் சரிதான். சரி. இப்ப என்ன? ஒன் மன்த் டிலே ஆகுது. ஆனா மூணு மாசத்துக்கு அப்புறம் தவணை கேட்கக் கூடாது. ஏன்னா பெரிய, பெரிய ஸ்டார்கிட்ட எல்லாம் கால்ஷீட் பேசியாச்சு." என்றார்.

"தெரியும் சார். நீங்க எப்பவுமே ரெண்டு மாசத்துக்கு முன்னாடியே வேலையை ஆரம்பிசிருவீங்கன்னு தெரியும். எனக்கு ஒரு டேட் சொல்லுங்க மூணு மாசம் கழிச்சு. அந்த நாளைக்குப் பத்து நாளைக்கு முன்னாடி நான் உங்களுக்குப், அட் லீஸ்ட் அஞ்சு நாளைக்கு முன்னாடியாவது உங்களுக்கு கதையை கையில கொடுத்தர்றேன்." என்றான் வனமாலி.

"ஓ.கே. இன்னைக்குத் தேதி என்ன? பத்து. சரியா மூணு மாசம் கழிச்சு இப்ப என்ன டிசம்பரா? ஜனவரி, பிப்ரவரி, மார்ச் பத்தாம் தேதியன்னைக்கு நீ எனக்குக் கதை கொடுத்தரணும்." என்றார்.

"கண்டிப்பா, கண்டிப்பா. என்றவன், இப்ப உங்க ஓர்க்தான் பண்ணப் போறேன். ஏன்னா அவங்ககிட்ட நான் என்ன சொல்லப் போறேன்னா, ஃபர்ஸ்ட் ரவுண்ட் முடிச்சு, செகண்ட் ரவுண்ட் ஃபில்டர் பண்ணி அப்புறம் எங்கிட்ட கொடுங்கன்னு கேட்கப் போறேன். அவங்களுடைய

கதையெல்லாம் வர்ற வரைக்கும் நான் உங்க ஓர்க்தான் பண்ணப் போறேன்.'' என்றான் வனமாலி.

''அப்ப நல்லதுங்க தம்பி. தட்ஸ் குட்... தம்பி...'' என்று இழுத்தார் செட்டியார்.

ஒரு நிமிடம் மேலும் முகமன் கூறுவது போல பேசிவிட்டு, நன்றி சொல்லிவிட்டு ஃபோனை வைத்தான் வனமாலி.

''நல்ல ஐடியா கொடுத்தப்பா. செட்டியார் ஓ.கே. சொல்லிட்டாரு. இனி பத்திரிகைக்கு பேசுவோம்.'' என்று பத்திரிகைக்கு பேசுவதற்கு ஃபோனை எடுத்தான் வனமாலி.

விசுவா, ''அதெல்லாம் ஒத்துக்குவாங்க சார். நிச்சயமா நீங்க, நூத்துக் கணக்குல ஐநூறு கதையெல்லாம் படிக்க மாட்டீங்க, உங்களுக்கு நேரம் இருக்காதுன்னு தெரியும். அப்படி போட்டு, இப்படி கோர்த்து வாங்குறதுதான். இதைக் கேட்டாதான் அப்புறம் நீங்க அதுக்கு சரின்னு சொல்லுவீங்கன்னு சொல்லுவாங்க. அவங்க சைக்காலஜி நமக்கு தெரிஞ்சதுதானே. ஃபோனை எடுத்துப் பேசுங்க.'' என்றான்.

அதே போல செல்ஃபோனை எடுத்து ஆன் செய்தான் வனமாலி.

அதே நேரத்தில் அவனது வீட்டில் பைந்தமிழ் பாரி ஓய்வாக ஸோஃபாவில் அமர்ந்திருந்தான். இரவு நேரம் ஏழு மணி இருக்கும்.

''அக்கா! போதும்கா. சும்மா சமையல், சமையல்னு வாக்கா. நான் என்ன விருந்தாளியா? எனக்கு பானை வயிறா? விதவிதமா செஞ்சு உள்ள கொட்டறதுக்கு

போதும். சப்பாத்தி, தால் இருந்தால் போதும்க்கா.''என்று குரல் கொடுத்தான்.

''போ தம்பி! நீயே தினம் சப்பாத்தி, ரொட்டி... இப்படித்தானே சாப்பிடறே. இன்னைக்கு ஏதாவது நல்லதா பிடிச்சதா உனக்கு செஞ்சு தர்றேன்.'' என்றாள்.

''அக்கா! நைட்ல நான் லைட்டாத்தான்க்கா சாப்பிடுவேன். நீ வந்து உட்காருக்கா.'' என்றான்.

''வர்றேன். வர்றேன். இன்னொரு பதினைந்து நிமிஷம்.'' என்று குரல் கொடுத்துக் கொண்டே ஆர்வமாக சமையலைச் செய்து கொண்டிருந்தாள் சரஸ்வதி.

பைந்தமிழ் பாரி ஏதோ ஒரு பத்திரிகைக்கு செய்தி அனுப்புவதற்காக குறிப்புகள் எடுத்துக் கொண்டிருந்தான்.

''மாமா!'' என்று குடுகுடுவென்று ஓடி வந்து, அவன் மேல் தொப்பென்று விழுந்தார்கள். நிவேதிதாவும், வெங்கட்டும். ''டேய், டேய், டேய்... இப்படி விழுந்தீங் கன்னா மாமா என்ன ஆகறது?'' என்றான்.

''மாமா ஒண்ணும் ஆக மாட்டீங்க. மாமா ஜிம் பாடி. எங்களுக்குத் தெரியும்.'' என்றாள் நிவேதிதா.

''நல்லா வாயடிடி.'' என்று செல்லமாக அவள் கன்னத்தைக் கிள்ளி விட்டான் பைந்தமிழ்பாரி.

''பாரி மாமா! பழைய பாரி முல்லைக்கு தேர் கொடுத் தானாம். நீ அட்லீஸ்ட் எங்களுக்கு ஒரு சாக்லேட்டாவது கொடுக்கலாமில்லே.'' என்றாள் நிவேதிதா.

''முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி எல்லாம் உங்களுக்கு தெரிஞ்சிருக்குதா? இதெல்லாம் உங்க பள்ளிக்கூடத்துல சொல்லிக் கொடுக்கறாங்களா? இப்ப எல்லாம் இங்கிலீஷ்,

ஹிந்தின்னு தஸ்ஸு, புஸ்ஸுதானே சொல்லிக் கொடுக் கறாங்க.'' என்றான்.

''இல்லை மாமா. அம்மா இந்த கதையெல்லாம் சொல்லுவாங்க.''என்றாள்,

''ம்..ம்.. அம்மா வேற எல்லாம் என்ன சொல்லுவாங்க?'' என்றான்.

''அதுவும் அப்பா இல்லாதப்பத்தான்.'' என்றான் வெங்கட் இடையிலே புகுந்து.

பைந்தமிழ் பாரி சிரித்தான். ''ஏன்டா உங்க அப்பாவே பெரிய கதாசிரியர். அவர் உங்களுக்கு கதை சொல்ல மாட்டாரா?'' என்றான்.

''போங்க மாமா. அப்பா எங்கே கதை சொல்றாரு. அப்பா வீட்டுல இருந்தாலே ஒரே ஸ்ட்ரிக்ட்டு... டிக்டேட்டர்தான்.'' என்றாள் நிவேதிதா.

பாரி சிரித்தான்.

''ஆமா மாமா. சிரிக்காதீங்க. அங்க நிற்கக்கூடாது. இங்க நிற்கக்கூடாது. அது பண்ணக் கூடாது. இது பண்ணக் கூடாது. ஒரே சைலன்ஸ்தான் மாமா.'' என்றாள்.

வெங்கட், ''மாமா! அவ என்னமோ சொல்லிட்டு கிடக்கறா மாமா. நீங்க எங்களுக்கு ஏதாவதொரு விளையாட்டு காட்டுங்க.'' என்றான்.

''என்ன விளையாட்டு? சரி வாங்க. கொஞ்ச நேரம் போர்ட்டிகோவில் போய் ஏதாவது விளையாடலாம்.'' என்று, ''பழைய காலத்து விளையாட்டு தெரியுமாடா?'' என்றான்.

''என்ன விளையாட்டு?'' என்று யோசித்துவிட்டு, ''முதல்ல எல்லாம் ஒரு விளையாட்டு விளையாடுவாங்க

தெரியுமா? கண்ணாமூச்சி ரே... ரே... காட்டுப்பூச்சி ரே.. ரே..ன்னு.

''தெரியுமா உங்களுக்கு?'' என்றான்.

''தெரியாதே..'' என்றார்கள்.

உடனே அவன் அந்த விளையாட்டைப் பற்றி சொல்லி விட்டு, ''உட்கார் நிவேதிதா. நான் உன் கண்ணை மூடிக் கிறேன். போய், நீ எங்காவது போய் ஒளிஞ்சுக்கணும்டா. அவள் கண்டுபிடிச்சிட்டு வரணும்டா.'' என்று அந்த விளையாட்டில் ஈடுபட்டார்கள்.

சற்று நேரம் ஒரே சத்தமாக இருந்தது. வாட்ச்மேன் முதற்கொண்டு, டிரைவர் முதற்கொண்டு எல்லோரும் அந்தப் பக்கமாக நின்று கொண்டு சிரித்துக் கொண்டிருந் தார்கள்.

பைந்தமிழ் பாரி அவர்களுக்குச் சரியாக விளையாடி னான்.

ஒரு அரை மணி நேரம் விளையாடிவிட்டு, ''அப்பாடா போதும். இனி ரெஸ்ட்.'' என்று சொல்லிவிட்டு உள்ளே வந்தான்.

''மாமா. அம்மா இன்னைக்கு பூரி பண்றேன்னு சொன் னாங்க மாமா. பூரி, ம்.. கிழங்கு, அப்புறம் இன்னும்கூட பணியாரம் கூட பண்றேன்னு சொன்னாங்க.'' என்றாள் நிவேதிதா.

''அப்படியா. சொல்லும்போதே பசிக்குதே. சரி, சரி. வாங்க, வாங்க. போய் கை, கால் முகம் கழுவிட்டு வாங்க.'' என்று, அவன் இப்போது தங்கும் அறைக்குப் போய் அவனும் முகம் திருத்திக் கொண்டு உடை மாற்றிக்

கொண்டு வந்தான். அதற்குள்ளாக சரஸ்வதியும் முகம் திருத்திக் கொண்டு வந்து ஸோஃபாவில் அமர்ந்தாள்.

''ஏன் தம்பி! விளையாடி களைச்சீங்களா? இது என்ன அந்த காலத்து விளையாட்டெல்லாம் இவங்களுக்கு சொல்லித் தர்றாப்பல இருக்கு.'' என்றாள்.

''ஆமாக்கா. நம்ம டிரெடிஷனையெல்லாம் குழந்தைங்க மறந்துருவாங்க போல இருக்கு. அதனால இப்படி, இப்படி விளையாட்டெல்லாம் நம்ம கல்ச்சர்ல இருந்தது. தெரிஞ்சுக் கோங்க, அப்படிங்கறதுக்காக சொல்லித் தர்றேன்.'' என்று சிரித்தான்.

''நாளைக்கு என்ன விளையாட்டு?'' என்றாள்.

''நாளைக்கு என்ன விளையாட்டு? யோசிக்கணும். நீயும், நானும் அந்த காலத்துல என்னென்ன விளையாட்டு விளையாடினோம் இல்லக்கா?.அதெல்லாம் ஞாபகப் படுத்தி சொல்லேன்க்கா!'' என்றான்.

''வருகிறோம், வருகிறோம் இந்த மாதத்தில்ன்னு சொல்லி விளையாடுவோமே... அது ஞாபகம் இருக்குதா?'' என்றாள்.

''அதுக்கு நிறைய குழந்தைங்க வேணுமே.'' என்றான்.

''அதெல்லாம் இவங்ககிட்ட சொல்லு. ரெண்டும் அதுகளோட ஃபிரண்ட்ஸையெல்லாம் நாளைக்கு கூட்டிட்டு வந்துரும். இங்கே முன்னாடி இருக்கிற இடத்துக்கெல்லாம் என்ன வேலை? விளையாடுங்க.'' என்றாள்.

''அப்புறம் நொண்டி ஆட்டம் சொல்லிக் கொடு. எனக்குக் கூட கல்லாட்டம் சொல்லிக் கொடுக்கணும்னு ரொம்ப ஆசைதான். ஆனா இவங்க அப்பாவுக்குப் பிடிக்காதே.''

''ஏங்க்கா. கலாச்சாரத்தைப் பத்தியெல்லாம் கதையில அந்த விடு விடறாரு... ஆனா வீட்டுல வேண்டாங் கறாரோ?'' என்றான்.

''தெரியலைப்பா. ஆனா...'' என்று சொல்ல வந்தவள் நிறுத்திக் கொண்டாள்.

''என்ன வெளியில ஆட்களுடைய தோற்றம் இருக்கிறதை வெச்சு நாம நம்பக் கூடாதுன்னு சொல்ல வர்றியா? நீ சொல்லாமலேயே எனக்குப் புரிஞ்சுது.'' என்று சிரித்தான் பாரி.

சரஸ்வதி கப்பென்று வாயை மூடிக் கொண்டு, ''சாப்பிடலாமா?'' என்றாள்.

''பேச்சை மாத்திருவியே..'' என்று சிரித்தான் பாரி மறுபடியும் அன்புடன்.

''தம்பி! சாப்பிடப் போலாம்.'' என்றாள்.

''சரி.'' என்று எழுந்தான்.

ஒரே கலாட்டாவாக குழந்தைகளோடு வேடிக்கை பேசிக் கொண்டு, தற்கால ஜோக்குகளும், கடந்த கால கதைகள் என்று கலந்து பேசிக்கொண்டு, கிட்டத்தட்ட அரை மணி நேரத்துக்கு மேல் சாப்பாட்டுக்கு செலவு செய்து விட்டு வந்தார்கள்.

பிறகு, ''ஹோம் ஓர்க் எல்லாம் முடிச்சிட்டீங்களா? காட்டுங்க.'' என்றான்.

குழந்தைகள் ஆர்வமாக எடுத்துக் கொண்டு வந்து காட்டினார்கள். அது பற்றிய திருத்தங்களை எல்லாம் சொல்லிவிட்டு, ''சரி நீங்க போய் தூங்கலாம். போங்க. மணி எட்டரை ஆச்சு.'' என்றான்.

குழந்தைகளும் ஓடினார்கள், "குட் நைட் மாமா. குட் நைட் அம்மா." என்று கட்டி முத்தமிட்டு கொஞ்சிவிட்டு அவர்கள் அறைக்கு ஓடினார்கள்.

பைந்தமிழ் பாரி டீ சர்ட், லுங்கியுடன் அமர்ந்திருந்ததைப் பார்ப்பதற்கே அழகாக இருந்தது சரஸ்வதிக்கு.

"ஏன் தம்பி, கல்யாணத்தைப் பத்தி யோசனையே இல்லையா?" என்றாள்.

"அதை வேற ஏங்க்கா ஞாபகப்படுத்தறே. இப்ப நீ கல்யாணம் பண்ணி என்னத்தைக் கண்டே." என்றான்.

"என் இப்ப ரெண்டு போச்சுல்ல, குட்டீஸ்." என்றாள் அக்கா.

"அது ஒரு பக்கம் இருக்கு." என்றவன், கூர்ந்து சகோதரியைப் பார்த்தான்.

"ஏங்க்கா, உண்மையாவே நீ சந்தோஷமா இருக்கியா?" என்று கேட்டான்.

சரஸ்வதி மெல்லப் புன்னகைத்தாள்.

"ஏங்க்கா நீ எவ்வளவு ஆக்டிவ்வான ஆளு." என்று சொல்லும் போதே பள்ளி நாட்களிலும், கல்லூரி நாட்களிலும் சரஸ்வதியினுடைய அந்த சாகசங்கள், சாதனைகள் எல்லாம் அவனுக்கு நினைவுக்கு வந்தது.

"இப்ப எல்லாத்தையும் விட்டுட்டு முடங்கிப் போயி... எப்படிக்கா? எப்படி?" என்றான்.

"எப்படின்னா அப்படித்தான். நானும் கொடி பிடிச்சேன்னு வெச்சுக்கோயேன். இந்த ரெண்டு குழந்தைங்க இருக்கே... அவங்களை என்ன செய்யறது?" என்றாள்.

பாரி பெருமூச்சு விட்டான். "அவர் மட்டும் ஒரு மாசம் போயி உட்கார்ந்துக்குவாரு. ஏகப்பட்ட பந்தா பண்ணி

கதை எழுதுவாரு, உலகத்தை அனுபவிப்பாரு. ஆனா, நீ.." என்றான்.

"இப்பப் பேசறதை எல்லாம் ஞாபகம் வெச்சுக்கோ. இதே மாதிரி உன் வைஃப் வரும்போது நீ பேசணும்." என்றாள்.

"கண்டிப்பா. கல்யாணம்னு ஒண்ணு பண்ணிட்டா, அவள் என்னோட சரிபாதின்னு நான் ஒத்துக்குவேன். அவளுடைய எல்லா டேலண்ட்ஸுக்கும் நான் கண்டிப்பா ஊக்கம் கொடுப்பேன்." என்றான் பாரி.

"அப்படின்னா அவள் ரொம்ப அதிர்ஷடசாலியாதான்பா இருக்கப் போறா." என்றாள் சரஸ்வதி.

"நீ இன்னும் என் கேள்விக்கு பதில் சொல்லலைக்கா." என்றான்.

சரஸ்வதி சிரித்து மழுப்பினாள்.

அதே நேரத்தில் ஃபோன் ஒலித்தது. கண்டிப்பாக வனமாலிதான். சரஸ்வதி பதறியடித்துக் கொண்டு எடுத்தாள்.

பைந்தமிழ் பாரி வேண்டுமென்றே அங்கேயே அமர்ந்திருந்தான். நாகரிகம் கருதி கூட அந்தப் பக்கம் போகவில்லை.

வனமாலியினுடைய ஃபோனை எடுத்துப் பேசும்போது அக்காவின் முகத்தில் உண்மையில் உற்சாகம்தானே பிரதிபலித்திருக்க வேண்டும். ஆனால், அளவு கடந்த வெறுமை அந்த முகத்திலே பிரதிபலிப்பதாக அவனுக்குத் தொன்றியது.

கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

அத்தியாயம் -5

''ஐ''ம் மித்ரா! சங்கமித்ரா.'' என்று அந்தப் பெண் ஆர்ப்பாட்டமாக உள்ளே நுழைந்தாள். பைந்தமிழ்ப்பாரி ஏதோ ஒரு ஃபைலைப் பார்த்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து பார்த்தான்.

அவன் விலைக்கு வாங்கியிருக்கிற அப்பார்ட் மெண்ட்டுக்கு அருகிலேயே ஒரு காம்ப்ளக்ஸில் ஒரு சின்ன ஆஃபிஸ் அறை ஒன்றையும் வாடகைக்கு எடுத்திருந்தான். அதில் அழகாக கேபின்கள் போட்டு வைத்திருந்தான்.

அவனுடைய சிறிய கேபினில் இருந்து அந்தப் பெண் நுழைவதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.

அவன் கண்களில் சுவாரஸ்யம் தட்டியது.

உள்ளே நுழைகிற பெண்ணின் கண்களிலே குறும்பு கொப்பளித்துக் கொண்டிருந்தது.

நுழைகிற நேரத்திலேயே அவள் அந்த அலுவலகத்தையே அளவெடுத்த மாதிரி தோன்றியது. லேசான சிரிப்பு அவன் கண்களில் மின்னியது.

''என்ன நடக்கப் போகிறது?'' என்று வேடிக்கை பார்த்தான்.

அவனுடைய அந்த அலுவலக அறையில் நான்கு பேர் அமர்கிற மாதிரி மேஜை போட்டு வைத்திருந்தான். அதைத் தவிர இன்னொரு அறையும் பிரித்து, அதிலே நான்கைந்து பேர் அமர்ந்து கொள்கிற மாதிரி அமைத்திருந்தான். ஏனென்றால் ஒரே சமயத்தில் பத்துப் பேரும் இங்கே வர மாட்டார்கள்.

அவனுமே சில குறிப்பிட்ட நேரங்களில்தான் இருப்பான். அதனால் மாற்றி, மாற்றி அலுவலகத்தைப் பார்த்துக் கொண்டார்கள்.

நான்கு பேர் டேபிள் வொர்க்கில் இருந்தால், மீதமிருப் பவர்கள் உள்ளே அறையில் அமர்ந்து கொள்வார்கள். நடத்துகிறவன் என்ற முறையில் அவனுக்குக் கண்டிப்பாக ஒரு கேபின் வேண்டுமென்று அவனுடன் இருப்பவர்களே வற்புறுத்தவும்தான் அப்படி ஒரு அறையை அவன் தனக்கென்று ஏற்பாடு செய்து கொண்டிருந்தான்.

அவர்கள் செய்கிற சேவையைப் பார்த்துவிட்டு, ஒரு நல்ல மனிதர் இந்த அறையின் தடுப்புக்கள் அமைப்பதற்கும், மற்ற செலவுகளுக்கும் உதவி செய்திருந்தார்.

அந்தப் பெண் நேராகப் போய் ராகேஷ் அமர்ந்திருந்த டேபிளுக்கு நேரெதிரிலே அமர்ந்தாள்.

''நீங்க?'' என்றாள்.

அவன் திருப்பி, ''நீங்க?'' என்றான்.

''நீங்க சொல்லுங்க.'' என்றாள் அந்தப் பெண்.

''மேடம்! நீங்கதான் வந்திருக்கீங்க. நீங்கதான் சொல்லணும்.'' என்றான்.

இதற்குள்ளாக தன்னுடைய கேபின் ஒரு தடுப்பை லேசாகத் திறந்து வைத்தான் பாரி. அப்பொழுதுதான் அவர்கள் பேசிக் கொள்ளுவது அவனுடைய காதிலே விழும்.

கண்ணாடித் தடுப்பை மெதுவாக நகர்த்தி விட்டான்.

''இல்லை. நாங்க இருக்கோம், நாங்க இருக்கோம்னு நீங்கதானே சொல்லிக்கிட்டு இருக்கீங்க. நீங்க இருக்கீங் களான்னு நீங்கதானே சொல்லணும்.'' என்றாள் அவள்.

ராகேஷின் முகத்தில் லேசாக ஒரு புன்னகை ஓடியது. "ஆஹா! இன்னிக்கு ராசி பலன் நம்மளுக்கு சரியா இல்லை போலிருக்கே..." என்று தனக்குள்ளாக முணுமுணுத்துக் கொள்வது போல வாய் விட்டே சொன்னான்.

அவளுக்கும் சிரிப்பு தோன்றியது. ஆனால், அடக்கிக் கொண்டாள்.

"இல்லை சார். நாங்க இருக்கோம்னு சொல்றீங்களே அந்த நாங்க யாரு?" என்று கேட்டாள்.

"முதலில் நீங்க யாரு? அதைச் சொல்லுங்க முதல்ல." என்றான் அவன்.

இதற்குள்ளாக பாரியே எழுந்து வெளியே வந்தான்.

"மேடம்! உங்களுக்கு என்ன வேணும்? எங்களுக்கு நிறைய வேலை இருக்கு. வெட்டிப் பொழுதெல்லாம் போக்கற மாதிரி டைம் இங்க இல்ல. வாட் டூ யூ வாண்ட்? அதைச் சொல்லுங்க?" என்றான்.

"இப்படி நெத்தியடி அடிச்சா, எப்படி பேசறது?" என்றாள்.

"மேடம்! இது கவர்ன்மெண்ட் ஆஃபீஸ் இல்ல. நாங்க எல்லாம் சேவை செய்யறதுக்காக ஒரு அமைப்பு பண்ணியிருக்கிறோம். இந்த அஞ்சு நிமிஷம் உங்ககிட்ட பேசிக்கிட்டிருக்கிறதை விட்டுட்டு வேற வேலையைப் பார்த்தா எங்களுக்கு ஃப்ரூட் ஃபுல்லா இருக்கும்." என்றான்.

"ஓ.கே. ஓ.கே. நோ லெக்சர் ப்ளீஸ்." என்றாள் அவள்.

"ம்ம்ம்..." என்றான் பாரி அழுத்தமாக.

அவனுக்கும் உள்ளுக்குள்ளே சிரிப்பாகத்தான் இருந்தது. ஆனால், அடக்கிக் கொண்டான்.

அவள் திரும்ப எழுந்து, "நீங்கதான் இதை நடத்தறீங்களா?" என்றாள்.

"நாங்க எல்லாருமா நடத்தறோம்." என்றான் அவன்.

"ஓ.கே. ஆனா நீங்க மட்டும் ஏன் கேபின்ல உட்கார்ந்துக்கிட்டு இருக்கீங்க." என்றாள்.

"என்னடா இது வம்பாப் போச்சு? நான்தான் மேனேஜிங் பொறுப்புல இருக்கேன்." என்றான்.

"ஓ.கே. தென். ஐ ஹேவ் டு டாக் டூ யூ." என்று அவனுடைய அறைக்கு வருவது போல் வந்தாள்.

வேறு வழியில்லாமல் பைந்தமிழ்ப் பாரியும் தன்னுடைய அறைக்குப் போனான்.

அவள் பந்தாவாக அமர்ந்தாள். மறுபடியும் தன் வலது கையை நீட்டி அவன் கைகளைக் குலுக்க வந்தாள். அவன் அதைக் கண்டு கொள்ளாதவன் போல வணக்கம் சொன்னான். சொல்லிவிட்டு,

"சொல்லுங்க மேடம்." என்றான்.

"ஐ"ம் மித்ரா. சங்கமித்ரா." என்றாள் அவள்.

"சரி. அப்புறம், என்ன விஷயம்?" என்றான்.

"என் பேர் ஒரு முக்கியமான விஷயமா படலியா?" என்றாள் அவள்.

"உங்க பேர் முக்கியமான விஷயம்தான் மேடம். ஆனா நீங்க இங்க எதுக்கு வந்திருக்கீங்க, அப்படின்னு எங்களுக்குத் தெரியணுமில்லே...?" என்றான்.

"இங்க எதுக்கு வருவாங்க?" என்றாள் அவள்.

அவன், "ஏதாவது சர்வீஸ் வேணும்கிறவங்க வருவாங்க." என்றான்.

"நீங்க என்னென்ன மாதிரி சர்வீஸ் பண்றீங்க?" என்றாள்.

உடனே அவன், "இப்பக் கொஞ்சம் ஏஜ்டு ஆட்கள் இருப்பாங்க, அவங்களுக்கு ஏதாவது பேங்க்குக்கு போக வேண்டிய வேலை, ரேஷன் ஆஃபீஸ் போறது... இந்த மாதிரியான வேலைகள், சர்வீஸெல்லாம் நாங்க செஞ்சு தர்றோம். அதுக்கு நாமினலா ஒரு அமவுண்ட் வாங்கிருவோம்." என்றான்.

"அது ஏன் சர்வீஸ்? அதுக்கப்புறம் என்ன அமவுண்ட்?" என்றாள் அவள்.

"மேடம்! நாங்க வேண்ணா எங்க உழைப்பைக் கொடுக்கலாம். இங்க பார்த்தீங்களா? இந்த ஆஃபிஸ் ரன் பண்ணனும். இதுக்குக் கரண்ட் பில், வாடகை எல்லாம் கொடுக்கணுமில்லே. அதுக்குத் தேவையான அளவுக்கு மட்டும் நாங்க வாங்கிக்கிறோம். அது மட்டுமில்லாம எங்ககிட்ட வேலை செய்யறவங்க எல்லோருமே லோ இன்கம் பீப்பிள்தான். அவங்களுக்கும் ஒரு அலவன்ஸ் மாதிரி தர்றோம்." என்றான்.

"அப்ப நீங்களும் லோவா?" என்றாள் அவள்.

அவனுக்குக் கோபம் வந்தது. "நீங்க ஏதாவது பர்ப்பஸோட வந்திருக்கீங்களா? இல்லை..." என்று இழுத்தான்.

"ஓ.கே. ஓ.கே. சரண்டர்." என்றாள் அவள்.

அவனுக்குத் தன்னையும் மீறி சிரிப்பு வந்தது. சிரித்து விட்டான். "உங்களுக்கு என்ன வேணும்?" என்றான்.

"எனக்கு வேலை வேணும்." என்றாள்.

அவன் தன்னை மறந்து மேஜையைத் தட்டி கலகல வென்று சிரித்தான்.

அவள் இதை எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம் திகைத்துப் போனவளாய்ப் பார்த்து விட்டு, "என்ன சார்? சிரிக்கிறீங்க.." என்றாள்.

"மேடம்! வேலை கேட்கிற அழகா இது? என்னமோ கொள்ளைக்காரன் வந்து துப்பாக்கி முனையில மிரட்டுற மாதிரி மிரட்டிட்டு... ஆப்ளிகேஷனோடதான் வந்திருக்கீங் களா?" என்றான்.

"ஏன்? வேலை கேட்கிறதென்ன அவ்வளவு கௌரவக் குறைச்சலான விஷயமா?" என்றாள்.

அவன் பாதி சிரித்துவிட்டு, கையை உயர்த்தி, "நோ... நோ... நோ... நான் அப்படி எல்லாம் எதுவும் சொல்லலை. இல்ல, நீங்க வேலை கேட்ட விதம் ரொம்ப சுவாரஸ்யமா இருந்துச்சு." என்றான்.

"நீங்க நடத்துற இந்த கன்சர்ன் கூடத்தான் சுவாரஸ்யமா இருக்கு. உங்களுக்கு எப்படி இப்படி ஒரு ஐடியா வந்தது?" என்றாள்.

"வந்துச்சு விடுங்க." என்றவன், "மேடம்! ஐ"ம் ஸோ ஸாரி." என்றான்.

"எதுக்கு? வேலை இல்லைன்னு சொல்லப் போறீங்களா?" என்றாள்.

"ஆமாம் மேடம். இங்க நாங்க எல்லோருமே ஜெண்ட்ஸ்தான் பண்ணிக்கிட்டிருக்கோம். ஏன்னா..." என்றிழுக்க,

"ஏன்னா? உங்களுக்கு உங்க மேலேயே நம்பிக்கை இல்லை. ஏதாவதொரு லேடி வந்தா அவள் இருக்கிற செட்டப்பை கலைச்சிருவாளோன்னு பயம். அவளைக் காப்பாத்தணுமேன்னு பயம்." என்றாள் படபடவென்று.

அவன் பேசுவதை நிறுத்தி விட்டு, அவளை சுவாரஸ்ய மாகப் பார்த்தான்.

அவள் உடனே இடக் கையைத் தூக்கி, தோள் பட்டையின் கீழே வலக்கையில் ஒரு தட்டு தட்டிவிட்டு, "கராத்தே... யு நோ கராத்தே..? கராத்தே கத்துருக்கேன். தெரியுமா?" என்றாள்.

அவன் இதழ்க் கடையோரமாக ஒரு சிரிப்பு தோன்றியது.

"நீங்கதானே பத்திரிக்கையில எழுதற பாரி. பைந்தமிழ்ப் பாரி..." என்றாள்.

"ஆமா." என்றான்.

"அதிலே மட்டும் பெண்களுக்கு ரொம்ப சப்போர்ட் பண்ணி எழுதறீங்க. ஆனா, இங்க வந்து ஒரு பெண்ணுக்கு வேலை கொடுக்கிறதுன்னா மாட்டேன்னு சொல்றீங்க." என்றாள்.

அவன் இப்படி ஒரு நேரடித் தாக்குதலை எதிர்பார்க்க வில்லை.

"மேடம்! வேலை கொடுக்க மாட்டேன்னு எல்லாம் சொல்லலை. புரிஞ்சுக்கோங்க. இங்க சில பிராக்டிகல் டிஃபிகல்டீஸ் இருக்கு. அண்டைம்ல வர வேண்டியிருக்கும். திடீர்னு கூப்பிடுவோம். ஒரு நாளைக்கு நைட் எட்டு, ஒன்பது மணி கூட ஆகும். அதெல்லாம் ஜெண்ட்ஸ்ன்னா

மேனேஜ் பண்ணிக்குவோம். திடீர்னு ஒரு பெரியவருக்கு உடம்பு சரியில்லை. ஹாஸ்பிட்டலைஸ் ஆகறார்னு வெச்சுக் கோங்க. நாங்க எங்கள்ல யாராவது ஒருத்தர் போய் ஹாஸ்பிட்டல்ல கூட இருப்போம். அந்த மாதிரி சர்வீஸ் எல்லாம் உங்ககிட்ட எதிர்பார்க்க முடியாதில்லே?" என்றான் அவன்.

"ம்ம். இது பாயிண்ட்." என்றாள், "ஆனா நான் இன்னொரு கேள்வி கேட்கிறேன். என் ஃப்ரெண்டு ஒருத்தர்தான் உங்க ஆஃபிஸைப் பத்தி சொன்னாரு. ஃபுல் டைமா இங்க யாராவது ஆஃபிஸுக்கு ஆள் போட்டிருக்கீங்களா?" என்றாள்.

அவன் சிந்தனையுடன் பார்த்தான். "இல்லை."

"டென் டு ஃபைவ்னு யாராவது இருக்காங்களா? இருக்கணும் இல்லை? ஆன்ஸர் பண்றதுக்கு யாராவது இருக்கணுமில்லே." என்றாள்.

"இருக்கணும்தான். ஆனா, நாங்க... நாங்களே அட்ஜஸ்ட் பண்ணிக்கிறோம். ஏன்னா, எங்கள்லேயே நிறையப் பேர் வந்து போஸ்டல்லதான் படிக்கிறாங்க இந்தப் பசங்க எல்லாம். அதனால நாங்களே அட்ஜஸ்ட் பண்ணி இருந்துக்கறோம்." என்றான்.

"இல்லை சார், கண்டிப்பா டென் டு ஃபைவ் ஒரு ஆள் இருக்கணும். ஆஃப்டர் சிக்ஸ் வேண்ணா நீங்க டர்ன் போட்டு இருந்துக்கலாம். யூ நீட் சம்படி." என்றாள், ஏதோ இவனுக்கு புத்தி சொல்லுவது போல.

அவனுக்குச் சிரிப்பாக வந்தது. ஆனால், அந்தத் தேவையை அவர்கள் உணர்ந்துதான் இருந்தார்கள்.

அவர்களுக்குள் அடிக்கடி பேசிக் கொண்டதும் உண்டு. "யாரோ ஒருத்தர் ஃபுல் டைமா இருக்கணுமே.." என்று.

"அப்படி ஒரு சான்ஸ் எனக்குக் கொடுங்களேன். நான் நல்லா பண்ணுவேன். வேண்ணா ஒரு ட்ரையல் மாதிரி ஒரு பத்து நாள் வேலை கொடுங்க. நான் வந்து எப்படி செய்யறேன்னு பாருங்க. பிடிச்சிருந்ததுன்னா வேண்ணா அப்புறமா வேலைக்கு வெச்சுக்கங்க." என்றாள்.

"மேடம் வேலை கொடுக்கறதுங்கற பேச்சுககே இடமில்லை." என்றான் அவன்.

"இல்லையில்லை. உங்களுக்கு அவசியம் இருக்கு. உங்களுக்குள்ள அந்த தாட் இருக்கு. எனக்கு லீக் ஆச்சு" என்றாள் அவள்.

"யார் சொன்னா உங்களுக்கு?"

"இல்லை. ஒரு நாள் நீங்க பேசிட்டிருந்ததை எங்க அங்கிள் கேட்டிருக்காரு இங்க, பக்கத்துல நின்னு. அவர் வந்து சொன்னாரு." என்று சொன்னாள்.

"எந்த அங்கிள் வந்து கேட்டாரோ..." என்று முணுமுணுத்துக் கொண்டவனாக, "சரி மேடம். நான் யோசிச்சுச் சொல்றேன்." என்றான்.

அவள் தெனாவெட்டாகப் பார்ப்பது போல அவனைப் பார்த்தாள். "நான் கேள்விப்பட்ட வரைக்கும் நீங்க ரொம்ப ஷார்ப். உங்க கட்டுரையெல்லாம் படிச்சிருக்கேன். அதுல ரொம்ப புத்திசாலித்தனம் மிளிருது. அப்படிப்பட்டவங்க இந்த மாதிரி ஒரு விஷயத்தை யோசிக்கறதுக்கு எவ்ளோ நேரம் எடுத்துக்குவீங்க. ஒரு டூ டேய்ஸ், ஒன் டே.... ட்வெண்டி ஃபோர் அவர்ஸ்... டென்..." என்று குறைத்துக் கொண்டே வந்தாள்.

"அப்படி எல்லாம் நான் எந்த உத்தரவாதமும் தர முடியாது மேடம். உங்க செல்ஃபோன் நம்பரைக் கொடுத்துட்டுப் போங்க. தேவைப்பட்டா கூப்பிடறேன். எங்க கன்சர்ன்ல இருக்கறவங்க எல்லார்கிட்டயும் பேசிட்டு முடிவு பண்ணிட்டு நான் சொல்றேன். ஏன்னா பத்து பசங்க இருக்கிற இடத்துல ஒரு லேடி இருக்கிறதுல எத்தனையோ இன்கன்வீனியன்ஸ் இருக்கு. உங்களுக்காக சில வசதிகளையெல்லாம் நாங்க செய்யணும். அதெல்லாம் கஷ்டம்." என்றான் அவன்.

"எனக்கு ஒண்ணும் பிரச்சினையில்லே. ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்லலாம். ரெஸ்ட் ரூம் இருக்கா." என்றாள்.

"ஆஹ்.. ரெஸ்ட் ரூம் இருக்கு. தட்ஸ் நாட் எ பிராப்ளம்." என்றான்.

"அது ஒண்ணுதான். வேறென்ன பிராப்ளம். நான் சின்சியரா உட்கார்ந்து எல்லாருக்கும் ஆன்ஸர் பண்ணுவேன். நோட் பண்ணி வைப்பேன். இன் ஃபேக்ட் இந்த மேட்டர் தெரிஞ்சுக்கறதுக்காக நீங்க ஒவ்வொரு தடவையும் ஆஃபீஸுக்கு எல்லாம் வர வேண்டாம். நானே லிங்க் பண்ணி யார் யாரை எங்க அனுப்பணுமோ அனுப்புவேன். ஒரு வேளை.." என்று அவள் உற்சாகமாக விவரிக்க,

"உண்மையான ஆர்வத்துடன் வந்திருக்கிறாள் போலும்." என்று தோன்றியது. "ஓ.கே. மேடம். உங்க பயோடேட்டா ஃபில் பண்ணுங்க. நான் யோசிக்கிறேன்." என்றான்.

"சரிங்க சார். நாளைக்கு ஈவ்னிங் இதே டைமுக்கு வரட்டுமா?" என்றாள்.

"வேண்டாம். நீங்க இந்த செல்ஃபோனுக்குக் கூப்பிடுங்க. நான் டைம் சொல்றேன். அந்த டைமுக்கு வந்தா போதும்." என்றான் அவன்.

"தட்ஸ் ரியலி நைஸ்." என்றாள் அவள்.

"இது என்னடா இது? நம்ம இவளைப் பாராட்டறதை விட அவள் வந்து நம்மளைப் பாராட்டிக்கிட்டு இருக்கிறா." என்று நினைத்துச் சிரித்துக் கொண்டான் பாரி.

"சார்! ஐ"ம் வெரி சீரியஸ். நான் வேண்ணா பத்து நாளைக்கு ஹானரரி பேசிஸ்ல வேலை பண்றேன். நீங்க பாருங்க. பார்த்துட்டு முடிவு பண்ணுங்க." என்றாள்.

"பார்க்கலாம்." என்பது போல அவன் தலையாட்டிக் கொண்டான்.

கேபின் கதவைத் திறந்து கொண்டு போக முற்பட்டவள் திரும்பி வந்து, "சார்! நீங்க உண்மையாவே ரொம்ப நல்லா சர்வீஸ் பண்றீங்கன்னு நான் கேள்விப்பட்டிருக்கேன்." என்றாள்.

அவனும் புன்னகைத்துக் கொண்டே, "பரவாயில்லை. நீங்களும் ரொம்ப நல்லா கன்வின்ஸ் பண்றீங்க." என்றான்.

அவள் சிரித்துக்கொண்டே வெளியேறினாள்.

இது அத்தனையும் பார்த்துக்கொண்டிருந்த ராகேஷும். சுப்பிரமணியும் ஓடி வந்தார்கள்.

"அண்ணா! பேசாம இப்படி ஒரு ஆள் கிடைச்சா போட்டுக்கலாம்." என்றார்கள்.

"இதுக்குத்தான்டா வேண்டாங்கறேன். உடனே ஓடி வந்துட்டீங்க பாரு. ஏதாவது கூப்பிட்டா கூட இதோ வர்றேண்ணா, இதோ வர்றேண்ணான்னுட்டு உட்கார்ந்

திருப்பீங்க. ஒரு பொண்ணு வந்தவுடனேயும் எப்படி சுறுசுறுப்பா ஓடி வர்றீங்க." என்றான்.

"அதுக்குத்தாண்ணே நான் சொல்றேன். ஒரு பொண்ணு இருந்தாள்னு வெச்சுக்குங்க. அசடு வழிய மாட்டோம், தூங்கி வழிய மாட்டோம், சுறுசுறுப்பா இருப்போம்ல. கொஞ்சம் டீக்கா கூட ட்ரெஸ் பண்ணிட்டு வருவோம்." என்றான் சுப்பிரமணி.

பைந்தமிழ் பாரி சிரித்து விட்டான். "நானும் நினைச்சேன்டா. முக்கியமா இந்த சிங்கிள் லேடிங்க இருக்கற வீடுகள்ல இந்த மாதிரி ஒரு பொண்ணு போயிட்டு வந்தா நல்லதுதான். ஆனா இந்த பொண்ணோட பேக்ரவுண்ட்லாம் எப்படி தெரிஞ்சுக்கறது?" என்றான்.

"பேக்ரவுண்ட்டைப் பத்தி நமக்கு என்னன்னா? முதல்ல வந்து ஒரு ரெண்டு, மூணு மாசம் ஒழுங்கா வேலை செய்யுதான்னு பார்ப்போம். அதைப் பார்த்துட்டு அதுக்கப்புறம் நாம முடிவு பண்ணிக்கலாமே.." என்றான் ராகேஷ்.

"நாம முடிவு பண்ணிக்கறது இல்லைடா. நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து முடிவு பண்ணிட்டு வந்து என்னை இம்சை பண்ணிக்கிட்டு இருக்கீங்க." என்றான்.

"தெரியும் இல்லைன்னா. எங்க அண்ணன், நல்ல அண்ணன். அந்தப் பொண்ணுக்கு ஏதோ தேவை இருக்கும் போலத்தான் இருக்கு. இல்லாட்டி இந்த மாதிரி ஒரு கன்சர்னுக்கு வேலைக்கு வருமா? நல்லா ஃபியூச்சர் இருக்கிற மாதிரி... ம்ம்... புரொமோஷன் இருக்கிற மாதிரி... அப்படியான இடங்களுக்குத்தானே போவாங்க." என்று ராகேஷ் காரணங்களைத் தானே கற்பித்தான்.

சுப்பிரமணி கூட ஒத்து ஊதினான். "ஆமாண்ணா. அந்தப் பொண்ணு இருக்கிற ஸ்மார்ட்னெஸ்ஸுக்கு, அந்தப் பொண்ணுக்கு இருக்கிற பர்சனாலிட்டிக்கு வேற பெரிய கன்சர்ன்ல போனா சீக்கிரமா டெவலப் ஆயிரும்ணா. அது ஏதோ உண்மையான பர்ப்பஸோடத்தான் வர்ற மாதிரி தெரியுது." என்றான்.

"டேய்... அந்தப் பொண்ணு பர்ப்பஸோட வருதோ, இல்லியோடா? நீங்க பர்ப்பஸோட முடிவா இருக்கிறீங்கடா." என்று சிரித்தான் பைந்தமிழ் பாரி.

அவன் சிரித்தவுடனேயே தோன்றியது அவர்களுக்கு, "சங்கமித்திரை அந்த அலுவலகத்திலே வந்து அமரப் போகிறாள்" என்று.

அப்படியே வந்தாள்.

ஓரிரண்டு நாட்களுக்குள்ளாக அவளுக்கென்று ஒரு இருக்கையும், டெலிஃபோனும் தயாரான போது, மற்றவர்களுக்கெல்லாம் தெரிய வில்லை, இந்த சங்கமித்திரை தான் மட்டும் வரவில்லை. பெரியதாக ஒரு பிரச்சினையும் கொண்டுவருகிறாள் என்று.

அவள் வந்து அமர்ந்தவுடனேயே ஒரு டெலிஃபோன் மணி ஒலித்தது. எடுத்துக் காதில் வைத்தாள். காதில் வைத்தவுடனேயே முகம் மாறியது.

கேட்டுக் கொண்டாள்.

"என்ன? என்ன? என்ன?" என்றார்கள்.

"சொல்றேன்." என்று அழுத்தமாக டெலிஃபோன் ரிசீவரைக் கீழே வைத்தாள் மித்ரா.

சங்கமித்ரா.

அத்தியாயம் -6

"சார் வாரப் பத்திரிக்கையிலிருந்து ஃபோன்." என்றான் விசுவா.

அவர்கள் கெஸ்ட் ஹவுஸுக்கு வந்து ஒரு மாதம் ஓடியிருந்தது.

இருபது நாட்கள் என்று சொல்லிவிட்டு வந்து அதற்குப் பிறகு, பத்திரிகையின் வேண்டுகோளைக் கேட்டதற்குப் பிறகு எவ்வளவு விரைவில் திரைக்கதை தயார் செய்ய வேண்டுமோ, அவ்வளவு விரைவில் திரைக்கதையைத் தயார் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த ஒரு மாதத்தையும் அவன் கடுமையாக அதற்காக செலவழித்துக் கொண்டிருந்தான்.

விசுவாவுக்குத்தான் பாவம் சலித்துப் போய்விட்டது.

"அதைக் கொண்டா, இதைக் கொண்டா" என்று படுத்தி எடுத்து விட்டான் வனமாலி.

அது போக மாலை நேரங்களில் அருந்துவதற்கு பானம் வேறு. அதற்கு துணைக்கு பல்வேறு விதமான பலகாரங்களையும் படைக்க வேண்டியிருந்தது.

இத்தனைக்கும் நடுவில் எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி இரண்டு நாட்கள் தன்னுடைய ஊருக்குப் போய்விட்டு வந்து விட்டான் விசுவா.

பத்திரிகையின் வேண்டுகோளுக்கு ஏற்ப ஒரு மாதத்திற்குள்ளாக திரைக்கதையை ஓரளவு தயார் செய்திருந்தான். இதற்கிடையிலே இன்றைக்கு என்ன குண்டு வருகிறதோ என்று ஃபோனைக் கையிலே வாங்கினான். அந்த வாரப் பத்திரிக்கையினுடைய உதவி ஆசிரியர் பேசினார்.

"சார் நாங்க ஒன் மன்த் டைம் கொடுத்ததிலே நிறைய திரைக்கதைகள் வந்திருக்கு. ஆனா அதிலே..." என்று பேசுகையில் வனமாலி இடையில் நுழைந்து,

"எவ்வளவு வந்திருக்கும்?" என்று கேட்டான்.

"அது ஒரு முன்னூறு வந்திருக்கும் சார்." என்றான்.

"ஆஹ்ஹா. முன்னூறு வந்திருச்சா?" என்று வனமாலி ஆச்சரியப்பட்டான்.

"ஆமா சார். ஆனா அதுல ஒரு நூத்தைம்பதுக்கு மேல திராபை. அதுல ஒண்ணும் யூஸ் இல்லை. அதிலே வடிகட்டி நாங்க ஒரு நூறு எடுத்திருக்கோம். அந்த நூறையும் உங்க பார்வைக்குக் கொடுத்தர்லாமா?" என்று கேட்டான்.

"எத்தனை பேரை ஜட்ஜா போட்டிருக்கீங்க?" என்று கேட்டான் வனமாலி.

"நீங்க மெயின் ஜட்ஜ் சார். அப்புறம் எங்க உதவி ஆசிரியர்கள் ரெண்டு பேர். அதைத் தவிர ஒரு லேடி ரைட்டர் போட்டிருக்கோம். அவங்க ஃபர்ஸ்ட் ஸ்டேஜில வடிகட்டி கொடுத்துட்டாங்க. இதுக்கு மேல நீங்க பார்த்துக் குங்கன்னு சொல்லிட்டாங்க. நாங்களும் சேர்ந்துதான் இந்த நூறைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்." என்றார்.

"ஒண்ணு செய்ங்க. இனி உங்க உதவி ஆசிரியர்கள் ரெண்டு பேரையும், அல்லது நெக்ஸ்ட் லெவல்ல நீங்க யாரை ஜட்ஜா போடறீங்களோ அவங்க ரெண்டு பேரையும் இங்கே அனுப்ப முடியுமா? எல்லா கதையையும் இங்கே கொண்டு வந்திருங்க ஏற்காட்டுக்கு. முடியுமா?" என்றான்.

"அப்படியா?" என்றார்கள்.

"எதுக்கும் ஒரு ஒன் டே டைம் கொடுங்க. நான் செட்டியார்கிட்ட பேசிடறேன்.பேசிட்டு இங்கே மாடியில அவங்களையும் தங்க வெச்சர்லாம். வெச்சிட்டு நாம இங்கேயே உட்கார்ந்து முடிச்சிரலாம்." என்றான்.

"அதுவும் நல்ல ஐடியா சார். ஆனா எதுக்கும் நீங்க அவரைக் கேட்டுட்டு சொல்லுங்க சார்." என்றார்கள் அந்தப் பக்கமிருந்து.

"ஆமாமா. கேட்காம நானே வாக்குறுதி கொடுக்க முடியாது. கேட்டர்றேன். ஆனா உங்க பத்திரிகை பேரைச் சொன்னா அவர் ஒத்துக்குவாருன்னு நினைக்கிறேன். அப்படித்தான் இப்ப எனக்கு இந்த ஒன் மன்த் டைம் கொடுத்திருக்காரு." என்றான்.

அதேபோல, செட்டியாரிடம் பேசியவுடன், "சரி தம்பி! என்ன ஒரு மூணு, நாலு பேரு எக்ஸ்ட்ரா வருவாங்களா? சரி. மாடியில தங்க வெச்சுக்கோங்க. மாடி பங்களாவுல. பின்னாடி வழி இருக்கு. அதுல அனுப்பிச்சிருங்க. உங்களுக்கு டிஸ்டர்பன்ஸ் இல்லாம பார்த்துக்கங்க." என்றார் செட்டியார்.

ஏனென்றால் வனமாலி இடக்கு பண்ணி விட்டால் அவ்வளவுதான். எவ்வளவு தொல்லைகள் கொடுத்தாலும். இடக்கு செய்தாலும் ஒரு கதை வடிவத்தை உருவாக்கிக் கொடுப்பதில் வனமாலிக்கு இணை அவன்தான். அதனால் தான் செட்டியார் இத்தனையும் பொறுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தார்.

அது மட்டுமில்லாமல் ஆரம்பகாலத்தில் படங்கள் எடுக்கும்போது, வனமாலியினுடைய கதை அமைப்பின்

காரணமாகவே படங்கள் வெற்றியடைந்தன. அதனால் அந்த நன்றியும் அவருக்கு இருந்தது.

இந்த முறை ஒரு பெரிய தொகை கொடுக்க வேண்டும் என்று கூட அவர் நினைத்துக் கொண்டிருந்தார். இன்னொரு யோசனையும் கூட அவருக்குத் தோன்றியது. அதை இப்போது வனமாலியிடம் பகிர்ந்துகொண்டார்.

"ஏம்ப்பா வனமாலி! ஆக்சுவலா... புது டைரக்டரைத் தான் நான் போடறேன். ஏன்னா, பெரிய டைரக்டர்கள் எல்லாம் கோடிக் கணக்குல கேட்கறாங்க. அவங்க கால்ஷீட் கிடைக்கிறதும் பெரிய கஷ்டமா இருக்கு. புதுப் பையன். நல்ல கெட்டிக்கார பையன். அவனையும் அங்க அனுப்பிச் சிரட்டுமா? உட்கார்ந்து பேசி ஸ்க்ரீன் பிளே ரெடி பண்ணிருவீங்களா?" என்று கேட்டார்.

"ம்ம்... அந்த இதுல வேற ஜட்ஜா இருக்கேன். ரொம்ப டைட் ஷெட்யூலா இருக்குமே." என்றான்.

"வேணும்னா ஒரு நாலு நாள் ஊருக்கு கீருக்குப் போயிட்டு வர்றீங்களா?" என்று கேட்டார் செட்டியார்.

"இல்லையில்லை. நான் கன்டினியுவஸா உட்கார்ந்து முடிச்சுர்றேன்."என்று வனமாலி அங்கேயே இருக்கிறேன் என்று ஒப்புக்கொண்டான். செட்டியாருக்கும் அது சௌகரியமாக இருந்தது.

புதிய இயக்குநர் என்பதால், வாய்ப்புக் கிடைத்தாலே போதும் என்ற நிலையில் இருப்பதால், அங்கே எங்கே வேண்டுமானாலும் தங்கிக் கொள்வதற்கும், வசதி கிடைக்காவிட்டாலுங்கூட சமாளித்துக் கொள்வதற்கும் அந்த இளைஞன் தயாராக இருந்ததால், அந்த இளை

ஞனுக்கு அந்த பங்களாவினுடைய அவுட் ஹவுஸைக் கொடுத்து விடுவதென்று முடிவு செய்திருந்தார்கள்.

வனமாலிக்கு நேரம் போனதே தெரியவில்லை என்கிற அளவுக்கு வேலை இருந்தது.

ஏதோ ஒரு நேரம் மட்டும்தான் வீட்டுக்கு ஃபோன் செய்து பேசுவான்.

குழந்தைகளிடம் சற்று பேசுவான். மனைவியிடம் குடும்பத்தின் செலவு, வரவு குறித்துத்தான் பெரும்பாலும் பேசுவான்.

திரைக்கதைகள் முன்னூறும் வேண்டுமென அவன் கேட்டபோது, உதவி ஆசிரியர்கள் யோசித்தார்கள்.

"சார், முன்னூறும் உங்களுக்குப் பார்க்கறதுக்கு நேரமிருக்குமா?" என்று கேட்டார்கள்.

"இல்லைப்பா. நீங்க வேண்டாம்னு ஒதுக்கி வெச்சிருக்கிற அந்த நூத்தியம்பதை, எடுத்து அப்படியே ஒரு ரெண்டு, மூணு பேஜ் பார்த்தாலே இது தேறுமா, தேறாதா என்று எனக்குத் தெரிஞ்சிரும். ஏன்னா அந்த நூத்தியம் பதிலும் நீங்க ஏதாவது நல்லதை வேண்டாம்னு ஒதுக்கிரக் கூடாதுல்ல. என்னுடைய பார்வையில அது சரியாக் கூட இருக்கலாம். அதுக்காக சொன்னேன்." உண்மையிலேயே அவர்கள் ஆச்சர்யப்பட்டுப் போனார்கள்.

"செய்தால் ஒழுங்காகத்தான் செய்கிறார்." என்று நினைத்துக் கொண்டார்கள். அதே போல, ஒரு நான்கைந்து நாட்கள் அமர்ந்து அந்த நூத்தி ஐம்பது கதைகளையும் பார்வையிட்டான், ஸ்கிம்மிங் என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அது போல புரட்டிப் பார்த்தாலே அவனுக்குக் கதையினுடைய வடிவம் பிடிபட்டுப் போனது.

அதிலே இருந்து கூட அவன் மறுபடியும் ஒரு பத்துக் கதைகளை தேர்ந்தெடுத்துவிட்டு, மீண்டும் பார்ப்பதற்காக ஒதுக்கி வைத்துக் கொண்டான்.

அவர்கள் தேர்ந்தெடுத்த ஒரு நூறு கதையிலிருந்து ஒரு பத்துக் கதையை இது போல ஒதுக்கி வைத்து விட்டான். எனவே மறுபடியும் மொத்தத்தில் அவன் நூறு கதையைப் பார்க்க வேண்டியதாக இருந்தது.

முதல் கட்டமாக அமர்ந்து ஒரு மீட்டிங் போட்டுக் கொண்டார்கள்.

"ஒரு ரவுண்ட் எல்லோரும் பார்த்துருவோம். பெஸ்ட் ஃபிஃப்டி எடுத்துருவோம். இந்த டென் டேய்ஸுக்குள்ள." என்றான் வனமாலி. அதேபோல எடுத்தார்கள்.

அந்த ஐம்பதிலும் வடிகட்டி இருபதை எடுத்தார்கள். அதில் இருந்து வடிகட்டி பத்தை எடுத்தார்கள்.

மொத்தமாக மூன்று கதைகளைத் தேர்ந்தெடுப்பது என்று அவர்கள் முடிவு செய்திருந்தார்கள்.

ஒரு கதை எல்லோருடைய மனதையும் கவர்ந்தது. அந்த முதல் பரிசுக்குண்டான கதையை மட்டும் ஏகமனதாகத் தீர்மானம் செய்தார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

அந்த கதையை எழுதியிருந்தவருடைய பெயரைப் பார்த்தான். "சதி" என்றிருந்தது. இந்த சதி உண்மையாகவே திரைத்துரையில் தனக்குப் போட்டியாக வரப் போகிறார் என்று அவனுக்கே தோன்றியது.

விசுவாவிடம் கூட சொன்னான்.

"இப்படி ஆளுங்க வந்தாங்கன்னா, நம்மளுக்குக் கொஞ்சம் போட்டிதாம்பா." என்று.

விசுவா உடனே, "எத்தனை பேர் வந்தா என்ன சார்? இந்தத் திரையுலகம்தான் பெருசா இருக்கே. அதுல எல்லோருக்கும் இடம் இருக்கு." என்றான்.

"அது என்னமோ நிஜம்தாம்பா. அவனவனுக்கு உண்டான வாய்ப்பு இருக்கு.இருந்தாலும் உனக்கு ஞாபகம் இருக்கா. நான் ஃபீல்டுக்கு வந்தப்போ, பழைய அந்த கதாசிரியர் இருந்தாரே... வில்லவனா.. என்னவோ பேரு. வில்லவன் கோதை. அந்த ஆளு எவ்வளவு இடைஞ்சல் பண்ணினாரு. உனக்கு ஞாபகம் இருக்கா?" என்றான்.

விசுவா இவனிடம் உதவியாளராக வந்தே மூன்று ஆண்டுகள்தான் ஆகியிருந்தது.

அந்த மூன்று ஆண்டுகளின் துவக்கத்தில் வில்லவன் கோதையினுடைய தொல்லை அதிகமாகத்தான் இருந்தது. அவனுக்கே அது தெரியும்.

படிப்படியாக அந்தப் போராட்டங்களில் எல்லாம் ஜெயித்துத்தான் வனமாலி மேலே வர வேண்டியிருந்தது. ஆனால் வில்லவன் கோதை வனமாலியைப் போல ஆர்ப்பாட்டம் செய்ய மாட்டார். அமைதியாக இருப்பார்.

அமைதியாக இருந்துகொண்டே குழி வெட்டுவதை நன்றாகச் செய்வார்.

இது முதலில் வனமாலிக்குப் புரியாமலே இருந்தது. ஆனால், இப்போது தனக்கென்று ஒரு இடம் கிடைத்த தற்குப் பிறகு, வனமாலி செய்ய கூடிய ஆர்ப்பாட்டங்கள் சற்று அதிகமாகத்தான் இருந்தது.

விசுவா சிரித்துக் கொண்டே சொன்னான்,

"சரிங்க சார். இனிமே நாம கொஞ்சம் ஸாஃப்ட்டா போயிட்டா தீர்ந்தது. நமக்கு வர்ற சான்ஸ் கிடைக்கத்தான்

செய்யும். இன்னும் பத்து வருஷத்துக்கெல்லாம் உங்களை அசைச்சுக்க முடியாது சார்.'' என்று.

''ஆமாய்யா. ஆனா அந்தக் கதை உண்மையிலேயே சூப்பர் கதையய்யா. அதை எழுதின மூளை லேசுப்பட்ட மூளை இல்லை. அந்த பர்ட்டிகுலர் பர்ஸன் தொடர்ந்து கதை எழுதினா, நிச்சயமா நமக்கெல்லாம் டெபாசிட் காலிதான்.'' என்றான் சிந்தனையுடன்.

இவர்கள் திரைப்படத்துக்காக வந்திருந்த அந்த இளைஞர் கூட அந்த கதையைப் படித்துவிட்டு, ''நல்ல கதை சார் இது.'' என்றான்.

உதவி இயக்குநர்கள் எல்லோருமாக அந்த கதையைப் படித்துவிட்டு பாராட்டிய விதம் பார்த்து, அந்த முதல் பரிசு பெறக் கூடிய அந்த நபரை, அது ஆணோ பெண்ணோ தெரியவில்லை, பற்றி இப்போதே அவனுக்குப் பொறாமை எழுந்தது.

விசுவாவுக்கு ஆனால் உள்ளூர மகிழ்ச்சி. இப்படியான போட்டிகள் இருக்கிறது என்று தெரிந்தால்தான், இந்த மாதிரி ஆட்களுக்குக் கொஞ்சம் பயம் வரும். அட்டகாசம் குறையும் என்று அவன் எண்ணிக்கொண்டான்.

அவர்கள் அந்த முதல் பரிசுக்கான கதையை முடிவு செய்த அன்றைக்கு வனமாலி கொஞ்சம் டிஸ்டர்ப்ட் ஆகத் தான் இருந்தான். அன்று இரவு கொஞ்சம் அதிகமாகவே உள்ளே போனது.

விசுவா கூட, ''போதும் சார். போதும்.. பார்த்து..'' என்றான்.

''போய்யா. இப்படியெல்லாம் ஒரு கதை எழுத முடியுமா? எழுதியிருக்கானே அந்த ஆளு. ம்ம்.. அவன்

யாருன்னு தெரியலியே.. ஃபீல்டுக்கு வந்தான்னா அவ்வளவுதான்.'' என்று குழறிக் கொண்டேயிருந்தான்.

விசுவா, ''ஃபீல்டுக்கு வர்ற அன்னைக்கு பார்த்துக்கலாம் சார். இப்ப அதுக்கு ஏன் வொர்ரி பண்ணிக்கறீங்க.'' என்றான்.

கோபம் வந்து அவன் பருகுகிற அந்த பானத்துக்கு துணையுணவாக இருந்த அந்த ஸைட் டிஷ் தட்டை விட்டெறிந்தான்.

''என்னய்யா இது? காரமும் இல்லை, ஒண்ணும் இல்லை. போய் வேற ஏதாவது ஹாட்டா செஞ்சுட்டு கொண்டு வந்து கொடுக்கச் சொல்லு.'' என்றான்.

''எங்கேயே போற கோபம்...'' என்று அந்த பழமொழியை நினைத்துக்கொண்ட விசுவா, சமையல்காரரைப் போய் எட்டு மணிக்கு எழுப்பி,

''ஏதாவது சூடா வேணும்னு கேட்கிறாரு.'' என்றான்.

சமையல்காரர் தலையிலே அடித்துக் கொண்டு வந்து, ''நல்ல வேளை. நான் மாவு கலக்கி வெச்சிருந்தேன்.'' என்று மளமளவென்று ஏதோ சிக்கன் ஃப்ரை போல ஒன்று தயார் செய்து அனுப்பி வைத்தார்.

வனமாலிக்கு அன்றைக்கு ஏதோ ஒரு அச்சம் கிளம்பியிருந்தது.

''முன்னூறு பேர் திரைக்கதை அனுப்பியிருக்கிறார்கள். அதிலே நூறு தேறுது. ஐம்பது பெட்டரா இருக்கு. அதுல ஒரு அஞ்சு டாப் ஃபைவா வருது. ம்ம்.. இவங்கல்லாம் ஃபீல்டுக்குள் வந்தாங்கன்னா நம்ம எதிர்காலம் என்ன ஆகிறது?'' என்பது போல் பயம் தோன்றியிருந்ததோ என்னவோ, உளறிக் கொண்டேதான் இருந்தான்.

ஒரு எட்டு மணி வாக்கிலே, "வீட்டுக்கு ஃபோனைப் போடுய்யா." என்றான் ஃபோனைக் கையில் கொடுத்து.

"சார். வேண்டாம். இப்ப நீங்க ரொம்ப பேட் மூட்ல இருக்கீங்க. இந்த நேரத்துல நீங்க ஃபோன் போட்டு பேசினீங்கன்னா அக்கா ரொம்ப வருத்தப்படுவாங்க. கடுமையான சொல்லைப் போட்டுருவீங்க சார் இடையில." என்றான்.

"வாங்கிக்கட்டும். நான் சம்பாதிச்சுக் கொடுத்த சோத்தை வாங்கிக்கறா. துணிமணியை வாங்கிக்கறா.. ஏன் குழந்தைங்களை வாங்கிக்கிட்டா இல்ல. அப்புறமென்ன? நான் ரெண்டு திட்டுத் திட்டினா வாங்க மாட்டாளா?" என்றான் கடுப்புடன்.

"சார். அதுக்குச் சொல்லலை சார். இந்த மாதிரி சமயத்துல நீங்க ரொம்ப ஹார்ஷா பேசிர்றீங்க. அவங்க பாவம்." என்றான்.

"நீ என்னய்யா வக்காலத்து? நான் உனக்கு சம்பளம் கொடுக்கிறேனா, அவள் கொடுக்கிறாளா? போய் முன்னாடி நில்லு வெளியே, ரூம்ல கதவைச் சாத்திட்டுப் போ." என்றான்.

விசுவா மிகவும் வருத்தத்துடன் அறைக்கதவைச் சாத்திக் கொண்டு வெளியே போய், உடனடியாகத் தன் ஃபோனிலிருந்து வீட்டுக்கு ஃபோன் அடித்தான்.

அதற்குள்ளாக வனமாலியின் ஃபோனை சரஸ்வதி எடுத்துவிட்டாள் போலும்.

"ஏண்டி கிரகச்சாரம். ஃபோன் எடுக்கறதுக்கு இத்தனை நேரமா?" என்று அந்தப் பக்கமிருந்து கத்தினான்.

"அடுப்படிகிட்ட இருந்தேங்க." என்றாள் அவள் பொறுமையாக.

"அடுப்படிகிட்ட என்னத்தை பண்ணிக்கிட்டிருந்தே? தொலைஞ்சிட்டான்னு விதவிதமா செஞ்சு சாப்பிடறீங்களாக்கும். ஒரு மாசமா இங்க இருக்கேனே, செத்தானா பொழைச்சானான்னு பார்த்தியா?" என்று கேட்டான்.

"நீங்கதான் தினமும் ஃபோன் பண்ணிக்கிட்டு இருக்கீங்களே. அதுவும் இல்லாம உங்களுக்கு இப்ப நல்ல ஆஃபர் வந்திருக்கு. ஏதோ ஜட்ஜா வேற இருக்கேன்னு ஃபோன் பண்ணினீங்க. அதனால, நீங்க பிஸியா இருப்பீங்கன்னு தான் நான் தொல்லை பண்ணலை." என்று அவள் செல்ஃபோனை இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் ஒரு பதட்டத்தில் கையாளும்போது, தன்னையறியாமல் ஸ்பீக்கரை ஆன் செய்து விட்டாள்.

அதே நேரத்தில் ஹாலில் அமர்ந்து செய்தித் தாளைப் படித்துக் கொண்டிருந்த பாரி கூர்ந்து கேட்க ஆரம்பித்தான். அடுத்தவர் பேசுவதைக் கேட்கக் கூடாது என்றாலும் கூட அக்காவிற்கு ஏற்படுகிற பதட்டமும், அவள் கைகள் நடுங்குவதையும் பார்த்தவுடன், "தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும்" என்பார்களே அது போல அவனுக்கு உள்ளே ஏதோ ஒன்று கழன்றாற்போல உணர்ந்தான்.

கவனிக்க ஆரம்பித்தான்.

"அறிவு கெட்ட நாய். உனக்கெல்லாம் சோறு போட்டு உட்கார வெச்சிருக்கேன் பார்த்தியா? என்னைச் சொல்லணும்டி. அவனவன் எவ்வளவு கஷ்டப்பட்டுப் போராடி உங்களை எல்லாம் காப்பாத்திக்கிட்டிருக்கிறான்னு தெரியுமா? முன்னூறு பேருடி. கதை அனுப்பிச்சிருக்கானுங்க. அதுல நூத்தைம்பது கதை நல்லா இருக்கு. அதுல அஞ்சு டாப்பா

எழுதியிருக்காங்க. சதியாம் சதி.ம்ம். அப்படி எல்லாம் ஆளுங்க இருக்காங்க. உன்னை மாதிரி மரமண்டையைக் கல்யாணம் பண்ணிட்டு நானும் வாழ்க்கை நடத்தறேன் பாரு.'' என்று ஆரம்பித்தவன் இரண்டு நிமிடங்களுக்கு மேலாகத் தன் வாயில் வந்ததையெல்லாம் பேசிக் கொண்டிருந்தான்.

தம்பி கவனிக்கிறான் என்பது தெரியாமல் அடுத்த அறையிலே நின்றபடி கண்கள் இரண்டிலும் கண்ணீர் பெருகி ஓட, அந்த செல்ஃபோனை கையில் வைத்துக் கொண்டு நின்றாள் சரஸ்வதி.

பைந்தமிழ் பாரியின் அடி வயிறு கொதித்தது என்றுதான் சொல்ல வேண்டும். தாங்க முடியாதவனாக சட்டென்று எழுந்து ஹாலை விட்டு வெளியே போய்விட்டான்.

திடீரென்று ஹாலில் தம்பி அமர்ந்திருந்தானே என்ற நினைவுடன் எட்டிப் பார்த்தாள் சரஸ்வதி. தம்பியைக் காணவில்லை என்றவுடன் பெருமூச்சு விட்டாள்.

அந்த நிம்மதி வெகு நாட்களுக்கு நிலைக்கப் போவதில்லை என்பது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அத்தியாயம் -7

சர்ரென்று சீறிக் கொண்டு வந்து நின்றது பைக்.

பாரியின் கோபம் வண்டியை அலட்சியமாக கடாசி விட்டு வந்த வேகத்திலேயே தெரிந்தது. வந்த கோபத்திற்கு சகோதரியிடம் என்னவும் பேசி விடுவோமோ என்ற பயம் ஏற்பட்டதோ என்னவோ புறப்பட்டு வந்து விட்டான்.

தன்னுடைய அலுவலகத்திற்கு வந்தான்.

அலுவலகத்தைத் திறந்துவிட்டு உள்ளே போய் லைட்டு களைப் போட்டுவிட்டு அமர்ந்தான். ஃபேனை ஓட விட்டு விட்டு சற்று நேரம் ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

கோபம் அப்படி தலைக்கேறியிருந்தது.

அக்கா பாவம் தெரியாமல் ஸ்பீக்கரை போட்டு விட்டாள். முழுவதுமாக அவன் காதில் விழுந்தது.

''இப்படியெல்லாமா பேசுவார்கள்? ஊருக்கெல்லாம் புத்தி சொல்லுகிற கதாசிரியன்,

தன் மனைவியை எப்படி நடத்த வேண்டும் என்பது கூட அறிந்திருக்கவில்லை என்றால், அவன் என்ன பெரிய சிந்தனாவாதி?'' என்று அவனுக்குக் கோபமாக வந்தது.

கோபத்தோடு கண்களை அப்படியே மேஜை மேல் மேயவிட்டான்.

அதே நேரத்தில், ''கேன் ஐ ஸ்பீக் டு யூ சார்?'' என்று ஒரு மெஸேஜ் வந்தது.

மித்ரா அனுப்பியிருந்தாள்.

''யெஸ்.'' என்று அனுப்பினான்.

அவள் உடனே இவனிடம் பேசினாள். ''சார்! நீங்க ஈவ்னிங் வருவீங்கன்னு எதிர்பார்த்தேன். வரலை. அதனால எல்லா அக்கவுண்ட்ஸையும் எழுதி டேபிள் மேல வெச்சிருக்கேன் சார். கேஷ் ஆன் ஹேண்ட் எவ்வளவு இருக்கு? இன்னைக்கு என்ன வசூல் ஆச்சு? என்னென்ன ஆக்டிவிட்டீஸ் நடந்தது? யார், யார் எங்கெங்கே போய் என்னென்ன சர்வீஸ் பண்ணிட்டு வந்தாங்க? எல்லாமே அதுல நான் ஜாட் டவுன் பண்ணி வெச்சிருக்கேன் சார். கேஷ் ஆன் ஹேண்டை ஒரு கவர்ல போட்டு பின் அடிச்சு டேபிள் ட்ராயர்ல வெச்சிருக்கேன் சார். கீ வழக்கமான

இடத்துல வெச்சிருக்கேன். நீங்க பார்த்துக்கிறீங்களா?'' என்றாள்.

''ஓ.கே.மா. பெரிய அமவுண்ட்டா?'' என்றான்.

''டு தவுஸண்ட் ருபீஸ் பக்கம் இருக்கும் சார். பெரிய அமவுண்ட் இல்லை.'' என்றாள்.

''இருந்தாக்கூட நீங்க இந்த மாதிரி சாவியை எங்காவது வெச்சுட்டுப் போற மாதிரி இருந்தா தகவல் எனக்குக் கொடுத்திருங்க.'' என்றான் அவன்.

''சரிங்க சார். இனிமே அப்படியே தகவல் கொடுத் தர்றேன்.'' என்றாள்.

''தேங்க் யூ. தேங்க் யூ.'' என்று அவன் அவளிடம் அதற்கு மேல் ஒன்றும் பேசாமல் ஃபோனைத் துண்டித்துக் கொண்டான்.

மித்ரா அந்தப் பக்கம் ''வெவ்வவ்வே'' என்று அழகு காட்டிவிட்டு ஃபோனை வைத்ததை அவன் பார்க்க நேர்ந்திருந்தால் ஒரு வேளை அந்த கோபம் குறைந்திருக்கும்.

குளிர்ந்தும் கூட போயிருப்பான்.

மித்ராவின் நினைவு வந்தவுடனே அவன் முகத்தில் கோபம் மாறி சாந்தம் கனிந்தது.

மித்ரா அலுவலகத்திற்கு வந்ததற்குப் பிறகு, அலுவலகமே கொஞ்சம் துடைத்து வைத்தாற் போல ''பளிச்''சென்று ஆகி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

எல்லோருமே இப்பொழுதெல்லாம் கொஞ்சம் நன்றாக உடை உடுத்திக் கொண்டு வர ஆரம்பித்தார்கள். எப்போதும் அணிகிற உடைதான் என்றாலும் கொஞ்சம் அக்கறை எடுத்து,... அதை அயர்ன் செய்து..... என்று

கொஞ்சம் சுறுசுறுப்பும் அதிகரித்திருந்தது; அக்கறையும் அதிகரித் திருந்தது தோற்றத்தில்.

அவன் கூட ஒரு நாள் பையன்களிடம் கேட்டான், ''என்னப்பா! பசங்கள்லாம் இப்ப ரொம்ப ஸ்மார்ட்டா வர்ற மாதிரி இருக்கு.'' என்று.

அவர்கள் மட்டும் சளைத்தவர்களா என்ன?

''பாஸே இப்ப எல்லாம் கொஞ்சம் ஸ்மார்ட்டா வர்ற மாதிரி இருக்கு.'' என்றார்கள்.

உண்மைதான். இது வரையிலும் பாரி உடையைப் பற்றி கவலை கொள்ள மாட்டான். சில நேரத்தில் நேரம் கிடைக்கவில்லை என்றால் அயர்ன் பண்ணாமல் கூட அணிந்து கொண்டு வருவான். அப்பொழுதெல்லாம் அவர்கள் கேலி செய்வதுண்டு. இப்பொழுது அவனே கொஞ்சம் அக்கறை எடுத்துக் கொண்டு உடை உடுத்திக் கொண்டு வருகிறான்.

''ஆமாப்பா. லேடீஸ் இருந்தாலே நாம கொஞ்சம் கேர்ஃபுல்லாத்தான் இருக்க வேண்டியிருக்கு. உன்னை அப்படி மேலே இருந்து கீழே வரைக்கும் பார்த்தாங்கன்னு வைங்களேன். உனக்கு ஜிவ்வுன்னு கிளம்பும், கோபம்.'' என்றான்.

அவர்கள் எல்லோரும் சிரித்தார்கள். அதற்குள்ளாக மித்ரா வந்துவிட்டாள். அதனால் பேச்சு துண்டிக்கப் பட்டது.

மொத்தத்திலேயே எல்லோருடைய நடவடிக்கைகளிலும் ஒரு ஒழுங்கும், சுறுசுறுப்பும் வந்திருப்பதை உணர்ந்தான்.

''இதுக்குத்தான் கால் கட்டு போடறதுன்னு சொல்றாங் களோ...?'' என்று எண்ணி சிரித்துக் கொண்டான்.

அலுவலகத்தை ஒழுங்குபடுத்தினாள் மித்ரா. ஒவ்வொரு மேஜையின் மீதும் அவரவருக்கான லெட்ஜர்ஸ், பேப்பர்ஸ் எல்லாம் சரியாக வைக்கப்பட்டன.

அலுவலகத்தைப் பெருக்குகிறவர்களிடம் கூட சரியான நேரத்தில் வேலை வாங்கி அலுவலகம் முழுவதும் சுத்தமாக இருக்கிற பார்த்துக் கொண்டாள்.

இந்த மாதிரி விஷ்யங்களில் இப்பொழுது பாரிக்குத் தலையிட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அதனால் கூடுதலாகக் கூட கொஞ்சம் நேரம் கிடைத்தது.

வழக்கமாக மாலையிலே வந்து அன்றைக்கு என்ன நடந்தது என்று கேட்டுக் கொள்ளுவான். இடையிலே தேவை இருக்கும்போது வருவான்.

இன்றைக்கு ஒரு பத்திரிகைக்கு செய்தி திரட்டுவதற்காக போய்விட்டான்.

அது கொஞ்சம் லாவகமாக நடந்து திரட்ட வேண்டிய செய்தி என்பதால் இவனை அனுப்பி வைத்திருந்தார்கள். அந்த செய்தியைத் திரட்டி கொடுத்தவன் குழந்தைகள் வெங்கட்டும், நிவேதிதாவும் எதிர்பார்ர்த்துக் கொண்டிருப் பார்கள் என்று நேராக அங்கே போய்விட்டான்.

அங்கே போனதில்தான் அவன் மனது கெட்டுப் போனது.

அக்கா இதுவரையிலும் தன்னுடைய கஷ்டங்களை அவனிடத்திலே சொன்னதே இல்லை.

"எல்லாம் குடும்பப் பிரச்சினைப்ப்பா." என்பது போல ஒரே வரியில் எல்லாக் கஷ்டங்களையும் உள்ளடக்கி விடுவாள்.

"இன்னைக்கு இருக்கும். நாளைக்கு சரியாகப் போகும்." என்று தத்துவம் பேசுவாள்.

கல்லூரி நாட்களில் அவள் எவ்வளவு புகழ் பெற்றிருந் தாள் என்பதை இப்போது நினைக்கும்போது, அவனுக்கு இன்னும் அடக்கவொண்ணா ஆத்திரம் பொங்கியது.

"எவ்வளவு ஆக்டிவ்வாக இருந்தவள்? எத்தனை பரிசுகள் வாங்கியிருக்கிறாள்? விளையாட்டுத் துறையிலும், கல்வித் துறையிலும், பேச்சுப் போட்டியிலும், கவிதைப் போட்டி யிலும், கட்டுரைப் போட்டியிலும் என்று அவள் வாங்கிக் குவித்த பரிசுகள் எத்தனை? அவளை இந்த மச்சான் கொஞ்சம் கூட புரிந்து கொள்ள மாட்டாமல் இருக் கிறாரே...

புரிந்து கொள்ளாவிட்டால் கூட பரவாயில்லை. அவளை இப்படியெல்லாம் பேசுகிறாரே.." என்று அவனுக்கு தாங்கவொண்ணாத வேதனை.

சற்று நேரம் அலுவலகக் கணக்குகளில் மூழ்கினான்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் செலவிட்ட பிறகு கொஞ்சம் மனது சமனப்பட்டது.

"அக்கா வீட்டிற்குப் போகலாமா? வேண்டாமா?" என்று தோன்றியது. இன்னொரு புறத்தில் இப்பொழுதுதான் அவளுக்குக் கண்டிப்பாக ஆதரவு தேவை என்று எண்ணிய வனாக பைக்கை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

ஹால் ஸோஃபாவிலேயே இவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் அக்கா.

வண்டியை நிறுத்தும் பொழுது அவன் மனது இளகிப் போயிற்று.

"எவ்வளவு பாசமானவள்? இவள் பாசம், பண்பு, அறிவு இவற்றில் ஒரு துளி கூட இந்த எழுத்தாள மச்சான் புரிந்துகொள்ளவில்லையே..?!!" என்று அவனுக்குக் கோபம் வந்தது.

"அக்கா! நீ சாப்பிடலையா?" என்றபடியே லேசாக புன்னகைத்தபடி உள்ளே வந்தான்.

"ஆமா, தம்பி. நீ வரட்டும்னு உட்கார்ந்திருந்தேன்." என்றாள் அவள் எதையும் காட்டிக் கொள்ளாதவளாக. ஆனால், கண்கள் சிவந்திருந்தன. அழுத சுவடு தெரிந்தது.

"என்னாச்சு? ஒரு மாதிரி இருக்கே.." என்றான்.

"ஒண்ணுமில்லைப்பா. தலைவலி." என்றாள் அக்கா.

"எல்லாப் பெண்களுக்கும் இது ஒரு பொய் இலவச மாகக் கிடைத்து விடுகிறது. மறைக்கிறேன் பேர்வழி." என்று தங்களைத் தாங்களே வருத்திக் கொள்கிறார்கள்.

பொய் சொல்வது கை வந்த கலையாகிப் போய் விடுகிறது." என்று உள்ளுக்குள்ளே முணுமுணுத்துக் கொண்டான்.

"என்ன தம்பி? என்னமோ சொன்னியே.." என்றாள் அக்கா.

"ஒண்ணும் இல்லைக்கா. நான் தினமும் சொல்றேன். எனக்காக வெயிட் பண்ணாதே. நீ டைமுக்கு சாப்ட்டுடு. நான் வந்து சாப்பிட்டுக்கறேன்னு. இன் ஃபாக்ட் லேட்டாச் சுன்னா, நீ டேபிள் மேல வெச்சுட்டா, நானே எடுத்து பரிமாறிக்குவேன். இப்படியெல்லாம் எத்தனை தடவை சொல்றதுக்கா?" என்றான்.

"இருக்கட்டும் தம்பி. உன் அப்பார்ட்மெண்ட்டுலதான் நீயே செஞ்சு சாப்பிடுவே. இங்கேயாவது நான் ஆசையா

உனக்கு செஞ்சு பக்கத்துல இருந்து பரிமார்றனே... அப்படி உனக்கு நான் செய்யறது பிடிக்கலைன்னா, சீக்கிரமா பரிமாறதுக்கு ஒருத்தியைக் கொண்டு வா." என்றாள் அக்கா.

"எதுக்கு? அவளையும் சேர்த்து அவஸ்தைப் படுத்திட்டு இருக்கவா?" என்றான் அவன்.

"எல்லாரும் என்ன அவஸ்தைப்படுத்திட்டா இருப்பாங்க?" என்றாள் அக்கா.

அவன் சட்டென்று நின்றான். அக்காவைக் கூர்ந்து பார்த்தான். "அக்கா.." என்றான்.

"என்ன தம்பி?" என்றாள் அவன் முகத்தைப் பார்க்காதவள் போல, அவசர அவசரமாக டைனிங் டேபிளில் தட்டை எடுத்து வைத்து, மற்ற உணவுப் பாத்திரங்களையும் எடுத்து வைப்பதில் கவனம் செலுத்துவது போல பாவித்துக் கொண்டு.

"நான் எல்லாத்தையும் கேட்டேக்கா". என்றான் அவன் அடிக் குரலில்.

"என்னத்தை கேட்டே?" என்றாள் அவள் புரியாதவள் போல.

"இன்னைக்கு அழகு மச்சான் ஃபோன் பண்ணி னாரில்லே. அவர்கிட்ட நீ பேசும்போது எதையோ பதட்டத்துல தட்டறேன்னு தட்டி ஸ்பீக்கரை ஆன் பண்ணி விட்டுட்டே. பூராத்தையும் நான் கேட்டேன்." என்றான்.

சகோதரி உறைந்து போனாற் போல நின்றாள்.

"அக்கா! நீ எல்லாத்துலயும் கெட்டிக்காரியா வரணும்னுட்டுத்தான் அப்பா உனக்கு சரஸ்வதின்னு பேர் வெச்சாரு. நீயும் அதுக்குக் குறை வைக்காம காலேஜ்ல எல்லா விதத்துலயும் நல்ல பேர் வாங்கினே. யு வேர்

ஃபெண்டாஸ்டிக் அக்கா. ஏன் இப்போ இப்படி சுருங்கிப் போயி ...'' என்றான்.

''ப்ளீஸ் தம்பி. அதைப் பத்தி நாம பேச வேண்டாமே.'' என்றாள் அக்கா.

''இல்லைக்கா. பேசணும். நாம பேசறதா இருந்தா சொல்லு. நான் சாப்பிடறேன்.'' என்றான் அவன்.

அவள் ஒரு நிமிடம் அவனை ஆழ்ந்து பார்த்தாள். அவனும் தயங்காமல் எதிர்ப்பார்வை பார்த்தான்.

''சரி, பேசலாம்.'' என்று பரிமாற ஆரம்பித்தாள்.

அவன் மறுபடியும் ஏதோ சொல்ல ஆரம்பிக்க,'' சாப்பிட்டுட்டு பேசலாம் தம்பி.'' என்றாள். அப்போது அவன் மனம் நெகிழ்ந்து போனது.

தன்னுடைய துக்கத்தைத் தூர தள்ளி வைத்துவிட்டு, தம்பிக்கு வயிறார உணவு அளிக்க வேண்டுமென்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறாள் இந்த சகோதரி என்று அவள் திருப்திக்காக சாப்பிட்டான்.

ஓரளவு வயிறு நிறையவே சாப்பிட்டான். பிறகு எழுந்து வந்தான்.

''என்ன வெங்கட்டும், நிவேதிதாவும் தூங்கிட்டாங்களா?'' என்றான்.

''ஆமாப்பா. நீ வருவே, வருவேன்னு பார்த்தாங்க. இப்பத்தான் ரெண்டு பேருக்கும் தூக்கம் வந்துச்சு. போய்த் தூங்குங்க. நாளைக்கு மாமா கூட விளையாடலாம்னு சொன்னேன். ''இந்த மாமா ஏமாத்திட்டாங்க, ஏமாத்திட்டாங்க''ன்னு புலம்பிட்டே போய்த் தூங்குச்சுங்க.'' என்றாள்.

''அக்கா! உங்கிட்ட பேசணும். வா.'' என்று அவனே இப்போது அழைத்துக் கொண்டு போய் ஸோஃபாவில் எதிரிலே அமர்த்தினான்.

அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு கேட்டான். ''ஏன்ங்கா நீ உண்மையிலேயே சந்தோஷமா இருக்கியா?'' என்றான்.

அவள் கீழ்ப் பார்வை பார்த்துக்கொண்டே, ''எனக்குன்னு இனிமே என்னப்பா சந்தோஷம்? குழந்தைங்க வந்தாச்சு. அவங்களோட சந்தோஷம்தான் எனக்குச் சந்தோஷம்.'' என்றாள்.

''ரொம்ப கெட்டிக்காரத்தனமா பேசறே..'' என்றான் பாரி.

''இல்லைப்பா. உண்மையாத்தான் சொல்றேன்.'' என்றாள்.

''அக்கா! இதெல்லாம் சொல்றதுக்கு நல்லாத்தான் இருக்கும். இன்னொரு பத்து வருஷம். அவங்க ரெண்டு பேரும் வளர்ந்துருவாங்க. அப்ப நீ மட்டும் தனிமைப் பட்டுப் போவே. நீ ஒரு தனி மனுஷிக்கா. எதுக்காக இப்படி வார்த்தையெல்லாம் வாங்கிக்கறே?'' என்றான் அவன் கோபமாக.

அவள் அவனை வாஞ்சையாகப் பார்த்தாள்.

''தம்பி! இது உனக்குப் புரியாதுப்பா. ஏன்னா, இது குடும்பப் பிரச்சினை. அவர் சுய நினைவில பேசலை.'' என்றாள்.

''ஆமா. அது இன்னொரு அபத்தம். எனக்கென்னமோ இவங்க தண்ணி போட்டதுனால பேசறாங்களா? இப்படி

பேசறதுக்காகவே தண்ணி போட்டுக்கறாங்களா அப்படின்னு சந்தேகமா இருக்கு.'' என்றான்.

''எப்படி இருந்தா என்னப்பா? அவருக்கு ஏதோ கோபம். அதை என்கிட்ட காட்டறாரு.'' என்றாள்.

''அதைத்தான் நான் கேட்கறேன். நீயென்ன அவருக்கு வடிகாலா? உனக்குண்டான மரியாதையை அவர் கொடுக்க மாட்டாரா? அவர் அப்படி கொடுக்கலேன்னா நீ கேட்டு வாங்கிக்க வேண்டாமா?'' என்றான் அவன்.

அவள் ''உச்''சுக் கொட்டினாள்.

''அதெல்லாம் சொல்லிப் புரியாதுப்பா. தானா புரியணும். மரியாதை கொடுங்க, கொடுங்கன்னு போய்க் கேட்டுட்டா இருக்க முடியும்?'' என்றாள்.

''இல்லைக்கா. நீ எங்கேயோ தப்பு பண்றே. இடம் கொடுக்கறே.'' என்றான்.

''இல்லை தம்பி. அந்த உலகம் ஒரு டென்ஷனான உலகம். அதில நிறைய போட்டிகள், பொறாமைகள் இருக்கு. அதையெல்லாம் வேற எங்கே காட்டுவாரு. இங்கதான் காட்ட முடியும். காட்டறாரு. எல்லாத்தையும் சேர்த்து குடும்பத்துக்குத்தானேப்பா செய்யறாரு.'' என்றாள்.

''என்ன பங்களாவும், காரும், பிள்ளைங்களும், வசதிகளும் கொடுத்துட்டு அடிமாட்டுத் தனமா நடத்தலாமா? அதுக்காக இதை வாங்கிக்குவியா?'' என்றான்.

''இதுக்குத்தான் தம்பி இதைப் பத்தி பேச வேண்டாம்னு சொன்னேன்.'' என்றாள்.

''இல்லைக்கா. நீ இப்படி இருக்கிறது எனக்குப் பிடிக்கலை. வி ஹேவ் டு டூ சம்திங் அபவுட் இட். நீ என்ன

வாவது ஒரு விதத்துல உன்னை வெண்டிலேட் பண்ணிக் கணும்கா.'' என்றான்.

பேசிக்கொண்டே சரஸ்வதி எழுந்து போய் குழந்தைகளுக்கான அறையிலிருந்த ஒரு கம்ப்யூட்டரின் முன்பு அமர்ந்தாள்.

''நான் கொஞ்ச நேரம் கம்ப்யூட்டர்ல இருப்பேன்பா.'' என்றாள்.

''அதுக்காவது உனக்கு நேரம் கிடைக்குமா?'' என்றான்.

''இந்த மாதிரி அவர் வெளியூர் போகும் போது, அப்புறம் எப்பவாவது லேட்டா வருவார் இல்லையா, அப்ப உட்காருவேன்.'' என்றாள்.

''அதையும் பார்த்தா அந்த மனுஷன் கத்துவாரே..'' என்றான் பாரி.

''இல்லைப்பா. விசுவா ரொம்ப நல்லவரு. தெரிஞ்சோ, தெரியாமலோ அவரு வீட்டுக்குப் புறப்படும்போது எனக்கு ஒரு ஃபோன் பண்ணுவாரு. அக்கா, அண்ணன் புறப்பட்டாச்சுன்னு. உடனே நான் இது எல்லாத்தையும் ஒதுக்கி வெச்சுட்டு, அவருக்கு வந்தா என்ன வசதி செஞ்சு கொடுக்கணுமோ, அதை செஞ்சு கொடுக்கறதுக்குத் தயாரா இருப்பேன்.'' என்றாள்.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''ஏங்கக்கா, அப்ப நீ சுயத்தை இழந்துட்டு ஒரு வாழ்க்கை வாழ்ந்துக்கிட்டு இருக்கறே.'' என்றான்.

''அப்படிதாம்பா நிறைய பொண்ணுங்க வாழ்க்கை நடத்திக்கிட்டு இருக்கிறாங்க.'' என்றாள் அவள்.

"இதுக்காக நீ எத்தனை விஷயங்களை அடகு வெச்சிட்டக்கா." என்றவன் அப்படியே விளையாட்டுப் போல, அந்த கம்ப்யூட்டரைப் பார்த்தான்.

"அக்கா! இது உன்னோட வொர்க்கா?" என்றான்.

அவள் மெள்ள அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"ஆமா. எனக்கு இதுதான் பொழுதுபோக்கு. இதை பண்ணிக்கிட்டிருக்கிறதால கொஞ்சம் பொழுது போகுது." என்றாள்.

பாரியின் முகம் அப்படியே மகிழ்ச்சியால் பூரித்தது. விகசித்தது என்றுகூட சொல்லலாம்.

"கிரேட் அக்கா." என்றான்.

அத்தனை நேரம் இருந்த கோபமெல்லாம் வடிந்து மகிழ்ச்சி அங்கே பொங்கியது.

சகோதரனும், சகோதரியும் ஒருவரை ஒருவர் மகிழ்ச்சியாகப் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

அப்போது அவன் செல்ஃபோன் ஒலித்தது.

அத்தியாயம் -8

இடி இடியென சிரித்துக் கொண்டிருந்தான் வனமாலி.

"நல்ல தமாஷ். இல்லடா பாரி. உங்க அக்காவுக்கு அடிச்சது பாரு ஒரு சான்ஸு." என்று மறுபடியும் சிரித்தான்.

நல்ல போதையில் இருக்கிறான் மச்சான் என்பதால் எதுவும் பேசாமல் அருகிலே இருந்த ஸோஃபாவில் சாய்ந்து அமர்ந்திருந்தான் பைந்தமிழ் பாரி.

"என்னடா பேச மாட்டேங்கிறே. இப்படி ஒரு சான்ஸ் உங்க அக்காவுக்கு இனிமே ஆயுசுக்கும் கிடைக்குமா?" என்றான் மறுபடியும்.

பாரிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ஆனால், "அக்கா வருத்தப்படுவாளே. அதனால் எதுவும் பேசி விடாமல் மௌனம் காக்க வேண்டுமென்று" விரதமிருப்பவன் போல அமர்ந்து கொண்டிருந்தான்.

வனமாலி குழறிக் கொண்டே சொன்னான். "பேச மாட்டடா நீ. பேச மாட்டே! ஏன்னா உனக்கே தெரியும். எல்லாம் இந்த வனமாலியைக் கல்யாணம் பண்ணித் தான்டா உங்க அக்காவுக்கு இத்தனை பவிசு வந்தது." என்றான்.

"மச்சான்! பேசாம இருங்க." என்றான் பாரி.

"அது ஏன் பேசக்கூடாது. நடந்ததைத்தானே சொல்றேன். ம்ம்... நீ பெரிய இவனாடா. நான் பேசக் கூடாதுன்னு சொல்றே." என்றான்.

"சரிங்க மச்சான். நான் கிளம்பறேன்." என்று கிளம்பினான் பாரி.

"இருடா. ஏதாவது சொன்னா கோவிச்சுக்குவான்டா இவன். கோவிச்சுக்காதடா. நான் உங்கிட்டதான்டா உரிமையாப் பேச முடியும். உட்காருடா." என்றான்.

பாரி தலையில் அடித்துக் கொள்ளாத குறையாக அக்காவைப் பார்த்தான். அக்கா மௌனமாகவே கெஞ்சினாள், "உட்காருப்பா." என்பது போல.

வேறு வழியில்லாமல் அமர்ந்தான்.

"இவ்வளவு கோவிச்சுக்கிறியே... உனக்கு பேரு பாரின்னு வெச்சிருக்கீங்களே. அந்த பாரி யார் தெரியுமா?" என்றான்.

அந்த நேரமாக அந்தப் பக்கம் வந்த நிவேதிதா குடுகுடு வென்று ஓடி வந்து பைந்தமிழ் பாரியின் அருகில் அமர்ந் தாள்.

"எனக்குத் தெரியுமே... பாரி, கடையெழு வள்ளல்களில் ஒருவன். மற்ற கடையெழு வள்ளல்கள் யாரென்றால், வல்வில் ஓரி, பேகன், பாரி, ..." என்று ஒப்பிக்க ஆரம்பித் தாள்.

"இதைப் பார்றா. இவ பாடம் சொல்றா." என்று அதற்கும் சிரித்தான் வனமாலி.

"இதெல்லாம் எப்படித் தெரியும்டி உனக்கு?" என்றான்.

"மாமாதான் சொன்னாங்க. நேத்து மாமாகிட்ட கேட்டோம் நாங்க. பாரின்னா என்ன அர்த்தம்னு. அப்போ கடையெழு வள்ளல்களில் பாரின்னு ஒருத்தன் இருந்திருந்தான். அப்படின்னு முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி கதை சொன்னாங்கப்பா." என்றாள்.

"சொல்லிட்டானா? சொல்லுவான்டி. எப்பெல்லாம் யாரெல்லாம் பேரைக் கேட்கிறாங்களோ அவங்ககிட்ட யெல்லாம் இவன் சொல்லுவான். யார் கேட்டாலும் சொல்லிருவான். இந்த டப்பா கதையை. முல்லைக்குத் தேர் கொடுத்த கதையை. ஏன்டா முல்லைக்கு எதுக்குடா தேர் கொடுக்கணும். வேணும்னா ஒரு குச்சியை நட்டு வெச்சா அது வளர்ந்துட்டு போகாதா. அவ்வளவு அறிவாளி." என்றான் வனமாலி.

"கொடை மடம். அப்படின்னு ஒண்ணு இருக்கு மாமா. அது உங்களுக்குத் தெரியுமா?" என்றான் பாரி.

"கொடை மடமா? ம்ஹூம். என்னைச் சுத்தி எல்லாம்

"இவனிடத்திலே பேசிப் பிரயோஜனம் இல்லை." என்பது போல விட்டு விட்டான் பாரி.

வனமாலி அப்படி விழுந்து விழுந்து சிரிக்கிற மாதிரி அன்றைக்கு என்ன நடந்து விட்டது? ஒரு பெரிய நிகழ்ச்சி நடந்தது.

அன்று மாலை ஐந்து மணியளவில் அந்த வாரப் பத்திரிக் கையில் திரைக் கதைப் போட்டியில் வெற்றி பெற்றவர் களுக்கு பரிசு வழங்கும் விழா நடைபெற்றது. அவ்வளவு அழகாக அந்த விழா நடைபெற்றது.

திட்டமிட்ட மாதிரி சரியாக ஐந்து மணிக்குத் துவங்கி எட்டரை மணிக்கு முடித்து விட்டார்கள். ஆனால் அந்த விழாவிலே ஒரு ஆச்சர்யமான விஷயமும் நடந்தது.

முதல் பரிசு பெற்ற அந்த சதி என்பவர், பரிசைப் பெற நேராக வரவில்லை. தனக்குத் தபாலில் அனுப்பி வைத்து விடும்படி ஒரு கடிதம் மட்டும் எழுதி வைத்திருந்தார். ஆனால், மேடையில் படிக்கும்போது சொன்னார்கள்: சதி என்பது புனைப் பெயர். அவருடைய இயற்கையான பெயர் சரஸ்வதி. அவர்கள் இங்கு வந்து பரிசு பெற்றிருந்தால் நன்றாக இருக்கும்." என்பது போல பேசிய அந்தப் பத்திரிகை ஆசிரியர் யாரும் எதிர்பாராத ஒரு காரியத்தைச் செய்தார்.

"ஒன்று செய்யலாமே. நமது புகழ்பெற்ற திரைக்கதை ஆசிரியரும், இந்த போட்டியினுடயை மிக முக்கியமான நடுவருமாயிருந்த வனமாலி அவர்களுடைய மனைவி பெயர் கூட சரஸ்வதிதான். அந்த சரஸ்வதிக்குப் பதிலாக இவரே ஏன் வந்து பரிசை வாங்கிக் கொள்ளக் கூடாது?" என்றார்.

வனமாலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

இதுமாதிரி முக்கியமான விழாக்களுக்கு சரஸ்வதியை அவன் அழைத்துப் போவதுண்டு.

சரஸ்வதியும் மேடை நாகரிகம் தெரிந்து நடந்து கொள்வதால், அவனுக்குப் பெரிய பிரச்சினைகள் எதுவும் இதுவரை எழவில்லை என்பதால் இந்த விழாவுக்கும் சரஸ்வதியை அழைத்துக் கொண்டு வந்திருந்தான்.

அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்று அவன் விரும்பினானோ இல்லையோ, அந்த பத்திரிக்கை ஆசிரியர், "குடும்பத்தோட வரணும்.குடும்பத்தோட வரணும்." என்று நான்கைந்து முறை கூறியிருந்தார்.

அவன், "குழந்தைங்கள்லாம் பொறுமையா இருக்க மாட்டாங்க..." என்று இழுத்தான்.

"அப்ப குழந்தைங்களை விட்டுட்டு வொய்ஃபைக் கூட்டிட்டு வாங்க. கண்டிப்பா கூட்டிட்டு வாங்க சார்." என்றார்.

அவ்வளவு பெரிய பத்திரிகை ஆசிரியர் திரும்பத் திரும்ப சொல்லும் போது மறுக்கக்கூடாது என்று தான் சரஸ்வதியையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான். அப்படி புறப்படும்போதே சரஸ்வதி தன் சகோதரனுக்கு ஃபோன் செய்து,

"பாரி! நீயும் வந்துரு." என்று சொல்லியிருந்தாள்.

"அக்கா! நீ சொன்னாலும், சொல்லாட்டியும் நான் அங்கே இருப்பேன்கா. ஒரு பத்திரிகையாளனா எனக்கு அங்க அழைப்பு இருக்கு. முக்கியமா முன்னாடி ரோவுல இருப்பேன். கவலைப் படாதே." என்றான் பாரி.

"அப்படியா? அப்படின்னா சரி. ஏன்னா இவர் கூட போறேனே. இவர் ஒவ்வொரு நேரத்துக்கு ஒவ்வொரு மாதிரி இருப்பாரு." என்றாள்.

"டோண்ட் வொர்ரி அக்கா. நீ எங்கே போனாலும் எனக்கு ஒரு தகவல் கொடு. ஐ வில் பி இன் தி பேக்வுண்ட். உனக்கு என்ன வேணும், நான் பார்த்துக்கறேன்.' என்று சொன்னான் தம்பி.

"சரிடா தம்பி!" என்று அவள் கணவனுடன் புறப்பட்டு போயிருந்தாள்.

மேடையில் அமர வைத்திருந்தார்கள்.

சட்டென்று பத்திரிகை ஆசிரியர் அப்படி அறிவிக்கவும் சரஸ்வதியே கொஞ்சம் வெலவெலத்துப் போனாள் கலக்கத்துடன் கணவனைப் பார்த்தாள்.

அவன் அத்தனை பெரிய சபையில் அவளை எதுவும் சொல்ல முடியாதவனாக, ஒரு விதமான நடிப்பு முறையிலே கண்ணை அமர்த்தி, "போ! போய் வாங்கிக்கோ." என்பது போல சைகை செய்தான். உடனே சபையில் அதற்குப் பெரிய கை தட்டு எழுந்தது.

சரஸ்வதி எழுந்து போய் அந்த பரிசை வாங்கிக் கொண்டு வந்தாள்.

வாங்கிக் கொண்டு வந்து தன் கணவனிடத்திலே கொடுத்து விட்டாள்.

அவன் உடனே அதை பின்புறத்தில் இருந்த பத்திரிகைப் பொறுப்பாளரிடம் கொடுத்து விட்டான். அதற்குத்தான இப்பொழுது வீட்டிற்கு வந்ததற்குப் பிறகு கேலி செய்து கொண்டிருந்தான்.

"பாரப்பா. இவளுக்கு அடிச்ச லாட்டரியை. அவ்வளவு பெரிய மேடையில ஏதோ சதி கஷ்டப்பட்டு எழுதின கதை. அதுக்கு இவள் பரிசு வாங்கறா. இதைக் கேளு. அதை எழுதினவளும் சரஸ்வதிதானாம். அப்படியொரு சரஸ்வதி உலகத்துல இருக்கா. இந்த சரஸ்வதி எனக்கு வாய்ச்சாளே." என்றான் மறுபடியும்.

அதற்கு மேல் பாரிக்குப் பொறுக்கவில்லை.

"மச்சான்! எங்க அக்கா ஒண்ணும் சோடையில்லை. நீங்க நினைக்கிற மாதிரி எல்லாம் இல்லை. காலேஜ் டேஸ்ல அவள் எத்தனை பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டியில பரிசு வாங்கியிருக்கா தெரியுமா? அது மட்டுமில்ல. மாணவியர் தலைவியாகவும் இருந்திருக்கா. உங்களைக் கல்யாணம் பண்ணினதுக்கப்புறம் தான் இவள் இப்படி ஆயிட்டா." என்றான் பாரி.

"எப்படி ஆயிட்டா?" என்றான் வனமாலி.

"எப்படி ஆயிட்டா? குடும்பத் தலைவிங்கற பேர்ல அவள் திறமையையெல்லாம் முடக்கி, வீட்டு வேலைக்காரி மாதிரி வெச்சிருக்கீங்க." என்று கடுப்பானான் பாரி.

சரஸ்வதி அதற்குள்ளாக வந்து, "தம்பி! காஃபி சாப்பிடறியா?" என்றாள்.

"போக்கா நீ. ஒன்பது மணிக்கு காஃபியாம். எதுக்கு என்னை இருக்கச் சொல்றே? இவர் இப்படி பேசறதையெல்லாம் கேட்டுகிட்டு சும்மா இருக்கணுமா?" என்றான்.

பாரி அப்படி ஓங்கிப் பேசினால், வனமாலியின் குரல் தளர்ந்து போய்விடும்.

"என்னடா நீ? எனக்கிருக்கிற ஒரே மச்சான் நீதான். உங்கிட்டத்தான் நான் உரிமையா பேச முடியும். என்னடா

நீ கோவிச்சுக்கறே." என்று தள்ளாடிக்கொண்டு எழுந்து அவன் தலையை வேறு தடவினான்.

பாரிக்குக் கோபமாக வந்தது. அக்காவின் கணவன் என்பதால் வேறு வழியில்லாமல் பொறுத்துக் கொண்டான்.

"பின்னே என்ன மச்சான் நீங்க? ஒரு விஷயம் புரிஞ்சுக்கங்க. எனக்கு லேடீஸை மட்டம் தட்டினா பிடிக்காது." என்றான்.

உடனே வனமாலி ஒரு விதமாக கோணிச் சிரித்தபடி, "பார்க்கலாம்டா. நாளைக்கு உன் வொய்ஃப் வந்ததுக்கப்புறம் என்ன பண்றேன்னு பார்க்கலாம்." என்றான்.

"பாருங்க. பாருங்க. இப்படியெல்லாம் நான் நடத்த மாட்டேன். அவங்களும் ஹ்யூமன் பீயிங். அவங்களுக்கும் நாலெட்ஜ் இருக்கும். அவர்களும் சக மனுஷிங்கற மாதிரிதான் நான் நடத்துவேன்." என்றான் பாரி.

"அப்பப்பப்பா. என்னா லெக்சர் அடிக்கிறான்பா இவன்." என்று தணிந்தான் வனமாலி.

"சரிடா மச்சான். கோவிச்சுக்காதே நீ. நீயிருக்கிற சப்போர்ட்டுலதான் உங்க அக்கா அப்படியே மௌனமாவே இருந்து கழுத்தறுப்பாடா." என்றான்.

அதற்கும் பாரி சளைக்கவில்லை. "பின்ன? நீங்க பேசற மாதிரி சரிக்கு சரி பேசச் சொல்றீங்களா?" என்றான்.

"என்ன பாரி இப்படி கோவிச்சுக்கறே?" என்றான் வனமாலி.

"பின்னே என்ன மாமா? ஒண்ணு நினைச்சுக்கோங்க. நீங்க பெரிய திரைக்கதை ஆசிரியர். நானும் பெரிய பத்திரிகையாளன்தான். "ஊருக்கெல்லாம் கதை சொல்ற திரைக்கதை ஆசிரியர் வீட்டிலே மனைவியை எப்படி

நடத்துகிறார் தெரியுமா?'' அப்படின்னு ஒரு கிசுகிசு எழுதினேன்னு வெச்சுக்கோங்க. உங்க மரியாதையெல்லாம் போயிரும்.'' என்றான் பாரி.

''அய்யய்யோ. மச்சான் மேல இருக்கிற கோபத்துனால பாரி கிசுகிசு எழுதலாமாடா. பாரி அப்படி அந்த லெவலுக்கு எல்லாம் போகக் கூடாதுடா.'' என்றான் வனமாலி கீழே இறங்கி.

பாரி லேசாகப் புன்னகைத்தான்.

''இத்தனை நேரம் பேசினதிலயே இது ஒண்ணுதான் மச்சான் உண்மை. கண்டிப்பா பாரி அந்த லெவலுக்குப் போக மாட்டான். ஆனா அந்த லெவலுக்குப் போற மாதிரி வெச்சுக்காதீங்க.'' என்றான் பாரி.

அக்கா, ''பாரி! ஒரு நிமிஷம் இங்கே வர்றியா? இந்தா மேலே இருக்கிற சர்க்கரை டப்பாவை எடுத்துக் கொடு.'' என்றாள்.

பாரி எழுந்து போனான். உண்மையில் அவள் சர்க்கரை டப்பாவை எடுப்பதற்காக கூப்பிடவில்லை.

''எதுக்குடா அவர்கிட்டே சரிக்கு சரி பேசறே?'' என்றாள் முணுமுணுப்பாக.

''சும்மா இருக்கா. இப்படியெல்லாம் பேச விட்டுட்டு கேட்டுக்கிட்டு இருந்தால் அவர் அப்படியேதான் பேசிட்டிருப்பாரு. இப்படி எதிர்ப்பைக் காட்டணும்கா. திருப்பி கொடுக்கணும். கொடுத்தாதான் அடங்குவார்.'' என்றான்.

''வேண்டாம்டா பாரி.'' என்றாள்.

''நான் போனதுக்கப்புறம் உனக்கு ஏதாவது டார்ச்சர் கொடுத்தா எனக்கு ஃபோன் பண்ணு. நான் வந்து உண்டு இல்லைன்னு பண்ணிர்றேன்.'' என்றான் பாரி மறுபடியும் கொதித்துப் போனவனாய்.

அவள் கையாலாகாத்தனத்துடன் அவனைப் பார்த்தாள்.

''நீ ஒண்ணும் கவலைப்படாதக்கா. நான் பார்த்துக் கறேன். இந்த மாதிரி ஆளுங்களுக்கெல்லாம் சரக்கு உள்ள போனாத்தான் தைரியம் வரும்.'' என்றான்.

சரஸ்வதி, ''ஏன்டா இவனை அழைத்தோம்.'' என்பது போல,

''சரி நீ போய் அவர்கிட்டயே பேசு.'' என்றாள் கையைக் காட்டி.

திரும்ப முன்னாலே வந்தான் பாரி.

''சக்கரை டப்பா எடுத்துக் கொடுத்திட்டியாடா?'' என்றான் வனமாலி ராகமாக.

''எடுத்துக் கொடுத்திட்டேன் மச்சான்.'' என்றான் அவனும் ராகம் போட்டு.

''சரிடா பாரி. ஊர், உலகத்து விஷயங்களெல்லாம் ஏதாவது இருந்தா சொல்லு.'' என்றான்.

''அப்படி வேண்ணா ஏதாவது கேளுங்க. அதைப் பத்திப் பேசுவோம்.'' என்றான் பாரி.

அதற்குப் பிறகு பத்திரிகையுலகிலே இருக்கிற இரண்டு விஷயங்களைப் பற்றி சொன்னான்.

''நிஜமாவாடா? இப்படியெல்லாம் நடக்குதாடா?'' என்றான் வனமாலி.

''இன்னும் எப்படி எப்படியோ நடக்குது மச்சான். நீங்க ஜாக்கிரதையா இருந்துக்குங்க. ரொம்ப ஸேஃப் பொஸிஷன்ல இருக்கிறதா நினைச்சுக்காதீங்க. எப்ப

வேண்ணா எதிராளி எங்கிருந்து வேண்ணா தாக்குவாங்க.'' என்றான்.

வனமாலிக்கு இப்பொழுது கொஞ்சம் போதை குறைந்திருந்தது.

போதை குறைந்தால் பாரியிடம் கொஞ்சம் மரியாதை யாகத்தான் பேசுவான். அவனுக்குத் தெரியும், பாரி தன்னுடைய சுய உழைப்பினால் முன்னுக்கு வந்தவன் என்றும், எந்த இடத்திலேயும் வனமாலியை தன்னுடைய மைத்துனன் தான் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளாமலே எழுத்துலகில் அவனுக்கென்று ஒரு பெயர் வைத்திருக் கிறான் என்பதும் தெரியும்.

''சரிடா. இந்த மாதிரி ஏதாவது ஸ்கூப் இருந்தா எனக்கு அப்பப்ப சொல்லு.'' என்றான்.

''ஆமா. ஸ்கூப் நாங்க உங்களுக்குக் கொடுப்போம். நீங்க அதை வெச்சு கதை எழுதியிருவீங்க. கதை எழுதிட்டு எங்க அக்காவையே மட்டம் தட்டுவீங்க.'' என்று சிரித்தான் பாரி.

''சும்மாடா. நீ கேளு. நீ இந்த விசுவாவைக் கூப்பிட்டுக் கேளு. எந்த சினிமாக்காரனை வேணும்னாலும் கேளு. தண்ணி போடுவேன். எப்பவாவது சிகரெட் பிடிப்பேன். உங்க அக்காவைத் தவிர வேற பொண்ணை மனசுல நினைச்சிருக்கிறேனான்னு கேளு. தொட்டிருக்கிறேனான்னு கேளு.'' என்றான் மறுபடியும் குழறலாக வனமாலி.

பாரி நீண்டதொரு பெருமூச்சு விட்டான். ''தெரியும் மச்சான்.'' என்றான். ஆனால், மனதுக்குள்ளாக, ''அந்த ஒரு காரணத்துக்காகத்தான் நீ பண்ற கூத்துக்கெல்லாம் நாங்க பேசாம இருக்கிறோம்.'' என்று நினைத்துக் கொண்டான்.

வெளியிலே சொல்லவில்லை. ஆனால், இன்னொரு விஷயத்தைச் சொன்னான்.

''மச்சான்! ஒண்ணு தெரிஞ்சுக்கங்க. எங்க அக்காவைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கறப்போ நீங்க கவர்ன் மெண்ட் ஜாப்ல இருந்தீங்க. அதை நம்பித்தான் எங்க அப்பா உங்களுக்குக் கொடுத்தாரு. இன்னைக்கு நீங்க சினிமா ஃபீல்டுல வந்திருக்கீங்க. இருந்தாலும் இப்படி ஒழுக்கமா இருக்கீங்கன்ற ஒரே காரணத்துக்காகத்தான் நாங்க எந்த பிரச்சினையும் எழுப்பறதில்லை. ஆனா, ஒண்ணு புரிஞ்சுக்கோங்க மச்சான். நான் உண்மையா சீரியஸா சொல்றேன். அக்காவுக்கு உண்டான மரியாதையைக் கொடுத்து நடத்துங்க.'' என்றான்.

''சரிடா, சரிடா. கோவிச்சுக்காதடா.'' என்றான் மறுபடியும் வனமாலி. ஆனால், பாரியின் குரலில் ஒலித்த தீவிர எச்சரிக்கை வனமாலியைக் கொஞ்சம் பயப்படுத்தியது.

ஏனென்றால் வனமாலிக்குப் பெரிய அளவில் உறவினர்கள் இல்லை என்பது அவனுக்குத் தெரியும். அதே சமயம் பாரியின் கிராமத்தில் சரஸ்வதியின் பெற்றோர்களுக் கென்று நெருங்கிய உறவினர்கள் நிறையப் பேர் இருந்தார்கள்.

அவர்களில் நிறையப் பேர் செல்வாக்குடையவர்களாக இருந்தார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும். அதனால், அவ்வப்போது இறங்கியும் காரியம் சாதித்துக் கொள்வான்.

''சரிடா பாரி. சும்மா கேலி, தமாஷுக்குச் சொன்னேன். ஃபர்கெட் இட்.'' என்றான் வனமாலி.

''ஓ.கே. ஐ ஃபர்காட் இட். பட் யு டோன்ட் ரிபீட் இட்.'' என்றான்.

"அக்காவுக்கு ஏத்த தம்பிடா. எனக்கு இப்படி பாசம் காட்ட ஒரு அக்கா இல்லாம போனாளே..." என்றான் வனமாலி.

"நல்ல வேளை இல்லாமப் போனாள்." என்று நினைத்துக் கொண்டான் பாரி. அதே கடுப்போடுதான் அன்றைக்கு கிளம்பினான். ஆனால் வனமாலி என்ன நினைத்தானோ தெரியவில்லை.

"டேய் பாரி. இன்னைக்கு இங்கே தங்கிட்டுப் போடா." என்றான்.

"இல்லை மச்சான். எனக்குத் திடீர் திடீர்னு ஏதாவது கால் வரும். அப்புறம் உங்களுக்கு கஷ்டமா இருக்கும்." என்றான்.

"இல்லையில்லை. நீயிரு... கூர்க்காட்ட சொல்லிர்றேன். அப்படி ஏதாவது நீ அவசியமா போகணும்னா போயிட்டு வா. ஒண்ணும் பிரச்சினையில்லை." என்றான்.

அதனால், சரி என்று அன்றைக்குத் தங்கினான்.

எதிர்பார்த்தது போலவே அன்றைக்கும் கூட நள்ளிரவில் அவனிடம் உதவி கேட்டு ஒரு ஃபோன் வந்தது. ஆனால், எதிர்பார்த்தது போல இருந்தாலும் அந்த ஃபோன் எதிர்பாராத இடத்திலிருந்து வந்தது.

அத்தியாயம் -9

"அப்பாடா!" என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள் பாரியும், சங்கமித்ராவும்.

ராகேஷ், சுப்பிரமணி, குமார், செந்தில் என்று நான்கு பேரும் அவர்களோடு கூட இருந்தார்கள்.

சகோதரியின் வீட்டில் மச்சானுடன் பொய்ச்சண்டை போட்டுக் கொண்டிருந்தபோது, வந்த ஃபோன் அவனை மிகவும் அலைக்கழித்து விட்டது.

அவர்கள் சர்வீஸ் செய்து கொண்டிருந்த வீடுகளிலே, ஒன்றிரண்டு வீடுகளில் மட்டும் பெண்கள் தனியாக இருந்தார்கள். அதில் ஒருவர் நடுத்தர வயதைத் தாண்டியவர். அறுபது வயதைத் தாண்டியவர். அவருக்குக் கொஞ்சம் உடல் நிலை சரியில்லாமல் இருந்தது. கொஞ்சம் கோளாறுகளும் இருந்தன.

இருந்தாலும், "மகனோடு போய் அமெரிக்காவில் இருக்க மாட்டேன். என் தாய் நாட்டில்தான் இருப்பேன்." என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டு அந்த அம்மையார் இங்கேயே அபார்ட்மெண்ட்டில் குடியிருந்தார்கள். வசந்தா என்று பெயர்.

திடீரென்று அவர்களுக்கு உடல் நிலை சரியில்லாமல் போய் விட்டது. நல்ல வேளையாக அவ்வளவு கஷ்டமான சூழ்நிலையிலும் பாரியை அழைத்து, "பாரி! எனக்கு உடல் நிலை சரியில்லை. உடனே வா." என்று சொன்னார்கள்.

பாரி மச்சானிடம் பேசிக் கொண்டிருந்தவன் உடனே எழுந்து, "மச்சான்! காரை எடுத்துட்டுப் போறேன். எனக்கு ரொம்ப அவசியம்." என்று சொல்லிக் கொண்டு, வனமாலி என்ன பதிலைச் சொல்கிறான் என்று கூட கேட்காமல் ஓடிப் போய் காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

காரை ஓட்டிக் கொண்டே செந்திலுக்கும், சுப்பிரமணிக்கும், ராகேஷுக்கும் ஃபோன் செய்தான். அவர்கள் குமாருக்கும் தகவல் சொல்ல அவரவர் தங்களிடம் இருந்த

பைக்கை எடுத்துக் கொண்டு அந்த அபார்ட்மெண்ட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

சற்று தூரம் சென்றவுடன்தான் அந்த யோசனை தோன்றியது. "பெண்ணாக இருக்கிறார். மித்ரா இருந்தால் வசதியாக இருக்கும். வரச் சொல்லலாமா?" என்று. ஆனால், இந்த நேரத்தில் அதுவும் பதினோரு மணிக்கு வரச் சொன்னால் வருவாளோ என்ற ஐயம் இருந்தது. ஆனால், அபார்ட்மெண்ட்டுக்குப் போய்ச் சேர்ந்தவுடனேயே அவனுக்கு ஆச்சர்யம் காத்திருந்தது.

அங்கே சங்கமித்ரா அந்த அம்மையாருக்கு உதவிகள் செய்து கொண்டிருந்தாள்.

ஆம்புலன்ஸுக்குத் தகவல் தெரிவித்து, வருவதற்குள்ளாக செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாள். பாரி நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

ராகேஷைத் திரும்பிப் பார்த்தான். "ராக்கி!" என்றான்.

"ஆமாண்ணா. நான் தான் சொன்னேன். இது நாள் வரைக்கும் நாம ஜெண்ட்ஸ்தான் இருந்தோம். ஆனா இப்போ சங்கமித்ரா மேடம் இருக்காங்கல்ல. ஒரு லேடி இருந்தா உதவியா இருக்கும்னு தோணுச்சு. கூப்பிட்டேன். "முடிஞ்சா வாங்க," அப்படின்னு சொன்னேன். பரவாயில்ல. உடனே வந்துட்டாங்க. கார் எடுத்துட்டு வந்துட்டாங்க." என்றான்.

"கார் எடுத்துட்டா?" என்று ஒரு நிமிடம் அவனுக்கு யோசனை தோன்றியது. ஆனால், இந்த விஷயங்களை யெல்லாம் அலசுவதற்கு இது நேரமல்ல என்று

"சரி. ரெடியாகுங்க. சீக்கிரம்." என்று வசந்தா அம்மாவைக் கொண்டு வந்து அவர்கள் வழக்கமாகப் பார்க்கின்ற ஆஸ்பத்திரியிலே சேர்த்து விட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டவர்களாக, ஐ.சி.யு.விலே இருந்த பெஞ்ச்சுக்கு முன்னாலே அமர்ந்தார்கள்.

இவர்கள் ஏற்கனவே தகவல் தெரிவித்திருந்ததால், சீஃப் டாக்டர் நேரம், காலம் பார்க்காமல் வந்து, வசந்தா அம்மையாரைப் பரிசோதித்துவிட்டு,

"நல்ல வேளை. டைமுக்கு கொண்டு வந்துட்டீங்க. பெருசா ஒண்ணும் பயப்படறதுக்கு இல்லை. பார்த்துக் கலாம். மைல்ட் அட்டாக்." என்று சொல்லி அட்மிட் செய்து கொண்டார்.

பாரி திரும்பி சங்கமித்ராவைப் பார்த்தான்.

"சாரி மித்ரா. உங்களுக்குத் தொந்தரவா?" என்றான்.

"இல்லையில்லை. இது ஒண்ணும் பெரிய தொந்தரவு இல்லை. சில நாளைக்கு நான் ஏதாவது புத்தகம் படிச் சிட்டிருந்தேன்னா, பன்னிரெண்டு மணிக்குக் கூட தூங்குவேன்." என்றாள்.

"இல்லை. தூக்கத்துக்காக சொல்லலை. நீங்க அங்கிருந்து கிளம்பி வந்து.." என்றான்.

"இல்லையில்லை. அப்பா கொண்டு வந்து ட்ராப் பண்ணினாங்க." என்றாள் அவள்.

அப்போதுதான் பாரிக்கு அந்த கேள்வி கேட்கத் தோன்றியது.

"நானும் கேட்கணும்னு நினைச்சேன் மித்ரா. உங்களோட ஃபேமிலி பேக்ரவுண்ட் பத்தி எதுவுமே சொல்லலையே." என்றான்.

"அபவ் மிடில் கிளாஸ். அப்பா ஒரு பிஸினெஸ் மேன். அவ்வளவு போதும். அதுக்கு மேல என்ன?" என்றாள்.

"சரி. சொல்ல விரும்பவில்லை என்றால் அதற்கு மேல் அவளைத் துளைத்து எடுப்பானேன்." என்று அந்தப் பேச்சுக்கு அதோடு முற்றுப் புள்ளி வைத்தான் பாரி.

"இப்ப என்னடா பண்ணலாம்?" என்று கேட்டான்.

"அண்ணா! முதல் வேலையா வசந்தா அம்மாவோட சன்னுக்கு, அமெரிக்காவுக்கு ஃபோன் பண்ணி விஷயத்தைச் சொல்லணும்." என்றான் ராக்கி.

"ஆமாண்டா. அதை மறந்து போய்ட்டேன் பாரு." என்று உடனடியாக அவருக்குத் தகவல் தெரிவித்தார்கள்.

வசந்தா அம்மாவின் மகன் உருகிப் போனான். "ரொம்ப தேங்க்ஸ் சார். ரொம்ப தேங்க்ஸ். நீங்க செய்யறது உண்மையிலேயே பெரிய சர்வீஸ். நான் அம்மாவை இங்க வரச் சொல்லி எத்தனையோ தடவை சொல்லிப் பார்த்துட்டேன். வர மாட்டேங்கறாங்க. எனக்கும் இந்த மாதிரி ஒரு சூழ்நிலையை விட்டுட்டு அங்க வர முடியாத சூழ்நிலை. சொல்லுங்க சார். இங்க நல்ல ஹை பொஸிஷன்ல இருந்துட்டு அங்க வந்து நான் சின்ன வேலை தேடிக்கிட்டு இருக்க முடியுமா? ஒரு உறுத்தலோடவேதான் இங்க இருந்துகிட்டு இருக்கேன். நல்ல வேளை சார். நீங்க ஹெல்ப்புக்கு அங்க இருக்கீங்க, அப்படின்னு தெரிஞ்சவுடனே கொஞ்சம் நான் நிம்மதியா இருக்கேன்." என்றார்.

"சார். விஷயம் என்னன்னா.. வந்து..." என்று விஷயத்தை விளக்கினான் பாரி.

அந்தப் பக்கம் சற்று கனமான மௌனம் நிலவியது.

"அப்படியா சார்? சரி. நான் இப்பவே எங்க ஆஃபீஸ்ல பேசிட்டு, முடிஞ்சா இன்னைக்கு நைட் ஃபிளைட் எமர்ஜென்சி பேஸ்ல கிடைக்குமான்னு பார்க்கறேன். இல்லைன்னா நாளைக்கு முடிஞ்சா கிளம்பி வர்றேன் சார்." என்றார்.

"படபடப்பில்லாம வாங்க. இங்க வேணும்கிற மெடிக்கல் கேர் கொடுத்தாச்சு. இருந்தாலும் நீங்க வந்திங் கன்னா அவங்களுக்குக் கொஞ்சம் மனசுக்குத் தெம்பா இருக்கும். அதுக்காகத்தான் சொல்றோம். இப்ப நீங்க வரப் போறீங்கன்றதைக் கூட இப்போ உடனடியா நாங்க சொல்லப் போறதில்லே. நீங்க கன்ஃபார்ம் பண்ணிட்டு சொல்லுங்க. அதுக்கப்புறம் சொல்லிக்கிறோம்." என்றான் பாரி.

"தேங்க்ஸ் சார். யு ஆர் எ வெரி அண்டர்ஸ்டேண்டிங் பர்ஸன். தேங்க் யூ. தேங்க் யூ." என்று பத்து முறை திருப்பித் திருப்பிச் சொன்னான் வசந்தா அம்மாவின் மகன் சங்கர்.

அடுத்த அரை மணி நேரத்தில் மறுபடியும் சங்கரிடம் இருந்து ஃபோன் வந்தது.

"நான் கிளம்பிட்டேன். நைட் மூணு மணிக்கு ஃப்ளைட். வந்தர்றேன். ஒன் ஆர் டு டேஸ்ல அங்க இருப்பேன். அம்மாகிட்ட சொல்லுங்க. அம்மா சந்தோஷம் ஆகிருவாங்க." என்றான்.

"ஓ.கே. சார். நல்லது சார். சார் அது வரைக்கும் நீங்க எதைப் பத்தியும் கவலைப் படாதீங்க. எங்க ஆர்கனை சேஷன்ல இப்போதைக்குப் பத்து பேர் இருக்கோம். அதுவும் இல்லாம ஒரு லேடி கேண்டிடேட் இப்போ வந்து

சேர்ந்திருக்காங்க. நாங்க எல்லா கேரும் கொடுக்கறோம். நீங்க மனி மேட்டரை மட்டும் பார்த்துக்கோங்க.'' என்றான்.

''நோ ப்ராப்ளம். இப்ப கிளம்பறதுக்கு முன்னாடி அம்மாவோட அக்கவுண்ட்டுக்கு அமவுண்ட்டை ட்ரான்ஸ்ஃபர் பண்ணிட்டுத்தான் கிளம்பியிருக்கேன். ம்ம். ஒண்ணும் ப்ராப்ளம் இல்லை. பார்த்துக்கலாம். டாக்டர்கிட்ட வேணும்னாலும் நான் பேசறேன்.'' என்று டாக்டருடைய நம்பரையும் வாங்கிக் கொண்டான் சங்கர். பாரி பேசி முடித்த பின்பு ஒரு பெருமூச்சுடன் சங்கமித்ராவைப் பார்த்தான்.

''இந்தத் தலைமுறைக்காரங்களுக்கு இது ஒரு பெரிய பிரச்சினைதான். பேரண்ட்ஸையும் விட்டுட்டு இருக்க முடியறதில்லை. அவங்களுக்குப் பிடித்தமான வேலையையும் விட முடியறதில்லை. இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் இருதலைக் கொள்ளி எறும்பா தவிக்கிறாங்க.'' என்றான் பாரி.

''ஆமா சார். உண்மையாவே நீங்க ஆரம்பிச்சிருக்கிற ஆர்கனைசேஷன் இப்ப ஒரு சோஷியல் நெசஸிட்டி தெரியுமா? நிறைய வயசானவங்ககிட்ட பணம் இருக்கு. ஆனா உதவிக்கு ஆட்கள் இல்லை. இன்னொரு பக்கம் பார்த்தீங்கன்னா நிறைய இளைஞர்கள் வேலை தேடிக்கிட்டு இருக்காங்க. இதை யாராவது ஒரு ஏஜென்சி மாதிரி எடுத்து கம்பைன் பண்ணினா எப்படி இருக்கும் அப்படின்னு நான் யோசிச்சதுண்டு. நீங்க அதை செஞ்சிட்டிருக்கீங்க. இதை மட்டும் நீங்க ஒரு பிளான் பண்ணி செஞ்சா ஒரு பெரிய லெவல்ல வளர்றதுக்கான வாய்ப்பு இருக்கு.'' என்றாள் அவள்.

பாரி அவளை அதிசயமாகப் பார்த்தான். ''இவ்வளவு சிந்திக்கிறவளா நீ?'' என்ற எண்ணம் அவனுக்கு உள்ளே ஓடியது.

மெள்ளப் புன்னகைத்து விட்டு சொன்னான்.

''தியரிட்டிக்கலா பல விஷயங்கள் நல்லா இருக்கும் மித்ரா. ஆனா, இப்படியான வயதானவர்கள்கிட்ட ஒரு பையனையோ, ஒரு பொண்ணையோ கொண்டு போய் உதவிக்கு சேர்க்கும் போது, அவங்களோட கிரெடிபிலிட்டியை நாம ரொம்ப வாட்ச் பண்ண வேண்டியிருக்கு. அது ரொம்ப ரிஸ்க்கான விஷயம். அதனாலதான் நான் இப்ப லிமிட்டடா ஒரு பத்து பேர் அப்படின்னு வெச்சிருக்கேன்.'' என்றான்.

அவள் மெள்ளப் புன்னகைத்தாள். ''என்னோட கிரெடிபிலிட்டியைப் பத்தி யோசிச்சீங்களா?'' என்றாள்.

''உங்களைப் பொறுத்த வரைக்கும் நாங்க ஆஃபிஸ் வொர்க்குன்னுதானே எடுத்தோம். இந்த மாதிரி நீங்க வர வேண்டியிருக்கும்னு நாங்க எதிர்பார்க்கலையே. மெயினா ஆஃபிஸ் வொர்க் பார்த்துட்டா போதும்.'' என்றான்.

இப்போது அவள் புன்னகைத்த படி சொன்னாள்.

''சார். என்னோட ஃபிரண்ட்ஸ் கூட ஒரு ரெண்டு, மூணு பேர் இண்ட்ரஸ்ட்டடா இருக்காங்க. இப்படி அவங்க வேலைக்கெல்லாம் வர மாட்டாங்க. ஆனா இப்படி அவசர ஆத்திரத்துக்குக் கூப்பிட்டோம்னா வருவாங்க.'' என்றாள்.

''பார்க்கலாம். நீங்க அவங்களோட பயோ டேட்டாவை எல்லாம் வாங்கி வைங்க.'' என்றான் பாரி.

தன்னுடைய திட்டத்தின் மீது ஏற்பட்ட ஆர்வத்தின் காரணமாகத்தான் சங்கமித்ரா அங்கே வந்திருக்கிறாள் என்று தோன்றியது.

''சங்கமித்ராவினுடைய குடும்பத்தைப் பற்றி நாம் இன்னும் கொஞ்சம் ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டுமோ? ஏதோ ஒரு விஷயத்தை அவள் மறைக்கிறாள் போலிருக்கிறதே..'' என்று தோன்றியது பாரிக்கு.

அதே சமயத்தில் இன்னொரு விஷயம் உறைத்தது. ''மைத்துனரின் காரை எடுத்துக் கொண்டு வந்துவிட்டோம். திரும்பக் கொண்டு போய் அவரிடம் சேர்க்க வேண்டுமே..'' என்பது.

திரும்பி ராகேஷிடம் சொன்னான்.

''என்ன ராகேஷ்? நான் நைட்டுக்கு இருக்கணுமா?'' என்றான்.

''ஏண்ணா? எப்பவும் இருக்கிறேன்னு சொல்லு வீங்களே...'' என்றான் ராகேஷ்.

''இல்லைப்பா. மச்சானோட காரை எடுத்திட்டு வந்துட்டேன். அதுதான் யோசிக்கிறேன்.'' என்றான்.

''அய்யோ, அவர் காரா! அப்படின்னா நீங்க முதல்ல கொண்டு போய் சேர்த்துடுங்க. அப்படியே மித்ராவையும் கொண்டு போய் ட்ராப் பண்ணிடறீங்களா?'' என்றான்.

மித்ரா உடனே தலையசைத்தாள்.

''இல்லையில்லை. நான் அப்பாவுக்கு ஃபோன் பண்ணிட்டேன். அப்பா கார் இங்கேயே கொண்டு வர்றாங்க. நான் அதிலேயே போயிடறேன்.'' என்றாள்.

அவர்களுக்கும் கொஞ்சம் விடுதலை போலிருந்தது. ஏனென்றால் அந்த நேரத்தில் ஒரு பொண்ணை பத்திரமாக அழைத்துக் கொண்டு போய் சேர்க்க வேண்டுமே, என்ற பொறுப்புணர்ச்சியும் கூடவே தோன்றியது.

''சரி..'' என்று ஏதோ பேச ஆரம்பித்தவளுக்கு ஃபோன் வந்தது.

ஃபோனைக் கையிலே எடுத்தவுடன் அவள் பேசுகின்ற விதத்திலேயே, அது அவளுடைய அப்பா என்று தெரிந்தது.

''சரிங்கப்பா. சரி, சரி. நான் வந்தர்றேன். நீங்க கீழே வெயிட் பண்ணுங்க. நான் வந்தர்றேன்.'' என்றாள்.

''சரிப்பா. அப்படின்னா காரிலேயே வெயிட் பண்ணுங்க. நான் வந்தர்றேன்.'' என்றாள் மறுபடியும்.

அவர்களிடம் திரும்பி, ''நான் ஒண்ணும் இருக்கணும்கிற அவசியம் இல்லையில்லே?'' என்றாள்.

''இல்லை. நீங்க போலாம். இந்த அளவுக்கு வந்து நீங்க ஹெல்ப் பண்ணினதே பெரிய விஷயம். ரொம்ப நன்றிங்க.'' என்றான் பாரி திரும்பவும் நெகிழ்ந்த முகபாவத்துடன்.

''பரவாயில்லைங்க பாரி. இது நம்ம கன்சர்ன் ஆகிடுச்சு. ஐ''ம் ஒன் ஆஃப் தி ஸ்டாஃப். இது என்னோட கடமை.'' என்றாள் அவள்.

''இருந்தாலும் இந்த நேரத்துல..'' என்றான்.

''டோன்ட் ரிபீட் இட். எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு. என்னை அந்நியப் படுத்தற மாதிரி இருக்கு.'' என்றவள், ''ஓ.கே. பை.'' என்று இறங்கி ஓடினாள்.

''வாங்க! எங்க அப்பாகிட்ட அறிமுகப்படுத்தறேன்.'' என்றோ, ''அப்பா! நீங்க மேலே வாங்க அறிமுகப் படுத்தறேன்.'' என்றோ அவள் சொல்லவில்லை.

பாரிக்கு ஏனோ அவளுடைய தந்தையைத் தாங்கள் சந்திப்பதில் அவளுக்கு விருப்பமில்லை என்று தோன்றியது. ஒரு வேளை அவளுடைய அப்பாவுக்கும் இவள் இப்படி வருவது பிடிக்கவில்லையோ... என்னவோ... தங்களைப் பார்த்தால் ஏதாவது சுடு சொல்லாக சொல்லி விடுவாரோ என்று பயப்படுகிறாளோ என்று தோன்றியது.

"பார்க்கலாம். அவளாக விருப்பத்தோடு வந்து சேர்ந்திருக்கிறாள். எத்தனை நாள் வேலை செய்கிறாளோ செய்யட்டும். ஒரு டீம் வேற சேர்த்தர்றேன் கறாளே... பரவாயில்லை. நல்ல விஷயம்தான்." என்று புன்னகைத்தபடியே எண்ணிக் கொண்டான்.

"ராகேஷ்! எதுக்கும் இந்த அமவுண்ட்டைக் கையிலே வெச்சுக்கோ. ஏதாவது கேட்டாங்கன்னா கட்டிடு. நான் போய் காரைக் கொடுத்துட்டு பைக்கை எடுத்திட்டு வர்றேன்." என்றான் பாரி.

ராகேஷும், சுப்பிரமணியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"வேண்டாம்ணா. நீங்க போய் இன்னைக்கு ரெஸ்ட் எடுங்க.காலையில ஃப்ரெஷ்ஷா ஒரு ஏழு மணிக்குள்ள வந்திருங்க. அது வரைக்கும் நானும், சுப்பிரமணியும் பார்த்துக்கறோம். நாளைக்கு டே டைம்ல வேண்ணா நீங்க வெளியே போக வேண்டியிருக்கும் இல்லையா? அதனால குமாரும், செந்திலும் பார்த்துக்கட்டும்." என்றார்கள்.

அவர்களுக்குள்ளாக ஒரு திட்டமிட்டுக் கொண்டு பாரி கிளம்பலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கையில் அவனுக்கு அந்த ஃபோன் வந்தது.

ஃபோனைக் கையில் எடுத்துக் கொண்டான்.

சற்று நேரம் காது கொடுத்துக் கேட்டான்.

முகத்திலே எந்த உணர்ச்சியும் இல்லாமல் கேட்டான்.

பிறகு நண்பர்களைப் பார்த்து, "சரிப்பா. நான் கிளம்பறேன்." என்று காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

சற்று நேரத்திற்கு முன்பு பொறுப்பாகவும், சுறுசுறுப்பாகவும் இருந்த பாரி அண்ணன் இந்த ஃபோன் காலை அட்டெண்ட் செய்தவுடனேயே கொஞ்சம் மாறிப் போனாரோ என்று ராகேஷுக்கும், சுப்பிரமணிக்கும் தோன்றியது.

ஒவ்வொரு ஃபோனும் ஒவ்வொருவருடைய வாழ்க்கையை எப்படி மாற்றிவிடுகிறது?என்பதற்கு அவனுக்கு அன்றைக்கு வந்த ஃபோன் கால் ஒரு உதாரணமாக இருக்கப் போகிறது, என்பது அப்போது அவர்களுக்குத் தெரியவில்லை.

அத்தியாயம் -10

பாரி அந்த நள்ளிரவில் காரை ஓட்டிக்கொண்டு போய்க் கொண்டிருந்தான். கொஞ்சம் களைப்பாகவும் கூட இருந்தது.

மாலையில் மச்சானுடன் செய்து கொண்டிருந்த வாக்கு வாதம், திடீரென்று கிளம்பி வந்தது, இங்கே ஆஸ்பத்திரியில் சற்று அலைச்சல், கொஞ்சம் டென்ஷன் எல்லாமாக சேர்ந்து அவனைச் சற்றே சோர்வாக்கியிருந்தது.

நண்பர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு விட்டார்கள். இனியாவது போய் சற்று நிம்மதியாக உறங்கலாம் என்று கிளம்பும் போது அந்தத் தொலைபேசி அழைப்பு வந்தது.

அந்தத் தொலைபேசி அழைப்பில் பேசிய குரல் இதுவரை அவன் கேட்காத குரல். அந்தக் குரலிலே தெரிந்த மிரட்டல் இப்போது அவனை சிந்தனைக்குள்ளாக்கியது.

பத்திரிகைத் துறையில் இருப்பதால் அவனுக்கு அவனே அறியாத சில எதிரிகள் இருக்கலாம். அவன் தெரிந்து யாருக்கும் கெடுதல்கள் செய்யவில்லையென்றாலும் சில உண்மைகளை வெளிக்கொணரும் போது அதனால் ஏற்பட்ட கோபத்தின் காரணமாக எதிரிகள் இருந்திருக் கலாம். ஆனால் இந்தக் குரல் மொட்டையாக ஒரு மிரட்டலை விடுத்தது.

யோசித்து யோசித்துப் பார்த்தான். அதிலே ஒரு பெண்ணை வேறு தொடர்பு படுத்தி அந்த மிரட்டல் ஒலித்தது.

யாராய் இருக்கும்? ஒரு பெணக்கார வீட்டுப் பெண்ணை ஒரு பெரிய பிரச்சினையிலே இருந்து அவன் காப்பாற்றி னான். அதிலே ஒரு அரசியல்வாதிக்கு கொஞ்சம் கடுப்பு இருந்தது. அவருடைய ஆளாக இருக்குமோ?

"பெரிய பணக்கார வீட்டுப் பொண்ணுங்க கெடைச்சா ரவுண்டு கட்டிடுவீங்களா?" என்று கேட்டானே அவன்.

"யாரைச் சொல்லுகிறான்? சரி மறுபடியும் கூப்பிடட்டும் பார்த்துக் கொள்ளலாம்" என்று ஒரு வழியாக மனதைத் தெளிவு படுத்திக் கொண்டு சகோதரியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

அந்த பங்களாவின் வாட்ச் மேன் அவசர அவசரமாக கதவைத் திறந்து விட உள்ளே நுழைந்தான். ஹால் சோபாவில் சகோதரி தனக்காக காத்துக் கொண்டிருப் பதைப் பார்த்தவுடன் அவன் மனம் நெகிழ்ந்து விட்டது.

"அக்கா, நான் என்ன சின்னக் குழந்தையா? எனக்காகவா நீ உட்கார்ந்திருக்கே?" என்று கேட்டான்.

"ஆமாம்பா. திடீர்னு புறப்பட்டுப் போனே. சாப்பிடவும் வேற இல்லை. அதுதான் எனக்கு கவலையாப் போச்சு" என்றாள் சரஸ்வதி.

"நல்லா ஆச்சு போ! எத்தனை ஹோட்டல் இருக்கு. சாப்பிட மாட்டேனா?" என்றான் பாரி.

"தெரியலையேப்பா. நீ சாப்பிட்டுக்குவே. ஆனா இந்த பாழும் மனசு கேட்க மாட்டேங்குதே நீ வந்ததுக்கு அப்புறம் என்ன ஏதுன்னு விவரம் தெரிஞ்சுக்கிட்டு தூங்கலாம் அப்படின்னு உட்கார்ந்திட்டு இருந்தேன்" என்றாள் அவள்.

"ஏங்க்கா மச்சான் கோவிச்சுக்க மாட்டாரா?" என்றான் அவன்.

"அவரைப் போய்ப் பாரு. குறட்டை விட்டுத் தூங்கிட்டு இருக்காரு. எந்த ராஜா எந்தப் பட்டணம் போனா என்ன?" என்று சிரித்தாள் சரஸ்வதி.

சற்றே எரிச்சலோடு ஒரு விதமாக புன்னகைத்தான் பாரி.

"ஏங்க்கா காரை எடுத்துட்டுப் போனதுக்கு ஏதாவது, கடுப்பானாரா?" என்றான்.

"அதெல்லாம் கடுப்பாக மாட்டாருடா. அதெல்லாம் ஈஸியா எடுத்துக்குவாரு" என்றாள்.

"அதானே பார்த்தேன். நான் கிளம்பினதுக்கு அப்புறம் ஏதாவது சண்டை கிண்டை நடந்துச்சா ?"என்றான்.

"நான் என்னைக்குப்பா மச்சான்கிட்ட சண்டை போட்டிருக்கேன். அவரு ஏதாவது சொன்னா பேசாம வாங்கிட்டு நகர்ந்துடுவேன்" என்றாள்.

"ஆமாம், டிபிக்கல் குடும்ப பெண். அருந்ததி, நளாயினி இன்னும் யாரு இருக்காங்க சீதை அப்புறம் யார் யாரோ சொல்லுவீங்களே அவங்களுக்கு அப்புறம் நீதான் பொறந்திருக்கே" என்றான் அவன்.

"சரி சரி இந்த நேரத்தில் எதுக்கு என் வாயைப் பிடுங்கிட்டு இருக்கே. சரி வா சாப்பிடு." என்றாள்.

அப்பொழுது தான் அவனுக்கு பசிக்கிற மாதிரி தோன்றியது.

"அக்கா, இந்த நடு ராத்திரியில சாப்பிட்டா ஸ்டொமக் ஏதாவது?" என்று இழுக்க.

"ஒண்ணும் இல்லை. வா சப்பாத்தின்னா டைஜஸ்ட் ஆக லேட் ஆகும். தோசை வார்த்துத் தரேன் வா" என்று அவனுக்காக எண்ணெய் குறைவாக விட்டு அவள் தோசை வார்த்துக் கொடுத்தாள். அதற்குப் பிறகு "ஏம்பா கொஞ்சமா பால் சாப்பிடு" என்று பாலை வேறு காய்ச்சிக் கொடுத்தாள்.

"அக்கா ஆக்சுவலா நைட்ல படுக்கும் போது பால் சாப்பிடக் கூடாதுக்கா. பால் டைஜஸ்ட் ஆக டைம் ரொம்ப ஆகும்" என்றான். ஆனால் அதை தமக்கை கொடுத்த பாலைக் குடித்த பிறகுதான் சொன்னான்.

"அய்யய்யே, இப்படி ஒண்ணொண்ணுக்கும் லெக்சர் அடிச்சேன்னா உனக்கு வரப் போறவளுக்கு ரொம்ப கஷ்டம்தான்" என்று சிரித்தாள் சரஸ்வதி.

"நான் அப்படியெல்லாம் கஷ்டப்படுத்த மாட்டேன். நான் ரொம்ப ஈக்வலா நடத்துவேன். நீ பாரு குடும்ப வாழ்க்கைன்னா எப்படி இருக்கும்னு நான் காட்டறேன்" என்றான் பாரி.

"சரி காட்டு காட்டு!" என்றவள். "தம்பி, எனக்கு ஏனோ இன்னைக்கு எல்லாம் மனசு சங்கடமா இருக்கு" என்றாள்.

"ஏங்க்கா?" என்று கேட்டான் அவன்.

"இல்லை அந்த விஷயம் மச்சானுக்கு தெரிஞ்சதுன்னா?" என்றாள்.

"தெரிஞ்சதுன்னா...?"

"இல்லைப்பா. பெரிய பிரச்சினை ஆயிடும் தெரியுமா?" என்றாள் சரஸ்வதி.

"இப்போ மட்டும் எல்லாம் ஸ்மூத்தா போயிட்டு இருக்கா? வரட்டும் அக்கா என்ன பிரச்சினை வரும்னு பார்த்துக் கலாம்? விடு "என்றான்.

"தம்பி ஐம் நாட் அன் இன்டிவிஜுவல். நான் ஒரு தனி ஆள் இல்லை. எனக்கு ரெண்டு குழந்தைங்க இருக்கு" என்றாள் சரஸ்வதி.

"யார் சொன்னாங்க நீ தனி ஆள் இல்லைன்னு. நீ ஒரு தாய்தான். நீ ஒரு வைஃதான். நீ ஒரு குடும்பத் தலைவி தான். ஆனாலும் நீ ஒரு தனி ஆள்தான் தெரிஞ்சுக்க" என்றான் பாரி.

"பெரிய கிளாஷ் வரும்பா. இது ரெண்டையும் இணைச்சாலே பெரிய கிளாஷ வரும்" என்றாள் சரஸ்வதி.

"வரட்டும். உங்க தலைமுறையில இந்த கிளாஷ் எல்லாம் ஒழுங்கு படுத்தினீங்கன்னா அட்லீஸ்ட் அடுத்த தலைமுறை கொஞ்சம் ஃபிரியா இருப்பாங்க இல்லே?" என்றான்.

"இப்ப நான் என்ன ஃப்ரியா இல்லை?" என்று கேட்டாள்.

"அக்கா, பொய் சொல்லாதே, நெஞ்சைத் தொட்டு சொல்லு. நீ ஃபிரியாவா இருக்கே?" என்றான்.

"அதை விடுப்பா. நான் சந்தோஷமா இருக்கேன்" என்றாள்.

"ஆமாம். இந்த ரெண்டு குழந்தைங்களையும் பார்த்து அதனால நீ சந்தோஷமா இருக்கே. உன்னை நீயே ஏமாத்திட்டு இருக்கே" என்றவன் திடீரென்று நினைவு வந்தவன் போல "அக்கா, எனக்கு ஒண்ணு நடந்துச்சு தெரியுமா இன்னைக்கு?" என்றான்.

"என்ன?" என்றாள் அக்கா.

ஆஸ்பத்திரியில் நடந்ததை எல்லாம் சுருக்கமாகச் சொன்னான்.

"ஆமாம்பா, அந்த அம்மாவுக்கு என்னாச்சுன்னு கேட்கணும்னு நினைச்சேன். அதை விட்டுட்டு என்னென்னமோ பேசிட்டு இருந்தோம்" என்றாள்.

"இல்லைக்கா. அந்தம்மா ஸேஃபா இருக்காங்க. அங்க பசங்க ரெண்டு பேர் பார்த்துக்க இருக்காங்க. நான் டேடைம்ல போய்க்கலாம்னு அப்படின்னுட்டு தான் வந்துட்டேன். நாளைக்கு எனக்கு பத்திரிகையில பெரிய அசைன்மெண்ட் இருக்கு. அதனால நைட் ரெஸ்ட் எடுத்துத்தான் ஆகணும்" என்றான் சொல்லி விட்டு பிறகு "ம் அதைச் சொல்ல வந்தவன் மறந்துட்டேன் பார்த்தியா" என்று தனக்கு வந்த தொலைபேசி அழைப்பைச் சொன்னான்.

"மிரட்றான் அக்கா. பெரிய பணக்கார பொண்ணு கிடைச்சா ரவுண்டு கட்டுவீங்களான்னு என்னென்னமோ கேட்கறான். ஆனா, எனக்குக் கெரிஞ்சு அப்படியெல்லாம்

யாரு கூடவும் எனக்கு தொடர்பு இல்லை. மே பி அந்த ஒரு கேஸ்ல அந்த ஒரு பெண்ணை காப்பாத்தினேனே அதைச் சொல்றானோ? அந்த பொண்ணு எப்பவாவது பேசும் மணிமேகலைன்னு அவ்வளவுதான் அதுக்கு மேல ஒண்ணும் இல்லையே" என்று தனக்குத்தானே சிந்தித்துக் கொள்வது போல உரத்த குரலில் பேசினான்.

சரஸ்வதி கவலையுடன் பார்த்தாள். "அடடடா நான் வேற உன்கிட்ட சொல்லிட்டேனா? இனிமேல் ஓர்ரி பண்ணிட்டே இருப்பே" என்று தவறு செய்தவன் போல தன் தலையிலே கொட்டிக் கொண்டான்.

"இல்லை தம்பி. நீ எதுக்கும் கேர்ஃபுல்லா இரு. எல்லாமே அட்வெர்ஞ்சர்ஸ்ன்னு போயிடறே. எனக்குன்னு முக்கியமா இருக்கற ஆதரவு நீதான்!" என்றாள்.

"போச்சுடா! நீ உடனே புலம்ப ஆரம்பிச்சுடுவே. அதெல்லாம் ஒண்ணும் ஆகாதுக்கா. கவலைப்படாதே நாலு நாளைக்குள்ள அந்த ஃபோன் கால் யாருதுன்னு நான் டிரேஸ் பண்ணி கண்டுபிடிச்சுடுவேன்."

மறுபடியும் அக்கா உச்சு கொட்டினாள். நீ எதையாவது கண்டு பிடிச்சு எப்படியாவது சமாளிச்சுடுவே. ஆனா" என்று இழுத்தாள்.

"என்ன ஆனா?" என்றான் அவன்.

"இங்க தான் எனக்கு பயமா இருக்கு. எரிமலை வெடிச்சிடுமோன்னு".

"ஏன் அப்படி நினைக்கிறே? சும்மா ஜஸ்ட் லைக் தட் பார்த்துட்டு ஓ அப்படியா நல்ல விஷயமாச்சே அப்படின்னு மச்சான் முடிச்சுட்டாருன்னு வச்சுக்கயேன். மேட்டர் முடிஞ்சதில்லே?".

"இவ்வளவுதானா நீ?" என்று அவனைப் பரிதாபமாக பார்த்தாள் சரஸ்வதி.

அவனுக்கே தான் சொன்னது அபத்தமாக பட்டது.

"ஏன்க்கா? ஏன் அப்படிப் பார்க்கறே?"

"ஏண்டா தம்பி? தெரிஞ்சு தெரிஞ்சும் மச்சானைப் பத்தி நல்லா புரிஞ்சிருந்தும் இப்படி ஒரு வார்த்தை சொன்னயே?" என்றாள் அக்கா.

"எது வேணா எப்ப வேணா எப்படி வேணா மாறலாம். ஒரு நாள் மச்சானும் மாறினாருன்னு வச்சுக்கோ" என்றான்.

"அதெல்லாம் நடக்கவே நடக்காது.எல்லா ஆண் களுக்கும் மனசுல மனைவி நளாயினி மாதிரி இருக்கணும். அறிவாளியா இருக்கணும். ஆனா அடங்கி இருக்கணும். காட்டக் கூடாது அப்படின்னு ஒரு ஆசை இல்லையா?" என்று கேட்டாள்.

பாரியிடம் பேசும் போது தான் அவள் மனம் விட்டு எல்லாவற்றையும் விவாதிப்பாள். பாரி ஒரு நிமிடம் யோசித்தான்.

"ஆமாக்கா இருக்கு நான். ஒத்துக்கறேன்ஆனா, என்னைப் பொறுத்த வரைக்கும் அப்படி இல்லாம இருக்கறதுக்கு நான் முயற்சி பண்ணுவேன் அக்கா" என்றான்.

"அது வேண்ணா உண்மைப்பா. இந்த தலைமுறையில ஓரளவுக்கு புரிஞ்சுக்கறீங்க. ஓரளவுக்கு ஏத்துக்கற மாதிரி தான் தெரியுது."

இரண்டு பேரும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந் தார்கள்.

"என்ன அக்காவும் தம்பியும் தூங்கலையா?" என்று படுக்கை அறையிலிருந்து குரல் வந்தது.

"அக்கா காலிங் பெல் அடிச்சிடுச்சு. நீ போக்கா" என்று சொல்லிவிட்டு அவன் தன்னுடைய அறைக்குப் போனான்.

அங்கே குழந்தைகள் இரண்டு பேரும் அந்த பரந்த கட்டிலில் படுத்திருந்தார்கள். இவன் போய் லுங்கியை மாற்றிக் கொண்டு படுத்த உடனே எப்படித்தான் அவர் களுக்குத் தெரிந்ததோ ஆளுக்கு ஒரு பக்கம் காலைப் போட்டார்கள்.

சிரித்துக் கொண்டான். "எப்ப மாமா வந்தே?" என்றாள் மருமகள் தூக்க கலக்கத்தில்.

"இப்பதாம்பா வந்தேன் ராஜாத்தி!" என்று அவள் கன்னத்தில் நிமிண்டி விட்டு அவன் கண்ணைமூடி உறங்குகிறவன் போல படுத்துக் கொண்டான்.

உறக்கத்திலேயே கேட்டு விட்டு அந்தக் குழந்தை உறக்கத்திலே ஆழ்ந்து போனாள்.

அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது. இன்றைக்கு ஏனோ நிறைய நிகழ்ச்சிகள் நடந்து விட்டாற் போல அவனுக்குத் தோன்றியது. உறங்கும் பொழுது எது நடக்கிறதோ அந்த பிரச்சினை கொஞ்சம் மனதில் ஆழமாக பதியும் அல்லவா? அது போல அக்கா எழுப்பிய கேள்வி அவனுக்குள் புதிய தொரு கவலையை தூண்டியது.

ஒரு பக்கம் மிரட்றாங்க ஒரு பக்கம் ஹெல்ப் கேட் கறாங்க. ஒரு பக்கம் உதவிக்கு ஓடி வர்றாங்க. இன்னொரு பக்கம் பயந்துக்கறாங்க. என்னடா வாழ்க்கை இது என்று சிரித்துக் கொண்டான்.

"ஆமா இல்லே, இன்னிக்கு நாலு விஷயம் நடந்திருக்கு. ஓடிப் போய் உதவி செஞ்சது நல்ல விஷயம். சங்கமித்ரா வந்து உதவி செஞ்சது அது ஒரு நல்ல விஷயம். மிரட்டினது எவனோ? மிரட்டினாலும் அதுவும் ஒரு சேஞ்சுக்கு நல்லாதானே இருக்கு. நவரசமா இருக்கே?" என்று சிரித்துக் கொண்டான்.

கடைசியில் அக்காவினுடைய பயத்தில் கொஞ்சம் அர்த்தம் இருக்கிறாற்போல அவனுக்குத் தோன்றியது. அப்படி ஒன்றும் அத்தான் எல்லாவற்றையும் ஜீரணித்துக் கொள்ளுகிறவர் இல்லை என்பது அவனுக்குத் தெரியும். அப்படி ஏதாவது நேர்ந்தால் என்ன செய்வது என்று யோசித்தான்.

"நடக்கட்டும் பார்க்கலாம்" என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டான்.

அவன் எதற்காக பயந்தானோ அது இன்னும் கொஞ்ச நாட்களுக்குள்ளாகவே நடக்கப் போகிறது என்பது அப்போதைக்கு அவனுக்குத் தெரியவில்லை.

நன்றாக ஆழ்ந்து உறங்க ஆரம்பித்தான்.

அதிகாலை ஐந்து மணி இருக்கும் தொலைபேசி ஒலித்தது. அவனுடைய அலைபேசி ஒலித்தது. கையிலே எழுத்தான்.

"ஹலோ" என்றான்.

"குட் மார்னிங்" என்று சங்கமித்ராவின் குரல் ஒலித்தது.

"ஹலோ! நீங்க இந்த நேரத்திலே?" என்று அவன் உற்சாகமானான்.

"ஆமாம் சார். நான் ஏதாவது இண்ணைக்கு ஆஸ்பிட்டல் போகணுமா? ஏதாவது ஃபுட் கிட்டு கொண்டு போய் கொடுக்கணுமா? சொன்னீங்கன்னா ஹாஸ்பிட்டல்ல ஏழு

மணிக்கு விட்டுடுவாங்க நான் இங்கிருந்து பிரிபேர் பண்ணி கொண்டு வந்துடுவேன்" என்றாள்.

"நோ நோ. ப்ராப்ளம் அட் ஆல். அப்படி ஏதாவதுன்னா நான் இங்க அக்காவை கூட செஞ்சு கொடுக்கச் சொல்லி கொண்டு போயிடுவேன்."

"வேணாம் அவங்களை எதுக்கு சிரமப் படுத்தறீங்க? அவங்க குழந்தைகளையெல்லாம் ரெடி பண்ணணும். நான் அம்மா கிட்ட சொல்லி சர்வண்ட் கிட்ட சொல்லி ப்ரிப்பேர் பண்ணி கொண்டு வந்துடுவேன்" என்றாள்.

"தெரியலையே நீங்க எதுக்கும் ஹாஸ்பிடலுக்கு போன் பண்ணி பசங்க கிட்ட கேளுங்க. அங்க பசங்க இருக்கானுங் கள்ளே. அவனுங்க கிட்ட கேளுங்க" என்றான்.

அவனுக்குத் தெரியும் அவள் ஆஸ்பத்திரிக்கு போன் பண்ணினால் இரண்டு பேரும் "கண்டிப்பா டிஃபன் வேணும். கொண்டு வாங்க" என்று சொல்லுவார்கள் என்று தெரியும். ஏனென்றால் அந்தப் பையன்கள் ஹோட்டலில் சாப்பிட்டு அலுத்துப் போய்க் கிடந்தார்கள் என்பது தெரியும்.

"சரி கொண்டு போங்க" என்று எப்படித்தான் சொல்லுவது என்று யோசிக்கையிலேயே அவள் கேட்டாள்.

"தயங்காதீங்க சார். மத்த நாள்னா கூட அவங்க ஹோட்டல்ல சாப்பிட்டுக்குவாங்க. இப்ப ஹாஸ்பிட்டல்ல மாத்தி மாத்தி ஒருத்தர் இருக்கணுமே. நான் கொண்டு போறேன் ஃபுட்" என்று

அவன் அதற்குப் பிறகு புன்னகைத்த படி "ஆமாமா, அவங்களுக்கு வீட்டு சாப்பாடுன்னா ரொம்ப பிடிக்கும். கொண்டு போங்க" என்றான்.

"பேஷண்டுக்கு அவங்க உள்ளே கொடுத்துடுவாங்க. நாம கொடுக்கத் தேவையில்லை."

"சரிங்க சார். நல்லது சார். குட் மார்னிங் சார்" என்றாள்.

போனை வைத்த பின்பு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. என்ன இந்தப் பெண் இவ்வளவு சீரியஸாக ஒத்துழைக்கிறாள் அதுவும் அதிகாலை ஐந்தரை மணிக்கு போன் செய்து கேட்கிறாள்.

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு இரவு போன் காலில் ஆரம்பித்து போன் காலிலேயே முடிகிறது. இதுவும் நன்றாக இருக்கிறது என்று முதல் நாள் ஏற்பட்ட நான்கைந்து அனுபவங்களுடன் இதையும் ஒரு அனுபவ மாக சேர்த்துக் கொண்டான்.

எல்லாக் கவலைகளும் கேள்விகளும் உள்ளே இருந்தாலும் கூட சங்கமித்ராவினுடைய தொலைபேசி அழைப்பு அன்றைக்கெல்லாம் அவனை உற்சாகத்தில் வைத்திருந்தது.

அது அவனுக்கும் புரிந்தது. அதிலும் லேசாக அவனுக்கு கவலை தோன்றியது. "அடடடா, எதெதுக்குத்தான் கவலைப்படறது?" என்று தன்னைக் குறித்து தானே சிரித்த படி படுக்கையை விட்டு எழுந்தான் பாரி.

அத்தியாயம் - 11

"தம்பி, உடனே வந்து என்னைக் கூட்டிட்டுப்போ," என்ற அக்காவின் குரல் கேட்டு அதுவும் கலங்கிய குரல் கேட்டு திகைத்துப் போனான் பைந்தமிழ் பாரி.

வனமாலி ஊரில் இருந்து வந்ததற்குப் பிறகு அங்கே இருந்து கிளம்பி விட்டான் பைந்தமிழ் பாரி. தன்னுடைய அபார்ட்மெண்டுக்கு வந்து விட்டான்.

ஏதோ நினைப்போடு வேலை பார்த்துக் கொண்டிருந் தான் என்றாலும் இப்பொழுது ஒரு மாதம் ஓடியிருந்தது.

வனமாலி "இப்பதானே ஒரு ப்ராஜக்ட் முடிச்சேன். கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கறேன்" என்று ஓய்வில் இருந்தார்.

அக்காவோடு இருப்பது அவனுக்குப் பிடித்தமான விஷயம் என்பதால்தான் அவன் அங்கே இருந்தான்.

மச்சான் வந்ததற்குப் பிறகு தான் அங்கே இருந்தால் சரி வராது என்று கிளம்பி வந்து விட்டான். அதற்குப் பிறகு அக்கா அடிக்கடி டெலிபோனில் பேசுவாள். இவனும் போய் குழந்தைகளோடு ஓரிரு நாள் தங்கி விட்டு வந்ததும் உண்டு.

திடீரென்று என்ன அக்கா இப்படி கலக்கமாக பேசுகிறாள் என்று அவனுக்கும் கவலை தோன்றியது.

"ஏன் அக்கா என்ன ஆச்சு?" என்றான் பதைப்புடன். "தம்பி முதல்ல வந்து இங்கிருந்து கூட்டிட்டுப் போ என்னால இனிமே இங்கிருக்க முடியாது" என்றாள் அக்கா.

"அக்கா, என்ன அக்கா இப்படிச் சொல்றே. நீ ஒண்ணும் கவலைப்படாதே. நான் இப்ப வர்றேன்" என்று அவன் புறப்பட்டான்.

"தம்பி வர்றது வர்றே, ஆனா உன் மச்சான்கிட்ட எந்த சண்டையும் பிடிக்காதே. நான் குழந்தைங்களைக கூட்டிட்டு வர்றேன். எங்களுக்கும் உன்னோட அப்பார்ட் மெண்ட்ல கொஞ்சம் ஓரத்துல இடம் கொடுக்க மாட்டியா" என்று கேட்டாள்.

"அக்கா அப்பார்ட்மெண்ட்டே உன்னுதுதான் அக்கா. என்னக்கா கேள்வி இது" என்றான் அவன்.

"நீ முதல்ல புறப்பட்டு வா" என்று அவள் போனை ஆஃப் செய்தாள்.

பதறியடித்துக் கொண்டு காரை எடுத்துக் கொண்டு போனான் பைந்தமிழ் பாரி.

அங்கே ஹால் சோபாவில் இரண்டு குழந்தைகளையும் இரண்டு புறமும் அமர்த்திக் கொண்டு செயலிழந்தாற்போல அக்கா அமர்ந்திருந்தாள்.

"என்ன அக்கா ஆச்சு? என்ன ஆச்சு?" என்று இவன் பதைபதைப்போடு உள்ளே போனான்.

வனமாலி உள்ளே இருந்து ஆக்ரோஷமாக வெளியே வந்தான்.

"என்னடா என்ன ஆச்சுன்னு உனக்குத் தெரியாதா? என்ன அக்காளும் தம்பியும் வேஷம் போடறீங்களா?" என்று பொருமினான்.

தனக்குள் எழுந்த கோபத்தை அடக்கிக்கொண்டு "எதுக்காக நாங்க வேஷம் போடணும்.? என்ன விஷயம்? அதைச் சொல்லுங்க" என்றான் பைந்தமிழ் பாரி.

"என்னடா மிரட்டறே?" என்றார்.

"நான் ஒண்ணும் மிரட்டலை. தன்மையாத்தான் கேட்கறேன், சொல்லுங்க" என்றான்.

"ஏண்டா? எனக்குத் தெரியாம என்னென்ன காரியம் பண்ணுவீங்க? எனக்குத் தெரியாம கதை எழுதறாளா இவ. எனக்குத் தெரியாம ஸ்கிரிப்ட் அனுப்புவாளா இவ?" என்றான்.

பைந்தமிழ் பாரிக்கு இப்பொழுது விஷயம் பிடிபட்டது.

வனமாலி வீட்டிலே ஒரு பத்து நாட்களாக இருந்தான். அன்றைக்கு ஏதோ அவனுடைய அறையிலிருந்த அவனுடைய கம்ப்யூட்டரில் ஏதோ பிரச்சினை என்று குழந்தைகளினுடைய அறையிலிருந்த கம்ப்யூட்டரில் ஏதோ டைப் செய்யலாம் என்று வந்தான்.

சரசு அப்பொழுது கோயிலுக்குப் போயிருந்தாள். குழந்தைகளும் இல்லை.

இதுநாள் வரை அவன் குழந்தைகளுடைய அறையில் அமர்ந்து எந்த வேலையும் செய்ததில்லை என்பதால் சரஸ்வதியும் போதுமான பாதுகாப்புச் செய்து கொள்ள தவறிவிட்டாள்.

உள்ளே வந்த வனமாலி கம்ப்யூட்டரை ஆன் செய்து தனக்கு வேண்டியவற்றை டைப் செய்து கொண்டிருந்தான்.

திடீரென்று குழந்தைகள் என்னென்ன ஃபைல் வைத்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும் என்று கண்களை ஓட்டிய பொழுது அவனுடைய கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

வீட்டுக் கணக்குக்குக்கூட ஒரு ஃபைல் சரசு வைத்திருப் பதை பார்த்து "அடடே, இவளுக்கு கம்ப்யூட்டர் வேலை தெரியுமா?" என்று ஆச்சரியமானது. எப்பொழுதும் அவனுக்கு ஒரு எண்ணம் சரஸ்வதிக்கு அவ்வளவாக மூளை வேலை செய்யாது என்பது போலத்தான்.

தான் பெரிய அறிவு ஜீவி என்றும் சரஸ்வதி ஆஃபடரால் வீட்டிலே வேலை செய்து கொண்டிருக்க வேண்டிய பெண் என்பதுமாகத்தான் அவனுடைய எண்ணம் இருந்தது.

மேலோட்டமாக ஃபைல்களை பார்த்தவன் ஒவ்வொன்றாக திறந்து பார்க்கவும் ஆரம்பித்தான். அந்த நேரம்தான் சரஸ்வதிக்கு சனி பிடித்த நேரமாக இருந்தது.

கதை என்று பெயரிடப்பட்டிருந்த ஃபைலை திறந்து பார்த்த பொழுது அவனுக்கு ஆச்சரியம் அதிர்ச்சி எல்லாம் ஒன்றாக தோன்றியது.

அதிலே போட்டியில் தான் தேர்ந்தெடுத்த அந்த கதையினுடைய முழு ஸ்கிரிப்ட்டும் டைப்பில் இருந்தது. இது எப்படி இவளிடத்திலே வந்தது என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

உடனே அந்த மேஜை இழுப்பறை, அதை இதை என்று கோபமாக திறந்து பார்த்த பொழுது அந்த ஸ்கிரிப்டினுடைய பிரிண்ட் அவுட் ஒரு காப்பி ஒரு பைலிலே பத்திரப்படுத்தி இருந்தது. அப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது.

சரஸ்வதி சதி என்றெல்லாம் அனுப்பியிருந்த அந்த சரஸ்வதி வேறு யாரோ அல்ல. தன்னுடைய மனைவி தான் என்றபோது உண்மையில் அவனுக்கு ஒரு புறத்தில் கொஞ்சமாவது மகிழ்ச்சி வந்திருக்கலாம். அது வரவில்லை. மாறாக தன்னிடம் மறைத்திருக்கிறாள் என்று கோபம் எழுந்தது.

அதைக் காட்டிலும் இன்னொரு கோபம் என்னவென்றால் ஒரு கதை எழுதுவது என்றால் அதற்காக போய் ஒரு பங்களாவில் தங்கி கொடைக்கானல் ஊட்டி, என்று தயாரிப்பாளர் செலவில் பல இடங்களுக்குப் போய் எழுதினால்தான் தனக்கு வருகிறது.

ஆனால், இந்தப் பெண் இங்கே உட்கார்ந்து கொண்டு இவ்வளவு பெரிய காரியத்தை சாதித்திருக்கிறாள் என்றால் இவளே நாளைக்குத் தனக்குப் போட்டியாக வரமாட்டாள் என்று என்ன நிச்சயம் என்று ஒரு பயம் அவன் மனதிலே கிளம்பியது.

அந்த பயம் முழுவடிவாக அவனுக்குப் புரியவில்லை என்றாலும் எப்பொழுதும் போல காம்ப்ளக்ஸாக மாறியது.

அந்தக் கணத்தில் தான் ஆணாதிக்கத்தின் முழு வடிவமாக மாறிக் கொண்டிருக்கிறோம் என்பதை அவன் உணர வில்லை.

"ஆஃப்டரால் நான் சொன்னபடி கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய ஒருத்தி எப்படி இப்படிச் செய்யலாம்?. விட்டால் தனக்கே போட்டியா வந்துவிடுவாள் போல இருக்கிறது'' என்கிற அடி மனசு பயம் அவனை வேறு விதமாக கோபம் கொள்ளச் செய்தது.

கறுவிக் கொண்டே காத்திருந்தான்.

கோவிலுக்குப் போன சரஸ்வதி குழந்தைகளோடு வந்தாள். அவன் அந்த அறைக்கு முன்னால் கம்ப்யூட்டருக்கு முன்னால் அமர்ந்திருப்பதை பார்த்தவுடனே அவளுக்குத் திக்கென்றது.

குழந்தைகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவள் மெல்லப் போய் சிரித்தபடியே "என்னங்க அதிசயமா இங்கே?'' என்றாள்.

"ஏன்? நான் இங்க வரமாட்டேங்கற தைரியத்துலதான் நீ இந்தத் திருட்டுத்தனமெல்லாம் பண்ணிட்டு இருக்கியா?'' என்றான்.

"எந்தத் திருட்டுத்தனம்?'' என்றாள் அவள். கேட்கும் போதே அவளுக்கு விஷயம் புரிந்தது. அவனுக்குப் புரிந்திருக்கிறது என்பதும் அவளுக்கு மெல்ல புரிய ஆரம்பித்தது.

அவன் அந்த ஸ்கிரிப்ட் ஃபைலை எடுத்து டேபிளின் மேல் தொப்பென்று போட்டான். "இது என்னடி?" என்றான்.

அவள் ஒரு நிமிடம் பேச வொட்டாமல் திணறினாள், "அது வந்து... வந்து...." என்று இழுத்தாள்.

"என்ன வந்து போயி ஈர வெங்காயம்.இது யாருடி எழுதினது?" என்றான்.

ஒரு நிமிடம் பைந்தமிழ் பாரிதான் தன்னுடைய பெயரில் எழுதினான் என்று சொல்லிவிடலாமா என்று அவளுக்குத் தோன்றியது. சொல்லி விட்டால் தப்பித்து விடலாம். ஆனால், அவளுக்கு ஏனோ அப்படி எதற்கு பயப்பட வேண்டும்? நம்மால் செய்ய முடிந்ததை செய்தோம். இதிலே இவருக்கு இவ்வளவு கோபம் வருவதற்கு என்ன இருக்கிறது என்ற வீம்பும் தோன்றியது.

"ஏன் நான்தான் எழுதினேன்". என்றாள்.

அவன் முறைத்தான்.

"ஏன் எழுதக் கூடாதா?" என்றாள் மறுபடியும்.

"எழுதலாம்டி எழுதலாம். என் வீட்டில் உட்கார்ந்துட்டு என் சோத்தைத் தின்னுட்டு எனக்கே துரோகம் பண்றியா?" என்றான்.

அவள் புரியாதவளாக பார்த்தாள். "இதிலே என்னங்க துரோகம் இருக்கு?. சும்மா ஒரு ட்ரையல் பார்க்கலாம்னு எழுதினேன். அந்த சமயத்துல தான் அந்த போட்டி வந்தது. போட்டிக்கு அனுப்பி வைப்போம்னு அனுப்பினேன். அதிலே உங்களை ஜட்ஜா தேர்ந்தெடுப்பாங்கன்னு எனக்கு என்ன தெரியும். நீங்க தான் அந்த மாதிரி விவரங்கள் எதையுமே எனக்குச் சொல்லலையே?" என்றாள்.

அது உண்மை தான். அவன் தன்னுடைய அலுவல் தொடர்பான எந்த விஷயங்களையும் அவளிடம் தெரிவிப்ப தில்லை என்பது உண்மைதான்.

ஒரு நிமிடம் பதில் சொல்லத் தோன்றாமல் திகைத் தவன். "அது இல்லடி பாயிண்ட், நீ எதுக்கு இந்த வேலை யெல்லாம் செய்யறே?" என்றான்.

அந்தக் கேள்வி அவளைத் தாக்கியது.

"ஏன்? நீ எதுக்குன்னா?" என்றாள்.

"ஆமாம், உன்னை நான் எதுக்காக கல்யாணம் பண்ணிட்டு வந்தேன் பேசாம சோறாக்கிப் போட்டு குழந்தைங்கள வளர்க்கறது மட்டும்தாண்டி உன் வேலை" என்றான்.

அவளுக்குள்ளும் ஒரு விறைப்பு தோன்றியது. "அப்படி நாம எந்த ஒப்பந்தமும் போடலைங்க. உங்களுக்கு மனைவியா வந்துட்டேன் என்பதற்காக எல்லா அறிவு சார் விஷயங்களிலும் தலையிடக்கூடாது என்று நீங்கள் எப்படி என்னைக் கம்பல் பண்ண முடியும்.?"

சொல்லி முடிப்பதற்கு முன்பாக விண்ணென்று ஒரு அறை அவள் கன்னத்திலே விழுந்தது. கன்னத்தை பிடித்துக் கொண்டு திகைத்துப் போய் நின்றாள்

குழந்தைகள் இரண்டு பேரும் 'அப்பா! அப்பா!' என்று அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தார்கள்.

ஒரு உதறு உதறவும் இரண்டு பேரும் இரண்டு பக்கமாக கட்டிலின் மேல் தொப்பென்று விழுந்தார்கள்.

அவள் அவனைக் கோபமாக பார்த்தாள். "தி இஸ் டூ மச்" என்றாள்.

"இங்கிலிபீஸ் வேறையா தோலை உரிச்சுடுவேன். ஒழுங்கு மரியாதையா வீட்டுலே வேலை செஞ்சுட்டு இருக்கணும். இதெல்லாம் பண்ணினே ?"என்றான்.

"நீங்க பெரிய இலக்கிய வாதி நீங்க பெரிய கதாசிரியர் ஊருக்கெல்லாம் பெண்ணியம் பத்தி உபதேசம் செய்விங்க. ஆனா, உங்க ஒய்ப் ஒரு கதை எழுதினா ஒத்துக்க மாட்டீங்களா?" என்றாள்.

உடனே அவன் பேசக் கூடாத ஒரு வார்த்தையைச் சொல்லி விட்டு "இதுக்கெல்லாம் யாருடி உனக்கு பர்மிஷன் கொடுத்தாங்க?" என்றான்.

"யாரும் கொடுக்கத் தேவையில்லை."என்றாள் அவளும் ஆக்ரோஷமாக.

இப்படியே அந்தப் பேச்சு வளர்ந்து விட்டது. அதற்குப் பிறகு ஒரு கணத்தில் "ஒண்ணு என் பொண்டாட்டியா இருடி. இல்லை அறிவாளியா இருடி" என்றான்.

அவள் வெறுத்துப் போய் அவனைப் பார்த்தாள்.

அதற்குப் பிறகு ஹாலில் வந்து அமர்ந்து கொண்டாள்.

அதற்குப் பிறகுதான் செல்ஃபோனில் இருந்து தம்பிக்கு தெரிவித்தாள்.

கன்னத்தில் மச்சானுடைய கை விரல்கள் பதிந்திருப்பதை பார்த்தவுடனேயே பைந்தமிழ் பாரியினுடைய ரத்தம் கொதித்தது.

"மாமா அக்காவை உங்களோட வாழறதுக்கு அனுப்பி யிருக்கு. இந்த மாதிரி அடி உதை வாங்கறதுக்கு இல்லை" என்றான்.

"வாழத்தாண்டா நானும் சொல்றேன். வந்தா சோறாக்கிப் போட்டு குழந்தைங்களை வளர்த்துட்டு இருக்கணும். இவளை யாருடா கதை எழுதச் சொல்றா?" என்றான்.

அவன் முறைத்தான், "கதை எழுதக் கூடாதுன்னு ஒப்பந்தமா போட்டிருக்கீங்க?".

"என்னடா அக்காவும் தம்பியும் ஒரே மாதிரி பேசறீங்க. ஒண்ணு இதையெல்லாம் விட்டுட்டு ஒழுக்கமா இருக்கற துன்னா இருக்கச் சொல்லு. இல்லைன்னா வெளியே கிளம்பச் சொல்லு" என்றான்.

பாரி அக்காவைப் பார்த்தான். "அக்கா, நீதான் முடிவு எடுக்கணும்" என்றான்.

"தம்பி உன்னோட வந்துடறேன்" என்றாள் அக்கா.

வனமாலி என்ன மிரட்டு மிரட்டினாலும் அவள் இந்த முடிவை எடுப்பாள் என்று எதிர்பார்க்கவில்லை போலும். கொஞ்சம் திகைத்துத்தான் போனான். ஆனாலும், இறங்கி வந்து பேசுவதற்கு அவனுடைய வீம்பு மனம் ஒத்துழைக்க வில்லை.

"இதோ பாருடி, போனா போயிட வேண்டியதுதான். அப்புறம் டைவர்ஸ் நோட்டீஸ்தான் வரும்." அவள் திரும்பி ஆழ்ந்த வேதனையுடன் அவனைப் பார்த்தாள்.

"நீங்க தான் சொல்லிட்டீங்கள்ல ஒண்ணு பொண்டாட் டியா இரு, இல்லைன்னா அறிவாளியா இருன்னு. உங்களுக்காக குழந்தைங்களை வளர்த்துக் கொடுத்தேன். இந்தக் குடும்பத்துக்காக என்னை முழுக்கவும் அர்ப் பணிச்சேன். ஆனா, எங்கிட்டயும் ஒரு திறமை இருக்குன்னு உங்களால ஏத்துக்க முடியலை.இதுக்கப்புறமும் நான்

இங்கே இருந்தேன்னா என்னோட சுயத்தை கொன்னுட்டுத் தான் இருக்கணும். வேண்டாம்'' என்றாள்.

பைந்தமிழ் பாரி தலையிடாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்னடி வெளியே போய் பெரிய திரைக்கதை ஆசிரியரா ஆயிடுவேன்னு நினைப்பா?'' என்றான்.

''ஆனா, இப்படியே என்னை சீண்டினீங்கன்னா நான் ஆனாலும் ஆயிடுவேன்'' என்றாள்.

பைந்தமிழ் பாரி முகத்தில் கூட சிரிப்பு தோன்றியது. ஆனால் அடக்கிக் கொண்டான்.

''முதல்ல போங்க வெளியே'' என்றான்.

''நீங்க சொல்றதுக்கு முன்னாடியே நாங்க தயாரா தான் இருந்தோம். அதனால தான் பாரியை வரச் சொன்னேன். நான் கிளம்பறேன்'' என்றாள்.

''பாருங்க எதுவுமே எடுத்துக்கலை. இந்தக் குழந்தைகளுக்கு நாலஞ்சு டிரஸ்ஸு. இப்ப உடுத்துன புடவைக்கு ஒரு மாத்துப் புடவை. எங்க அம்மா வீட்டில் இருந்து நான் கொண்டு வந்த நகைகள் அவ்வளவுதான்'' என்றாள்.

ஒரு அறிவார்ந்த பெண் விசுவரூபம் எடுத்தால் எப்படியிருக்கும் என்பதைப் பைந்தமிழ் பாரி அந்தக் கணத்தில் நேராகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

போர்ட்டிகோவுககு வந்து நின்றார்கள். ''தம்பி. ஒரு டாக்ஸி'' என்றாள்.

''கார் கொண்டு வந்துட்டேன் அக்கா'' என்றான் பாரி. வருகிற வழியில் அவன் எதிர்பார்த்துச் செய்திருந்தான்.

''வா அக்கா கார்ல ஏறிக்கலாம்'' என்றான். அப்படிக் காரில் ஏறும் பொழுது தன்னுடைய செல் போனை எடுத்து ''செந்தில் உடனடியா கொஞ்சம் அப்பார்ட்மெண்டுக்கு வாடா!'' என்று சொல்லிவிட்டு போனை வைத்தான் பைந்தமிழ் பாரி.

அத்தியாயம் - 12

''ஹை மாமா ஷூ வெல்லாம் போட்டு வுடறாங்க'' என்று குதித்தான் வெங்கட்.

''சரி சரி குதிக்கறது இருக்கட்டும். நீ மொதல்ல காலைக் காட்டு'' என்றான் பைந்தமிழ் பாரி.

அவன் உடனே டான்ஸ் ஆடினான். ''அப்படிப் போடு. அப்படிப் போடு'' என்று.

''ஹேய், ஓங்கி ஒண்ணு போட்டுருவேன் தெரியுமில்லே. அப்படிப் போடுன்னா அதுக்கு அப்படியும் ஒரு அர்த்தம் இருக்கு'' என்று சிரித்தான் பாரி.

''போட்டுருவியா மாமா நீ ?''என்று அவன் இடுப்பிலே கையை வைத்துக் கொண்டு முறைத்தான்.

அவன் இடுப்பிலே கையை வைத்துக் கொண்டு நின்று முறைத்த விதம் அழகாக இருந்தது. குழந்தைகள் தான் எதைச் செய்தாலும் அழகு என்று எண்ணி முறுவலித்துக் கொண்டான் பைந்தமிழ் பாரி.

''மாமா, அப்பா இப்படியெல்லாம் போட்டே விடமாட்டாங்க தெரியுமா?'' என்றாள் நிவேதிதா

''அப்பாவுக்கு டைம் இருக்காதுடா'' என்றான் பைந்தமிழ் பாரி.

"அப்போ உனக்கு மட்டும் வேலை இல்லையா?" என்றான்.

"எனக்கு வேலை இருக்கு. இருந்தாலும் ரெண்டு பேரும் என் செல்லங்களாச்சே? உங்களுக்குத்தான் பர்ஸ்ட் பிரஃபரன்ஸ்" என்றான் பாரி.

"அதான் நான் கேட்கறேன். அப்பா எங்களுக்கு ஏன் ஃபர்ஸ்ட் பிரஃபரன்ஸ் கொடுக்க மாட்டேங்கறாரு?" என்றாள் நிவேதிதா.

"இங்க பாருடா அப்பா ரொம்ப பெரிய ஆளு. புகழ் பெற்ற கதாசிரியர். அவருக்கு நிறைய டைம் இருக்காது. அவரோட வேலைக்கே அவருக்கு நேரம் சரியா இருக்கும்."

"சரி அப்ப நீ வெட்டி ஆஃபீஸர்னு சொல்றே?" என்றாள் நிவேதிதா.

பாரியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. "அப்படித்தான் வச்சுக்கயேன். நீ முதல்ல ஷு" போடுஎன்றான் பைந்தமிழ் பாரி.

"ஏன் அவனுக்கு மட்டும்தான் போட்டு விடுவியா? எனக்குப் போட்டுவிட மாட்டியா?" என்றாள் நிவேதிதா.

"சரிடா வாடா, உனக்கும் போட்டு விடறேன்" என்று அந்தக் குழந்தைக்கும் போட்டு விட்டான்.

"தம்பி அதெல்லாம் அவங்களே செஞ்சுப்பாங்கப்பா. நீ எதுக்கு?" என்று உள்ளே இருந்து குரல் கொடுத்தாள் சகோதரி.

"மாமா, பொய், பொய், அம்மா தான் போட்டு விடுவாங்க" என்று கிசுகிசுத்தாள் நிவேதிதா. "அப்படியா?" என்றான் அவனும் ரகசியம் பேசுவது போல.

இதெல்லாம் அவனுக்கு மிகவும் இன்பமாக இருந்தது.

"சரிக்கா. ஆகட்டும், இனிமே அவங்களே போட்டுக் கறாங்களாம்" என்று சொல்லிவிட்டு அவன் அந்த குழந்தைகள் இரண்டு பேருக்கும். ஷூக்களை மாட்டி விட்டான்.

"சரி, சீக்கிரம் சாப்பிடுங்க" என்றான்.

"ஐய்யய்யோ, யூனிபார்ம் போட்டுட்டோமே, யூனிபார்ம் போட்டதுக்கப்புறம் சாப்பிட்டா ஏதாவது விழுந்துடுச்சுன்னா மேலே.." என்று யூனிபார்ம் தடவிக்கொண்டு சொன்னாள் நிவேதிதா.

"இருடி வர்றேன்" என்று வந்தாள் சரஸ்வதி. இரண்டு பேருக்கும் கழுத்திலே ஒரு துண்டை கட்டி விட்டு அமர வைத்து இரண்டு பேருக்கும் டிபன் ஊட்டினாள்.

"நானே சாப்பிட்டுக்குவேன்" என்று நிவேதிதா வாங்கிக் கொண்டாள்.

இட்லியை சாம்பாரில் தோய்த்து ஒரு ஸ்பூனைப் போட்டுக் கொடுத்திருந்தாள் சரஸ்வதி.

இரண்டு குழந்தைகளும் ஒரே கலாட்டாவாகப் புறப்பட்டுப் போனார்கள்.

"அக்கா, இண்ணைக்கு ஒரு நாளைக்கு மட்டும் ஆட்டோவில் நானே கொண்டு போய் விட்டுட்டு வர்றேன். ஏன்னா ஆட்டோல தனியா அனுப்ப வேண்டாம். நாளையிலிருந்து வேற ஏற்பாடு பண்ணிக்கலாம்" என்றான் பைந்தமிழ் பாரி.

"இல்லப்பா, ஸ்கூல் பஸ் சொல்லிட்டா இங்கேயே வரும்" என்றாள் அக்கா.

"சரி அப்படித்தான் ஏற்பாடு பண்ணிப்போம்" என்றவன் குழந்தைகளை வெளியே அழைத்து "ஏண்டா, பைக்கிலே உட்கார்ந்துக்குவீங்களா" என்றான்.

"ஓ தாராளமா" என்றான் வெங்கட். அப்ப வெங்கட் நீ முன்னாடி உட்கார்ந்துக்கோ. நீ பின்னாடி உட்கார்ந்துக்கோ" என்று அவர்கள் திட்டம் போட்டுக் கொண்டு போனார்கள்.

குழந்தைகளை பள்ளியிலே விட்டு விட்டுத் திரும்ப தன்னுடைய அலுவலகத்திற்கு நேராகப் போய் சங்க மித்ராவிடம் "மித்ரா, நான் இன்னைக்கு ஆஃபீஸ் வர்றதுக்கு கொஞ்சம் லேட் ஆகும். வீட்ல கெஸ்ட். அக்கா வந்திருக்காங்க" என்று சொல்லிவிட்டு நகர்ந்தான்.

வரும் பொழுதே அவனுக்கு அந்தச் சந்தேகம் வந்தது. எதிர்பார்த்தாற்போலவே அக்கா தொய்வாக சோஃபாவிலே அமர்ந்திருந்தாள்.

"அக்கா, என்ன அக்கா ரொம்ப நாள் ஆச்சுக்கா. வீட்டு இட்லி சாப்பிட்டு. அப்ப உங்க வீட்ல சாப்பிட்டதுதான்" என்று சொல்லிக் கொண்டே சாப்பிடுவதற்கு அமர்ந்தான் பைந்தமிழ் பாரி.

தும்பை பூ போல வெளுப்பாக மிகவும் மென்மையாக இருந்த அந்த இட்லியை தொட்டு விட்டு "சாப்பிடறதுக்கே மனசு வரலைக்கா" என்றான்.

"ஆச்சு போ", என்று சிரித்தாள் சரஸ்வதி. தேங்காய் சட்னியும் சாம்பாரும் அமிர்தமாக இறங்க. "அக்கா குழந்தைங்களுக்கு மத்தியானத்துககு என்னக்கா செஞ்சு கொடுத்தே?" என்றான்.

"காய் சாதம்பா" என்றாள் அக்கா.

"சரிக்கா நமக்கும் அதே போதுமில்லே" என்றான்.

"வேண்டாம் வேண்டாம் நான் வீட்ல இருக்கும் போது ஏன் சிம்பிளா சாப்பிடறது?. நல்ல படியா சமைச்சு வைக்கறேன். மத்தியானம் சாப்பிடறதுக்கு வந்துடு" என்றாள் அக்கா.

"அக்கா, இன்னிக்கு நான் வந்துடறேன். அப்புறம் எல்லாம் ஓர்க்கைப் பொறுத்துத்தான் அக்கா வர முடியும். அதனால நான் வர வரைக்கும் சாப்பிடாம உட்கார்ந்துட்டு இருக்கறது. இந்த வேலையெல்லாம் இருக்கக் கூடாது. நீ பாட்டுக்கு சாப்பிடணும்" என்றான் அவன்.

சரஸ்வதியும் குழந்தைகளும் அந்த வீட்டிற்கு வந்து ஒரு வாரம் ஆகி இருந்தது.

தனியாக அமர்ந்திருக்கும் பொழுது அக்காவின் முகத்தில் கவலை தோன்றுவதை கவனித்தான்.

"சூப்பரா இருக்குக்கா, ஒரு மிளகாய் சட்னி இருந்தா!" என்று சப்புக் கொட்டிக் கொண்டே சாப்பிட்டவன் அக்காவின் முகத்தைப் பார்த்தான்.

"நீயும் சாப்பிடலாமில்லே. உட்காரு" என்றான்.

அவள் அந்தச் சிறிய டைனிங் டேபிளிலே எதிரிலே அமர்ந்தாள்.

"என்னக்கா ஒரே யோசனையாவே இருக்கே?" என்றான்.

"தெரியலை தம்பி. கோபத்துல வந்துட்டேன். நான் செய்யறது சரிதானான்னு தெரியலையே" என்றாள்.

"அக்கா உனக்கே பொறுமை போகணும்னா கொஞ்சம் நிலைமை கைமீறிடுச்சுன்னு தான் அர்த்தம். கொஞ்ச நாள்

பிரிஞ்சிருக்கறது தப்பில்லைக்கா.அக்கா நீயும் யோசிப்பே, மாமாவும் யோசிப்பாரு'' என்றான்.

அவள் வெறுமையாகப் புன்னகைத்தாள். ''அதுக்கு நடுவுல அக்கா, நான் ஒரு ப்ளான் பண்ணியிருக்கேன்'' என்றான் சகோதரன்.

''என்ன தம்பி?'' என்றாள் அக்கா.

''இல்லைக்கா எங்க ஆபீஸ்ல இங்கேயே இந்த அபார்ட்மெண்ட்ல முன்னாடி ஒரு காம்ப்ளக்ஸ் இருக்கு அங்க மாத்தறேன்'' என்றான்.

''உனக்கு எதுக்கு தம்பி சிரமம்?'' என்றாள்.

''இல்லை, இல்லை, நான் முதல்லயே யோசிச்சுட்டு இருந்ததுதான் இப்ப இடம் கிடைக்குது. அதனால, டப்புன்னு பிடிச்சுக்கறது நல்லது. அதனால இந்த அபார்ட்மெண்ட்டுக்கு பக்கத்துல கிரவுண்ட் ஃப்ளோர்ல மாத்தறேன்'' என்றான்.

''அப்படியா தம்பி?'' என்றாள் அக்கா.

''ஆமா, அங்க ஓனாவே வாங்கிக்கலாம்ங்கற மாதிரி ஒரு புரொபோஸல் இருக்கு. அதனால வாங்கிக்கறேன்'' என்றான்.

''சரி தம்பி ,உனக்கு எது பிரியமோ அதை செய்'' என்றாள் அக்கா.

''எனக்குப் பிரியமான இன்னொண்ணையும் நான் சொல்றேன் கேட்கறியா?'' என்றான்.

''சொல்லுப்பா'' என்றாள் அக்கா.

''இந்த அபார்ட்மெண்ட்ல கவனிச்சிருப்பே. ஆபீஸ் வசதியும் இருக்குது. நம்மோட அதிர்ஷ்டமோ என்னவோ இந்த பக்கத்து அப்பார்ட்மெண்ட் விலைக்கு வருது. ஏற்கனவே இருந்தவங்க குடுத்துட்டுப் போறதா ப்ளான் பண்றாங்க. அவங்க ஏதோ ஒரு இன்டிவிஜுவல் ஹவுஸ் வாங்கிட்டாங்களாம். நாம வாங்கிடலாம்னு யோசிக்கிறேன்'' என்றான்.

அவள் தம்பி ஏதோ ஆர்வமாக சொல்வதை ஏதோ தானும் ஆர்வமாக கேட்பது போல் நடித்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தாள்.

''எதுக்குன்னு கேட்க மாட்டியா?'' என்றான்.

''சொல்லு தம்பி'' என்றாள் அக்கா.

''அதில ஒரு ரூம் உனக்கு ஆஃபீஸ்'' என்றான் அவன்.

''எனக்கா?'' என்று சரஸ்வதி ஆச்சரியமாக பார்த்தாள்.

''போதும்கா. இதுவரைக்கும் உன் திறமையெல்லாம் விட்டுக் கொடுத்ததெல்லாம் போதும். நீ அங்கே ஒரு ஆஃபீஸ் போட்டுக்கோ. நீ மறுபடியும் எழுதுக்கா'' என்றான்.

அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள். ''ஆமாக்கா அன் ஐடில் மைண்ட் இஸ் டெவில்ஸ் ஓர்க் ஷாப்ன்னு சொல்லுவாங்க. சும்மா இருக்கற மூளை என்னென்னத்தையோ கற்பனை பண்ணும். பைத்தியமே பிடிச்சிரும்.நீ பாட்டுக்கு உட்கார்ந்து எழுது, உனக்குத் தோணினதை எழுது. கட்டுரை எழுது, கதை எழுது. என்ன வேண்ணா எழுது என்னைக் கேட்டா மறுபடியும் நீ ஸ்பீச் கொடுக்கக் கூட போகலாம். நான் உன் கூட வர்றேன்'' என்றான்.

''அது இப்போதைக்கு வேண்டாம்பா. மாமா பிரிஞ்சு இருக்கும் போது இந்த முடிவை எடுத்தா. எப்படா வெளிய

கிளம்புவோம்னு காத்துட்டு இருந்திருக்கான்னு நினைச் சுக்குவாரு'' என்றாள்.

''அதுவும் கரெக்ட்தான். நீ இதைச் செய். அந்த ரூம்ல ஆஃபீஸ் நீ வழக்கம்போல நாங்களெல்லாம் கிளம்பினதுக்கப் புறம் நீ அந்த ரூமுக்கு போய் ஓர்க் பண்ண ஆரம்பி உனக்கே சேஞ்ச் தெரியும்'' என்றான் சகோதரன்.

சரஸ்வதிக்கும் கூட அந்த ஐடியா பிடித்திருந்தது.

''பத்திரிகைகளில் எழுதறியா? சொல்லு'' என்றான்.

''எனக்கும் கூட ஆசைதான் .ஆனா நாம்பளா எப்படி போய் கேட்கறது?'' என்றாள் சரஸ்வதி.

அவன் அக்காவை புன்னகையுடன் பார்த்தான். ''நீ ஒரு படைப்பாளிக்கா. நீ நினையேன். நீ மனசுல நினைக்கறது உனக்கு நடக்கும். நீ ஏன் கவலைப்படறே?''.

''அப்படியா தம்பி?'' என்றாள் அவள் பெரிய அளவில் சுரத்து இல்லாமல்.

''இன்னும் உனக்கு நம்பிக்கை வரமாட்டேங்குது. என்னக்கா?''.

''ஆமா, தம்பி இதெல்லாம் நடக்குமான்னு இருக்குது?''

''எல்லாம் நடக்கும். ஏன் நடக்காது. இன்னும் பத்து நாள்ல எல்லாம் நடக்கும். ஏன் நடக்காது. அக்கா, நீ திங்க் பண்ணி வைக்கா. உங்கிட்ட உன் மனசுல நீ பார்த்தது கேட்டது உனக்கா தோணினது. எத்தனையோ தீம் இருக்குமில்லையா அதெல்லாம் நீ ஜாட்டவுன் பண்ணி வை. நோட் பண்ணி வை.திங்க் பண்ணு. உன்னை எங்கேஜ் பண்ணிக்கோக்கா. அப்பத்தான் இதுக்கு ஒரு முடிவு வரும். உனக்கு இருக்கற திறமையை விட்டுக் கொடுத்துத்தான் வாழ்க்கை வாழணுமா? இல்லை திறமைகளை வளர்த்துக்

கிட்டே ஒரு வாழ்க்கை வாழணுமா? இப்ப இந்த ரெண்டு கேள்விகள் உன் முன்னாடி நிக்குது. நீ தான் முடிவு பண்ணிக்கணும்.நீ எந்த முடிவு எடுத்தாலும் நான் சப்போர்ட் பண்றேன். ஆனா, அடிப்படையில நீ ஒரு மனுஷி. அதுக்குண்டான ஒரு மதிப்பாவது உனக்கு கிடைக்கணும். அப்படி ஒரு வாழ்க்கையை மட்டும்தான் நீ தேர்ந்தெடுக்கணும். அது மட்டும்தான் என்னோட ஆலோசனை.''

அக்கா புன்னகைத்தாள். ''சரிப்பா, கொஞ்ச நாள் பார்க்கலாம். அவர் என்னதான் செய்யறாருன்னு பார்க்கலாம். அவருகிட்ட ஏதாவது சேஞ்ச் தெரியுதான்னு பார்க்கலாம். ஆனா, பிரிஞ்சு வர்றது பெரிசில்ல பாரி. ரெண்டு குழந்தைங்க இருக்காங்க நிவேதிதா இருக்கா இன்னைக் கெல்லாம் பொண்ணுங்களுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும்னா அப்பா கூட இருக்க வேண்டாமா?'' என்றாள்.

அவன் சிரித்தான் ''அப்படியெல்லாம் இல்லைக்கா. இந்தக் காலத்துல தனியா இருந்து வெற்றி கண்ட பெண்கள் எத்தனையோ பேர் இருக்காங்க. உன்னாலே முடியும். மாமாவும் தான் இருந்து பார்க்கட்டுமே. நீ இல்லாம அவரால இருக்க முடியுதான்னு பார்க்கட்டுமே. டேக்கிங் ஃபர் கிராண்டட்ன்னு சொல்லுவாங்க. அதுமாதிரி உன்னை ஒரு சாதாரண பொருளா நினைக்கிறாரு. இந்த பிரிஞ் சிருக்கிற கால கட்டத்துல தான் அவருக்கும் நீ எவ்வளவு பெரிய இடத்தை இட்டு நிரப்பியிருக்கே. இந்த வீட்டுல எவ்வளவு பெரிய இயக்கம் மாதிரி இருந்திருக் கேன்னு அவருக்கு புரியும்.நீ காலி பண்ணிட்டு வந்திருக் கியே அந்த இடம் வெற்றிடமாகும் போதுதான் அவரு யோசிப்பாரு.

அவரும் புத்திசாலிதான் .ஏன்னா அவரும் ஒரு கதாசிரியர்.யோசிப்பாரு இல்லே?'' என்றான்.

''பார்க்கலாம்பா. எவ்வளவுக் கெவ்வளவு முரட்டுத் தனம் இருக்கோ அவ்வளவுக்கவ்வளவு சிந்தனையும் இருக்கு எங்களுக்கு வேணும்கற வசதியெல்லாம் செஞ்சு தானே கொடுத்துட்டுதானே இருந்தார்'' என்றாள் சரஸ்வதி.

''அப்புறம் ஏன் உன் மனசுல நிறைவு இருக்கலை. எப்படா வெளிய போவாருன்னு நீயும் உன் குழந்தைகளும் எதிர்பார்த்துட்டு இருந்தீங்களா இல்லையா?''.

அவள் முகத்தில் அவமான உணர்வு படிய ''ஆமாம்'' என்பது போல தலையாட்டினாள்.

''அப்ப எங்கே தப்பு. நம்ம போனாப் போதும் என்கிற மாதிரி ஒரு மனுஷன் நடந்துக்கறாருன்னா அப்ப ஏதோ பிரச்சினை இருக்குன்னுதானே அர்த்தம்?'' என்றான்.

''அக்கா, இதெல்லாம் காலம் காலமா வந்திருக்கிற மனப்பான்மை. எல்லா ஆண்களுக்குள்ளேயும் இன்க்ஸுடிங் மை செல்ஃப் பெண் வீட்டுக்கு அடங்கின அடிமையாதான் இருக்கணும் அப்படிங்கற ஒரு எண்ணம் இருக்கு. ஆழ்மனசுல இருக்கு. அதை மாமா வெளிப்படுத்தறாரு. ஏன் வெளிப்படுத்தறாருன்னா உனக்கு பொருளாதார சுதந்திரம் இல்லை. அதனால வெளிப்படுத்தறாரு.உனக்கும் ஒரு பொருளாதார சுதந்திரம் இருக்குன்னு தெரிஞ்சதுன்னா கொஞ்சம் யோசிப்பாரு.''

''சரி தம்பி, நான் அவ்வளவு தூரமெல்லாம் இப்போதைக்கு யோசிக்கலை. கதை எழுத வருது. எழுதறேன். ஏன்னா சும்மா இருந்தா மண்டையைக்

குடைஞ்சு பைத்தியம் பிடிச்சிடும் போல இருக்கு. அதனால எழுதறேன்.''

''ஆகா'' என்று குதித்தான் பைந்தமிழ் பாரி.

''என்னப்பா?'', என்றாள் அவள் புன்னகையுடன்.

''ஒரு கதாசிரியர் உதயமாகிறார்'' என்றான் அவன்.

''ம். இந்தத் தலைப்பு நல்லா இருக்கே''என்று சரஸ்வதி சிரித்தாள்.

அந்த நேரத்தில் ஃபோன் ஒலித்தது.

அவன் செல் போனை காதுக்கு கொடுத்தான். பிறகு அக்காவை பார்த்தான். ''அக்கா வந்துச்சு பாரு ஒரு பெரிய வெடி'' என்றான்.

அவள் ஆச்சரியமாகப் பார்த்தாள்.

அத்தியாயம் - 13

''ஏய், காஃபி கொண்டாடி'' என்று குரல் கொடுத்த படியே புரண்டு படுத்தான் வனமாலி.

இரவு போட்ட சரக்கு இன்னும் அவன் தலைக்குள்ளே தொந்தரவுதான் செய்தது. எழுந்திருக்கவே முடியவில்லை. ஒரு பக்கம் தலையை வலிக்கிற மாதிரி இருந்தது.

''ஏய் சரசு, சரசுவதி'' என்று குரல் கொடுத்தான். எந்த பதிலும் வரவில்லை.

மெல்ல சுயநினைவு வந்தது வானமாலிக்கு. ''ஓ அவதான் இல்லையே. அந்தக் கழுதை போயி ஒருவாரத்துக்கு மேல் ஆச்சே'' என்று திடுக்கிட்டு எழுந்தான்.

மெல்ல எழுந்து வாஷ்பேஸினில் முகத்தை கழுவிக் கொண்டு மெதுவாக வந்து சோபாவில் அமர்ந்தான்.

"ஏம்பா பச்சையப்பா" என்று குரல் கொடுத்தான்.

"வரேனுங்க ஐயா" என்று சமையற் கட்டில் இருந்து குரல் வந்தது.

"கொஞ்சம் காஃபி கொண்டு வர்றியா" என்றான்.

பச்சையப்பன் ஐந்து நிமிடத்தில் காஃபியைக் கொண்டு வந்து கொடுத்தான்.

இந்தக் காஃபியும் சூடாகத்தான் இருந்தது. ஆவி பறக்கத்தான் வந்தது. ஆனால், வாயை வைத்துக் குடிக்கும் பொழுதுதான் வித்தியாசம் தெரிந்தது.

என்ன இருந்தாலும் சரஸ்வதியின் கை பக்குவமும், கை மணமும் வேறுதான் என்று எண்ணிக் கொண்டான்.

இதைச் சொல்வதற்கு ஆனால் யோசித்தான். ஏனென்றால் இந்த ஒரு வாரத்திற்குள்ளாக இந்த ஆள் இரண்டாவது சமையற் காரர். முதலில் ஒரு சமையற் காரரை கூட்டிக் கொண்டு வந்தான் விசுவா.

இளைஞனாக இருந்தான். அவனிடத்திலே முதல் நாளே "என்னய்யா காஃபி போடறே. து. கழுனித்தண்ணியாட்டம் இருக்கு" என்று திட்டி விட்டான்.

அவன் அன்றைக்கே புறப்பட்டுப் போய்விட்டான்.

விசுவா தான் கெஞ்சினான், "ஆள் கிடைக்கிறதே கஷ்டமா இருக்கு சார். இன்னைக்கெல்லாம் வீட்ல வேலை செய்யறதுக்கெல்லாம் யாரும் வர்றது இல்லை சார். கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போங்க சார்" என்றான்.

"என்னய்யா சம்பளத்தைக் கொடுத்துட்டு கெஞ்சிட்டு வேற இருக்கணுமா?" என்றான் வனமாலி.

"பின்னே என்ன சார்? வர்ற சமையற் காரன் என்ன நம்ம அக்காவா? எல்லாத்தையும் பொறுத்துட்டுப் போறதுக்கு?" என்றான் விசுவா சந்தடி சாக்கிலே.

வனமாலி முறைத்தான்.

"என்ன சார் முறைக்கறீங்க? அவங்கன்னா உங்க கோபத்துக்கு ஈடு கொடுப்பாங்க. கட்டின பொண்டாட்டிக்கு தெரியும். வெளியில உங்களுக்கு டென்ஷன் இருக்குன்னு. வர்றவங்களுக்கு என்ன சார் தேவை" என்றான் விஷ்வா.

அது உண்மையாகவும்தானே இருந்தது. அதனால் வனமாலி "ஆமாய்யா, சான்ஸ் கிடைச்சா எல்லாரும் அறிவுரை சொல்ல ஆரம்பிச்சுடுவீங்க" என்று முணு முணுத்தான்.

"ஐய்யய்யோ, நான் யாரு சார் உங்களுக்கு அறிவுரை சொல்ல? நீங்க பெரிய கதாசிரியர் உங்களுக்கு தெரியாததா? இருந்தாலும் வீட்டு விவகாரங்களிலே நாம கொஞ்சம் அட்ஜெஸ்ட் பண்ணிட்டுதான் போகணும். இல்லைன்னா இவங்க நிக்க மாட்டாங்க." சரி ஹோட்டல்லயாவது வாங்கிட்டுவா. அன்றைக்கெல்லாம் ஓட்டலில் இருந்து உணவு வந்தது.

ஒரு நாள் ஓட்டல் உணவு ருசிகரமாகத் தெரிந்தது. மூன்றாவது நாள் எப்பொழுதடா வீட்டுச் சாப்பாடு சாப்பிடுவோம் என்று தோன்றிவிட்டது.

கெஸ்ட் ஹவுஸில் இருந்த காலத்திலும் கூட சமையல் காரர் வீட்டிலே சமைத்துக் கொடுத்ததால் அவனுக்குப் பெரிதாக வித்தியாசம் தெரியவில்லை.

இப்பொழுது சரஸ்வதியின் கைச் சாப்பாட்டுக்கு மனது ஏங்கியது. ஆனால் கௌரவம் அதை வாய்விட்டுச் சொல்லத் தடுத்தது.

விசுவாவிடம் கிட்டத்தட்ட கெஞ்சாத குறையாக "யோவ், விசுவா இந்தச் சோத்தை திங்க முடியலைடா? ஏதாவது ஒரு சமையல் காரனைப் பாரு" என்றான்.

"சரிங்க சார், நீங்க சொல்றதுக்கு முன்னாடியே நான் ஒரு ஆளைக் கேட்டு வச்சிருக்கேன். ஒரு நாற்பது வயசுக்காரரா இருக்காரு. குடும்பம் இருக்கு.பக்கத்துல தான் இருக்காரு அதனால நைட்டு வீட்டுக்குப் போயிட்டு வந்துடறேங் கறாரு" என்றான்.

"சரி, இப்போதைக்கு எதாவது ஒண்ணு பண்ணுவோம். என்ன சம்பளம் கேட்கறாரு?" என்றான்.

விசுவா சொன்னான். "அவ்வளவு கேட்கறானா. அந்த அமௌண்டுக்குளே மொத்த செலவையும் முடிச்சுடுவாளே சரசு."

"அதான் சொன்னேனே சார், சரஸ்வதி அக்கா வீட்டுப் பொம்பளை. குடும்பத் தலைவி. அவங்க கணக்கு வேற." என்றான்.

"சரி சரி என்ன பண்றது? அவ வீம்பு புடிச்சுட்டு போயிட்டாளே"

"ஆனா நீங்க சமாதானம் பண்ணலாமில்லே." என்று கேட்க வாயெடுத்த விசுவா. "வேண்டாம். இது அதற்கான சமயம் இல்லை. எப்பொழுதுதான் சரஸ்வதி வருவாள் என்ற ஏக்கம் வரும்பொழுது மெதுவாக அக்காவைப் பற்றி பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

அப்படி அழைத்துக் கொண்டு வந்தவன் தான் இந்த பச்சையப்பன். இரண்டு நாட்களாக சமையல் செய்கிறார். இருந்தாலும் அந்தச் சுவை வரவில்லை.

வேறு வழி இருக்க வில்லை. ஏதோ வீட்டுச் சாப்பாடு என்று எண்ணிக் கொண்டான் வனமாலி.

எப்பொழுதுதான் விசுவா வருவான் என்று காத்துக் கொண்டிருந்தான். விசுவா ஒன்பதரை மணிக்கு வந்து சேர்ந்தான்.

விசுவாவின் வழக்கமான அலுவலக நேரம் 9.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரைக்கும். இடையிலே உணவுக்கு சற்று நேரம் ஒதுக்கி விடுவார்கள்.என்றாலும் விஷ்வா நேரம் காலம் பார்ப்பதில்லை. ஏனென்றால் அவன் நேரம் காலம் பார்க்காமல் செய்கின்ற வேலைக்கு வனமாலியும் சற்று அதிகமாகவே கவனித்து விடுவான்.

அதனால் அவனுக்கும் அது பெரிய சலிப்பாக இருக்க வில்லை. இப்பொழுதெல்லாம் கொஞ்சம் அவனுக்குமே சலிப்பு ஏற்பட்டது.

அக்கா இருந்தால் நேரத்திற்கு உணவு கொடுத்து விடுவாள். காபி, டீ என்று கவனிப்பு பலமாக இருக்கும்.

"இந்த காட்டு மனுஷன் பூ மாதிரி இருந்த அக்கா அவங்களைப் போட்டு கஷ்டப்படுத்தி என்று நொந்து கொண்டான் விசுவா. ஆனால், குடும்ப விவகாரங்களில் நுழைய முடியாதல்லவா? ஒரு எல்லை வைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டவனாக "சார் குட் மார்னிங்" என்று வந்தான்.

"வந்துட்டியா வா, வா, வா வேலை ஆரம்பிச்சுடலாம்" என்று கதை உலகில் புகுந்தான் வனமாலி. கதையிலும் கூட இப்பொழுது ஆர்வம் குறைந்து கொண்டு வந்தது.

"என்ன கதை எழுதி" என்று ஒரு நேரம் புலம்பக் கூட ஆரம்பித்து விட்டான்.

"சார், அந்தப் படக் கம்பெனியில ஒரு கதை கேட்டிருக்காங்க" என்று கவனத்தை திசை திருப்பினான் விசுவா.

வனமாலியும் சிந்தனையில் ஆழ்ந்தான்.

அதே நேரம் தன்னுடைய அலுவலகத்திலேயே கவலை தோய்ந்த முகத்துடன் அமர்ந்திருந்தான் பாரி. சங்கமித்ரா "சார், அந்த சக்தி அப்பார்ட் மெண்ட்ல ஒரு பாட்டி" என்று சொல்லிக் கொண்டே வந்தவள் அவன் முக வாட்டத்தைக் கவனித்து விட்டு எதிரிலே அமர்ந்தாள். "எனி திங் ராங் சார்" என்றாள்.

அவன் லேசாக ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு "நத்திங் நத்திங்"என்றான்.

"இல்லை சார் எப்பவும் இருக்கற உற்சாகம் இப்ப உங்ககிட்ட இல்லை. கொஞ்சம் மனசு வாடினாப்பில இருக்கீங்களோ" என்றாள்.

"ஆமாம், ஒரு சின்ன ப்ராப்ளம்" என்றான் பாரி.

"ஷேர் பண்ணலாம்னா சொல்லுங்க சார்" என்றாள்.

"இல்லை. அக்கா இப்ப வீட்டுக்கு வந்திருக்காங்க" என்றான்.

"நல்ல விஷயம் தானே?" என்றாள்.

"நல்ல விஷயம் தான்." ஆனால், அவங்க என்று இழுக்க, "பரவாயில்லை சார் சொல்ல விருப்பப்படலைன்னா விட்டுடுங்க" என்றாள்.

"இல்லை. இல்லை. எனக்கும் கொஞ்சம் டிஸ்கஸ் பண்ணினாத்தான் மனசு தெளிவாகும்" என்று அவளிடத் திலே சொன்னான்.

இதுவரை நடந்ததை எல்லாம் சுருக்கமாகச் சொன்னான். சங்கமித்ரா அந்தக் கதை சொல்லப்பட்ட நேரம் முழுவதும் அவனோடு பயணித்தது போல முகபாவங்களைக் காட்டிக் கொண்டு எதிரிலே அமர்ந்திருந்தாள். குறுக்கிடவே இல்லை.

சொல்லி முடித்ததற்குப் பிறகு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டுச் சொன்னாள்.

"சார். நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. உங்க சிஸ்டரோட முடிவுதான் சரி" என்றாள்.

"ஆமாம்" என்பது போலத் தீவிரமாக தலையாட்டிக் கொண்டு பாரி சொன்னான். "அது நிஜம்தான் மித்ரா, ஆனால் முடிவு எடுத்துட்ட பிறகும் அவங்க நிம்மதியா இல்லை. அவங்க என்ன நினைக்கறாங்கன்னா நாளைக்கு பெரியவளுக்கு கல்யாணம் பண்ணனும். சட்டுன்னு அப்படியெல்லாம் பிரிஞ்சு முடியாது அப்படிங்கறாங்க." என்றான்.

"அதுவும் கரெக்ட் சார்" என்றாள் அவள்.

அவன் சிரித்து விட்டான். "இது என்னப்பா இப்படியும் சொல்றே, அப்படியும் சொல்றே" என்றான்.

"ஏன் சார் பிரிஞ்சு வந்திருக்காங்க. அதனால சுத்தமா பிரிஞ்சே இருந்திடுவாங்கன்னு முடிவா? சரி இந்தப் பிரிவு

ரெண்டு பேருக்குமே பாடங்களைக் கத்துக் கொடுக்கலாம் இல்லையா?''

''எனக்கு என்னமோ அக்கா பக்கத்துல பெரிய தவறுகள் இல்லைன்னு தோணுது'' என்றான்.

''யார் சொன்னா?'' என்றாள் சங்கமித்ரா.

அவன் திடுக்கிட்டுப் போய் அவளைப் பார்த்தான். ''நீ என்ன சொல்றே?'' என்றான்.

''நல்லா யோசிச்சுப் பாருங்க சார். அக்கா ஆரம்பத்தில் இருந்தே தன்னை அப்படியெல்லாம் மிரட்ட முடியாதுங் கறதை நிலைநாட்டி இருக்கணுமா வேண்டாமா?'' என்று கேட்டாள்.

''கிராமத்தில் இருந்து வந்தவங்க. அவரு இப்படி யெல்லாம் மாறுவாருன்னு எதிர்பார்த்திருக்க மாட்டாங் கள்ளே.''

''இல்லை சார், இதை மட்டும் நீங்க சொல்லாதீங்க.ஊசி இடங் கொடுத்தாதான் நூல் நுழையும் இவங்க அந்த டிக்னிட்டியோட நின்றிருந்தாங்கன்னா அவரு கொஞ்சம் யோசிச்சிருப்பாரோ?'' என்றாள்.

''இல்லை, இல்லை அக்கா, ரொம்ப பொறுமையான வங்க டிக்னிஃபைட். நீ பார்த்தா தெரியும் உனக்கு. ரொம்ப டிக்னிஃபைட்'' என்றான்.

''இருந்தாலும், குடும்பத்துக்காக அப்படின்னு நினைச் சுட்டு பணிஞ்சு போயிட்டாங்க. அவங்களுக்கு இன்னொரு நினைப்பு என்னன்னா எல்லாத்தையும் சம்பாதிச்சு நமக்காகத்தானே செய்றாரு. அவரோட கோப தாபத்தைத் தாங்கிக்கக் கூடாதா? அப்படின்னு விட்டுக் கொடுத்து கொடுத்து பழக்கிட்டாங்க'' என்றாள்.

''தட்ஸ் த பாயிண்ட். நான் அதைத்தான் சொல்றேன்'' என்றாள் மித்ரா.

''ஓ! நீ சொல்றதும் சரியோ?'' என்றான்.

''இப்பொழுது பிரேக்கிங் பாயிண்ட். அவங்களுக்குமே தாங்கற சக்தி இல்லாத அளவுக்கு வந்துடுச்சு. அப்ப கொஞ்ச நாள் பிரிஞ்சு இருக்கறது தான் நல்லது. இந்த பிரிவு ரெண்டு பேருக்குமே கொஞ்சம் பாடங்களைக் கொடுக்கும்.அது மட்டும் இல்லை ஒருத்தங்களோட தேவை இன்னொருத் தங்களுக்கு எவ்வளவு இருக்குங்கறதையும் புரிய வச்சிடும்'' என்றாள்.

''ஆமாங்க பாட்டி'' என்றான் பைந்தமிழ் பாரி.

சங்க மித்ரா கலகலவென்று சிரித்தாள். ''ரொம்ப பேசறனோ'' என்றாள்.

''இதை வேற கேட்டுத் தெரிஞ்சுக்கணுமாக்கும்'' என்றான் பைந்தமிழ் பாரி. அதற்கும் அவள் சிரித்தாள்.

''இல்லை, என் மனசுல பட்டதைச் சொன்னேன். போன தலைமுறைக்கும் இந்த தலைமுறைக்கும் மாற்றங்கள் இருக்குது. போன தலைமுறை அடங்கிப் போனாங்க. இப்ப இந்த தலை முறை அடங்கறதும் இல்லை. அடக்கறதும் இல்லை. அப்படி போயிட்டிருக்காங்க. ஒரு பேலன்ஸ் பண்றாங்க'' என்றாள்.

''அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை. நிறைய டிவோர்ஸ் கேஸ் வருது'' என்றான் பாரி.

''அதுதான் இப்ப டிரான்சிஷன் பீரியட். தவறு இருக்கு. ஆனா நீங்க சொன்ன மாதிரி இந்தக் காலத்தில் இருந்து அக்கா தன்னை எழுத்தாளரா ஸ்தாபிச்சுக்கலாம். ஒவ்வொரு விதத்துலயும் படைப்பாளியா சாதிச்சுக்கலாம். சாதிச்

சுட்டாங்கன்னா அதுக்கப்புறம் ஒருவேளை உங்க மாமாவுக்கு ஒரு மரியாதை, பயமெல்லாம் வருமோ.''

''அதான் நான் நினைக்கிறேன். அப்படித் தான் அக்காவுக்கு ஆஃபீஸ் செட் பண்ணலாம்னு இருக்கேன். நெக்ஸ்ட் வீக்ல திறப்பு விழா. நம்ம அளவுக்கு, நம்ம ஆட்கள், நீங்க எல்லாம் வந்துடணும்'' என்றான்.

''கண்டிப்பா, அப்பதான் வரணுமா? அதுக்கு முன்னாலே வரக் கூடாதா?'' என்று கேட்டாள் சங்கமித்ரா.

''ஏய், யு ஆர் ஆல்வேஸ் வெல்கம். நான் கூட நினைச்சேன். நீ கூட வந்துட்டு போயிட்டு இருந்தா அக்காவுக்கு கொஞ்சம் கம்பெனி கொடுத்தமாதிரி இருக்குமே'' என்றான்.

''அப்பாடா''

''அழுத்திச் சொல்லாதே. அப்பளம் மாதிரி ஒடைஞ்சுடப் போகுது'' என்றான்.

''இது ஏதோ பழைய நாடகத்து ஜோக்'' என்று சிரித்தவள்.

''நான் வரேன். இன்னைக்கே வரேன்'' என்றாள்.

''அப்படியா, சரி நான் போய் அக்காகிட்ட சொல்லி வக்கட்டுமா'' என்றான்.

''சர்ப்ரைஸா வரேன்'' என்றாள்.

இரண்டு பேருக்கும் அப்படித் திட்டமிடுவது சுவாரசியமாக இருந்தது. ''சரி நான் இப்பப் போய் அக்காகிட்ட சொல்லி நீ வரதுக்கான முன்னேற்பாடெல்லாம் செஞ்சு வைக்கிறேன்'' என்றான்.

''நான் வர்றதுக்கு என்ன முன்னேற்பாடு?'' என்றாள் அவள்.

''இல்லை. இல்லை வரப்போறது பெரிய சாப்பாட்டுப் பிரியை. அவளுக்குப் பிடிச்ச மாதிரி ஏதாவது பக்கோடா அந்த மாதிரி ஏதாவது செஞ்சு வைக்கான்னு சொல்வனு மில்லே'' என்றான்.

அவள் முறைத்தாள்.

''நான் வர்றதை சொல்ல மாட்டேன்னு சொன்னீங்க?'' என்றாள்.

''நீ வர்றதா சொல்ல மாட்டேன். எனக்காக செய்ங்கன்னு சொல்லுவேன்'' என்றான். அப்படி விளையாட்டாகப் பேசிக்கொண்டே திட்டமிட்டுக் கொண்டார்கள்.

எப்படியோ இரண்டு முக்கிய முடிவுகள் எடுத்தாகி விட்டது என்று எண்ணிக் கொண்டான் பைந்தமிழ் பாரி.

சங்கமித்ரா தன்னுடைய இடத்திற்கு எழுந்து போவதை பார்த்துக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தான்.

அக்காவின் படைப்புத் திறன் வெளியே வருவதற்கான காலம் தோன்றி விட்டது என்பது அவனுக்கு ஆறுதலாக இருந்தது. அதே நேரத்தில் ஃபோன் ஒலித்தது.

அந்தப் பக்கம் சரஸ்வதி உற்சாகமாகப் பேசினாள்.

அத்தியாயம் -14

''அக்கா கலக்கிட்டக்கா'' என்று குதித்துக் கொண்டிருந்தான் பைந்தமிழ் பாரி.

சங்கமித்ரா இதைப் பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

சரஸ்வதி வெட்கத்துடன் புன்னகைத்தாள். ''நான் நினைக்கவே இல்லப்பா அவ்வளவு பெரிய பத்திரிகை

ஆசிரியர் அவர் கூப்பிட்டு பேசுவார்னு நான் நினைக்கவே இல்லை'' என்றாள்.

''ஆமாக்கா, அவங்கல்லாம் கூப்பிட்டுப் பேசறதுன்னா பெரிய வரம். இன்னொரு முக்கியமான விஷயம் என்னன்னா அந்த அளவுக்கு நீ டேலண்டட். அதனாலதான் கூப்பிட்டுப் பேசறாங்க.''

''போப்பா. என்ன பெரிய டேலண்ட் ஏதோ ஒரு கதை எழுதினேன். அது ....எப்பப் பாரு உங்க அத்தான் கதை சொல்லிட்டே இருப்பாரு.

அப்படி இருக்கும் போது எனக்கு ஒரு நாட் தோணுச்சு. அதை வச்சுட்டு எழுதினேன்'' என்றாள்.

அவளுடைய தன்னடக்கமான பேச்சைக் கேட்டு வாஞ்சையாகப் புன்னகைத்தான் பைந்தமிழ் பாரி.

அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருந்தது. வீட்டில் அக்காவிடம் இருந்து போன் வந்தது. அக்கா ரொம்ப உற்சாகமாகப் பேசவும் பைந்தமிழ் பாரி ஏதோ முக்கியமான விஷயம் நடந்திருக்கிறது என்று புரிந்து கொண்டான்.

''அக்கா என்ன விஷயம்?'' என்றான்.

''இல்லை தம்பி. நம்ம அந்த பத்திரிகை ஆசிரியர் பேசினாரு'' என்று அவள் அந்தப் பிரபல பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டாள்.

''அக்கா, என்ன சொல்றே? நெஜமாவா?'' என்று அவன் ஆச்சரியமானான்.

''ஆமாம், தம்பி பேசினாரு. அவர் ஒரு முக்கியமான விஷயம் சொன்னாரு. இப்ப நீ ஃப்ரீயா இருக்கியா? வர முடியுமா?'' என்று கேட்டாள்.

''அக்கா, என்ன ஃப்ரீயா இருக்கறது?. உனக்குன்னா ஃப்ரீ ஆயிக்குவேன்கா. இப்ப வந்துடறேன்'' என்று அவன் கிளம்பினான்.

கிளம்புகிற போது சங்கமித்ராவிடம். ''சங்கமித்ரா நீங்க கொஞ்ச நேரம் கழிச்சு வாங்க'' என்று சஸ்பென்ஸ் போல சொல்லி விட்டு கிளம்பினான்.

''என்னது நானும் தெரிஞ்சுக்கலாமா? சிஸ்டரும் பிரதரும் ரொம்ப உற்சாகமாக பேசிக்கிட்டீங்க?'' என்று விசாரித்தாள் சங்கமித்ரா.

''அப்படி விஷயங்க அது. அது ஆக்சுவலா குதிக்க வேண்டிய விஷயம் அவ்வளவு சந்தோஷமான விஷயம் இருங்க. நான் நேர்ல அக்காட்ட பேசிட்டு அப்புறமா உங்ககிட்ட சொல்றேன்'' என்றான்.

உடனே சங்கமித்ரா ''ரொம்ப முக்கியமான விஷயம் பேசுவீங்க போல இருக்கு. அப்ப நான் எப்படி வர்றது?'' என்று இழுத்தாள்.

''ஹலோ, ஹலோ, இது வேற. அது வேற. அதுவும் சந்தோஷம்தான் நீங்க எங்க வீட்டுக்கு வந்தா இதுவும் சந்தோஷம்தான். உடனே கிளம்பி வரவேண்டாம். கொஞ்சம் கழிச்சு வாங்க. ஒரு ஒண் அவர் டிஃபரன்ஸ்ல வாங்களேன்.''

''ஓ.கே. கண்டிப்பா வரேன்'' என்று சொல்லி விட்டு அலுவலகத்தில் இருந்தாள் சங்கமித்ரா.

மிக உற்சாகமாககிளம்பினான் பைந்தமிழ் பாரி.

அலுவலகத்தில் பணியாற்றுகின்ற பையன்கள் எல்லாம் வந்தார்கள். ''அண்ணே என்ன ரொம்ப உற்சாகமாக இருக்கீங்க?'' என்றான் சுந்தர்.

"டேய் நான் வந்து சொல்றேன்டா. இல்லைன்னா நாளைக்கு சொல்றேன். பெரிய விஷயம் நடக்குதுடா" என்று கூறிவிட்டு அவர்கள் மேலும் கேள்விகள் கேட்பதற்கு இடங்கொடாதவன் போல சர்ரென்று நகர்ந்து விட்டான் பைந்தமிழ் பாரி.

பைக்கை எடுத்துக் கொண்டு நேராக வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

அக்கா தனி வீடாக இருந்தால் வாசலிலே நின்று கொண்டிருப்பாளோ என்னமோ அப்பார்ட்மெண்டாக இருப்பதால் பால்கனி பக்கமாக நின்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் அந்த வாயிலில் நுழைவதைப் பார்த்தவுடனே கை ஆட்டினாள். அக்காவின் இந்த உற்சாகம் பைந்தமிழ் பாரிக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அவனும் அங்கிருந்து கை ஆட்டி விட்டு வந்தான்.

லிஃப்டில் ஏறி அவர்களுடைய அப்பார்ட்மெண்ட்டுக்கு வந்தான். சாதாரணமாக படிகளில் தான் வருவான். ஆனால், அக்காவின் உற்சாகம் அவனை அப்படி இழுத்தது. லிப்ட்டில் ஏறி வந்தான்.

"அக்கா என்னக்கா இது?" என்றான்,

"ஆமாம்பா பெரியவர் பேசினாரு" என்றாள்.

அவர்கள் இருவரும் அந்த பத்திரிகையினுடைய ஆசிரியரை பெரியவர் என்று தான் குறிப்பிட்டுக் கொள்ளுவார்கள். "நீ அந்த பத்திரிக்கையில பரிசு வாங்கின ஆள்தானேக்கா. அதனால இருக்கும்" என்றான்.

"இல்லப்பா, வேறொரு விஷயம் சொன்னாரு அவர்"

"அப்படியா சொல்லு! சொல்லு!" என்று அவன் சோஃபாவில் அமர்ந்தான்.

எதிரிலே இருந்த அக்கா முன்புறமாக சாய்ந்து அமர்ந்து "என்ன தெரியுமா? நான் ஒரு தொடர்கதை எழுதணுமாம். அந்த பத்திரிகையிலே" என்றாள்.

கண்கள் விரிய அக்காவை மகிழ்ச்சியாகப் பார்த்தான் பைந்தமிழ் பாரி. "அக்கா! என்ன சொல்றே?" என்றான்.

"ஆமா தம்பி தொடர்கதை எழுதணுமாம்? அவரே பேசினாருப்பா. ஆசிரியரே பேசினாரு. எனக்கு ரொம்ப சந்தோஷமா போச்சுன்னா பார்த்துக்கயேன்" என்றாள்.

"நீ என்ன சொன்னே?" என்றான்.

"நான் தம்பிகிட்ட பேசிட்டுச் சொல்றேன் அப்படின்னு சொன்னேன்" என்றாள்.

"அய்யோ, அக்கா என்னக்கா நீ ?"என்று அவன் தலையிலே கையை வைத்துக் கொண்டான்.

"இல்லை தம்பி எனக்கு இதைப்பத்தியெல்லாம் எனக்கு எதுவும் தெரியாது. எக்குத்தப்பா எதுவும் சொல்லி வச்சேன்னு வையேன் வம்பாப் போயிடும். அதுக்குத்தான் யோசிச்சேன்" என்றாள் சரஸ்வதி.

"அவரெல்லாம் கூப்பிட்டுக் கேட்டா ததிகினத்தோம் போட்டுட்டு கொடுக்கறதுக்கு பெரிய பெரிய கதாசிரியர்களே காத்துக்கிட்டு இருக்காங்க. நீ என்ன அக்கா நீ?" என்றான் அவன்.

"இல்லை நான் இப்படித்தான் சொல்லியிருக்கேன் எனக்கு அவ்வளவா விவரம் தெரியாது. தம்பிக்கிட்ட பேசிட்டு கூப்பிடறேன். அப்படின்னு சொல்லியிருக்கேன்."

"நீ மொதல்ல கூப்பிடு. கூப்பிடு." என்றான்.

"இரு தம்பி கதையெல்லாம் யோசிக்க வேண்டாமா?"

"அக்கா நீ எத்தனை நாட் குறிச்சு வச்சிருக்கிறே அதில எதாவது ஒண்ணை டிஸ்கஸ் பண்ணிக்கலாம். நாம பேசிக்கலாம்" என்றான்.

"சரிப்பா" என்று அவள் ஆசிரியருடைய செல் நம்பருக்கு போன் செய்தாள்.

அந்தப் பக்கம் இருந்து "சொல்லும்மா" என்றார் ஆசிரியர் அழுத்தமான ஆனால் ஆதரவான குரலில்.

"சார், வணக்கம் சார்," என்று அவள் இந்தப் பக்கம் தடுமாறினாள்.

"சொல்லும்மா சொல்லு" என்றார்.

"இல்லை சார், தொடர் கதை கொடுக்கறேன் சார்" என்றாள்.

அவர் கலகலவென்று சிரித்தார் "இத பார்றா. பெரிய பெரிய எழுத்தாளர்கள் எல்லாம் எனக்குப் போன் பண்ணி கேட்டுட்டிருக்காங்க. நான் உனக்குப் ஃபோன் பண்ணி கேட்டேன்" என்றார்.

"இல்லை சார். உண்மையாவே அது பெரிய ஹானர் அப்படின்னு புரியுது. நான் ஃபீல்டுக்கு புதுசு. நான் அந்த ஒரே ஒரு கதை தான் எழுதினேன். அதுவும் ஏதோ எதிர் பாராத விதமா நடந்துச்சு. அதுக்கப்புறம் தொடர்ந்து எழுதறதைப்பத்தியெல்லாம் நான் யோசிக்கலை. அதனால தான் நீங்க கேட்டவுடனே அதிர்ச்சியா போச்சு" என்றாள்.

"அதிர்ச்சியா?" என்று அவர் சிரித்தார்.

"அப்படின்னா சந்தோஷ அதிர்ச்சி" என்று சமாளித்தாள்

"சரி. இரண்டு நாள் டைம் தரேன். ஒரு நல்ல கதையா முடிவு பண்ணிக்கிட்டு! ஒரு நல்ல தலைப்பா தேர்ந்தெடுத்து எனக்கு சொல்லுங்க. ஆனால் நீங்க எழுதறீங்க. அது முடிவாயிடுச்சு" என்றார்.

"சார் தம்பி பேசறானாம்."

"பைந்தமிழ் பாரியா விவகாரமான ஆளாச்சே .சரி சரி குடும்மா" என்றார்.

"சார் வணக்கம்., நான் ரொம்ப நாளா உங்களை வந்து பார்க்கணும்னு நினைச்சுட்டு இருந்தேன்" என்று தயக்கத்துடன் பேசினான்.

"அதான் ஏற்கனவே ஒரு தடவை வந்து பார்த்தியே. அதுக்கப்புறம் உன்னை வரச்சொன்னேன். நீ ஆளே வரலை" என்றவர் தொடர்ந்து "உள்ளே வந்துரேன் பத்திரிகைக்கு."

"மன்னிக்கணும் நான் ஃப்ரீலான்ஸரவே இருந்துக் கறேன்"

"ஆமா, ஆமா, நீ உள்ளே வந்தீன்னா நீ நடத்தற கன்சர் னெல்லாம் நடத்த முடியாம போயிடும். பரவாயில்லை, பரவாயில்லை, ஆனா பத்திரிகைக்கு மேஜரா எதாவது பண்ணுப்பா. உன்னோட ரைட்டிங்கும் நல்லாதான் இருக்கு" என்றார் அவர்.

"ரொம்ப நன்றி சார்" என்றான்.

"எதுக்கு?" என்றார் அவர்.

"இல்லை, உங்க மாதிரி பெரியவங்க வாயில நல்லா இருக்குன்னு வர்றதே பெரிய விஷயம்"

"என்னப்பா வம்பாப் போச்சு. நல்லா இருந்தா நல்லா இருக்குன்னு தானே சொல்லணும். பரவாயில்லை சிஸ்டரும் நல்லா பொளந்து கட்டறாப்பல. கதை அமைப்பு இயற்கையா வருதுப்பா அந்தப் பொண்ணுக்கு. வளர்த்து விட்டுடுவோம். எழுதச் சொல்லு" என்றார்.

"ரொம்ப நன்றி சார்" என்றான்.

"ஒண்ணு பண்ணுங்களேன். நாளைக்கு விட்டு நாளண்ணைக்கு ரெண்டு பேரும் வந்து என்னை ஆஃபீஸ்ல பாருங்களேன்" என்றார்.

"ரொம்ப சந்தோஷம் சார். வாய்ப்புக்கு ரொம்ப நன்றிங்க சார்" என்று அவன் திரும்பத் திரும்ப நெகிழ்ந்து பேசிவிட்டு ஃபோனை வைத்தான்.

அந்தப் பக்கம் அவர் சிரித்துக் கொண்டார். "பபல் எப்படி நாடகம் ஆடுகிறான்" என்று சிரித்துக் கொண்டார்.

இந்தப் பக்கம் சரஸ்வதி மகிழ்ச்சியாக தம்பியைப் பார்த்தாள். "ரொம்ப தாங்க்ஸ் தம்பி" என்றாள்.

"அக்கா, எனக்கு எதுக்கு தாங்க்ஸ் சொல்றே. உனக்கும் உன்னோட திறமைக்கும் வாய்ப்பு வந்திருக்கு" என்றான் அவன்.

"அதுக்கு இல்லை தம்பி. இந்த டைம்ல நான் இங்க இருக்கேன். அது ஒரு நல்ல விஷயமா போச்சு. ரெண்டாவது அவரு கேட்டவுடனே என்ன பதில் சொல்றதுன்னு தெரியாம பெப்பேன்னு முழிச்சிருப்பேன். நீ கூட இருக்கவும் டக்குன்னு கைட் பண்ணினே பாத்தியா? அதுக்கு தாங்க்ஸ் சொல்றேன்" என்றாள்.

"அக்கா, நான் சொல்றதைக கேளு. அதுக்கு காலம் வரும்பொழுது நடக்கும். அந்த நேரத்துக்கு கைட்

பண்றதுக்கு கண்டிப்பா யாராவது உனக்கு வருவாங்க. அது மாதிரி இந்த நேரத்துக்கு கைட் பண்றதுக்கு நான் இருக்கேன். அவ்வளவுதான்" என்றான்.

"உங்கிட்ட எனக்குப் புடிச்ச விஷயமே இதுதான் தம்பி" என்றாள் அக்கா.

"எது?" என்றான் தம்பி.

"இல்லை, எல்லாத்துக்குமே இப்படி பாஸிட்டிவா நீ சொல்லுவே. அது உங்கிட்ட எனக்கு ரொம்ப பிடிச்ச விஷயம்" என்றாள்.

"எல்லாம் உங்கிட்ட இருந்து கத்துக்கிட்டதுதான் அக்கா. எவ்வளவு பொறுமையா அந்த மச்சான் கிட்டே நீ காலம் போட்டே. அதைப் பார்த்துத்தான்னு நினைச்சுக்கயேன்" என்றான் அவன்.

அவள் பெருமூச்சு விட்டாள்.

"என்ன பண்ணி என்னப்பா ஆச்சு?. இப்பப் பாரேன். அதுக்கு ஒரு நல்ல அப்ரிசியேஷன் கிடைக்கலையே?" என்றாள்.

"அக்கா, உண்மையிலே இதுதான் அப்ரிஸியேஷன். உன்னுடைய திறமையை சகிச்சுக்க முடியலைன்னா அந்த அளவுக்கு நீ டாப்பா பண்ணியிருக்கேன்னு அர்த்தம். ஆரம்ப கட்ட அதிர்ச்சி முடியட்டும். அக்கா அவரே ஏத்துப்பாரு" என்றான் பைந்தமிழ் பாரி.

"அப்படியா சொல்றே?" என்று ஆர்வமானாள் அக்கா.

அக்காவை அவன் மறுபடியும் வாஞ்சையாகப் பார்த்தான். "எவ்வளவு பட்டுட்டக்கா? இருந்தாலும் சேரணும்னு தானே நீ நினைக்கிறே?" என்றான்.

"தம்பி, நீயே சொல்லு. அவருகிட்ட சில குணக்கேடுகள் இருக்கு. அதுககாக ஒரேயடியா ஒதுக்கிட முடியுமா? அதெல்லாம் கூட சமீபத்துல வந்தது தான். புகழும் பணமும் வந்ததுக்கு அப்புறம். திறமைசாலிகளுக்கே ஒரு கர்வம் இருக்கும்ன்னு சொல்லுவாங்கப்பா. பார்க்கலாம். இந்த காலகட்டத்துல எப்படி யோசிப்பாரு. ஏதோ ஒரு முடிவு கிடைக்குமில்லே?" என்றாள்.

"நீ வேறேக்கா. முடிவு எப்படிப் போகுமோன்னு எனக்குத் தோணுது. தொடர் கதை வேற எழுதப் போறே இனி எப்படி ரியாக்ஷன் வருமோ?" என்றான் பாரி.

"வரட்டும்பா. என்ன வந்தாலும் பார்க்கலாம். நான் முடிவு பண்ணிட்டேன். குடும்பத்துக்காக நான் உழைக்கத் தயார். குடும்பத்துக்காக எல்லாம் செய்யறேன். ஆனால், எனக்குன்னு நான் ரெண்டு மணி நேரம் எடுத்துக்க கூடாதா? அந்த நேரத்துல என் திறமையை நான் ஏதாவது யூஸ் பண்ணிக்கக் கூடாதா? அதுக்கு அவர் பர்மிட் பண்ணத்தான் வேணும்" என்றாள்.

மறுபடியும் "பர்மிட்ங்கறியே அக்கா" என்றான் அவன்.

"இல்லப்பா ஆரம்ப கட்டத்துல அப்படியாவது நுழைவோம்" என்றாள்.

"யோசிப்போம் அக்கா." என்று சொல்லி விட்டான் பைந்தமிழ் பாரி. "நீ இப்போதைக்கு மச்சானைப் பத்தி யெல்லாம் நினைக்காதே. கதையைப் பத்தி மட்டும் நினை. நீ அந்த மூணு நாட் குறிச்சு வச்சிருந்தயே. அதுல அந்த ஃபர்ஸ்ட் நாட் ரொம்ப நல்லா இருந்தது. அதை டெவலப் பண்ண முடியுமான்னு பாரு.இன்னும் ரெண்டு நாளைக்கு அதைப் பத்தியே திங்க் பண்ணுக்கா. ஒரு ஒன் லைன் மாதிரி

ரெடி பண்ணு. அதை எடுத்துட்டுப் போய் ஆசிரியரைப் பாரு" என்றான்.

"ஆமாப்பா, நீ சொல்றதுதான் சரி" என்றாள் அவள்.

குழந்தைகள் வந்தவுடன் குழந்தைகளிடம் சொன்னார்கள். அவர்களுக்கு இதன் ஆழம் முழுமையாக புரியவில்லை. "ஐ அம்மாவுக்கு சான்ஸ் கிடைச்சிருக்கா" என்று இரண்டு முறை குதித்ததோடு சரி அதே நேரத்தில் "நான் உள்ளே வரலாமா?" என்று வந்தவள் தான் சங்கமித்ரா.

பைந்தமிழ் பாரி அக்காவிடம் திரும்பி "அக்கா நான் சொல்லலை. எங்க ஆஃபீஸ்ல முக்கியமான ஒரு நபர் அப்படின்னு" என்று அறிமுகப்படுத்தி வைத்தான் பைந்தமிழ் பாரி.

மலர்ந்த முகத்துடனும், இனிமையான சிரிப்புடனும், எளிமையான ஆனால் அழுத்தமான அலங்காரத்துடன் நிற்கிற அந்தப் பெண்ணைப் பார்த்தாள் சரஸ்வதி.

திரும்பி தம்பியைப் பார்த்தாள். தம்பி சங்கமித்ராவை ஒரு பெருமையுடன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தாள். அவளுக்கு ஏதோ கொஞ்சம் புரிகிறாற்போல இருந்தது.

"அப்படியா! ஓ ரொம்ப நல்லா ஓர்க் பண்ணுவாங்க சின்சியரா இருப்பாங்கன்னு நீ சொல்லியிருக்கியே அந்தப் பொண்ணா" என்றாள் சரஸ்வதி வேண்டுமென்று.

"அப்படியா, அப்படியெல்லாம் என்னைப் பத்தி சொல்லியிருக்காரா?" என்றாள் சங்கமித்ரா ஆர்வமாக.

"அது ஏதோ தூக்கத்தில் உளறினது. நீங்க உட்காருங்க" என்றான் பைந்தமிழ் பாரி.

"அதானே, மனசார பாராட்ட மாட்டீங்களே" என்று முறைத்தாள் சங்கமித்ரா.

"பாராட்டலாம். அந்த அளவுக்கு நீங்க ஏதாவது பண்ணுங்க. இப்ப பாருங்க எங்க அக்கா ஒரு பெரிய காரியம் பண்ணியிருக்காங்க."

"அப்படியா என்ன விஷயம்?" என்றாள் அவள்.

"தொடர்கதை எழுதப்போறாங்க. பெரிய பத்திரிகையிலே" என்றான் பைந்தமிழ் பாரி.

"அப்படியா. கங்கராஜுலேஷன்ஸ். பாராட்டுக்கள்." என்று அவள் சரசுவின் கையைப் பிடித்துக் கொண்டு குலுக்கினாள்.

அதே நேரம் போன் வந்தது.

அந்த நம்பரைப் பார்த்தவுடன் திகைத்தாள். தம்பியிடம் நீட்டினாள்.

"பேசுக்கா, தனியா போய்ப் பேசு" என்றான் பைந்தமிழ் பாரி.

ஃபோனை எடுத்துக் கொண்டு அடுத்த அறைக்குப் போனாள் சரசு. "என்னங்கடி என்ன நினைச்சுட்டு இருக்கீங்க?" என்று ஒரு குரல் மிரட்டியது.

திகைத்துப் போய் நின்று விட்டாள் சரசு.

அத்தியாயம் - 15

இரண்டு நாட்களும் ஆழ்ந்த சிந்தனையிலே இருந்தாள் சரசு.

பைந்தமிழ் பாரியும் அவளை குழந்தைகள் கூட தொந்தரவு செய்யாத விதமாக பார்த்துக் கொண்டான்.

அன்று மாலை பத்திரிகை ஆசிரியரைப் பார்ப்பதாக இருந்தது. இரண்டு நாட்கள் முடிந்து அந்த மூன்றாவது நாள் காலை குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு சரஸ்வதி உட்கார்ந்து தன்னுடைய தொடர்கதைக்கான ஒரு திட்டம் போட்டாள்.

அக்கா என்ன தலைப்பு கொடுக்கற என்று கேட்டான் பாரி. "இதோ வருகிறேன்" அப்படின்னு தலைப்பு என்றாள்.

"சூப்பர்க்கா நல்லா இருக்கு. என்ட்ரி ஆகறேன்னு சொல்லிட்டே" என்று பாராட்டினான் பைந்தமிழ் பாரி.

இரண்டு நாட்களுக்கு முன்பாக அவர்கள் உற்சாகமாக பேசிக் கொண்டிருந்தபொழுதுதான் அந்த போன் கால் வந்தது. அந்த போன் காலில் பதில் பேசி விட்டு. முகமெல்லாம் சுண்டிப்போக உள்ளே வந்தாள் சரஸ்வதி. சங்கமித்ராவும் இருந்தாள்.

அந்த நேரத்தில் அவன் எதுவும்கேட்கவில்லை. அதற்குப் பிறகும் கூட இந்த இரண்டு நாட்களாக அவன் அதைப் பற்றி துருவித் துருவி கேட்கவில்லை. அக்காவாக சொல்லட்டும் என்று நினைத்தான்.

அதைக் காட்டிலும் கதையை முழுமையாக அவள் திட்டமிட்டுக் கொள்ளட்டும் என்பதுதான் அவனுடைய இன்னொரு நோக்கமாக இருந்தது.

இப்பொழுது கதைக்கு ஒரு முழு வடிவம் கொடுத்து விட்டாள் சரசு.

இப்படித்தான் கதை இருக்கப் போகிறது என்று பைந்தமிழ் பாரியிடம் சொன்னவுடன் அவன் உண்மையிலே அதிசயித்துப் போனான். "அக்கா, உனகது உண்மை

யிலேயே படைப்பாற்றல் இருக்குது. கண்டிப்பா நீ இதை டெவலப் பண்ணிக்கணும்'' என்றான்.

அதற்குப் பிறகு தான் மெதுவாக ''அக்கா அன்னைக்கு ஃபோன் வந்துச்சே'' என்று கேட்டான். சரஸ்வதி தானே அதைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தாள்.

அவளுக்கும் ''இந்தக் கதை ஒரு வடிவத்துக்கு வரட்டும் பிறகு பேசிக்கொள்ளலாம்'' என்ற எண்ணம் இருந்தது.

''ஆமா, தம்பி நானே பேசணும்னுட்டு இருந்தேன்.'' ''மச்சான் தானே பேசினாரு?'' என்றான் பாரி.

''ஆமா மச்சான் தான் பேசினாரு'' என்றாள் அசிரத்தையாக

''என்னக்கா சொன்னாரு. ரொம்ப முகம் சிவந்து போய் வந்தே. மித்ரா இருந்ததனால நான் அதைப் பத்தி பேசலை. மொத மொதல்ல அந்தப் பொண்ணு வந்திருக்கு. ஏன் இந்தப் பிரச்சினையை அந்தப் பொண்ணு முன்னாடி பேசணும்னுட்டுதான் பேசலை'' என்றான்.

''ஆமாம்பா நானும் அதனாலதான் சொல்லலை. ஆனா அதுக்கப்புறம் குழந்தைங்க, சமையல் சிந்தனைன்னு என்னால அதைப் பத்தி பேச முடியலை. ஐ ஆம் சாரி'' என்றாள்.

''என்னக்கா நீ, இப்ப கூட உனக்கு அதைப் பத்தி சொல்லணும்னு இருந்தா சொல்லு. சொல்லக் கூடியதா இருந்தா சொல்லு. இல்லைன்னா விட்ரு'' என்றான் பாரி.

அக்கா அன்புடன் புன்னகைத்தாள். ''உங்கிட்ட சொல்லாம யாருகிட்ட சொல்லப் போறேன் தம்பி'' என்றாள்.

''என்ன சொன்னாரு?'' என்று கேட்டான். சரஸ்வதிக்கு அன்றைக்கு வனமாலி பேசியது நினைவுக்கு வந்தது. அதற்குள்ளாக அவனுக்கு எப்படிச் செய்தி போயிற்று என்பது தெரியவில்லை. அவனுக்கு வேண்டியவர்கள் அந்த பத்திரிகை அலுவலகத்தில் இருந்தார்களோ என்னவோ தெரியவில்லை.

''என்னடி! அக்காவும் தம்பியும் விளையாடறீங்களா?'' என்று கேட்டான் அவன்.

''நாங்க என்ன விளையாடினோம்?'' என்றாள் அவள்.

''என்னமோ கோபிச்சுட்டுப் போனே. நாலு நாள் கழிச்சு வாலைச் சுருட்டிட்டு தானா வருவேன்னு பார்த்தேன். ரொம்ப வீம்பு புடிக்கறே? என்ன போட்டியா கிளம்பற துன்னே முடிவு பண்ணிட்டியா?'' என்று கேட்டான்.

''இதோ பாருங்க. நான் யாருக்கும் போட்டி இல்லை. நான் பாட்டுக்கு என் வேலையைப் பார்த்துட்டிருக்கேன். நான் யாருகிட்டேயும் போய் எழுதறேன் வாய்ப்பு கொடுங்கன்னு கேட்கலை'' என்றாள்.

''அப்புறம் எப்படிடி அந்த பத்திரிகையில தொடர்கதை எழுதப் போறியாம்?'' என்று கேட்டான்.

''அது முடிவு ஆகலையே? அதுக்குள்ள எப்படி உங்களுக்குத் தெரிஞ்சது?''.

''ஓகோ, அது எங்களுக்கு தெரியக் கூடாதுங்கற அளவுக்கு வேலை செய்றீங்களா? உனக்கு ஆள் இருக்க மாதிரி எனக்கு ஆள் இருக்காதா?'' என்றான்.

''என்னங்க இது. உங்களுக்கு மறைச்சிட்டு நான் எதை செய்யப் போறேன். எதுக்காக உங்க ஆளு எங்க ஆளுன்னெல்லாம் பிரிச்சுப் பேசறீங்க?'' என்றாள்.

"அப்படித்தானேடி நீ பண்றே? இப்போ தொடர்கதை எழுதப்போறியா?" என்று கேட்டான்.

"இதோ பாருங்க, அந்தப் பத்திரிகை ஆசிரியர் எவ்வளவு பெரியவரு, அவர் கேட்கும் பொழுது எப்படிங்க மறுக்கறது?" என்றாள்.

அவன் அந்தப் பக்கம் கபகபவென்று சிரித்தான். "அவரா? சுதர்சனனா? உனக்கு ஃபோன் பண்ணி கேட்டாரா? என்னடி கதை விடறே?" என்று கேட்டான்.

"ஆமாங்க, நிஜமாத்தாங்க" என்றாள் அவள்.

"இதோ பார்றா, நம்ம ஊர்ல இருக்கற பெரிய பெரிய எழுத்தாளரெல்லாம் போய் என் கதையைப் போடுங்கன்னு கும்பிடு போட்டு கேட்டுட்டு இருக்காங்க. அந்த ஆள் உனக்கு போன் பண்ணி கேட்டாருன்னு சொல்லுவே. நானும் காதுல பூ வச்சிருக்கேன் பாரு. நம்பிக்குவேன்" என்று மறுபடியும் சிரித்தான்.

"இல்லைங்க சுதர்சனம் ஐயா தான் கேட்டாரு" என்றாள் அவள்.

"சரிடி, நான் நம்பறேன். அப்படியே இருந்தாலும் நீ அந்த ஆள்கிட்ட சொல்லிடு. நான் கதையெல்லாம் எழுதறது இல்லைங்க. அது ஏதோ ஆசைக்கு ஒரு கதை எழுதினேன். எனக்கு எங்க வீட்டுக்காரரை பார்த்துக்கறதுக்கே நேரம் சரியா இருக்கு. கதையெல்லாம் எழுதறது இல்லைன்னு சொல்லு" என்றான்.

அவள் பதில் பேசவில்லை. மவுனம் சாதித்தாள்.

அவனுக்கு அந்தப் பக்கம் கோபம் பொங்கியது. "என்னடி நான் கேட்டுட்டே இருக்கேன். நீ என்னமோ அந்தப் பக்கம் மவுன விரதம் இருக்கே?" என்றான்.

"இல்லைங்க. நான் இந்தக் கதையை எழுதறதாத்தான் இருக்கேன்"

"முடிவு பண்ணிட்டியா?" என்றான்.

"இதோ பாருங்க. நானா முடிவு பண்ணலை. நான் ஒண்ணு வேண்ணா சொல்றேன். யாருகிட்டயும் போய் நான் கதை எழுதறேன்னு சொல்ல மாட்டேன். நானா எந்த முயற்சியும் பண்ண மாட்டேன். ஆனால் எனக்கு வாய்ப்பு வந்தா செய்வேன்" என்றாள்.

"இது லொள்ளுடி. துணிஞ்சு தான் இருக்கே இல்லே" என்றான்.

"இதுல துணியறதுக்கு என்னங்க இருக்கு. என்ன இருந்தாலும் உங்க திறமையோட உறைபோட காணாது இல்லை என்றாள்.

"நக்கல் வேற பண்றியா?" என்றான் அவன்.

"இல்லைங்க. நான் நிஜமாத்தான் சொல்றேன்" என்றாள் அவள்.

"சரிடி கேட்டுக்கோ. அந்தப் பத்திரிகைக்கு நீ கதை எழுதினா நான் அடுத்து வேற விதமா முடிவு எடுக்க வேண்டியதிருக்கும்."

"சரிங்க. நீங்க பெரியவங்க. உங்களுக்கு தெரியாதது ஒண்ணுமில்லை. நீங்களே யோசிச்சுப் பாருங்க. நீங்க இதை ரெண்டு விதமா எடுத்துக்கலாம். இப்படி கௌரவப் பிரச்சினையாவும் எடுத்துக்கலாம். நம்ம ஒய்ப் எழுதறாளேன்னு சந்தோஷமும் பட்டுக்கலாம்."

"ஆமாடி, நம்ம ஒய்ஃப் எழுதறாளேன்னு சந்தோஷப் பட்டுகிட்டு உன் பின்னாடி வெத்தலைப் பெட்டியும் கூஜாவும் தூக்கிட்டு வருவேன்னு நினைச்சியா?" என்றான்.

அவள் அதற்கு ஒன்றும் பேசவில்லை. மௌனம் சாதித்தாள்.

அவன் "இனிமே பாரு. இந்த வனமாலி யாருன்னு காட்டறேன்" என்று டொக்கென்று போனை வைத்தான்.

சரஸ்வதிக்கு காது ஜவ்வுகள் அதிர்ந்து போனாற்போல இருந்தது. சட்டென்று செல்போனை நகர்த்திக் கொண்டாள்.

நீண்ட வருத்தத்துடன் ஓரிரு நிமிடங்கள் பால்கனிக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மனத்தில் சொல்ல வொண்ணாத வருத்தம். அதை முழுமையாகக் காட்டினால் தம்பி வருத்தப்படுவானே என்று அன்றைக்கு அதைப் பற்றி பேசுவதை தவிர்த்து விட்டாள்.

இவள் பேசுவதைத் தவிர்ப்பதை பார்த்தவுடனேயே பைந்தமிழ் பாரியும் நாகரிகமாக அதைப்பற்றி கேட்காமல் விட்டு விட்டான்.

இப்பொழுதுதான் சகோதரி சொல்லவும் கேட்டுக் கொண்டான். பாரியும் கூட ஒரு நிமிடம் சிந்தனையில் ஆழ்ந்தான். "ஏன்கா மச்சான் இவ்வளவு ஸ்டபனா இருக்கும் பொழுது கொஞ்சம் யோசிச்சுக்கலாமா? திரும்பவும் டைவர்ஸ் கிய்வர்ஸ்னு ஆரம்பிச்சிடப் போறாரு" என்றான் பாரி.

ஒரு நிமிடம் இரண்டு கைகளையும் மடியில் கோர்த்தாற் போல வைத்துக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தாள் சரசு.

பாரி ஒன்றும் பேச வில்லை. அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு தலையை நிமிர்த்தினாள். அவள் முகத்திலே ஒரு தெளிவு இருந்தது.

இறுதியான முடிவை எடுத்து விட்டாள் என்பது புரிந்தது.

"என்னக்கா?" என்றான் அவன்.

"தம்பி, இது நாள் வரைக்கும் அவரை முரடன் அப்படின்னுதான் நினைச்சேன். ஆனால், இப்போ ஒரு ஆதிக்க மனப்பான்மை காட்டறாரு. இதை நான் ஏத்துக்க முடியாது தம்பி. ஆனால், அதுக்காக என் திறமை எல்லாத்தையும் அவருக்குத் தாரை வார்த்துட்டு உட்காரணுங் கறது அவசியமில்லைப்பா.குழந்தைகளை கவனிக்கலையா, அவரைக் கவனிக்கலையா, வீட்டுக் கடமைகளை நான் முறையா கவனிக்கலையா? அது போக எனக்கு இருக்கற நேரத்துல இதை செய்யக் கூடாதுன்னா எனக்கு இது ரொம்ப அதீதமா எனக்கு தெரியுதுப்பா" என்றாள்.

"இனிமே அவருதான் யோசிக்கணும்" என்றாள் தீர்க்கமாக

பைந்தமிழ் பாரி உண்மையிலே திகைத்துப் போனான். அக்காவிடம் இப்படி ஒரு முடிவை உறுதியான நிலைப் பாட்டை அவன் எதிர்பார்க்கவில்லை. ஒரு நிமிடம் அவனும் அமைதியாக அமர்ந்திருந்தான்.

தம்பி அப்படி அமைதியாக அமர்ந்திருப்பதைப் பார்த்தவுடனே அவளுக்குள் குழப்பம் ஏற்பட்டது. பிறகு அவன் முறுவலித்தபடி சொன்னான். "சூப்பர்க்கா சூப்பர். ஸ்டாண்ட் பண்ணுக்கா. எப்படியும் மச்சான் வந்துதான் ஆகணும்" என்றான் அவன்.

அவளுக்கு மறுபடியும் சந்தேகம் வந்து விட்டது போலும். "ஏன் தம்பி அவரு ஏதாவது டைவர்ஸ் கிய்வர்ஸ்னு ஆரம்பிச்சாருன்னா."

"அதான் நீ சொல்லிட்டியே அக்கா உன்னை கல்யாணம் பண்ணியிருக்காரு. அப்படிங்கற பொழுது நீ வெறும் உடம்பு மட்டுமா? உன்னோட திறமை மனசு எல்லாமே தானே அவருக்குப் புரியணும். அட்லீஸ்ட் உனக்கு ஒரு டுவெண்டி ஃபைவ் பர்சண்டாவது ஒரு இடம் கொடுக்கணு மில்லே" என்றான்.

அவள் இப்போது தெளிவானாள். "ஆமா தம்பி, சரி பார்க்கலாம். நான் இந்த தொடர்கதை எழுதறேன். அவரும் யோசிக்கட்டும் இன்னைக்குக் கூட ஒரு வார்த்தை விட்டாரு. என்னமோ கோபித்துக் கொண்டு போனே நாலு நாள்ல வருவேன்னு பார்த்தேன்னு" என்றாள்.

பைந்தமிழ் பாரி அட்டகாசமாக சிரித்தான். "அக்கா மச்சான் கிட்ட எந்த வேலைக்காரனும் இருக்க மாட்டான்கா. அந்த விசுவா ஏதோ இருக்காரு. ஆளு வச்சுப் பார்க்கட்டும். எப்படியும் நீ டைவர்ஸ் கொடுத்தாதானே இன்னொருத்தியை கல்யாணம் பண்ண முடியும். அப்படியெல்லாம் பண்ண முடியாது" என்றான் அவள்.

சற்றுக்கழித்து "அவ்வளவுக்கெல்லாம் யோசிக்கிறே தைரியமெல்லாம் அவருக்கு இல்லக்கா" என்றான் ஆறுதல் சொல்வது போல.

அவள் பெருமூச்சு விட்டாள். "அக்கா, அப்பா வெளியில போனா போதும் ஜாலியா இருக்கலாம்னு நினைக்கிற அளவுக்கு குழந்தைகளை வச்சிருக்காரு. அவரும் தன்னைத் திருத்திக்கட்டும். அக்கா இப்ப அவரும் சிந்திக்கறதுக்கான நேரம்தான். இல்லை முரட்டுத்தனமா பேசினாருன்னா பார்த்துக்கலாம்."

"சரி தம்பி, எது எப்படியானாலும் சரி, நான் இந்த வாய்ப்பை விடறதா இல்லை" என்றாள்.

"ரொம்ப சந்தோஷம் அக்கா. இன்னைக்கு சாயங்காலம் நாம போய் சுதர்சனம் சாரை பார்த்துடலாம்" என்றான்.

"சரி தம்பி" என்றாள் அவள்.

"சரிக்கா நான் ஆஃபீஸ் போயிட்டு வரேன்" என்று கிளம்பும் போது. "தம்பி" என்றாள் அவள்.

"என்னக்கா?" என்றான். உட்காரேன் என்றாள்.

உட்கார்ந்தான். "ஏன் தம்பி உனக்கு கல்யாணம் பண்ணிக்கறதா ஐடியா இல்லையா?" என்றாள். அவன் இதை எதிர்பாராதவன் போல அக்காவைத் திகைப்புடன் பார்த்தான்.

"ஆமாம்பா, உனக்கும் வயசு ஆச்சுல்ல இருபத்தெட்டு முடியுது இந்த வருஷத்தோட. ஏற்கனவே ஒன் ஆர் டூ இயர்ஸ் லேட்டுங்கற மாதிரி தெரியுது. கல்யாணம் பண்ணிக்க தம்பி."

"இப்ப நீ கல்யாணத்தை பண்ணி என்னத்தை கண்டே?" என்றான் அவன்.

அவள் சிரித்தாள்.

"இத்தனையெல்லாம் பார்த்துட்ட பிறகும் என்னை கல்யாணம் பண்ணிக்க சொல்றியா?" என்றான் அவன்.

"இதோ பாரு. தம்பி நீ வேற உன்னோட நேச்சர் வேற. மச்சானோட நேச்சர் வேற. உனக்கெல்லாம் ஒரு பொண்ணு வந்தா நீ அவளை தங்கமா தாங்குவே. உன்னைப் புரிஞ்சுக்கிட்டவளா வந்தா இன்னும் உன்க லைஃப் ரொம்ப நல்லா இருக்கும்" என்றாள்.

"பார்க்கலாம் அக்கா. கொஞ்சம் டைம் கொடு" என்றான்.

"பார்க்கலாம்னா பொண்ணு பார்க்கட்டுமா?" என்று கேட்டாள் அவள்.

"அக்கா நீ முதல்ல தொடர் கதையில கான்சட்ரேட் பண்ணு. தொடர்கதை முதல்ல கிளிக் ஆகட்டும். அப்புறம் சின்ன விஷயங்கள் ரெண்டு மூணு இருக்கு. அதை முடிச்சுட்டு அப்புறம் யோசிப்போம்" என்றான்.

"ஏன் தம்பி, என்ன மாதிரி பொண்ணு?" என்று அவள் ஆரம்பிக்க. "

"ப்ளீஸ். அக்கா கொஞ்சம் டைம் கொடுக்கா" என்றாள் அவன்.

அதே நேரத்தில் போன் ஒலித்தது.

"ஹாய் சங்கமித்ரா" என்றான் அவன்.

அந்தப் பக்கம் உற்சாகமாக ஏதோ அவள் சொன்னாள் போலும். "இல்லை இல்லை லேட்டெல்லாம் இல்லை இன்னொரு ஆஃபனவால வந்துடுவேன். இங்க அக்காகிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டியது இருந்தது. ஆபீசுக்கு வந்துடுவேன். ஆனா ஒரு டூ அவர்ஸ் வெளிய போக வேண்டியதிருக்கும்" என்றான்.

அவள் ஏதோ சொல்ல ஆரம்பித்தாள். "இருக்கட்டும்மா. அந்த டூடெய்ல்ஸ் எல்லாம் நான் அங்க வந்து பார்த்துக் கறேன். இவ்வளவு பிராம்ப்ட்டா ரிப்போர்ட் பண்ணனும்னு என்ன இருக்கு?" என்றான் அவன்.

அவள் அந்தப் பக்கம் ஏதோ சொல்ல இவன் கலகல வென்று சிரித்தான். சங்கமித்ராவின் பேச்சும் வருகையும் தம்பிக்கு ஒரு சந்தோஷத்தைத் தருகிறது என்பது சரசுவுக்கு புரிந்தது. இது வெறும் நட்பா, ஈர்ப்பா, அதற்கும் மேலேயா என்று யோசித்தபடி அமர்ந்திருந்தாள்.

"அக்கா நான் வரேன்" என்று உற்சாகமாக அவன் கையசைத்து விட்டு போவதையும் பார்த்து அவளும் கை அசைத்து விட்டு. பால்கனி அருகிலே வந்து நின்று மறுபடியும் புன்னகையுடன் கை அசைத்தாள்.

அத்தியாயம் - 16

"உள்ளே வரலாமா?" என்று கேட்டாள் சங்க மித்ரா.

"தாராளமா வாம்மா, வாம்மா" என்று உற்சாகமாக வரவேற்றாள் சரஸ்வதி.

"என்ன ஹெவியா டிபன் ரெடியாயிட்டு இருக்குபோல இருக்கு! என்றாள் சங்கமித்ரா.

"ஆமாம் குழந்தைங்க வர நேரமாச்சு. வந்தவுடனே ஏதாவது கொடுக்கணும். அதான்" என்றாள்.

"அப்படியா? அப்போ இந்தக் குழந்தைக்கு கிடையாதா?" என்றாள் அவள்.

"இந்தக் குழந்தைக்கும் கொடுத்தாப் போச்சு. என்ன வேணும் உனக்கு சொல்லு? எதுவானாலும் அரை நிமிஷத்துல செஞ்சு கொடுத்துடுவேன்" என்றாள் சரஸ்வதி.

குரலில் தாய்மை பரவியிருந்தது.

சங்கமித்ரா கலகலவென்று சிரித்தாள். "நான் ஒண்ணும் இடையிலயெல்லாம் அவ்வளவு சாப்பிடறதில்லை. லஞ்ச் முடிச்சு இப்பதான் டு அவர்ஸ் ஆச்சு. சார் ஏதோ ஃபைல் வேணும்னாரு. அதனால எடுத்து கொண்டு போய் கொடுத்துடலாம்னுட்டு வந்தேன்" என்றாள்.

"எந்தஃபைல்? எதுவும் வேணும்னு அவன் எனக்கு போன் பண்ணலையே?" என்றாள் சரஸ்வதி.

"நேத்து ஈவ்னிங் சொன்னாரு. நான் வாங்கிட்டு வந்து வைக்கணும்னு நினைச்சேன் மறந்துட்டேன்" என்றாள் சங்கமித்ரா.

"அப்படியா? என்ன ஃபைல்? சொல்லு பார்க்கறேன்" என்றாள் சரஸ்வதி.

ஏதோ ஒரு ஃபைல் பெயரைச் சொன்னாள் சங்கமித்ரா.

"அடடா, அது அவன் கொண்டு போயிட்டானே. இண்ணைக்குக காலையில தானே கொண்டு போனான்" என்றாள் சரஸ்வதி.

சங்கமித்ரா லேசாக நாக்கைக் கடித்துக் கொண்டு தன்னுடைய வலக்கையை மட்டும் உயர்த்தி ஒரு விரலை மட்டும் உயர்த்தி நடுத்தலையில் குட்டிக் கொண்டாள்.

"பார்த்தீங்களா? நான் வெரிஃபை பண்ணியிருக்கணு மில்லே?. வெரிஃபை பண்ணாம வந்துட்டேன் பார்த்தீங் களா?" என்றாள்.

"அதனால என்ன? வந்ததுக்கு சூடா காஃபி போட்டுத் தரேன். சாப்பிட்டுட்டுப் போயேன்" என்றாள் சரஸ்வதி.

பேசும் போதே சரஸ்வதி இயல்பாக உரிமையெடுத்துக் கொண்டு விட்டதை கவனித்து ரசித்துக் கொண்டாள் சங்கமித்ரா.

"கம்யூனிகேஷன் கேப். சார் எங்கிட்ட சொல்லலை?" என்றாள்.

"அவன் அப்படித்தான். சில நேரத்துல எல்லாத்தையும் மறந்துடுவான்" என்றாள் சரஸ்வதி.

"மறக்கறதா? அப்படியெல்லாம் இல்லை. சாரெல்லாம் மறக்கவே மாட்டாரு" என்று அவசரமாகச் சொன்னாள் சங்கமித்ரா.

"சரி இப்ப உனக்கு என்ன வேணும்னு சொல்லு. காபி, டீ என்ன வேணும்" என்றாள் சரஸ்வதி.

"என்ன கேட்டாலும் தருவீங்களா?" என்றாள் சங்கமித்ரா.

"நான் தான் முதல்லே சொல்லிட்டேன்ல. உனக்கு என்ன வேணுமோ கேளு" என்றாள்.

அவள் சிரித்துக் கொண்டே "நீங்க என்ன சாப்பிடறீங் களோ அதே எனக்கும் போடுங்க" என்றாள்.

"எனக்கு நல்ல காபி, ஃபில்டர் காபி போட்டுக் குடிக்கறது பிடிக்கும்" என்றாள் சரஸ்வதி.

"சரி, அதே எனக்கும் கொடுங்க" என்றாள் சங்கமித்ரா.

அவள் காபி போடும் பொழுது இவள் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

சமையல் கட்டு சுத்தமாக இருந்தது. சரஸ்வதி அவளிடம் கலகலவென்று பேசிக்கொண்டே காஃபியைப் போட்டாள்.

"நீங்க பெரிசா ஷாப்பிங் எல்லாம் போகமாட்டீங்களா?" என்றாள் சங்கமித்ரா.

"ஷாப்பிங் எல்லாம் எனக்கு இன்ட்ரஸ்ட்டே இல்லை. எப்பவாவது ஒரு தடவை போவேன். தீபாவளி சமயத்துல போனா வருஷத்துக்கு வேணுங்கற துணி மணி எல்லாம் வாங்கிடுவேன். அது இல்லாம இந்த பண்டிகை அந்தப் பண்டிகைன்னு பைந்தமிழ் பாரி நல்லா செலக்ட் பண்ணித் தருவான். அதனால போயெல்லாம் துணி மணி எடுக் கணும்னு அவசியம் இல்லை.மளிகைக் கடைக்கு வேணா மாசா மாசம் போய் செலக்ட் பண்ணிட்டு வருவேன்" என்றாள்.

"சரியான குடும்பத் தலைவி" என்றாள் சங்கமித்ரா.

"ஆமாம்மா, எனக்கு அது தவிர பெரிய அளவில இன்ட்ரஸ்ட் இல்லை"

"அப்புறம் எப்படி?" என்று கண்களை படபடவென்று அடித்துக் கொண்டாள் சங்கமித்ரா.

"எதை எப்படின்னு கேட்கறே?" என்றாள் சரஸ்வதி.

"இல்லை. எப்படி இப்படி கதை எழுதறீங்க. இப்படி ஒரு ஹவுஸ் ஒய்ஃப் கிட்டே இவ்வளவு அமைதியானவங்க கிட்டே இருந்து எப்படிங்க அப்படி ஒரு கதை புறப்பட்டு வந்துச்சு?" என்றாள் சங்கமித்ரா.

"இதானே வேண்டாங்கறது?" என்று சிரித்தாள் சரஸ்வதி.

"ஏங்க்கா, இல்லைங்க மேடம். நிஜமாவே நான் ஆச்சரியப்பட்டுத்தான் கேட்கறேன்."

"இல்லை காலேஜ் டேஸ்ல எல்லாம் ஆக்டிவ் தான். காம்படிஷன்ல எல்லாம் நிறைய கலந்துக்குவேன். கவிதை கிவிதை எழுதுவேன்."

"தப்பா சொல்றீங்க" என்றாள் சங்கமித்ரா.

"புரியலை" என்று இழுத்தாள் சரஸ்வதி.

"நீங்களெல்லாம் வேண்ணா கவிதை எழுதுவீங்க, நாங்களெல்லாம் வேண்ணா கிவிதை எழுதுவோம்" என்றாள்.

சரஸ்வதி கலகலவென்று சிரித்தாள். சிரிக்கும் போது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. தன்னுடைய கணவனிடம் எப்பொழுதாவது இவர்கள் இப்படி சிரித்திருப்

பார்களா என்ற சந்தேகம் சங்கமித்ராவுக்கு வந்தது. ஆனால், குழந்தைகளிடம் சிரித்திருப்பார் என்று எண்ணிக் கொண்டாள்.

"என்ன? என்ன யோசனை" என்று சரஸ்வதி ஒரு தட்டுத் தட்டவும்தான் சுயநினைவுக்கு வந்தாள்.

மெல்ல அசடு வழிந்து கொண்டே சரஸ்வதியிடம் "இல்லை, நீங்க சிரிக்கும்பொழுது சார் மாதிரியே அழகா இருக்கீங்க."

இந்த "சார் மாதிரியே" என்றதை சரஸ்வதி குறித்து வைத்துக் கொண்டாள் மனதிற்குள்ளே. "ஓகோ சார், சிரிச்சாத்தான் அழகா இருப்பாரோ?" என்றாள்.

"இல்லை இல்லை, சிடுசிடுங்கும் போதும் அழகாத்தான் இருப்பார்" என்றாள்.

"அப்படியா உங்கிட்ட சிடுசிடுன்னெல்லாம் பேசுவானா அவன்?".

"எங்கிட்ட காட்ட வேண்டிய கோபத்தையெல்லாம் ஜாடையா செந்தில்கிட்ட, மத்தவங்ககிட்டயெல்லாம் காட்டிடுவாரு" என்றாள் சங்கமித்ரா.

சரஸ்வதி இப்போது கலகலவென்று சிரித்தாள்.

"நீங்க மட்டும் தான் காலேஜ்ல ஆக்டிவா? எங்க சார் ஆக்டிவ் இல்லையா?" என்று கேட்டாள்.

"அவன் ஓவர் ஆக்டிவ்" என்றாள் சரஸ்வதி.

"ம்... அப்படியா.?"

"நான் டிஸ்ட்ரிக் லெவல் ப்ளேயர்னா அவன் ஸ்டேட் லெவல் ப்ளேயர். நான் டிஸ்ட்ரிக் லெவல், ஸ்டேட் லெவல்ல ஆரேட்டர்ன்னா அவனும் அப்படித்தான் ஐயா

என்.சி.சி.ல டெல்லி போயிட்டு வந்தாரு. எல்லா ஆக்டிவிட்டிஸ்லயும் இருப்பான். என்.எஸ்.எஸ். ல இருந்தாரு. பாதி நாள் கிளாஸுக்கே போக மாட்டான். ஆனா ஃபர்ஸ்ட் மார்க் வாங்கிடுவான்'' என்றாள் சரஸ்வதி.

''அடடடா, பெருமை தாங்கலை'' என்றாள் சங்கமித்ரா.

சொல்லிவிட்டு நாம அவர்களுக்கு சமமாகப் பேசுகிறோமோ என்ற எண்ணம் வரவும் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

சரஸ்வதி அவள் தயங்குவதைப் பார்த்து விட்டு சிரித்தாள். ''நீ ஃப்ரீயா இரு. எப்பவும் போல இப்படியே பேசு'' என்றாள்.

''சொல்லுங்களேன் சாரைப் பத்தி'' என்றாள் சங்கமித்ரா.

''எங்க சாரைப் பத்தியா. எங்க சார் கதை நல்லா எழுதுவாரு ஆனா கொஞ்சம் கோபம் வரும்.'' என்றாள்.

''அதான் தெரியுதே'' என்று சிரித்தாள் சங்கமித்ரா.

தன் கணவரை பற்றி மேலும் பேச விரும்பாதவள் போல ''உனக்கு இப்போதைக்கு பாரியைப் பத்திதானே பேசணும்.?உங்க எம்ப்ளாயர் எப்படின்னு தெரிஞ்சுக்கணும். அதைப் பத்தி கேட்டுக்கோ ''என்று சரஸ்வதி பொய்யாக மிரட்டுவது போல் நடித்தாள்.

''ஐய்யயோ, ஆமா ஆமா. சொல்லுங்க'' என்று கேட்டாள் சங்கமித்ரா.

''ரொம்ப கெட்டிக்காரன். எங்க அம்மா அப்பாவுக்கு அவனைப் பத்தி ரொம்பப் பெருமை எனக்கும் கூடத்தான். அவன் நினைச்சா என்னை விட கதை எழுதலாம். ஆனா அவன் சோஷியல் ஆக்டிவிட்டி அது இதுன்னு அதுல

யெல்லாம் கொஞ்சம் தீவிரமா இருக்கான். சொஸைட்டி பத்தி ரொம்ப கவலைப் படுவான்'' என்றால் சரஸ்வதி.

''தெரியுது. இப்போ நாங்கள் இருக்கறோம் கன்ஸர்ன்ல நிறைய புவர் பீப்பிளுக்கு ஹெல்ப் பண்றாரு தெரியுமா?'' என்றாள் சங்கமித்ரா.

''அப்படியா? சொல்லவே இல்லையே?'' என்றாள். தொடர்ந்து ''அவன் யாருகிட்டே எதைச் சொல்றான். யாருகிட்டேயும் எதுவும் சொல்ல மாட்டான்'' என்று அவளே மறுபடியும் சொல்லிக் கொண்டாள்.

''குழந்தைங் களுக்கெல்லாம் என்ன டிபன் பண்ணி வச்சிருக்கீங்க?'' என்று கேட்டாள் சங்கமித்ரா.

''குழந்தைங்களுக்கு வெஜிடபிள் கிச்சடி பண்ணி வச்சிருக்கேன். ஒரு நாளைக்கு ஒண்ணு.வாரத்துல ஒரு நாள் தான் இந்த மாதிரி பஜ்ஜி வடை போடறது. மத்த நாளெல்லாம் பெரும்பாலும் ஆயில் குறைவாதான் கொடுப்பேன்.''

''ஓஹோ, உங்ககிட்டே இருந்துதான் அவரு கத்து கிட்டாரோ?'' என்றாள் சங்கமித்ரா.

''எதை?''

''இல்லை இப்படி ஆயில் கம்மியா அப்படி இப்படின் னெல்லாம் பேசறீங்களே அவரும் இப்படியெல்லாம் பேசுவாரு.''

''அப்படியா? ஆஃபீஸ்ல இதெல்லாமா பேசுவீங்க?'' என்றாள் சரஸ்வதி கொஞ்சம் குறும்பாக பார்த்தபடி.

''ஏன்? ஏதாவது ஒரு நேரத்துல இப்படிப் பேச்சு வராதா?. பேசறதுதான். அவரு சமைச்சு கிமைச்சு கொண்டு வருவாரு

பாருங்க. அப்ப சொல்வாரு. இதுல ஆயில் கம்மியா தான் போட்டிருக்கேன்னு''

''ம்ஹூம்! சமைச்சு ஆஃபீஸுக்கெல்லாம் கொண்டு வரானா?''.

''ஏதாவது ஒரு நாளைக்கு நாங்க எல்லாரும் உட்கார்ந்து சாப்பிடுவோம்'' என்றாள் சங்கமித்ரா விட்டேற்றியாக சொல்லுவது போல.

அதிக நாட்கள் அப்படி நடைபெறுகிறது என்பதை யூகித்துக் கொண்டாள் சரஸ்வதி.

''ஏம்மா? உங்க வீட்ல எத்தனை பேரு?'' என்று கேட்டாள்.

''எங்க வீட்ல நானும் எங்க அண்ணனும்தான். எங்க அப்பா பிசினஸ் மேன். இப்போதைக்கு அது போதும்'' என்றாள்.

''சரிம்மா சரி, நீ பார்த்துச் சொன்னா சரி'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே குழந்தைகள் எல்லாம் வந்து சேர்ந்தார்கள்.

அம்மா என்று லிப்ட் திறக்கும் பொழுதே சத்தம் போட்டுக் கொண்டு வந்தார்கள். ''எனக்கு என்ன இருந்தாலும் இவங்க லிப்ட்ல வரும் போது பயம்தாம்மா'' என்றாள் சரஸ்வதி.

''இல்லையில்லை. இந்த அப்பார்ட்மெண்ட்ல அப்படி யெல்லாம் பயப்பட வேண்டியதில்லை. எல்லாத்துக்குமே ஆல்டர் நேட் அரேஞ்ச்மெண்ட் இருக்கு'' என்றாள் சங்கமித்ரா.

''இருந்தா நல்லது. ஏன்னா இந்தக் குழந்தைங்களுக்கு ஏதாவது பிரச்சினை ஆனாலும்'' என்று ஏதோ சொல்ல வந்தவள் நாக்கைக் கடித்துக்கொண்டாள்.

''பரவாயில்லை எங்கிட்ட எதைவேண்ணாலும் பேசலாம்'' என்றாள் சங்கமித்ரா.

''நான் தாங்க மாட்டேன் அவருக்கு நான் பதில் சொல்ல வேண்டி வந்துடும்'' என்றாள்.

''அதுவும் கரெக்ட்தான்'' என்று பெரிய மனுஷி போல ஒத்துக் கொண்டாள் சங்கமித்ரா.

''அது சரி உங்க தொடர்கதையெல்லாம் எந்த அளவில இருக்கு?'' என்றாள்.

''தொடர் கதை பிளான் பண்ணிட்டேன். எழுத ஆரம்பிக்கணும்'' என்றாள் சரஸ்வதி.

''சார் எனக்கு ஒரு அசைன்மெண்ட் கொடுத்திருக்காரு. நீங்க தொடர் கதை எழுத ஆரம்பிக்கும் போது உங்களுக்கு டைப்பிங்குக்கு நான் இங்க டூ அவர்ஸ் வந்துடணுமாம். ஆப்டர்நூன்ல'' என்றாள்.

''அப்படியா? வாயேன். ரொம்ப நல்ல விஷயம்'' என்றாள்.

''நீங்க ஆபிஸுக்கு போறதே இல்லையா. உங்க ஆபீஸ்'' என்றாள் சங்கமித்ரா.

''வாயேன் கொஞ்ச நேரம் போய் இருந்துட்டு வருவோம்'' என்று அழைப்பாள் என்று எதிர்பார்த்தாள். ஆனால், அதற்குள் குழந்தைகள் வந்துவிட்டதால் ''சரி நாளைக்கு நான் ரெண்டு மணிக்கு வந்துடறேன்.''

"குழந்தைகளெல்லாம் வரப்போ நீங்க ரெடி பண்றதுக்கு...." என்று இழுக்க. "இல்லை வேண்டாம் நீ வந்து மார்னிங் லெவனுக்கு வந்துடு.லெவன் டு ஒன் நாம ஓர்க் பண்ணிக்கலாம். அதுக்குள்ளே நான் சமையல் முடிச்சுடுவேன். பாரி சாப்பிட வர்றதுக்கு சரியா இருக்கும்" என்றாள் சரஸ்வதி.பிறகு

"சாப்டுட்டு பேசாம நீ அவன் கூட போயிடலாம்" என்றாள்.

"பார்க்கலாம், சாரையும் கேட்டுட்டு பிளான் பண்ணிக்கலாம்" என்றாள் சங்கமித்ரா.

சட்டென்று அவளே முடிவெடுக்காமல், சாரை கேட்டு விட்டு என்று எல்லாவற்றிலும் தன் சகோதரனை இழுத்துக் கொள்ளுவதை ஒருவித மகிழ்ச்சியுடன் கவனித்தாள்.

அவளிடம் பேசிக் கொண்டிருந்ததற்கு நேர் மாறாக குழந்தைகளுடன் அவள் சரிக்கு சரியாக விளையாடு வதையும் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"இன்னைக்கு நான் பர்மிஷன் போட்டிருக்கேன். கிளம்பறேன்" என்று சொல்லி விட்டு கிளம்பினாள் சங்கமித்ரா.

"ஆன்ட்டி போகாதீங்க ஆன்ட்டி. இன்னும் கொஞ்ச நேரம் இருங்க" என்று குழந்தைகள் கெஞ்சினார்கள்.

"நாளைக்கு வரேன். இல்லைன்னா சாட்டர்டே சண்டேல வரேன். விளையாடலாம் என்ன?" என்று சொல்லி விட்டு அவள் விடை பெற்றுக் கொண்டாள்.

சங்கமித்ரா கிளம்பியதற்குப் பிறகுதான் சரஸ்வதிக்கு அது தோன்றியது. இந்தப் பெண் ஏனோ பைந்தமிழ் பாரியைப் பற்றி துருவித் துருவி கேட்கிறாள்.

நல்ல பெண்ணாக இருக்கிறாள். கெட்டிக்காரியாக இருக்கிறாள். குடும்பத்தின் பின்னணி தெரிந்தால் ஒரு வேளை பாரிக்கு பார்க்கலாம் என்று நினைத்தாள்.

கூடவே பாரி என்ன சொல்லுவானோ என்ற கவலையும் தோன்றியது. இப்போதைக்கு ஒரு நல்ல தோழியாக இவளிடம் பழக்கம் வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து கொண்டாள்.

நெஞ்சத்தில் தோழமை உணர்வோடு அடுத்த நாள் சங்கமித்ராவின் வரவை எதிர்பார்ப்போம் என்பதை உணர்ந்தாள்.

சிரித்துக் கொண்டே திரும்பியபொழுது அவளுக்கு அந்தப் போன் வந்தது.

செல்ஃபோனை காதுக்கு கொடுத்தாள்.

மவுனமாக கேட்டுக் கொண்டாள். நான் யோசிக்கிறேன் என்று சொல்லிவிட்டு போனை வைத்தாள். சிந்தனையில் ஆழ்ந்தபடி நின்றுகொண்டிருந்தாள்.

அத்தியாயம் - 17

வரிசையில் நின்று கொண்டிருந்தான் பைந்தமிழ் பாரி.

அப்படியே சுற்றும் முற்றும் பார்த்தான். அப்பொழுது தான் ரயில்வே அலுவலகம் திறந்திருந்ததால் கூட்டம் குறைவாக இருந்தது.

மிக விரைவாக வந்தும் கூட அவன் மூன்றாவது ஆளாக நின்றுகொண்டிருந்தான். அதற்குப் பிறகு அவன் கவனம் டிக்கெட்டுகளை வாங்குவதிலேயே இருந்தது.

பத்து டிக்கெட்டுகளையும் வாங்கிக் கொண்டு முன் பதிவு செய்து விட்டு அதற்குப் பிறகு தான் அவன் கவனம்சுற்றுப் புறத்திற்குப் போனது. அதற்குள்ளாக வரிசை நீண்டு இருந்தது.

பதினைந்து இருபது பேருக்குமேல் அவனது வரிசையிலே நின்றார்கள். அக்கம் பக்கத்தில் என்று இரண்டு மூன்று கவுண்டருக்கு முன்னும் நிறைய பேர் நின்று கொண்டிருந் தார்கள்.

அவன் ரயில்வே அலுவலகத்தை விட்டு வெளியே வந்தான்.

வெளியிலிருந்த பைக்கை ஸ்டார்ட் செய்த போதுதான் கவனித்தான். பழகிய தோற்றமாக அங்கே ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். சங்கமித்ரா, மித்ரா போலிருக் கிறதே என்று யோசித்துக் கொண்டே இருக்கையிலே அவளும் திரும்பினாள்.

''ஹாய் மித்ரா'' என்று இவன் உற்சாகமாக கூவ ''ஹலோ ஹாய்'' என்று அவளும் உற்சாகமாக பதில் அளித்தாள்.

''என்ன இந்த அதிகாலை நேரத்துலே?'' என்று சிரித்தான் பைந்தமிழ் பாரி.

''அதே கேள்வியை நானும் கேட்கலாம் இல்லே?'' என்றாள் சங்கமித்ரா.

''கேளு, எதுக்கு வருவோம் ரயில்வே ஸ்டேஷனுக்கு காலையிலே.? டிக்கட் ரிசர்வ் பண்றதுக்குத்தான்?'' என்றான்.

''அதே தான். அதேதான் நானும் சொல்வேன்'' என்றாள்.

''அப்படியா,?''

''ஆமா சார், நீங்க நம்ம கன்சர்ன்ல வந்து சேர்றதுக்கு முன்னாடியே நாங்க ஒரு ரெண்டு மூணு அபார்ட் மெண்ட்ல ஏஜ்டா இருக்கறவங்களுக்குப் போய் ஹெல்ப் பண்ணுவோம். அதுல ஒரு ரெண்டு மூணு பேருத்துக்கு ரயில்வே டிக்கட் ரிசர்வ் பண்ண வேண்டி இருந்தது. அதுக்காக வந்தேன்'' என்றாள்.

''அதேதான் நானும் சொல்வேன்''. என்றான் அவன் அவளது பாணியிலே.

அவள் கலகலவென்று சிரித்தாள்.

''ஏன், சார் நீங்க ஆன் லைன்ல பண்ண வேண்டியது தானே?'' என்றாள்.

''பண்ணலாம். ஒவ்வொரு டிக்கட்டுக்கும் ஐம்பது ரூபாய் அதிகமாகும். பிரிண்ட் அவுட் எடுக்கணும். எஜுகேட்டட் பேரன்ட்ஸ் ஒத்துககறாங்க. கொஞ்சம் சுமாரான படிப்பு இருக்கறவங்களுக்கு தெரியறது இல்லை. அதனால இப்படி மேனுவலா வந்து வாங்கிக் கொடுத்துடறது'' என்றான்.

''குட், சார் யூ ஆர் ரியலி குட்'' என்றாள் அவள்.

அவன் போலியாகத் தலை குனிந்து ''மிக்க நன்றி மேடம்'' என்றான் வணக்கம் போட்டு.

அவள் மறுபடியும் சிரித்தாள்.

''ஓஹோ, அப்ப சர்வீஸ் மொதல்ல இருந்தே பண்றீங்களோ?'' என்றான்.

''ஆமாம் சார், நானும் ரெண்டு மூணு ஃப்ரெண்ட்ஸும் பண்ணிட்டு இருக்கோம். அப்ப தான் உங்க கன்சர்ன் பத்தி கேள்விப் பட்டோம். சரி தனியா பண்றதுக்கு இந்த மாதிரி

ஒரு கன்சர்ன்ல இருந்து பண்ணினா நல்லா இருக்குமேன்னு தான் நான் வந்து ஜாய்ன் பண்ணினேன்''

சொல்லி விட்டு ''சார்'' என்று இழுத்தாள் அவள். ''சார். நான் ஒண்ணு கேட்பேன்'' என்றாள் அவள்.

''என்ன வேணும்? ஐஸ்கிரீம் வேணுமா? சாக்லெட் வேணுமா?'' என்று கேட்டான்.கண்களில் குறும்பு கூத்தாடியது.

''ம்... லாலி பாப்'' என்றாள் அவள்.

அவன் சிரித்தான்.

''சீரியஸா பேசறேன்...'' என்று அவள் கோபிக்க ''காலங்காத்தால எல்லாம் சீரியஸா பேசக் கூடாது. காலங்காத்தால ஸ்வீட்டா பேசணும். அப்புறமா வேண்ணா முறுக்கா காரமா வேண்ணா பேசலாம்'' என்றான் அவன்.

அவனுடைய சிலேடைக்கு அவள் சிரித்தாள்.

சிரித்து விட்டு பிறகு ''இல்லை சார், என் ஃப்ரெண்ட்ஸ் ரெண்டு மூணு பேரும் நம்ம கன்சர்ன்ல ஜாய்ன் பண்ணிக் கிறேன்னு கேட்கறாங்க.''

அவன் முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டு ரொம்பவும் யோசிப்பவன் போல சிந்தித்தான்.

''உங்க ஃப்ரெண்ட்ஸா? அப்படின்னா யோசிக்கணுமே'' என்றான்.

அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். கையில் ஏதாவது கிடைத்தால் அடிப்பவளைப் போல.

''இது கொஞ்சம் ஓவர்ங்க'' என்றான் அவன்.

''அதேதான் நானும் சொல்லுவேன்'' என்றாள் அவள் மறுபடியும்.

அவன் சிரித்தான். ''இல்லை நீங்க ஃபுல் டைமா வர்றீங்க. உங்க ஃப்ரெண்ட்ஸ் அத்தனை பேரும் ஃபுல் டைம்னா எப்படி நாம ஜாப் கொடுக்கறது?'' என்றான் அவன்.

''சார், ஜாப் வேண்டாம் சார், இப்ப எப்படி செந்தில் மத்தவங்க எல்லாம் வர்றாங்க. அதே மாதி அவங்களும் வந்துடுவாங்க.''

''அப்படின்னா நோ ப்ராப்ளம். சரி நாம அதை ஆஃபீஸ்ல பேசுவோமே'' என்றான் அவன்.

''அதேதான் நானும் சொல்ல வந்தேன்'' என்றாள் அவள்.

அவர்கள் சிரித்தார்கள். இரண்டு பேருமே சிரித்தார்கள்.

''நீங்க இதை அடிக்கடி சொல்லி என்னை அறுத்தரா தீங்க'' என்றான் கொஞ்சம் கடுப்புடனே.

''அதேதான் நானும் சொல்ல வந்தேன்'' என்ற அவள் குடுகுடுவென்று ஓடிவிட்டாள்.

அவள் ஓடுவது போல் நடித்துக் கொண்டு ரிசர்வேஷன் கவுண்டர் நோக்கிப் போவதைப் பார்த்த அவன் ஒரு நிமிடம் நின்றுபார்த்து விட்டு சிரித்துக் கொண்டான்.

''நல்ல பெண்'' என்று எண்ணிக் கொண்டு பைக்கை எடுத்தான்.

அன்று பிற்பகலில் சகோதரியிடம் அதை சொல்லிக் கொண்டிருந்தான். அதுவும் அவள் ''ஏம்பா மித்ரா நேற்று வரக் காணோம்?'' என்று கேட்ட பொழுது.

''இல்லைக்கா, நேத்து ஆஃபீஸ்ல கொஞ்சம் அக்கவுண்ட்ஸ் வேலையெல்லாம் இருந்தது. மித்ரா கொஞ்சம் பிஸியா இருந்தாப்ல. இன்னிக்கு வரச் சொல்லி இருக்கேன்''.

"ஆமாம்பா நானும் நாலு சாப்டர் ரெடி பண்ணிட்டேன். மித்ரா வந்தா படிச்சுப் பார்த்துட்டு கொஞ்சம் கருத்தெல்லாம் சொல்லுவாப்ல. டிஸ்கஷன் மாதிரி பேசுவோம்" என்றாள் அக்கா.

'ஓஹோ டிஸ்கஷனெல்லாம் வேற நடக்குதோ?" என்றான் தம்பி கேலி போல.

"டிஸ்கஷன் மட்டுமா நடக்குது. என்னென்னமோ நடக்குது" என்றாள் அக்கா.

"அக்கா, நீ என்ன சொல்றே?" என்றான் அவன்.

"ஆமா தம்பி, சமையல் நடக்குது. அப்புறம் கேள்வி பதில் செஷன் வேற நடக்கும்" என்றாள் லேசு போல.

"அப்படிங்கறே? ஜெனரல் நாலேஜா, ஹிஸ்டரியா எதைப் பத்தி?" என்றான்.

"ம் ஹும். அதைப் பத்தி எல்லாம் இல்லை" என்றாள் அக்கா.

"அப்புறம்?" என்று அவன் ஆச்சரியமாக கேட்க,

"எல்லாம் உன்னைப் பத்தித்தான். என்னைப் பத்தித்தான்" என்று பின்னால் சேர்த்துக் கொண்டாள்.

"உன்னைப் பத்தித்தான்" என்று சொன்னவுடனே அவன் முகத்தில் லேசான வியப்பும் அதிர்ச்சியும் தோன்றியவுடனே சரஸ்வதி சுதாரித்துக் கொண்டு என்னைப் பத்தியும் தான் என்று ஒரு பின்குறிப்பை சேர்த்துக் கொண்டாள்.

"ம் ஹும்! அது என்ன தம்பி நீ எங்கே படிச்சே? என்ன பண்ணுவே? எப்படி இப்படி பத்திரிகையாளரா இருக்காரு. எப்படி உங்களுக்கு இவ்வளவு கற்பனை வருது. எப்படி இப்படி எழுதறீங்க? இதே எப்படி எப்படி எப்படி தான்" என்று சிரித்தாள் சரஸ்வதி.

"ஓஹோ அப்படியா?" என்றான் தம்பி.

"நல்லா ஆச்சு போ. அவ எப்படி, நீ அப்படியா?" என்று அக்கா மறுபடியும் சிரித்தாள்.

கதையில் ஆழ்ந்தவுடனேயே சகோதரியின் முகத்திலும் அகத்திலும் ஒரு மகிழ்ச்சி பொங்குவதை அவனால் உணர முடிந்தது. அந்த மகிழ்ச்சிதான் கணவரைப் பிரிந்து வந்திருக்கிறோம் என்ற பிரிவைக் கூட சமன் செய்தது என்று தோன்றியது.

இன்னொன்றும் புரிந்தது, அப்படி ஒன்றும் பிரிவாற்றாமைக்காக அக்கா ஏங்கிப் போகவில்லை அதற்கு மச்சான் ஒன்றும் அக்காவை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள வில்லை என்பதும் அவனுக்கு தெரியும்.

ஆனால், அதைச் சுட்டிக் காட்டினால் அக்காவின் மனது வாடுமே என்பதற்காக அவன் குடும்ப விஷயங்களையே பேசுவது இல்லை. இருந்தாலும் அக்கா தம்பி இப்படிக் கண்டு கொள்ளாமல் இருக்கிறானே என்று நினைத்து விடக் கூடாது என்பதற்காக அவ்வப்போது ஒன்றிரண்டு கேள்விகளையும் கேட்டுக் கொள்ளுவான்.

இப்போதும் அதைப் போலவே "ஏங்கா குட்டீஸ் ரெண்டு பேரும் அவங்க அப்பாவைக் கேட்கறது இல்லையா?" என்று கேட்டான்.

அக்காவின் முகத்தில் வேதனையின் சாயல் படிந்தது. "எப்பவாவது அவரைப் பத்தி பேசறாங்க. ஆனால், போய் பார்க்கணும்னெல்லாம் தோன்றது இல்லை?" என்றாள்.

பைந்தமிழ் பாரி கவனமாக தன்னுடைய கருத்தைச் சொல்லுவதை தவிர்த்தான். நீண்ட தொரு பெருமூச்சும் விட்டான்.

அக்கா மறுபடியும் "அது..... அவரு எப்பப் பாரு வெளியூருலயே இருந்துட்டாரா. அதனால இந்தக் குழந்தைங்களுக்கு தெரியலை. அதுவும் இருக்கலாம்" என்று அவன் மேம்போக்காக சொல்லுவது போல சொல்லி விட்டான்.ஆனால், அன்றைக்கு அலுவலகத்தில் ஒரு விஷயம் நடந்திருந்தது. அதை அவன் சகோதரியிடம் சொல்ல வில்லை.

ஏனோ, அன்றைக்கெல்லாம் அவன் உற்சாகமாகவே இருந்தான். அதிகாலையில் சங்கமித்ராவை ரயில் நிலையத்தில் சந்தித்த சந்திப்புதான் அதன் காரணமோ என்னவோ தெரியவில்லை அவன் மனத்திலே உற்சாகம் பொங்கிக் கொண்டிருந்தது.

அதிலும் தன்னைப் பற்றி சங்கமித்ரா அக்காவிடம் அடிக்கடி கேட்கிறாள் என்பது அவனுக்கு ஒரு பெருத்த மகிழ்ச்சியை தோற்றுவித்திருந்தது.

"சரிக்கா, நான் மித்ராவை வரச் சொல்றேன்" என்று கிளம்பினான். புறம்படும் பொழுது லேசு போல சொல்லுவது போல "அக்கா, இன்னிக்கு விசுவா என்னை பார்க்க வந்திருந்தாரு. அக்கா" என்றான். அடுக்களை நோக்கிச் சென்றவள் டக்கென்று நின்றாள். "விசுவாவா?" என்றாள்.

"ஆமாமா, உடனே தலைவர் தூது அனுப்பிச் சுட்டாருன்னு நினைச்சுக்காதே. இவரா வந்திருக்காரு" என்றான் பாரி.

சரஸ்வதி ஆழ்ந்த பார்வையுடன் அவனைப் பார்த்தாள். "ஏன் தம்பி? அவரு நல்லா இருக்காரு தானே. அவருக்கு உடம்புக்கு ஒண்ணும் இல்லையே?" என்றாள்.

தான் ஆடா விட்டாலும் தன் சதை ஆடும் என்பது போல அக்காவின் பரிதவிப்பு அவனுக்கு புரிந்தது.

"இல்லைக்கா. அதெல்லாம் ஒண்ணும் இல்லையாம். நல்லாதான் இருக்காராம். இப்படி எழுதறா பாரு" ன்னு மட்டும் புலம்பிட்டு இருக்காராம்."

சரஸ்வதி நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

"ஏன் தம்பி? இந்த ப்ளானை ட்ராப் பண்ணிடலாமா?" என்றாள்.

அப்பொழுதுதான் பைந்தமிழ் பாரியின் முகத்தில் கோபத்தைப் பார்த்தாள்.

"சும்மா இருக்கா நீ. எவ்வளவு பெரிய பத்திரிகை ஆசிரியர் அவரு கேட்டிருக்காரு. நாம ஒத்துக்கிட்டாச்சு. அதுக்கப்புறம் என்ன பேச்சு அது?"

"சரி தம்பி, சரி தம்பி," என்று சமாதானக் கொடி பிடித்தாள் அக்கா.

"சரிக்கா. நீ ஒண்ணும் ஓர்ரி பண்ணிக்காதே. எல்லாம் நல்லதாத்தான் நடக்கும். இப்போதைக்கு நீ இந்தத் தொடர்கதையில மட்டும் கான்சன்ட்ரேட் பண்ணு" என்றான்.

"சரி தம்பி" என்றாள் அக்கா.

வாயில் வரை சென்றவன் "அக்கா சில நேரங்கள்ல சில பிரிவுகள் வந்து சிந்தனையைத் தூண்டும் அக்கா. நீ ரொம்ப பக்கத்துலயே எப்பவுமே அம்மா வீட்டுக்கு கூட போகாம அவருக்கு சேவகம் பண்ணி அவரைக் கெடுத்து வச்சிருக்கறே. உனக்கு போக்கிடமே இல்லைன்னு அவரு நினைச்சுட்டிருக்காரு. உனக்கு போக்கிடம் இருக்கு. உரிமையா இருக்க இடம் இருக்கு. நீயும் ஒரு தனி

ஆள்தான். உன்னுடைய ஸ்டேட்டஸ் எந்த விதத்துலயும் குறைஞ்சது இல்லை என்பதையெல்லாம் அவரு புரிஞ்சுக்கிட்டாலே அவருடைய ஆக்டிவிட்டிஸ்ல ஒரு மாற்றம் வரும்க்கா'' என்றான்.

''சரி தம்பி நீ என்ன சொன்னாலும் சரி. நீ எனக்கு நல்லதுதானே சொல்லுவே?'' என்றாள் அக்கா.

''சரிக்கா. நான் இளம்பறேன்'' என்று கிளம்பினான்.

அதே சமயத்தில் சங்கமித்ரா படியேறி வந்தாள்.

''இதோ பாரு, உனக்குத் துணை வந்தாச்சு'' என்று சிரித்தான்.

''அதே தான் நானும்'' என்று அவள் ஆரம்பித்தாள்.

''ஆண்டவா,'' என்று காதைப் பொத்திக் கொண்டு அவசர அவசரமாக அவன் படியிலே இறங்கி ஓடினான்.

சரஸ்வதிக்கு இது தெரியாது அல்லவா அவள் ''என்ன இது, இந்த ஓட்டம் ஓடறான்'' என்று ஆச்சரியமாகப் பார்த்தாள்.

காலையில் ரயில் நிலையத்தில் நடந்த கலாட்டாவையும் அப்போது இருந்தே ''அதேதான் சொல்ல வந்தேன்'' என்று இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் கலாய்த்துக் கொண்டதை அவள் சொல்லவும் சரஸ்வதி வாய்விட்டுச் சிரித்தாள். நல்லா ஆச்சு போ என்றவள் ஒரு கேள்வியைக் கேட்டாள்.

அந்தக் கேள்வியைக் கேட்டவுடன் சங்கமித்ரா திகைத்து நின்றாள்.

அதே நேரத்தில் சங்கமித்ராவின் செல்ஃபோன் ஒலித்தது. கையிலே எடுத்தாள். யாருடனோ பேசினாள்.

அத்தியாயம் - 18

வேலையே ஓடவில்லை சங்கமித்ராவுக்கு.

எதிரிலே அந்தப் பேரேட்டை வைத்துக் கொண்டு விழித்துக் கொண்டிருந்தாள். கண்கள் திறந்திருந்தது. ஆனால் மனம் எங்கேயோ இருந்தது.

நேற்று சரஸ்வதி ஆன்ட்டி கேட்ட கேள்வி அவளைக் கொஞ்சம் உலுக்கிப் போட்டிருந்தது. சங்கமித்ராவும் பைந் தமிழ் பாரியும் ஒருவரை ஒருவர் கேலி செய்து கொள்வதும் வாரிக் கொள்வதுமாக பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த சரஸ்வதி என்ன நினைத்தாளோ என்னமோ ''வா மித்ரா உள்ளே போகலாம்'' என்று அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

சங்கமித்ராவுக்கு அந்த ஸ்வாதீனம் மிகவும் பிடித் திருந்தது. அவளும் மகிழ்ச்சியாக உள்ளே சென்றாள்.

''என்னது, இது இரண்டு பேரும் சிரிச்சுட்டீங்க'' என்று கேட்டாள்.

''அது ஒண்ணும் இல்லை'' என்று அவள் விளக்கியதைக் கேட்டதற்குப் பிறகு தான் அந்த சந்தேகம் சரஸ்வதிக்கு வந்தது.

''என்னது பாரி, உங்கிட்ட இவ்வளவு ஜாலியா பேசறானா?'' என்று கேட்டாள்.

''எல்லாருகிட்டயும்தான் ஜாலியா பேசுவாரு. பசங்ககிட்ட ரொம்ப ஜாலியா பேசுவாரு'' என்றாள் அவள்.

''பேசுவான். ஆனா பொண்ணுங்ககிட்ட கொஞ்சம் விலகி நிப்பானே'' என்றாள்.

பிறகு தனக்குத் தானே சொல்லிக் கொள்வது போல "இல்லை, இல்லை, டவுனுககு வந்து ரொம்ப நாளாச் சுல்லே. கிராமத்துல இருக்கற வரைக்கு அளவாத்தான் பேசுவான். இங்க வந்து கொஞ்சம் ஃப்ரீயா பழகிட்டான் போல இருக்கு" என்றாள்.

"ஆமாம், பத்திரிகைத் துறையில வேற இருக்காரு. பெண்களைக் கண்டா கோடு போட்டு விலகினா ஆகுமா?" என்றாள் சங்கமித்ரா.

"அதானே" என்று சிரித்துக் கொண்டாள் சரஸ்வதி.

"இன்னைக்கு என்னமோ புது ரெஸிப்பி பண்றேன்னு சொல்லிட்டு இருந்தீங்களாம்" என்று கேட்டாள் சங்கமித்ரா.

"அதுக்குள்ளே அதெல்லாம் ஒப்பிச்சுட்டானா?" என்று சிரித்தாள் சரஸ்வதி.

"இல்லை, கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ஃபோன்ல பேசிட்டு இருந்தோமில்லே. அப்ப சொன்னாரு."

"ஆமா, இந்தக் குழந்தைங்களுக்கு ஏதாவது புதுசா செஞ்சு கொடுக்க வேண்டியது இருக்கு. அதனால ஏதாவது ஒண்ணு பண்ணுவோம் என்று யோசிச்சுட்டு இருந்தேன்"

"என்ன பண்ணப் போறீங்க?" என்று கேட்டாள் சங்கமித்ரா.

"இன்னும் முடிவு பண்ணலை. வாயேன் நீயும், நானும் ரெண்டு பேருமா யோசிச்சு ஏதாவது ஒண்ணு செய்வோம்" என்றாள்.

"ம்ஹூம்" என்று சொன்னவள் இனிப்பா, காரமா?" என்று கேட்டாள்.

"எது வேண்ணா பண்ணினாப் போச்சு" என்றாள் சரஸ்வதி.

"சரி முதல்லே வீட்ல என்ன இருக்குன்னு பாருங்க."

"என்ன இருக்கு? எல்லாமே இருக்கு. நீதான் புதுசா சொல்லேன்" என்றாள்.

சங்கமித்ரா அப்பொழுது "கேரெட் கேசரி செய்வோமா?" என்றாள்.

"அதெப்படி கேரட் கேசரி" என்றாள்.

"இல்லை, ஒரு ட்ரையல் பார்க்கலாமே. ரவா கேசரியிலேயே கொஞ்சம் கேரட் வேக வச்சு எடுத்து துருவி கலந்துட்டா கேரட் கேசரி" என்றாள்.

"ஓஹோ, வெஜிடபிள் உப்புமாவுக்கு பதிலா இனிப்பு போட்டு செய்யறது" என்று இரண்டு பேரும் வேடிக்கையாக பேசிக் கொண்டிருந்த நேரத்தில் சற்றும் எதிர்பாராத விதமாக அந்தக் கேள்வியைக் கேட்டாள் சரஸ்வதி.

"ஏன் மித்ரா, உனக்கு பைந்தமிழ் பாரியை உனக்கு ரொம்பப் பிடிக்குதா?" என்றாள்.

"ஏன் பிடிக்காம என்ன? ரொம்பப் பிடிக்குமே" என்றாள் சங்கமித்ரா.

கேட்டதற்குப் பிறகுதான் சரஸ்வதிக்கு தோன்றியது. நகரங்களில் எல்லா பெண்களும் எல்லா பையன்களிடம் சமமாகத்தான் பழகுகிறார்கள். சமமாகப் பேசுகிறார்கள். அதற்காக இருவருக்கும் இடையே ஏதோ இருக்கிறதென்று முடிவு கட்டி விடலாமா என்று யோசித்தாள் சரஸ்வதி.

இந்த இடைவெளிக்குள்ளாக சங்கமித்ராவும் சுதாரித்துக் கொண்டாள். "ஆமாம் எனக்கு பைந்தமிழ் பாரியை ரொம்பப் பிடிக்கும்" என்றாள் மறுபடியும்.

"எப்படி பாஸ் மாதிரியா? இல்லை வேற மாதிரியா?" என்றாள் சரஸ்வதி.

"வேற மாதிரின்னா?" என்று கேட்டாள் சங்கமித்ரா.

"இல்லை நாங்க பாரிக்காக பொண்ணு பார்த்துட்டு இருக்கோம். உன்னை மாதிரி பொண்ணு இருந்தா நல்லா இருக்கும். ஒருவேளை இரண்டு பேருக்குமேள்ளயும் லைக்கிங் இருந்தா" என்று இழுத்தாள்.

சங்கமித்ரா பயந்து போனாள். "ஐயோ என்னங்க நீங்க?" என்றாள்.

சரஸ்வதி சட்டென்று அவளுடைய தோளை தட்டிக் கொடுத்து "நான் ஒரு ஃப்ரெண்டா நினைச்சுட்டுத்தான் கேட்கறேன். பாரியோட அக்காங்கறது ரெண்டாவது. உன்னோட மனசுல ஏதாவது இருந்தா எங்கிட்ட சொல்லு"என்றாள்.

ஒரு நிமிடம் விழித்த சங்கமித்ரா.

சரஸ்வதியைப் பார்ப்பதும் தலையைக் குனிந்து கொள்ளுவதுமாக கொஞ்ச நேரத்தைக் கடத்தினாள். "நீ படபடப் பாகாதேம்மா. உட்காரு" என்று அவளை டைனிங் டேபிள் சேரில் வைத்தாள் சரஸ்வதி.

"பட்டுன்னு கேட்டுட்டேனோ?"

"நானே இந்தக் கேள்வியை இதுவரைக்கும் என்னை நோக்கி கேக்கலை. நீங்க கேட்டுட்டீங்க" என்றாள்.

"தப்புப் பண்ணிட்டேனோ?" என்றாள் சரஸ்வதி.

"இல்லை இல்லை, தப்பெல்லாம் ஒண்ணும் இல்லை. உங்களுக்கு மனசுல தோன்றினதை கேட்டீருக்கீங்க. ஆனா

நீங்க கேட்டதுக்கு அப்புறம் தான் நானே அனலைஸ் பண்றேன்" என்றாள்.

அன்புடன் அவளைப் பார்த்த சரஸ்வதி உள்ளே பொங்கிய அன்பின் காரணமாக அந்த இளம் பெண் தடுமாறுவதை புன் சிரிப்புடன் பார்த்தாள்.

மெல்ல அவள் முகத்தை நிமிர்த்தினாள். "தைரியமா சொல்லு" என்றாள்.

கண்களை படபடவென்று அடித்துக் கொண்ட சங்கமித்ரா "எனக்குப் பாரியை ரொம்பப் பிடிக்குது ரொம்பவே பிடிக்குது" என்றாள்.

"அப்படிப் போடு" என்று சிரித்தாள் சரஸ்வதி. "அவனோட மெண்டாலிட்டி என்னன்னு தெரியுமா உனக்கு?" என்று கேட்டாள். "இல்லை, ஆனா நல்லா பழகறாரு. எங்கிட்ட கொஞ்சம் ஃப்ரியா பழகற மாதிரிதான் தெரியுது. ஆனால், நீங்க சொன்ன மாதிரி எல்லாருமே ப்ரியாதான் பழகிக்கிறாங்க அதை வச்சுகிட்டு எந்த முடிவும்..." என்று இழுத்தாள்.

"அட பெண்ணே" என்பது போலப் பார்த்து விட்டு "அவன் கூட வீட்டுக்கு வந்தா உன்னைப் பத்திதான் பேசறான் தெரியுமா" என்றாள்.

"ம் அப்படியா?" என்றாள் சங்கமித்ரா ஆர்வமாக.

"ஆமா மித்ரா, அந்த ஜோக் அடிச்சது மித்ரா இப்படிச் சொல்லுச்சு. மித்ரா இன்னிக்கு நல்ல ஐயிட்டமா கொண்டு வந்தது சாப்பிடன்னு ஏதாவது சொல்றான். யாரைப் பத்தியும் அவன் எங்கிட்ட இப்படியெல்லாம் சொன்னது இல்லை" என்றாள்.

மித்ரா என்ன பேசுவது என்று தெரியாமல் சரஸ்வதி யினுடைய முகத்தை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

சரஸ்வதி எதிரிலே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தாள்.

"பாரி ரொம்ப நல்லவன் மித்ரா. அருமையான பையன். அவனுக்கு எந்தப் பொண்ணு கிடைச்சாலும் அந்தப் பொண்ணு பாக்கியசாலிதான். அதிர்ஷ்டசாலிதான்" என்றாள் நெகிழ்வுடன்.

"அப்படின்னா அந்த அதிர்ஷடம் எனக்கு கிடைக்கும் கறீங்களா?" என்றாள் மித்ரா.

"தெரியலையேம்மா. உங்க குடும்பத்தை பத்தி எங்களுக்கு எதுவும் தெரியாது. ஆனா இந்த ஈர்ப்பெல்லாம் குடும்பத்தைப் பொறுத்தா வருது. இப்ப எனக்கு அரேஞ்ஜ்ட் மேரேஜ்ல கூட டவுட் வருது.எங்க வீட்ல எல்லாம் நல்லாத்தான் பார்த்து பண்ணி வச்சாங்க" என்று இழுத்தவள் சட்டென்று நிறுத்திக் கொண்டாள்.

சங்கமித்ரா புரிந்து கொண்டிருந்தவள் போல டைனிங் டேபிள் அவள் வைத்திருந்த கையின் மேல் தன்னுடைய கையை வைத்து அழுத்திக் கொடுத்தாள்.

"அதைப் பத்தி பேசவேண்டாம் அக்கா. நீங்க சங்கடப் படவேண்டாம்" என்றாள்.

சட்டென்று சுதாரித்துக் கொண்டாள் சரசு. "அதானே நல்ல விஷயமா பேசுவோம். சந்தோஷமா பேசுவோம்" என்றவள். "உனக்கு பாரியைப் பத்தி அவனை எப்படி ஹட்ராக்ட் பண்றதுன்னு நான் வேண்ணா ஐடியா கொடுக்கட்டுமா?" என்று கேட்டாள்.

அவளுடைய யதார்த்தமான அந்தப் பேச்சைக் கேட்டு சங்கமித்ரா பளீரென்று சிரித்தாள். "ஐயோ அக்கா நீங்க புரிஞ்சுக்கிட்டது அவ்வளவுதானா," என்றாள்.

என்ன சொல்கிறாள் இந்தப் பெண் என்பது போல் சரஸ்வதி பார்க்க.

"அப்படியெல்லாம் பாரியை கவர முடியாதுக்கா. எது நடிப்பு எது உண்மையான பர்ஸனாலிட்டின்னு அவரு கண்டுபிடிச்சுடுவாரு."

"அப்ப சரி, உண்மையா இரு, இயல்பா இரு" என்றாள் சரஸ்வதி.

"நான் உண்மையாதான் இருக்கேன். ஆனா அவரு பக்கத்திலிருந்து எப்படின்னு தெரிஞ்சுக்காம நான் எப்படி?" என்று வெட்கப்பட்டாள்.

"அடேயப்பா, எவ்வளவு படிச்ச பொண்ணா இருந் தாலும் சரி இந்த விஷயம்னா வெட்கப் படுவீங்க?" என்று சிரித்தாள் சரஸ்வதி.

"பரம்பரைக்கா, ஜீன். அறிவு வந்து வெட்கப்படத் தேவையில்லைன்னு சொல்லுது. ஆனால் பழக்கம்" என்றாள்.

"ஏய் நீ வெட்கப் படும்போது ரொம்ப அழகா இருந்தே தெரியுமா?" என்றாள் சரஸ்வதி.

அவள் மேலும் வெட்கப்பட்டாள். "இப்படி ரெண்டு தடவை வெட்கப்பட்டீன்னா அவன் கவுந்துடுவான்." அதற்கும் அவள் வெட்கப்பட்டாள்.

"சரி, நான் உனக்கு ஹெல்ப் பண்றேன்" என்றாள் சரஸ்வதி. "எப்படி?" என்று பார்த்தாள் சங்கமித்ரா.

"அதெல்லாம் சொல்ல மாட்டேன். ஆனா, நீ இங்க அடிக்கடி வந்து போ. எங்கூட கொஞ்ச நேரம் இரு. அந்த நேரம் பார்த்து அவன் வர்ற மாதிரி பார்த்துக்கறேன். அப்போ அவனுடைய ரியாக்ஷன் பார்த்துட்டு அதுக்குத் தகுந்த மாதிரி நாம ப்ளான் பண்ணலாம்" என்றாள்.

மறுபடியும் சங்கமித்ரா களீரென்று சிரித்தாள். "அக்கா நீங்க மேட்ச் மேக்கிங் பண்றீங்களா? நீங்க அவரோட சிஸ்டர் அக்கா" என்றாள்.

"ஸோ வாட். என் தம்பிக்கு அருமையான ஒரு பொண்ணு வருதுன்னா நான் அதை பார்க்க மாட்டேனா? அதுக்கான ஏற்பாடுகளை செய்ய மாட்டேனா. அப்படித்தான் இதுன்னு வச்சுக்கயேன்" என்றாள்.

"கொஞ்ச நாள் தான் எங்கிட்ட பழகியிருக்கீங்க நீங்களே சொல்லிட்டீங்க என் ஃபேமிலி எப்படின்னு தெரியாதுன்னு சொல்லிட்டீங்க. அப்புறம் எப்படி அக்கா?" என்று ஆச்சரியமாக கேட்டாள் சங்கமித்ரா.

"இங்கே பார். ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதமாம். அது மாதிரி ஒருத்தருடைய இயல்புங்கறது ஒண்ணு ரெண்டு நாள்லயே தெரிஞ்சிடும். உன்னுடைய இயல் பெல்லாம் எனக்கு பிடிபடுது."

"ஒரு வாரத்துலயே அட்ராக்ட் பண்ணிட்டேனா. அடேயப்பா கிரேட் அச்சீவ் மெண்ட்" என்று குதிப்பது போல நடித்தாள் சங்கமித்ரா.

"ஆனா அவங்கிட்ட ரொம்ப நாளா பழகிட்டிருக்கியே? நீ வேலைக்கு வந்து எவ்வளவு மாசம் ஆச்சு?".

"அது ஆச்சு மூணு மாசம்" என்றாள் சங்கமித்ரா.

"சரி, என்ன பண்ணலாம்" என்று தீவிரமாக சரஸ்வதி திட்டமிடுவதைப் பார்த்து சங்கமித்ரா அன்புடன் அவளைப் பார்த்தாள்.

"அக்கா பேசாம இருங்க, இப்படியே விட்டுடுங்க. எது வந்தாலும் அது இயல்பா வரணும். அப்படியே பாரிக்கு வரட்டும். வந்தால் எனக்கு சந்தோஷம். வரலைன்னா அதுக்காக நான் கவலைப்பட மாட்டேன். பெரிய இழப்புதான். ஆனால் என்ன செய்யமுடியும்?" என்றாள் மித்ரா.

"அப்பா, விக்கிரமாதித்தன் பாட்டி மாதிரி பேசறா" என்றாள் சரஸ்வதி.

அவளுக்கே அவளைக் குறித்து ஆச்சரியமாக இருந்தது. இந்தப் பெண்ணிடம் தானும் கூட இவ்வளவு விளையாட்டாகப் பேசுகிறோமே என்றிருந்தது. அதிலும் தன் மனசுக்குள்ளே இருக்கிற கவலையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு இப்படி பேசுகிறோமே என்று ஆச்சரியமாக இருந்தது.

ஒரு பூ மலர்வது போல ஒவ்வொருவர் உள்ளத்திலும் மகிழ்ச்சியை இந்தப் பெண் மலரச் செய்கிறாள். இவள் எங்கே இருந்தாலும் அந்த இடம் கலகலப்பாக இருக்கிறது என்றெல்லாம் எண்ணிக் கொண்ட அவளுக்கு சங்கமித்ராவை மிகவும் பிடித்துப் போயிருந்தது.

அதே சமயத்தில் ஒரு சுயமரியாதையுடன் நானே பார்த்துக் கொள்கிறேன் என்று அவள் சொல்வதும் அவளுக்குப் பிடித்தது. "ஓ.கே. உனக்கு செல்ஃப் ரெஸ்பெக்ட். என்ன ஹெல்ப் வேணும்னாலும் கேளு.நான் என் சைட்ல இருந்து என்ன ஹெல்ப் வேண்ணாலும் தரேன்" என்றாள்.

"தாங்க்ஸ் அக்கா" என்றாள் சங்கமித்ரா.

அந்த நேரத்தில் ஃபோன் ஒலித்தது. காதுக்கு கொடுத்தாள். காதுக்கு செல் போனை கொடுக்கும் போதுதான் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

அடடா, நேற்று நடந்த நிகழ்வு தலைக்குள் ஓடிக் கொண்டிருக்கிறது. அலுவலகத்தில் இருக்கிறோம் என்பதை மறந்து விட்டாள்.

"எஸ். சொல்லுங்க நாங்கள் இருக்கிறோம்" என்றாள்.

"நீங்க இருக்கறீங்கன்னு எங்களுக்கு தெரியும். அங்கே என்ன பண்ணிட்டு இருக்கீங்க?" என்று அந்தப் பக்கம் ஒரு குரலைக் கேட்டாள். அந்தக் குரலைக் கேட்டவுடனேயே சங்கமித்ராவின் முகம் மாறியது.

கலவரம் தோன்றியது.

அத்தியாயம் - 19

தன் முன்னால் அமர்ந்திருந்த தன்னுடைய வாலண்டியர்களை அன்புடன் பார்த்து புன்னகைத்தான் பைந்தமிழ் பாரி.

செந்திலும், சுசீந்திரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "அண்ணா, என்னத்துக்கு அண்ணா இந்த மீட்டிங்?" என்றான் சுசீலன்.

"ஒண்ணும் இல்லைப்பா. சங்கமித்ரா ஒரு மேட்டர் சொல்லுச்சு. அது வரதுக்குள்ளே பேசிடுவோம் அப்படின்னு தான் உங்களையெல்லாம் கூப்பிட்டேன்" என்றான்.

அங்கிருந்தவர்கள் அத்தனை பேரும் ஆண்கள் "என்ன விஷயம் சங்கமித்ராவுக்கு? ஏதாவது அலையன்ஸ் பார்க்கப் போறீங்களா?" என்றான் கண்ணன்.

"அலையாதடா" என்று அவன் தலையில் நங்கென்று வைத்தான் சுசீலன்.

"அண்ணே அடிக்கறதுக்கு சான்ஸ் பார்த்துட்டு அடிக்கிறான். நீங்க இருக்கீங்கன்னு நான் பேசாம வாங்கிக்கறேன். அப்புறம் திருப்பிக் கொடுத்துடுவேன்" என்று புகார் சொன்னான் அடி வாங்கியவன்.

"அப்பா, சும்மா இருங்கப்பா. நேரம் தெரியாம விளையாடிட்டு. அந்தப் பொண்ணு இன்னும் பத்துப் பதினைஞ்சு நிமிஷத்துல வந்துடும். அதுக்குள்ள பேசி முடிக்கணும்."என்றான் கடுப்பாக. எல்லாரும் ஒரு ஒழுங்குக்கு வந்தார்கள்.

"இல்லப்பா மித்ரா சொல்லுது. மித்ராவோட ஃப்ரெண்ட்ஸ் ரெண்டு மூணு பேரு அவங்களா சர்வீஸ் பண்ணிட்டு இருந்தாங்களாம். மித்ரா "நான் துணிச்சலா இங்க வந்து கேட்டு உள்ள நுழைஞ்சுட்டேன். ஃப்ரெண்ட்ஸ் ரெண்டு மூணு பேரு இருக்காங்க. கொண்டு வந்து ஜாய்ன் பண்ணிடட்டுமான்னு கேட்கறா."

உடனே செந்தில் வாயெல்லாம் பல்லாக சிரித்தான்.

"இதுக்கென்னண்ணா மீட்டிங்? டப்புன்னு சரின்னு சொல்லிட்டு போவீங்களா?" என்றான்.

"பார்த்தியா இதுக்காகத்தான் மீட்டிங்கே. பொண்ணுங்க வந்தா நீ இந்த மாதிரி ஃப்ரீயா இருக்க முடியாது. நீங்க பாட்டுக்கும் கலாட்டாவா இருக்கீங்க. நானும் ஓர்க் நடக்குதுன்னு கண்டுக்கறது இல்லை.ஆனா பொண்ணுங்க வந்தா கண்டிப்பா டிசிப்ளின் எதிர் பார்ப்பேன்டா" என்றான்.

"டிசிப்ளின்னா எந்த மாதிரி?" என்றான் கண்ணன்.

"எந்த மாதிரிண்ணா?"

"இந்த மாதிரி சிரிக்கறது. கண்ட ஜோக் அடிக்கறது. இந்த மாதிரியெல்லாம் இருக்கக் கூடாது" என்றான்.

செந்தில் இடையில் புகுந்து "ஏண்ணா வர்ற பொண்ணுங்கள்ளே ஒரு பொண்ணுக்கு என்னைப் புடிக்குது. அந்தப் பொண்ணுக்கும் என்னை புடிக்குது அப்படின்னா?" என்றான்.

"அடப்பாவி, ஆரம்பிச்சுட்டாண்டா" என்று தலையிலே கையை வைத்துக் கொண்டான்அடுத்தவன். பைந்தமிழ் பாரி சிரித்தான். "இங்க பாருங்கப்பா. நீங்களும் ஒண்ணும் குழந்தைங்க இல்லை. வரப் போறவங்களும் ஒண்ணும் குழந்தைங்க இல்லை. உங்களுக்குள்ள யாருக்காவது ஒருத்தருக்கு ஒருத்தர் ஈர்ப்பு இருந்து அது டெவலப் ஆனா அது உங்க தலைவலி.ஆனா அதை ஆபீஸுக்குள்ள வச்சுக்கக் கூடாது. அதுல எந்தப் பஞ்சாயத்துக்கும் நான் வரமாட்டேன். ஆனா, எந்த அந்த மாதிரியான அஃபையரா இருந்தாலும் சீரியஸா இருந்தா மட்டும் தான் நீங்க இறங்கணும். சும்மா இன்னிக்கு கிளப் நாளைக்கு தியேட்டர்ல நாளனைக்கு டாட்டான்னா ஒத்து வராது" என்றான் பாரி.

"ஓ.கே. ஓகே. ரெண்டு பக்கம் ஓகேன்னா டபுள் ஓகே. ஏண்ணா?" என்றான்.

"நான் சர்வீஸ் பத்தி பேசிட்டு இருக்கேன். நீ எதைப் பத்திடா பேசிட்டிருக்கே?" என்றான் பைந்தமிழ் பாரி.

"இல்லைன்னா பெண்கள் வராங்கன்ன உடனே தானே மீட்டீங் போடறீங்க. பெண்கள் வந்தா வர்ற பிரச்சினை

இதுதானே? அதனால தான் நான் கேட்டு கிளியர் பண்ணிக்கறேண்ணா".

"ஆமாண்ணா, இப்போ ஒண்ணும் இல்லைண்ணா. உங்களுக்கும் சங்கமித்ராவுக்குமே ஒரு நல்ல பொருத்தம் இருக்குது. நாளைக்கு உங்களுக்குள்ளேயே" என்று ஆரம்பித்தான் கண்ணன்.

"டேய் பேசாம இருடா, பேசாம இருடா" என்றான் செந்தில்.

"விடு விடு, பேசட்டும்."

"இல்லைண்ணா, உங்க ரெண்டு பேத்துக்கும் ஒரு ஈடுபாடு வந்துச்சுன்னு வச்சுக்கோங்க எங்களை விட சந்தோஷப்படறவங்க யாரும் இருக்க மாட்டாங்க."

"ஏண்டா சர்வீஸ் பண்ணுங்கன்னா எனக்குப் பொண் பார்த்துட்டு இருக்கீங்களா நீங்க? அதை நான் பார்த்துக்கு வண்டா".

"சரிண்ணா சரிண்ணா,டேய் அவரே நேரே மித்ராகிட்ட ப்ரபோஸ் பண்ணிக்கிறாராண்டா" என்றான்.

"ஏய் உதை வாங்குவீங்க" என்றான் பைந்தமிழ் பாரி.

"ஓகேடா, சீரியஸ் மேட்டருக்கு வாங்கடா"என்றான்,

அவர்கள் எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பைந்தமிழ் பாரி ஆமாம் என்றும் சொல்லாமல் இல்லை என்றும் சொல்லாமல் நழுவி விட்டதை கவனித்துக் கொண்டார்கள்.

"இல்லைப்பா. நாலு பேரு வர்ற இடம் போற இடம். அந்தப் பொண்ணுங்களுக்கு நாம பாதுகாப்பா இருக்கணும். அது ரொம்ப முக்கியம். நீங்க எல்லாருமே சர்வீஸ்

மைண்டடா தான் இங்க வந்திருக்கீங்க. எல்லாருமே பொறுப்பான பசங்க எனக்குத் தெரியும். இருந்தாலும் நாளைக்கு எந்தப் பிரச்சினையும் வந்துடக் கூடாதுன்னு தான் இப்ப இந்த மீட்டீங்கே. வரப் போற பொண்ணுங் களைப் பத்தி எனக்குத் தெரியாது. அவங்களோட மெச்சூரிட்டி பத்தி எனக்குத் தெரியாது. ஆனா உங்க மேல எனக்கு நம்பிக்கை இருக்கு. உங்க மெச்சூரிட்டிக்கு ஏற்ப எப்படி நடக்கணுமோ நடந்துக்கங்க'' என்றான்.

''சரிங்கண்ணா, உங்களுக்கு எங்களால எந்த கெட்ட பேரும் வராது. போதுமா?'' என்றார்கள்.

''அவ்வளவுதாம்பா எனக்கு வேணும். மத்தபடி எல்லாம் உங்க சுதந்திரத்துல நான் தலையிட மாட்டேன். ஆனா நாகரீகமா போறது வெரி இம்பார்ட்டன்ட்''.

''சரிங்க அண்ணா, சரிங்க அண்ணா'' என்றார்கள்.

அதற்குள்ளாக கண்ணன் ''அண்ணா, மித்ராவோட வண்டி சவுண்ட் கேட்குது'' என்றான்.

''பார்றா, வண்டி சத்தமெல்லாம் நோட் பண்ணி வச்சிருக்கான்'' என்றான்.

பாரி சிரித்தான். ''கண்ணனோட வண்டி தெரியுமாடா உனக்கு?''

''இந்த தடியனோட வண்டி சத்தம் கேட்டு நான் என்ன பண்றது.?''

''ஓகே ஓகே மீட்டிங்ன்னா அந்தப் பொண்ணு வந்து என்ன ஏதுன்னு கேட்கும். நகருங்க'' என்று கிளப்பி விட்டான்.

அவரவர்கள் ஏதோ வேலை இருப்பது போல நகர்ந்து விட்டார்கள்.

செந்திலை மட்டும் ''நீ உட்கார்'' என்று உட்கார வைத்து விட்டான்.''என்னடா ஜோக் அடிக்கறீங்க?''.

''இல்லைண்ணா. சீரியஸாதான் மித்ராவுக்கும் உங்களுக்கும் நிறைய பொருத்தம் இருக்கு. அப்படின்னு நாங்க நினைச்சோம். ஆனா அந்தப் பொண்ணு குடும்பம் எப்படியோ உங்க நினைப்பு எப்படியோ தப்பா நினைக்கா தீங்க அண்ணா'' என்றான்.

''மஸ்கா போடறே. ஏண்டா?'' என்றான் பைந்தமிழ் பாரி. ''சரி விடு. இண்ணைக்கு என்னென்ன வேலை இருக்குது?'' என்றான்.

அடுத்த பத்து நிமிடங்களுக்குள்ளாக யார் யார் எந்தெந்த அப்பாயிண்ட் மெண்டுக்கு போய் எந்தெந்த வேலைகளை செய்து கொடுக்க வேண்டும் என்ற பட்டியலைக் கொடுத்து விட்டான்.

அநேகமாக எல்லோரும் கிளம்பி விட்டார்கள்.

சங்கமித்ரா உள்ளே வந்தவள். ''குட்மார்னிங் சார்'' என்று அவனுக்கு ஒரு சலாம் போட்டு விட்டு அவளும் போய் தன்னுடைய இருக்கையிலே அமர்ந்து கொண்டாள்.

அவள் போய் அமர்ந்தவுடனேயே ஒன்றிரண்டு ஃபோன்கள் வந்தன. அவைகளுக்கு சரியான முறையில் கவனம் கொடுத்து விளக்கம் சொல்லி போனை வைத்தாள்.

போனை வைத்து விட்டு திரும்பினாள். செந்தில் குறுகுறுவென்று தன்னைப் பார்ப்பதை கவனித்தாள்.

''ஹலோ, இங்க வாங்க'' என்று சொடுக்குப் போட்டு அழைத்தாள். செந்தில் பம்மிக் கொண்டே அவள் அருகிலே போனான்.

"என்ன ஒரு மாதிரி பார்க்கறீங்க?" என்றாள். "இல்லை, நீங்க ரொம்ப சூப்பரா வந்திருக்கீங்க. சொன்னா கோச்சுக்குவீங்களோன்னு பயம்" என்றான்.

அவள் சிரித்தாள். "ஐயோ! இதைச் சொல்றதுக்கா இப்படி பயந்தீங்க?" என்றாள்.

"இல்லை ஒருவேளை அண்ணன் தான் இதையெல்லாம் சொல்லணுமோ என்னமோ?" என்றான்.

"அண்ணன்னா யாரு?" என்றாள் சங்கமித்ரா குறுகுறுப்பாக.

"நாளைக்கு உங்களுக்கு வரப்போறவரு எங்களுக்கு அண்ணன் தானே. அவரு தான் சொல் லணுமோ என்னமோ? நாங்களெல்லாம் சொல்லலாமோ கூடாதோ அப்படின்னு நினைச்சேன்" என்றான் செந்தில்.

சங்கமித்ரா சிரித்தாள்.

"பயங்கரமான ஆளு செந்தில் நீங்க!"

"இல்லைங்க, அடி வாங்காம தப்பிக்கணும்னா அப்பப்ப இப்படி பேசிடணும்." என்றான் செந்தில் சீரியஸாக.

மறுபடியும் சிரித்தாள் சங்கமித்ரா. "உங்களுக்கு ஒண்ணும் வேலை இல்லையா?" என்றாள்.

"மேடம், நானும் வெளியிலபோகணும் ஆபீஸை பத்திரமா பார்த்துக்கங்க, பாரி அண்ணனையும் பத்திரமா பார்த்துக்கங்க".

"பேசாம இங்கிருந்து போயிடுங்க" என்றாள் மித்ரா சிரித்துக் கொண்டே.

அதே நேரத்தில் அவளுடைய மேஜை அழைப்பு மணி ஒலித்தது.

"எம்.டி. கூப்பிடறாரு" என்றான் செந்தில் கிண்டலாக.

அவள் புன்னகைத்துக் கொண்டு எழுந்து போனாள். "சரி மேடம். நான் போயிட்டு வரேன்" என்று கையை ஆட்டி விட்டு செந்திலும் வெளியே போனான்.

அலுவலகத்தில் அப்போது யாரும் இருக்க வில்லை. அவள் அவனுடைய கேபினுக்குள் நுழைந்தாள்.

"மித்ரா, இப்ப ஏதோ ரெண்டு மூணு ஃபோன் கால் வந்துச்சுல்ல. அட்டெண்ட் பண்ணினீங்கள்லே".

"ஆமா சார்,"

"மேட்டர் என்ன?".

"இந்த காமாட்சிப் பாட்டி இருக்காங்கள்ல தி.நகர் அபார்ட் மெண்ட்ல அவங்களுக்கு ஏதோ ப்ளம்பர் வேணுமாம். ப்ளம்பிங் ஆளை அரேஞ்ச் பண்ணித் தரச் சொல்றாங்க."

"தி.நகரிலே நம்ம ஜெயராமன் இருக்காரு. அவரைக் கூப்பிட்டு சொல்லுங்க" என்றாள்.

"ஆனா, ப்ளம்பர் தனியா வந்தா ஒத்துக்க மாட்டாங் களாம் நம்ம ஆளுங்க யாராவது போகணுமாம்."

"சரி பசங்க கிட்ட செந்தில்கிட்ட கேளுங்க. யாராவது ஒருத்தர் அரேஞ்ச் பண்ணித் தருவான். நேரா அவங்ககிட்ட பேசி ரெண்டு பேரும் டைம் கிளப் பண்ணிக்கிட்டு போயிட்டு வரட்டும்".

"சரிங்க சார்" என்றாள்.

"அப்புறம் நின்னுட்டே தான் பேசணுமா? உட்கார்றது" என்றவுடன் அவள் எதிர் இருக்கையிலே அமர்ந்தாள்.

"வேற என்ன வேலை இருக்கு?" என்றெல்லாம் அவள் பட்டியலைப் போட இரண்டு பேருமாக ஆலோசித்தார்கள்.

"அவ்வளவுதான் சார்" என்று அவள் எழுந்தாள்.

"இன்னொண்ணு இருக்கே" என்றான்.

"என்ன சார்" என்றாள்அவள்.

"இந்த சுடிதார் உங்களுக்கு ரொம்ப நல்லா இருக்கு. நல்ல கலர் இது. அழகான ரோஸ்" என்றான்.

"இதேதான் செந்திலும் சொன்னார்" என்றாள் அவள் வேண்டுமென்றே.

"அட ஆண்டவா, இந்த வேலையெல்லாம் வேற அவன் பண்றானா?" என்றான் கோபப் படுபவன் போல.

"ஏன் நீங்க, சொல்லும்போது அவர் சொல்லக் கூடாதா?" என்றாள் அவள்.

"அதானே. இல்லை, அவன் முந்திக்கிட்டானேன்னு பார்த்தேன்".

அவள் சிரித்துக் கொண்டே திரும்பவே அவள் கையிலே இருந்த ரைட்டிங் பேட் எகிறி பைந்தமிழ் பாரியினுடைய சுழல் நாற்காலியின் அடியிலே விழுந்து விட்டது.

அவன் குனிந்து எடுக்கப் போக "இல்லை சார் நீங்க அப்படியே இருங்க, நான் வந்து எடுத்துக்கறேன்" என்றாள் அவள்.

அந்த மேஜையை சுற்றிக் கொண்டு போய் அந்த லெட்டர் பேடை எடுத்துக் கொண்டு நிமிர்கையிலேயே அவனும் ஏதோ யோசனையுடன் எழுந்தான்.

"அது அந்த தாத்தா கூப்பிட்டிருந்தாரில்லே" என்று சொல்லிக் கொண்டே எழுந்தான். யதார்த்தமாகத்தான் எழுந்தான் என்றாலும் சங்கமித்ரா நிமிர்ந்தவள் பாரியின் மேல் மோதிக் கொண்டாள்.

ஒரு கணம் இரண்டு பேரும் பேச்சற்றுப் போய் நின்றார்கள்.

அடுத்த கணத்தில் என்ன நிகழப் போகிறதோ என்பது போல ஒரு அமைதி அங்கே நிலவியது.

"ஐ ஆம் சாரி. ஐ ஆம் சாரி" என்றான் பாரி குழைந்து போன குரலில்.

"பரவாயில்லை. பரவாயில்லை" என்று அவள் நகர முயன்றாள்.

நகர முடியவில்லை. ஏதோ ஒன்று இழுத்தது. அவனுடைய சட்டை பட்டனில் அவளுடைய பின்னலின் நுனி மாட்டிக் கொண்டிருந்தது.

"நான் எடுத்துக்கறேன்" என்று அவள் திணறிக் கொண்டே வந்து அவன் அருகில் நின்று அந்த முடிக் கற்றையை மெல்ல எடுத்தாள்.

அந்தச் சின்ன அறையினுடைய இடைவெளியிலே இருக்கும் இடத்தில் இரண்டு பேரும் நெருக்கமாக நிற்க வேண்டிய சூழ்நிலை வந்தது.

"மித்ரா" என்றான் பாரி குழைந்த குரலிலே

"ம்..." என்றாள் அவள். குரலே எழும்பாத ஒரு குரலில்.

ஒரு நிமிடம், அவளை அணைக்கிறாற்போல அவன் கை உயர்ந்தது.

இழைந்து கொடுக்கிறாற் போல அவளும் தான் நின்றாள்.

சட்டென்று தன்னை அடக்கிக் கொண்டவன் போல அவன் கையை விலக்கிக் கொண்டான்.

"ஐ ஆம் சாரி, ஐ ஆம் சாரி" என்றான்.

"பரவாயில்லை பரவாயில்லை" என்று அவளும் நகர்ந்தாள்.

நகர்ந்தவள் வேகமாக அவளுடைய இருக்கைக்கு ஓடி விட்டாள்.

கேபினில் இருந்து எழுந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் வெட்கத்துடனும் படபடப்புடனும் தன்னுடைய இருக்கையில் போய் அமர்ந்திருந்தாள்.

இங்கிருந்து தன்னுடைய டெலிபோனை எடுத்து அவளை அழைத்தான். அவள் வெளியே இருந்து வருகிற அழைப்பு என்பது போல காதுக்கு கொடுத்தாள்.

"நான் ஒண்ணும் பண்ணிட மாட்டேன். டென்ஷன் ஆக வேண்டியது இல்லை. பி ரிலாக்ஸ்ட்" என்று அவன் அவளை ஆறுதல் படுத்தினான்.

"நான் ரிலாக்ஸ்டாத்தான் இருக்கேன்" என்று அவளும் தன்னை தேற்றிக் கொள்ள முயற்சிக்கையிலேயே நல்ல வேளையாக அலுவலகத்தை கூட்டுகிற பெண்மணி உள்ளே வந்தாள்.

"கண்ணு, ஒரு மணி நேரம் லேட்டாப் போச்சு கண்ணு" என்று அவள் உள்ளே வருகையில்.

"பரவாயில்லை பரவாயில்லை" என்று இவள் சொல்லி விட்டு டெலிபோனை ரிசிவரைக் காதில்தான் வைத்துக் கொண்டிருந்தாள்.

"பரவாயில்லைன்னா, எது பரவாயில்லை, எதுக்கு பரவாயில்லை?" என்றான் அவன்

"எல்லாம்தான்" என்று அவள் பதில் சொல்லுகையில் அவன் அந்தப் பக்கம் கலகலவென்று சிரித்தான்.

அத்தியாயம் - 20

"அண்ணே கொடைக்கானல்ல ரூம் போடச் சொல்லிட லாமா" என்றான் விசுவம்.

"ம்..." என்று முகவாய்க்கட்டையை நீவிக் கொண்டான் வனமாலி.

"எவ்வளவு நாளைக்கு அண்ணே போடச் சொல்றது? ஒரு பத்து நாளைக்கு போடச் சொல்லிடுவோமா?" என்றான்.

"யோசிப்போம்" என்றான் வனமாலி அசிரத்தையாக.

"அண்ணே, ரெண்டு மாசமா கதை கேட்டுட்டு இருக்காங்க. நீங்க இழுத்தடிச்சுட்டு இருக்கீங்க. அக்கா இங்கே இருந்தப்பவே..." என்று ஆரம்பித்தவன் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

"அதுக்கும் இதுக்கும் என்னய்யா சம்பந்தம்?" என்று பிடித்துக் கொள்வானோ என்று பயமாக இருந்தது. ஆனால் வனமாலி அதைக் கண்டு கொள்ளவேயில்லை.

"என்னய்யா பண்ணச் சொல்றே? எனக்கு மூடே வரமாட்டேங்குதே" என்றான்.

"ஏண்ணா, நிறைய நாட்டெல்லாம் வச்சிருந்தீங்களே. ஏதோ ஒண்ணை எடுத்து எழுத வேண்டியதுதானே."

"நாட் நிறைய கிடக்குதய்யா, நாட்டு நடப்புலயும் நிறைய படிக்கிறோமே. ஏதோ ஒண்ணைச் சொல்லலாம் தான். மனசே என்னமோ சரியில்லை" என்றான் வனமாலி.

"ஏண்ணே, என்ன சங்கடம்?" என்றான் விசுவா.

"என்ன சங்கடம்? ஒரு சங்கடமும் இல்லை. சரி வேண்ணா நாளைக்குப் போயிடுவோம். ஏற்பாடு பண்ணச் சொல்லு."

அப்படியே ஏற்பாடும் நடந்தது.

"அண்ணே நம்ம கார்தானே?" என்றான்.

"ஆமாமா, ரெண்டுல ஏதோ ஒண்ணை எடுத்துப்போம்" என்றான்.

எல்லா பதிலுமே ஒரு அசிரத்தையாக வருவதை கவனித்த விஷ்வம் தனக்குள் புன்னகை செய்தான்.

"ரெண்டு மாசத்துக்குள்ள வண்டவாளம் எல்லாம் தண்டவாளம் ஏறுதில்லே" என்று எண்ணி உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

"பாவம் அக்கா"என்று எண்ணிக் கொண்டான்.அவள் வயதிலே தன்னை விட சிறியவள் என்றாலும் அக்கா அக்கா என்று அழைத்து பழக்கமாகிவிட்டது. "எவ்வளவோ அருமையாக இவருக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து கொடுப்பார்கள். நின்ன இடத்துல எல்லாமே நடக்குமே. ஒண்ணுமே தெரியாத மாதிரி நடமாடிட்டு இருப்பாங்க. ஆனா அந்தப் பத்திரிகைக்கு சூப்பரா ஒரு கதை கொடுத்துட்டாங்களே! ம்... அவங்க புத்தகமா போட்டு விட்டு விளாசிட்டு இருக்காங்க. அக்காவுக்கு இனி ராயல்டி வேற வர ஆரம்பிச்சுடும்" என்று எண்ணியவன்

புன்னகைத்துக் கொண்டான். கடைசிக்கு அக்காவுக்கு உவியாளரா போயிடலாம் என்று எண்ணம் ஓடியது.

மெல்லச் சிரித்துக் கொண்டான். "என்னைய்யா சிரிப்பு?" என்றான் வனமாலி.

"இல்லை, அக்காவும் இங்கே இருந்தா இரண்டு கதாசிரியர் இருப்பீங்க. இரண்டு பேருத்துக்கும் சேர்த்து பி,ஏவா இருககலாமேன்னு நினைச்சேன்"

"ஆமாய்யா, நீ ஒருத்தன்தான் சீண்டிப் பார்க்கலை. நீயும் சீண்டிப் பார்த்துட்டியா?" என்றான் வனமாலி.

அதில் கோபத்தை விட ஒரு விதமான சலிப்புத்தான் இருந்தது.

"ஐய்யய்யோ, அண்ணே நான் அப்படியெல்லாம் நினைக்கலை" என்று பதறினான் விசுவம்.

"தெரியும்யா தெரியும். நீ அண்டர் கிரவுண்டுல அவளுக்குத்தான் சப்போர்ட்" என்று முறைத்தான்.

விசுவம் மெல்ல முணுமுணுத்தான்.

"அண்ணே நான் ஆக்சுவலா உங்களுக்குத்தான் சப்போர்ட்".

"இல்லையே, எப்பப் பாரு அவ புகழைத்தானே பாடறே?" என்றான்.

"அப்படி இல்லைங்க அண்ணா. நீங்களும் அக்காவும் ஒண்ணா இருந்தாத்தான் வீடு நல்லா இருக்கும். அவங்களுக்கும் அங்கே வெறுமையாத்தான் இருக்கும்.ஒரு மாசமா நானும் பார்க்கறேனே உங்களுக்கு கதையே ஓட மாட்டேங்குது. இத்தனைக்கும் நிறைய நாட் வச்சுருக்கீங்க இருந்தாலும் கதையே ஓட மாட்டேங்குது" என்றான்.

வனமாலி சோபாவில் சரிந்து உட்கார்ந்தான். "அட போய்யா. இந்தக் குழந்தைங்க காச் மூச்சுன்னு கத்திட்டு இருக்கறது ரொம்ப இடைஞ்சல் மாதிரி தெரிஞ்சுச்சு. ஆனா இல்லைங்கறப்ப ரொம்பவே வீடு வெறுமையா இருக்குதுய்யா" என்றான்.

"குழந்தைங்க மட்டும்தானா?" என்று குறும்பாகப் பார்த்தான்.

"அட ஆமா, அவ இல்லாமயும்தான். அதுக்கு என்னாங் கறே இப்ப?" என்றான் வனமாலி.

"அப்பாடா கிரீடத்தை விட்டு இறங்கி வந்துட்டீங் கண்ணா."

"நீயே சொல்லு அவ மட்டும் இப்படி செய்யலாமா?"

"என்னது செஞ்சாங்க அக்கா. அக்கா ஒண்ணும் பெரிசா தப்பா செய்யலை. ஏதோ ஒரு ஆர்வத்துல கதை எழுதிட்டாங்க அது நல்லா வந்துருச்சு" என்றான் விசுவம்.

"ஏன்? அதை சொல்லிட்டு செஞ்சிருக்கலாமில்லே?" என்றான் வனமாலி.

"அண்ணா நல்லா யோசிச்சுச் சொல்லுங்க. அக்கா மட்டும் சொல்லியிருந்தாங்கன்னா நீங்க ஒத்துக்குவீங்களா? நான் அக்காகிட்டே கேட்டேனே எனக்கு ஒண்ணும் பெருசா கதை எழுதறதுல எல்லாம் இஷ்டம் இல்லை தோணுச்சு எழுதினேன். ஆனா அண்ணன் இவ்வளவு பெரிசா எடுத்துக்கிட்டாங்க. அப்படின்னாங்க" என்றான்.

"யோவ், உனக்கே இது அநியாயமா தெரியலை. சும்மா எழுதி கதையை ஒரு மூலையில வச்சு நான் கோச்சுக் கிட்டேனா. எனக்கே தெரியாம பத்திரிகைக்கு அனுப்பி யிருக்கா. அந்தப் போட்டிக்கு நான் வேறு நடுவரா

இருந்துருக்கேன். பரிசு வாங்கறா. என்னய்யா இதெல்லாம்" என்றான்.

"அதெல்லாம் உங்க மச்சான் வேலை. அக்காவுக்கு அதெல்லாம் ஒண்ணும் தெரியாது" என்றான் விசுவம்."

"ஆமாய்யா, அக்காவும் தம்பியும் இருக்காங்களே ஊரையே வித்துப்புடுவாங்க" என்று சிரித்தான் வனமாலி.

மெல்ல மெல்ல வனமாலி சரஸ்வதி இல்லாததையும், குழந்தைகள் இல்லாததையும் உணருகிறான் என்பது புரிந்தது.

இன்னும் கொஞ்சம் விட்டுப் பிடிப்போம் என்று எண்ணிக் கொண்ட விசுவம். "சரிங்க அண்ணே வண்டி சொல்லிடட்டுமா" என்றான்.

"சொல்லிடு, சொல்லிடு" என்றான்.

அப்படியே ஏற்பாடு செய்தார்கள். "அண்ணே வண்டி இன்னும் ஒரு மணி நேரத்துல வருது" என்றான்.

"இல்லையா நம்ம கார்னு தானே சொன்னேன்"

"ஆமா இல்லே, சரி நான் கேன்சல் பண்ணிடறேன். நம்ம வண்டியிலே போகலாம்" என்று அதற்கான ஏற்பாடுகளை விசுவம் செய்தான்.

"காரை சர்வீஸ் பார்த்துடறேன். அப்புறம் டீசல் பில் பண்ணிட்டு வந்துடறேன்" என்று சொல்லிக் கொண்டு அவன் போக இந்தப் புறத்திலே வனமாலி தன்னுடைய துணிமணிகளை எடுத்து வைகக ஆரம்பித்தான்.

பல நாட்களுக்கு பிறகு தன்னுடைய பீரோவைத் திறந்து துணிமணிகள் அடுக்கி வைத்திருந்த ரேக்குகளை பார்வை யிட்டான். அத்தனை துணி மணிகளும் துவைத்து மடித்து

அயர்ன் செய்யப்பட்டு அழகாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தது.

நீண்ட தொரு பெருமூச்சு விட்டான். "எல்லாத்தையும் அவளே பார்த்துக்குவா. ஒரு கவலையும் நமக்கு குடுக்க மாட்டா. கடைசில பெருசா ஒரு ஆப்பு கொடுத் துட்டாளே" என்று மனசு ஓலமிட்டது.

அதே சமயத்தில் இன்னொரு மனம் "ஏன் அவள் செய்ததில் என்ன தப்பு. படைப்பாளியாக நீ மட்டும் தான் இருக்க வேண்டுமா? அவளுக்குள்ளும் ஒரு படைப்பாளி இருக்கலாமல்லாவா ஏன் உன்னைப் பார்த்துக்கூட அவள் பழகியிருக்கலாமல்லவா?" என்று கேட்டது.

அவளும் அப்படித்தானே சொல்லுகிறாள். "நீங்க நாட் சொல்றதெல்லாம் கேட்டுக் கேட்டு எனக்கும் ஒரு ஐடியா தோணுது செஞ்சேன் அப்படிங்கறா. இதில என்ன தப்பு." என்று அவன் உள் மனது அவனைப் பார்த்து சொன்னது.

"என்ன தப்பா? ஒரு வீட்டுல அவ ஒரு பக்கம். நான் ஒரு பக்கம். ஒரு புரொடியூசர் அவ கிட்ட வருவான். ஒரு புரொடியூசர் என் கிட்ட வருவான். போட்டி வராதா?" என்று இன்னொரு மனது கேட்டது.

"எதுக்குப் போட்டி வருது?அவ சம்பாதித்தாலும் குடும்பத்துக்கு. நீ சம்பாதித்தாலும் குடும்பத்துக்குத்தான். என்னுடைய மனைவி அறிவாளி. என்னுடைய மனைவி ஒரு கதாசிரியைன்னு சொல்லிக்கிறதுல ஒரு பெருமை தானே. இதுல என்ன தப்பு இருக்கு?" என்றது அறிவு சார்ந்த மனது.

"ஆமாம், ஒரு தப்பும் இல்லைதான். ஆனா கழுதை போயி ரெண்டு மாசம் ஆச்சு. ஒரு ஃபோனாவது பண்ணலாமில்லே" என்று எண்ணிக் கொண்டான்.

"அவளுக்கு பயம். நீ என்ன சொல்லுவியோ? நல்ல நாள்லயே தில்லைநாயகம். இப்ப கோச்சுட்டு திரிஞ்சுட்டு இருக்கும்போது அவகிட்ட கடுகடுன்னா அவளுக்கு கஷ்டமாயிடுமில்லே?" என்று அவனுக்குள்ளாகவே இரண்டு விதமான வாதங்களும் நடந்து கொண்டிருந்தன.

கொடைக்கானலுக்கு கிளம்புவதற்குள்ளாக இரண்டு சூட்கேஸ்களிலும் தன்னுடைய துணி மணிகளையும் தேவைப்படுவதைப் பார்த்துப் பார்த்து எடுத்து வைப்பதற்குள்ளாக நொந்து போனான்.

இடையிலே ஒரு கப் காஃபி சாப்பிடலாம் என்று பச்சையப்பனை காபி போடச் சொன்னால். அவன் போடுகிற காப்பி கழுநீர்த் தண்ணீர் மாதிரி இருந்தது.

நன்றாக போடுகிற காஃபியை கழுநீர்த் தண்ணி என்று கேலி செய்த பாவத்துக்கு இன்றைக்கு உண்மையாகவே அப்படியொரு நிலை வந்து விட்டது என்று நொந்து கொண்டான்.

இத்தனையிலும் அவன் வீம்பு போக வில்லை. விசுவம் திரும்பி வந்தவன் "அண்ணா, ஒரே ஒரு ஃபோன். நீ வான்னு கூப்பிடுங்க. அக்கா, அடுத்த நிமிஷம் வந்துடுவாப்ல" என்றான்.

"அது ஏன் நான் கூப்பிடணும்? அவ வீடுதானே? அவ வரவேண்டியதுதானே?" என்றான் வனமாலி.

"உங்களை நம்ப முடியாதுண்ணே. இப்ப இப்படிச் சொல்லுவீங்க. சரின்னு நாளைக்கு வந்தா உன்னையாரு உள்ள வரச் சொன்னா போ அப்படின்னு சொல்லுவீங்க. அக்காவுக்கு அவமானமா போயிடும்."

"அதுவும் உண்மைதான். இத்தனை நாள் ஒரு விதமான தெம்பிலயே இருந்துட்டேன்யா. இப்ப திடீர்னு போய் இறங்கி போய் வான்னு கூப்பிடறதுக்கு முடியலை" என்றான் வனமாலி.

"நான் வேண்ணா உங்க சார்பா போய்ப் பேசட்டுமா?" என்று கேட்டான்,

"வேண்டாம் வேண்டாம். கொஞ்ச நாள் பொறு" என்றான்.

"அண்ணே நான் ஒண்ணு மட்டும் பண்றேன். இந்தக் குழந்தைங்களை பார்க்கணும்னு குழந்தைங்களை கூட்டிட்டு வரட்டா. ஊருக்கு போறதுக்கு முன்னாடி குழந்தைங்களை கூட்டி வரட்டா?" என்றான்.

"அதுங்ககிட்டேயும் கொஞ்சியே பழக்கம் இல்லையே? ஏதோ விளையாடிட்டு இருக்குங்க. புதுசா என்னய்யா இது?" என்றான் வனமாலி.

விசுவாவுக்கு அவனைப் பார்ப்பதற்கே பாவமாக இருந்தது. "பழகிக்கங்கண்ணே. அவங்களுக்கும் உங்களைப் பார்க்கணும்னு இருக்கும். வேண்ணா போன்பண்ணி கேட்கட்டுமா?" என்றவன். அவன் முன்பாகவே வேண்டும் என்றே போன் செய்தான்.

அந்தப் பக்கம் பைந்தமிழ் பாரி எடுத்தான். "பாரி, நீ எங்கப்பா இருக்கே?" என்று கேட்டான்.

"ஏன் அண்ணே? நான் வீட்டுல தான் இருக்கேன்" என்றான் அவன்.

"ஒண்ணும் இல்லைப்பா. அண்ணனுக்கு குழந்தைங் களைப் பார்க்கணுமாம்" என்றான். "குழந்தைங்க எங்கே இருக்காங்க?" என்றான்.

"குழந்தைங்க அந்த ரூம்ல இருக்காங்க. நீங்க குழந்தைங்க கிட்டேயே பேசுங்க" என்றான் பாரி.

சொல்லி விட்டு வெங்கட், நிவேதிதா என்று குரல் கொடுத்தான். இரண்டு பேரும் ஓடி வந்தார்கள்.

"அப்பா பேசணுமாம்" என்றான்.

அந்தக் குழந்தைகள் இரண்டு பேரும் அப்பாவா அப்பாவா என்று தடுமாறுவது இந்தப் பக்கம் விசுவத்துக்கு தெளிவாகத் தெரிந்தது. அதைச் சொன்னால் வனமாலியின் சங்கடம் அதிகமாகுமே என்று பாரியிடமே "அப்பா பேசணுமாம்பா?" என்றான்.

"சரிங்க சார். எனக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லை." என்றவன் குழந்தைகளிடம் "பேசுங்க பேசுங்க" என்று பாரி சொல்லுவது இந்தப் பக்கம் இருந்து கேட்டது.

வேறு வழி இல்லாமல் வெங்கட்டும் நிவேதிதாவும் ஃபோனுக்கு அருகிலே வந்தார்கள்.

தன்னுடைய செல்ஃபோனை நிவேதிதாவின் காதுக்கு அருகிலே வைத்தான் பாரி.

அதே நேரத்தில் விசுவாவும் வனமாலியிடம் போனைக் கொடுக்க "அப்பா" என்றாள் நிவேதிதா.

என்னமோ ஐந்து அருவிகள் ஒன்றாக தலையிலே கொட்டுவது போல குளிர்ந்து போனான் வனமாலி. "டேய் நிவேதிதா" என்றான்.

நிவேதிதாவுக்கு அந்தப் பக்கம் ஒரே ஆச்சரியம். "அப்பா மிரட்டப் போகிறார்" என்று பயந்து போயிருந்தாள்.

"என்னப்பா?" என்றாள்.

"நீங்க ரெண்டு பேரும் என்னை மறந்தே மறந்துட்டீங்களா?" என்றான்.

"இல்லைப்பா, நீ தான் கோச்சுக்கறே. அங்கே வந்தா உனக்கு கோபம் வருமோ அப்படின்னுதான். நீ ஏன் பேசவே இல்லை?" என்றாள் நிவேதிதா.

"அதுதான் இப்பப் பேசிட்டேன்ல" என்றான்.

"சரிப்பா. நீ எப்படிப்பா இருக்கே? சாப்பிட்டியா?" என்றாள் நிவேதிதா.

"அதெல்லாம் நேரா நேரத்துக்கு கொட்டிக்கறேன். நீங்கல்லாம் இல்லாமதான் நல்லா இல்லை."

"நீ வாப்பா இங்கே?" என்றாள் நிவேதிதா.

"சரி, முதல்ல நீங்க ரெண்டு பேரும் ஒரு தடவை அப்பாவைப் பார்க்க வர்றீங்களா? அப்பா பத்து நாள் கொடைக்கானல் போறேன்" என்றான்.

"சரிப்பா, அம்மா கிட்ட கேட்டுட்டு மாமாவை கூட்டிட்டு...." என்றாள்.

வனமாலியின் வழக்கமான கோபம் தலை தூக்கியது. "ஏய் என்ன? நான் அப்பன் கூப்பிடறேன். அம்மா கிட்ட கேட்கறேன் ஆட்டுக்குட்டி கேட்டுக்கிட்டு...." என்றான்.

"இல்லைப்பா. இப்ப அம்மா கூட தானே இருக்கோம். நீ ஏன் அம்மாவையும் கூப்பிட மாட்டேங்கறே?" என்றாள். "அவளையும் தான் வரச் சொல்லு" என்றான்.

"சரிப்பா, நான் அம்மா கிட்ட சொல்றேன். நான் ஃபோனை வைக்கிறேன்" என்று வைத்து விட்டாள்.

"இதோ பாருடா. இதுவும் கூட வீம்பு புடிக்குது" என்றான் வனமாலி. ஆனால், அவன் நாலு மணிக்கு

புறப்படுவது என்று சொன்னதனால் மூன்று மணி வாக்கில் பாரி குழந்தைகளை காரில் அழைத்துக் கொண்டு வந்து அவனது வீட்டிலே இறக்கி விட்டு விட்டு "நான் வெளியே இருக்கேன். நாற்பத்து ஐந்து நிமிஷம் டைம் வந்துடுங்க" என்று சொல்லி விட்டு காரைக் கூட வெளியே நிறுத்தி விட்டான்.

விசுவம் உள்ளே வருமாறு கூப்பிட்ட பொழுது "வேண்டாம், அவங்க பிரச்சினை முடிவாகட்டும்" என்று சொல்லி விட்டு வெளியிலேயே காரிலேயே காத்துக் கொண்டிருந்தான்.

ஐந்து நிமிடம் போயிருக்கும். அக்காவிடம் இருந்து ஃபோன் வந்தது. "தம்பி ஒண்ணும் பிரச்சினை இல்லையே" என்றாள் அவள் கவலையுடன்.

இந்தப் பக்கம் "அப்படி யெல்லாம் ஒண்ணும் இல்லைக்கா பயப்படாதே" என்று பதில் சொன்னான் பாரி.ஆனால், அவனுக்கு அப்பொழுது தெரியவில்லை. இனிமேல்தான் பிரச்சினைகள் ஆரம்பிக்கப் போகின்றது என்பது.

அத்தியாயம் - 21

"எதுக்குக்கா இவ்வளவு சிரமப்பட்டுக்கறே?" என்றான் பைந்தமிழ் பாரி.

"என்னப்பா சிரமம். உனக்கு சேவைன்னா ரொம்பப் பிடிக்கும். ரொம்ப நாள் நினைச்சுட்டு இருந்தேன் உனக்கு செஞ்சு கொடுக்கணும்னு. அதான் நேத்து கடைக்குப் போய் இந்த சேவை பிழியற அந்த இன்ஸ்ருமெண்டை வாங்கிட்டு வந்து இண்ணைக்கு செஞ்சேன்" என்றாள்.

அக்காவின் அன்பை எண்ணி நெகிழ்ந்து போனான் பாரி. "இதெல்லாம் கஷ்டமே இல்லை தம்பி. இது மாதிரி எல்லாம் செஞ்சு கொடுத்து நீ சந்தோஷமா சாப்பிடும் பொழுது அதைப் பார்த்தாலே எங்களுக்கெல்லாம் திருப்தி. பெண்களுக்கெல்லாம் அது பெரிய சந்தோஷம்'' என்றாள்.

"ஆமா, ஆமா காலம் காலமா சொல்லியிருக்காங்களே. கணவனை கைக்குள்ள போடணும்னா சமையலால போட்டுடலாம் அப்படின்னு'' என்று கிண்டலாக சிரித்தான் பைந்தமிழ் பாரி.

"அது இருக்கலாம். அது ஒரு வகையான தந்திரமா கூட இருக்கலாம். ஆனால் பெண்களுக்கு இயல்பாகவே சமையல்ல ஒரு விருப்பம் இருக்கில்லே'' என்றாள்.

"அது நீங்க செஞ்சுட்டே இருந்ததுனால அப்படி. ஏன் என் சமையல் கூடத் தான் நல்லாயிருக்குன்னு சங்கமித்ரா சொல்லுச்சு''.

"அப்படியா நீ சமையல் பண்ணி கொண்டு போய் கொடுத்து சங்கமித்ரா சாப்பிட்டு, ம்ஹூம் இத்தனை யெல்லாம் நடக்குதா.?'' என்றாள் அக்கா கேலி போல்.

"அக்கா, அக்கா, நீ ஒரேயடியா பில்டப் பண்ணாதே அக்கா. நான் எனக்கு செஞ்சு எடுத்துட்டுப் போனேன். அன்னைக்கு சங்கமித்ராவும் சாப்பாடு கொண்டு வந்திருந்தது. ரெண்டு பேரும் உட்கார்ந்து சாப்பிட்டோம் ஷேர் பண்ணிகிச்சு. அப்ப சொல்லுச்சு. அவ்வளவுதான்''.

" பரவாயில்லை. இப்படி சமையல் பண்ணி கொடுக்கற ஹஸ்பெண்டா நமக்கு கிடைச்சா ரொம்ப நல்லா இருக்கும்னு நினைச்சிருக்கும்.ஏப்பா?''

அக்கா வேண்டும் என்றே போட்டு வாங்குகிறாள் என்பது அவனுக்கு புரிந்தது.

"அக்கா உங்க காலம் வேறே, எங்க காலம் வேறே. இப்ப நாங்களெல்லாம் சமையல் பாதி செஞ்சே ஆகணும். வேற வழியே இல்லை. ஏன் தெரியுமா? பெரும்பாலும் பெண்கள் வேலைக்குப் போயிடறாங்க அதனால ஆளுக்கு கொஞ்சம் செஞ்சம்னா வேலை ஆகும்''

"அதென்னமோ நிஜம்தாம்பா,'' என்றாள் அக்கா.

"ஏன்க்கா,'' என்றான். அக்கா எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கேள்வி வரப்போகிறது என்பதை தெரிந்து கொண்டாள்.

"ஏன் அக்கா குழந்தைங்களை மச்சான் கிட்ட கூட்டிட்டுப் போயிட்டு வந்தேன்ல. குழந்தைங்ககிட்ட அதைப்பத்தி நீ எதுவும் விசாரிச்சியா?'' என்றான்.

"அக்கா.'' டபக்கென்று தானும் சாப்பிட்டுக் கொண் டிருந்த தட்டில் கையை அளைந்தாள். "கேட்கலைப்பா'' என்றாள்.

"ஏன் அக்கா?'' என்றான்.

"எதுக்கு அவர் விசாரிச்சாரான்னு நான் கேட்கணும். அதுங்க இல்லைன்னு சொல்லப் போகுது. அப்புறம் அதைக் கேட்டுட்டு நான் சங்கடப்படணும். எதுக்கு? அதனால தான் நான் கேட்கலை.''

"யூ ஆர் ராங் அக்கா. யூ ஆர் ராங். மச்சான் ஜாடை மாடையா கேட்டிருக்காரு தெரியுமா,'' என்றான்.

"அப்படியா?''

"ஆமாக்கா நான் பையன்கிட்டேயும் பிள்ளை கிட்டேயும் கேட்டேனே. நம்ம நிவேதிதா சொன்னாளே உங்க அம்மா எப்படா வருவா? வருவாளா வரமாட்டாளா

அப்படின்னு தம்பிக்கிட்ட கேட்டிருந்தாராம் அப்பா'' என்றான் பாரி.

''ஏன்? அது அவரே என் கிட்ட நேர்ல கேட்க வேண்டியதுதானே?'' என்றாள்.

''ஓஹோ, இப்ப ப்ராப்ளம் இதுதானா? ஈகோ ப்ராப்ளம் தானா?'' என்றான் பைந்தமிழ் பாரி.

''இல்லைப்பா, அவரு என்ன சொன்னாரு. நீ வா வரதுன்னா எழுத்தையெல்லாம் விட்டுடுன்னு சொல்றாரு. அதுல எனக்கு உடன் பாடு இல்லை'' என்றாள் அக்கா.

பாரி சகோதரியை பெருமையாக பார்த்தான். ''ஏம்பா, நான் குடும்பத்துக்கு செய்ய வேண்டியதை எல்லாம் செய்யத்தான் போறேன். இப்பப் போலவே என்னோட ஓய்வு நேரத்துல எனக்குன்னு தெரிஞ்ச ஒரு கலையை நான் பயன்படுத்தக் கூடாதா. எனக்கு தெரிஞ்சதுன்னு கூட சொல்ல மாட்டேன். கதை கொஞ்சமா வருது. அதையேன் அவரு பெருசா எடுத்துக்கறாரு'' என்று கேட்டாள்.

''கரெக்ட்க்கா. இப்ப மும்முனைத் தாக்குதல் நடக்குது''.

அக்கா புரியாதவள் போல பார்த்தாள். ''நீ கேட்கற இந்தக் கேள்வியைத்தான் விசுவம் அங்கே கேட்டிட்டிருக் காரு. விசுவம் உனக்கு ஸ்ட்ராங் சப்போர்ட். அதுக்குன்னு திருப்பி திருப்பியெல்லாம் சொல்றது இல்லை. ஏன்னா அப்புறம் முருங்கை மரம் ஏறிப்பாரு.'' என்று சொன்னதும் நாக்கைக் கடித்துக் கொண்டு ''யூ டோன்ட் மிஸ்டேக் மி'' என்றான்.

அக்கா சிரித்தாள். ''சொல்லிட்டீல்ல, அப்புறம் என்ன விடு'' என்றாள். ''அதுக்கு அப்புறம் மாறிட்டு வம்பு பண்ணக் கூடாதேன்னு அவரை பக்குவப் படுத்திட்டு

இருக்கோம். இப்ப தான் கல்லை அடிச்சு அடிச்சு சிலையா பண்ணிட்டு இருக்கோம்னு வச்சுக்கோயேன்'' என்றான்.

''நல்ல உதாரணம் சொன்னப்பா. கல்லேதான். அடிங்க. எப்படி சிலையா வருதுன்னு பார்க்கலாம்'' என்றாள்.

''ஏங்க்கா. நிஜமாவே மச்சான் குடும்ப வாழ்க்கையா கதையா அப்படின்னு ஒரு இது வச்சா நீ என்ன பண்ணுவே?'' என்றான்.

''இல்லைப்பா, இந்த தடவை நான் ஸ்டப்பர்ன்னா நிக்கப் போறேன். எப்படியும் குழந்தைங்களையும் என்னையும் விட்டுட்டு அவரால இருக்க முடியாது. இறங்கி வருவாருன்னு எனக்கு தெரியும்'' என்றாள்.

''சரிதான் அக்கா, அது என்னமோ டவுட்தான்'' என்றான் பாரி.

''இல்லை தம்பி ஒரு விஷயம் மட்டும் தெரியும். அவரு பத்து பேரு கூட சேர்ந்து தண்ணி அடிப்பாரு. அதையும் இதையும் பேசுவாரு. அடுத்தவங்களை அலட்சியமா பேசுவாரு. என்கிட்ட எப்பவுமே கோபமா நடந்துப்பாரு. இதெல்லாம் இருக்கு. ஆனா, எங்கே இருந்தாலும் எத்தனை பெண்களுக்கு நடுவில இருந்தாலும் அவரு வேற ஒரு பெண்ணையும் நிமிர்ந்து பார்த்ததேயில்லை. அது மட்டும் எனக்கு தெரியும்'' என்றாள்.

பைந்தமிழ் பாரி வியப்பாகப் பார்த்துக் கொண்டிருந் தான். ''ஆமாக்கா, விசுவம் சாரே அதைப் பத்தி அடிக்கடி சொல்லுவாரு''

''அப்படின்னா என்ன அர்த்தம் அவருக்கு என் மேல அன்பு இருக்கு. உங்க யங்ஸ்டர்ஸ் பாஷையில சொன்னா காதல் இருக்கு. அதை அவரு அப்படி வெளிப் படுத்துறாரு.

இன்னொரு விதமா என் மேல உரிமை கொண்டாடறது மூலமா தான் தான் சுப்பிரியர்னு அவரு நினைச்சுக்கறாரு. அப்படின்னா என்ன அர்த்தம் தெரியுமா?'' என்றாள் அக்கா.

''சொல்லுக்கா'' என்றான் அவன். கை கட்.டி வாய் பொத்தி நடிப்பவன் போல. நடித்துக் காட்டிக் கொண்டு. அக்கா சிரித்தாள். ''அந்தக் கோபம் கையாலாகத் தனத்துனால வர்ற கோபம். ஏன் நீ இல்லாம என்னால இருக்க முடியலேங்கறதை வெளிப்படுத்தற கோபம். அது அவருக்கே தெரியலைப்பா'' என்றாள்.

''எப்படியோக்கா நீ இப்படியெல்லாம் வித விதமா வியாக்கியானம் பண்ணிட்டுதான் வாழ்க்கையை ஓட்டணும்'' என்றான் பாரி.

''சரி அது இருக்கட்டும். இதை பெண்டிங்ல வை. நான் கேட்கறதுக்குப் பதில் சொல்லு. நான் முந்தாநேத்து ஒரு கேள்வி கேட்டேன் இல்லே''.

''என்ன கேள்வி?''.

''கல்யாணத்தைப் பத்தி ஒண்ணும் யோசனை இல்லையான்னு கேட்டேனே?''.

''ஆமா, நீ இப்படி கேட்டுட்டே இருக்கே. ஆனா எனக்கு உன்னுடைய மேட்டர் செட்டில் ஆகாம கல்யாணம் பண்ணிக்க விருப்பம் இல்லை''என்றான்.

அக்கா அவனை கவலையுடன் பார்த்தாள். ''தம்பி இதையும் அதையும் இணை வைக்காதே. உன்னுடைய வாழ்க்கை இனிமேல்தான் தொடங்கப் போகுது. நான் ஓரளவுக்கு வாழ்க்கை வாழ்ந்துட்டேன். அதனால குழப்பிக்காதே தம்பி'' என்றாள்.

''எப்படிக்கா, நாம இப்ப அப்பா அம்மாகிட்ட எதையும் சொல்லாம மறைச்சுட்டு இருக்கோம்.எனக்கு வேற அம்மா அப்பா திடீர்னு வந்து நிக்கப் போறாங்களோ. அல்லது என்னை அங்க வரச் சொல்லுவாங்களோன்னு பயமா இருக்கு.உன்னுடைய கதை செலெக்ட் ஆனது மட்டும் அப்பாகிட்ட சொன்னேன். அப்பா ரொம்ப சந்தோஷப் பட்டாரு. இந்தக் குட்டு எப்படா வெளியாகும்னு அந்தப் பயத்துல இருக்கேன். இப்படி இருக்கும் பொழுது எப்படிக்கா என்னைப் பத்தி நினைக்க முடியும்.?''

''அதெல்லாம் நினைக்கலாம். நீ பாட்டுக்கு அப்படியே சைட்ல உன்னோட ரூட்டைப் போடு. அப்புறம் எல்லாத் துக்கும் ஒண்ணா சமாதானம் சொல்லிக்கலாம்'' என்றாள் அக்கா.

''அக்கா நீ என்னமோ மீனிங் வச்சுட்டு பேசற மாதிரி இருக்கு'' என்றான்.

''நான் என்னப்பா மீனிங்ல பேசறேன். உனக்கு நிறைய ரசிகர்கள் இருக்காங்கப்பா'' என்றாள்.

''ம்ஹூம் இது சரியில்லையே!'' என்றான்.

''எது சரியில்லை. உண்மையைச் சொன்னா அது சரி இல்லையா?அதுவும் தீவிர ரசிகைகள் உன்னைச் சுத்தி இருக்காங்க தெரியுமா'' என்றாள்.

அவன் அக்காவை ஆழமாக பார்த்துக் கொண்டே ''அக்கா மேலே சொல்லு'' என்றான்.

''ஏன், அவ்வளவு ஏன்? இந்த சங்கமித்ரா இருக்கில்லே அதுவே உன்னோட தீவிர ரசிகை! நீ எல்லாத்தையும் எப்படி மேனேஜ் பண்றியாம். நாலு வேலை ஒரே சமயத்துல செய்யறியாம். இத்தனைக்கும் நடுவுல உண்மையாவே

சோஷியல் சர்வீஸ் பண்றியாம். உன்னுடைய கட்டுரை யெல்லாம் அவ்வளவு நல்லா இருக்காம்.அய்யய்யோ. தாங்க முடியலை. எனக்கு கூட பொறாமையா போகுதுன்னா பார்த்துக்கயேன்'' என்றாள் அக்கா.

பைந்தமிழ் பாரி அமைதியாக சாப்பிட்டான். சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை.ஆனால், அதற்குள் கன்னம் சிவந்து போனது.

அக்கா அதை ரசித்தாள்.எழுந்து அவன் தலையைக் கலைத்து விட்டாள். ''ஏய் தம்பி, நீ கூட வெட்கப்படுவி யாடா?'' என்றாள்.

''அக்கா ப்ளீஸ் அக்கா, உட்காருங்க'' என்றான். அவள் எதிரிலே அமர்ந்தாள்.

''சங்கமித்ராவை உனக்குப் பிடிச்சிருக்குதானே?'' என்று கேட்டாள். அவன் பதில் பேச வில்லை.

பிறகு நிமிர்ந்து சகோதரியிடம் ''உனக்கு பிடிச்சிருக்கா?'' என்றுகேட்டான்.

''எனக்கு பிடிச்சிருக்கே. பிடிக்கப் போயிதான் இப்படி ரெக்கமண்ட் பண்ணிட்டு இருக்கேன்.''

''ஓஹோ. நீ ரெக்கமண்ட் பண்ணிட்டு இருக்கியா?'' என்றான் அவன்.

''ஆமாம்பா, பொண்ணு நல்ல பொண்ணா இருக்கு. நல்லா பழகறா. இயல்பா சமையல் வேலையிலயெல்லாம் கலந்துக்கறா. குழந்தைங்ககிட்ட யெல்லாம் நல்லா பழகறா. உன்னைப் பார்க்கறதிலே அவளுக்கு ஒரு ஆர்வம் இருக்கு. உன் பார்வையை சந்திக்கறதுல ஒரு வெட்கம் இருக்கு. இதுக்கெல்லாம் என்னப்பா அர்த்தம்.?''

''ஆஹா, கதாசிரியை வர்ணிக்க ஆரம்பிச்சுட்டாங்கப்பா. நீங்க தான் சொல்லணும்'' என்றான் அவன்.

''எனக்கென்னமோ இதுக்கெல்லாம் அதுதான் அர்த்தம் அப்படின்னு தோணுது'' என்றாள்.

''ஏன் அக்கா அதுன்னா?''

''அதுவா?'' என்றாள். அவள் குறும்பாக சிரித்துக் கொண்டு ''நானும் அதேதான் சொல்ல வந்தேன்'' என்றாள்.

பைந்தமிழ்பாரி திடீரென்று சிரித்துவிட்டான். ''உங்கிட் டேயும் சொல்லிட்டாளா அக்கா. நீயுமாக்கா?'' என்றான்.

''அதான் இப்படி எல்லாத்தையும் எங்கிட்ட சொல்றான்னா என்ன அர்த்தம். அது எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு'' என்றாள்.

''அது டேஞ்சராச்சே?'' என்றான்.

''அப்படியெல்லாம் நினைச்சுக்காதடா. அப்படி எல்லாத்தையும் அவ வந்து சொல்லிடமாட்டா. அப்படியே சொன்னாலும் நான் கேட்டுக்க மாட்டேன். உங்க மேட்டர் உங்களோட''.

''அக்கா ப்ளீஸ். அக்கா அப்படியெல்லாம் எதுவும் எந்த மேட்டரும் டெவலப் ஆகலை. நீயே ரெஸ்பான்ஸ் கொடுக்கறே. யோசிக்கலாமா அப்படின்னு பார்க்கறேன். வேறு எதுவும் இல்லை''.

''போதும்டா, உன்னைப் பத்தி எனக்கு தெரியாதா?. நீ ஒரு முடிவு வச்சுகிட்டு என்கிட்ட ஆழம் பார்க்கறே அப்படித்தானே?'' என்றாள்.

அவன் வெட்கத்துடன் சிரித்தான். ''மேற்கொண்டு தொடரலாமா? பச்சைக்கொடி காட்டறேனான்னு பார்க்கறே?'' என்றாள்.

அவன் நிமிர்ந்து சகோதரியைப் பார்த்தான்.

"அக்கா அந்தப் பொண்ணைப் பொறுத்த வரைக்கும் ஓகே. ஆனா அவங்க குடும்பம் எப்படி. அவங்களோட வசதி வாய்ப்புக்கள் என்ன? அதெல்லாம் தெரிஞ்சுக்க வேண்டாமா?" என்று கேட்டான்.

"ஏய் சங்ககாலத்துப் பாட்டு நீ கேள்விப் பட்டது இல்லையா?" என்றாள் அக்கா.

"எந்தப் பாட்டு?" என்றான் அவன்.

யாயும் ஞாயும் யாராகியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறை கேளீர்.

அந்தப் பாட்டு...."

"செம்புலப் பெயனீர் போல அந்தப் பாட்டா?" என்றான்.

"ஆமா?" என்றாள் அக்கா.

"அதெல்லாம் ஓகே. அக்கா பார்க்கலாம்" என்றான்.

"முதல்ல நீங்க ரெண்டு பேரும் யோசிங்கப்பா. அதற்கப் புறம் மேற்கொண்டு அம்மா அப்பாகிட்ட பேசலாம்" என்றாள் அக்கா.

அவன் தயக்கத்துடன் சகோதரியைப் பார்த்தான்.

"நிஜமாத்தான்தம்பி, நானே அம்மா அப்பாகிட்ட பேசறேன்" என்றாள்.

"அது போதும்க்கா," என்று கெத்தாக சொல்லி விட்டு "இன்னைக்கு சேவை ரொம்ப நல்லா இருந்தது" என்றான்.

"அப்படியா, அப்படின்னா இந்த டிஃபன் பாக்ஸ்ல வச்சிருக்கேன். ஆஃபீஸுக்கு போய் சங்கமித்ராவுக்கு

கொடுத்துடு. நான் கொடுத்தேன்னு சொல்லி கொடு" என்றாள்.

"அக்கா, இந்த வேலை வேற என்ன செய்யச் சொல்றியா?" என்றான்.

"நீ வழக்கமா செய்யறதுதானே? இன்னிக்கு செஞ்சா என்ன?" என்று அக்கா காலை வாரி விட்டு சிரித்துக் கொண்டே உள்ளே போனாள்.

உள்ளே போன அக்கா சும்மா இருக்க வில்லை. செல்ஃ போனை எடுத்து யாருக்கோ தொடர்பு கொண்டாள்.

"சரிக்கா வரேன்" என்று குரல் கொடுத்து விட்டு படிகளில் வேகமாய் இறங்கினான் பைந்தமிழ் பாரி.

"பாரும்மா. சாப்பிட்டுட்டு டேஸ்டுட்டு எப்படி இருக் குன்னு சொல்லு. உன் க்ளோஸ் ஃப்ரெண்டு கையிலதான் கொடுத்தனுப்பியிருக்கேன்" என்று போனில் சிரித்துக் கொண்டிருந்தாள் சரஸ்வதி.

அடுத்து என்ன வரப்போகிறது என்பதை அறியாமலே.

அத்தியாயம் - 22

ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் பைந்தமிழ் பாரி.

சங்கமித்ரா எதிரே அமர்ந்து கொண்டிருந்தாள். தனக்கு சகோதரி அனுப்பியிருந்த அந்த சேவையின் பல விதமான வகைகளை அவள் முன்னே பரப்பியிருந்தான் பைந்தமிழ் பாரி.

ஒரு டிஃபன் பாக்ஸில் தேங்காய் சேவை, ஒரு டிபன் பாக்ஸில் இனிப்பு சேவை, ஒரு டிஃபன் பாக்ஸில் எலுமிச்சை சேவை என்று மூன்று வகைகளாக அக்கா

கொடுத்திருந்ததை அவள் முன்னாலே வைத்து விட்டு அவளையும் அழைத்து அந்த டேபிளின் அந்தப் பக்கத்திலே அமர்த்தியிருந்தான்.

"இதெல்லாம் எங்க அக்கா உனக்காக கொடுத்தனுப்பி யிருந்தாங்க. சாப்பிடு. எனக்கு கட்டளை வேற நீ ஒழுங்கா சாப்பிடறியான்னு பார்த்து உன்னை சாப்பிட வைக்கணு மாம்".

"அய்யோ, இந்த அக்கா" என்று அவள் முணுமுணுத்துக் கொண்டாள்.

"கேளு, எனக்கு இதெல்லாம் வேற வேலையா?" என்று கோபிப்பவன் போல பார்க்க.

"சாரி" என்றாள் அவள்.

"என்னத்தை சாரி, உட்கார்ந்து சாப்பிடு, நான் என்னுடைய டியூட்டியை பண்ணனுமில்லே" என்றான்.

மெல்ல மெல்ல அவன் விளையாடுகிறான். சீண்டுகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அமர்ந்தாள் "நீங்க?" என்றாள்

"நீ ஏதாவது கொண்டு வந்திருப்பியே. அதைக் கொடு".

"நான் இன்னிக்குச் சப்பாத்திதான் கொண்டு வந்தேன்" என்றாள்.

"பரவாயில்லை பரவாயில்லை. சப்பாத்திக்கு என்ன?" என்று கேட்டான்.

" வெஜிடபிள் குருமா" என்றாள்.

"சூப்பராப் போச்சு கொடு" என்று அவன் வாங்கிக் கொண்டு எதிரிலே அமர்ந்தான்.

"கொஞ்சமா வேண்ணா ஷேர் பண்ணிக்கலாமா?" என்றாள் அவள்.

"கொஞ்சம் என்ன எல்லாத்தையுமே ஷேர் பண்ணிக் கலாம். நீ சம்மதிச்சேன்னா" என்று இழுத்தான்.

அவள் வியப்புடன் அவனைப் பார்க்க "இதிலே பாதி அதிலே பாதி. ஏன்னா நீ பாதி நான் பாதி" என்றான் அவன்.

அவள் முகம் சிவந்து போனது. "நீங்க என்னமோ மீனிங் வைத்துப் பேசறமாதிரி இருக்கு."

காலையில் சகோதரியிடம் தான் இதே வார்த்தைகளைச் சொன்னதை அவன் இப்போது நினைத்துக் கொண்டு குபீரென்று சிரித்தான்.

"என்னத்துக்கு சிரிப்பு?" என்றாள் அவள் கோபத்துடன்.

"இல்லை காலையில அக்கா என்கிட்ட இப்படித்தான் பேசினாங்க. அக்கா கிட்ட இதையேதான் நான் கேட்டேன்" என்றான்.

"எதையேதான்?" என்றாள் அவள்.

"என்னமோ மீனிங் வச்சுப் பேசற மாதிரி இருக்குன்னு" என்றான் அவன்.

"ஏன் அப்படிக் கேட்டீங்க?" என்றாள் அவள் அப்பாவியாக.

"உன்னை யாரு அதெல்லாம் சொல்லச் சொன்னாங்க?" என்று கேட்டான்.

"எதெல்லாம்?" என்று கேட்டாள்.

"அதான்... அந்த "அதேதான் நானும் சொல்ல வந்தேன்". இதையெல்லாமா போய் அக்காகிட்ட சொல்லுவாங்க? என்றான் அதே கோபத்துடன்.

அவள் சற்றுத் திகைத்தாள். "அவங்க கிட்ட பேசினாலே எதையும் மறைக்க தோணறது இல்லை. ஐ ஃபீல் வெரி ஃப்ரீ வித் ஹர். என்னை அறியாம எல்லாத்தையும் உளறிடறேன்" என்றாள்.

"ஐயய்யோ. வம்பாப் போச்சே. எதிர்காலத்துல ரொம்ப கேர் ஃபுல்லா இருக்கணும் போல இருக்கே" என்றான்.

அவள் திகைத்துப் போய் அவனைப் பார்க்க. "ஹலோ பொண்ணே. எல்லாத்தையும் எல்லார்கிட்டேயும் சொல்லக் கூடாது" என்றான்.

"ஏங்க, அவங்க உங்களோட உயிரான அக்காதானே?" என்றாள் அவள்.

"உயிரான அக்காதான். இருக்கட்டும். அதுக்காக உனக்கும் எனக்கும் இடையிலே நடக்கறதையெல்லாம் அவங்ககிட்ட போய் சொல்லுவியா?"

"அப்படி என்ன நடந்துடும்?" என்றாள் அவள் யோசிக்காமல்.

"அட ஆண்டவா, இதுக்கு மேல ஒருத்தன் எப்படி விளக்கிச் சொல்ல முடியும். நீ பாதி நான் பாதின்னு சொல்லியாச்சு. எதிர்காலத்துல பயப்படணும் போல இருக்கேன்னு சொல்லியாச்சு. எல்லாத்தையும் அக்காகிட்ட சொல்லக் கூடாதுன்னு சொல்லியாச்சு இனி நான் எப்படி புரிய வைக்கட்டும்?" என்றான்.

அவள் உண்மையிலே திகைத்துப் போனாள். "பாரி, நீங்க... நீங்க..." என்றாள் வெட்கத்துடன்.

"நாங்க நாங்க" என்று அவன் அவளைப் போலவே ராகம் போட்டுக் காண்பித்தான்.

"நீங்க வேற ஏதோ சொல்றீங்க" என்றாள் அவள்.

"ஆமாம், ஆனா எல்லாமே நீ ஓகே பண்ணினாதான். நீ சம்மதிச்சாத்தான்" என்றான்.

அவள் சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள். "நான் எழுந்திருச்சு அந்தப் பக்கம் வந்துடுவேன். அப்புறம் உம் பின்னல்ல என் சட்டை மாட்ட அப்புறம் கொஞ்சம் ரொமான்ஸ் நடக்கும் வேணுமா அதெல்லாம்?" என்றான் அவன்.

"போதும் ரொம்பத்தான்" என்றாள் அவள்.

"என்ன போதும்? ஒண்ணுமே பேச ஆரம்பிக்கலை. ஒண்ணுமே பண்ணலை" என்று ஆரம்பிக்க அவள் நிறுத்தினாள்.

"உங்களுக்கு என்ன வேணும் ?டைரக்டா பேசுங்க" என்றாள்.

"எனக்கு என்ன வேணும்? நீதான் வேணும். நீ ஓகே சொல்றியா?" என்றான் அவன்

அவளும் மெல்லச் சிரித்தாள்.

"ஐய்யோ இவ்வளவு தானா?" என்றாள் அவள்.

"என்ன என்ன, அவ்வளவுதானா?".

"நான் அதைச் சொல்லலை. இவ்வளவுதானா நீங்க அப்படின்னு கேட்டேன்" என்றாள்.

அவன் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு தன்னுடைய சுழல்நாற்காலியை சுற்று சுற்றி விட்டு "இவ்வளவு தான் நாங்க. நான் வேணா எழுந்திருச்சு நின்னு என்

பர்சனாலிட்டி என்னன்னு நீ அஸஸ் பண்றதுக்கு காட்டட்டுமா?'' என்றான்.

அவள் முறைத்தாள். ''நான் இதுக்கா இவ்வளவு தானான்னு கேட்டேன்''.

''இந்தத் தலை சுத்திக் கிறுகிறுத்துக கிடகுதா? ஒண்ணுமே புரியலை. சொல்லு'' என்றான் குரல் குழைய.

''நீங்க இத்தனை நேரம் பேசினதுக்கெல்லாம் எழுந்து நின்னு சப்பு சப்புன்னு நாலு அறை கொடுக்காம கேட்டு கிட்டு இருக்கேனே? அப்பவே புரிய வேண்டாம்'' என்றாள்.

''ஒஹோ! கொடுத்துடுவீங்களோ?'' என்றான்.

''உங்களுக்கு அறை கொடுக்க மாட்டேன்'' என்றாள் அவள். அவள் குரல் மாறியது குரல் குழைந்தது.

''அப்ப வேற என்ன கொடுப்பே?'' என்றான்.

''நீங்க தான் கேட்டீங்களே... நீதான் வேணும்னு. அப்படி என்னையே தருவேன்'' என்றாள்.

அவன் சிரித்துவிட்டு ''டயலாக் ரொம்ப பழசா இருக்கு. வேற ஏதாவது ட்ரை பண்ணலாமா?'' என்றான்.

''போதும், பேசாம சாப்பிடுங்க'' என்றாள்.

அவன் பார்வை அவள் மேல் ஆழ்ந்து படிந்திருக்க அவள் வெட்கத்துடன் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் தடுமாறுவதைப் பார்த்து அவள் கைகள் நடுங்குவதைப் பார்த்தவுடன் ''நீ ஃப்ரீயா சாப்பிடு'' என்று சுழற் நாற்காலியை திருப்பி ஜன்னலுக்கு வெளியே வேடிக்கை பார்ப்பது போல அமர்ந்தான்.

ஆனாலும், அவன் கவனம் முழுவதும் தன் மீதுதான் படிந்திருக்கிறது என்பதை அவள் புரிந்து கொண்டிருந்தாள்.

அவனுடைய இருப்பு அங்கே முழுமையாக அவளுக்குத் தெரிந்தது.

அவள் கவனம் முழுவதும் தன் மேல் இருப்பது அவனுக்கும் தெரிந்தது.

''முடியலைடா சாமி'' என்று சொல்லி விட்டு சேரை மீண்டும் திருப்பினான்.

''ப்ளீஸ். பேசாம சாப்பிடுங்க?'' என்றாள் அவள் வெட்கத்துடன்.

அவள் தவிப்பைப் பார்த்து அவன் தன்னைக் கட்டுப் படுத்திக கொண்டு மெதுவாக சாப்பிட்டான்.

அவள் கவனமாகச் சப்பாத்தியை இரண்டு பேருக்கும் பரிமாறுவதையும் தானும் கொண்டு வந்திருந்த சேவையை பரிமாறுவதையும் அவன் ஒரு வித ரசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

பார்த்துக் கொண்டிருந்தவன் சட்டென்று அவளுடைய தட்டிலே இருந்து கொஞ்சத்தை அள்ளி தன்னுடைய தட்டில் போட்டுக் கொண்டான்.

அவள் வெலவலத்துப் போனாள். சற்று நேரம் அப்படியே அவளிடம் விளையாடிக் கொண்டிருந்தவன் சட்டென சுதாரித்துக் கொண்டான். ''ஓகே, ஓகே நீ ரொம்ப டிஸ்டர்ப் ஆகறே. ஐ டோண்ட் வாண்ட்டு டிஸ்டர்ப் யூ. இன்னும் நிறைய தூரம் போக வேண்டி இருக்கு. நீ மட்டும் முடிவு பண்ணினா பத்தாது. உங்க பேரண்ட்ஸ்க்கு பிடிக்கணும். எங்க பேரண்ட்ஸ்க்கு பிடிக்கணும்'' என்றான் அவன்.

அவளிடத்திலே லேசான கலவரம் தோன்றி மறைந்தது போல் இருந்தது.

"என்ன மித்ரா, உங்க வீட்ல ஒத்துப்பாங்க தானே?" என்று கேட்டான்.

"அப்படித்தான் நினைக்கிறேன்?" என்றாள் அவள் தயக்கத்துடன்.

"எங்க வீட்டைப் பத்தி கவலையில்லைப்பா. அக்கா அம்மா அப்பாகிட்ட பேசறேன்னு சொல்லியிருக்காங்க" என்றான்.

"தயாராயிக்க, எல்லாத்துக்கும் தயாராயிக்க." என்றான்.

"இனிமே நான் உங்களோட லஞ்ச் சாப்பிட மாட்டேன். வீட்டுக்கு போய் சாப்பிட்டுட்டு வரேன்" என்றாள் அவள்.

"ஆமாமா, நான் கூட அதையே சொல்ல நினைச்சேன். ஏன்னா எந்த டைம்ல நானே எல்லை மீறுவேன்னு எனக்கே தெரியலை" என்றான்.

"இப்படியெல்லாம் சொன்னீங்கன்னா நான் எப்படி வேலைக்கு வர்றது?" என்றாள் அவள்.

"ஓகே, ஓகே நம்பலாம். நான் பக்கா ஜென்டில் மேன். இந்த அளவுக்கு ஒப்புதல் கிடைச்சிருக்கில்லே விடு." என்றான்.

அவன் பேச்சிலே இதுவரை இல்லாதது போல தெரிந்த ஒரு வித்தியாசம் ஒரு வெற்றி மனப்பான்மையும் அவளுக்கு புரிந்தது. "ஆனா அப்பப்ப இப்படி எதையாவது கீழே போட்டு கொஞ்ச நேரம் இப்படி பக்கத்துல வந்தீன்னா போதும் ?"என்றான் பாரி.

"ஹலோ, அந்த ஆசையெல்லாம் வச்சுக்க வேண்டாம்" என்றாள் அவள்.

"பார்க்கலாம்." என்று அவன் சவால் போலச் சொல்லவும் அவள் அவனை அன்புடன் பார்த்து விட்டுச் சிரித்தாள். பிறகு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"பாரி" என்றாள் முதல் முறையாக. இதுநாள் வரை அவனை சார் என்றுதான் அழைப்பது.

"அப்பா, உலகமே தட்டாமாலை சுத்தற மாதிரி இருக்கு. எங்கே இன்னொரு தடவை கூப்பிடு" என்றான் அவன்.

அவள் "நான் இயல்பா கூப்பிடறதையும் கெடுக்கறீங்களே?" என்றாள்.

"ஓகே, ஓகே, உனக்கு எப்படி தோணுதோ அப்படி கூப்பிடு. என்னப்பா என்னமோ சொல்ல வந்தே?" என்றான்.

"இல்லைங்க பாரி. நாம கொஞ்சம் டைம் எடுத்துக்கலாம்."

"எதுக்கு சாப்பிடறதுக்கா? இல்லை வேற எதுக்காவதா?"

"ச்சே, நீங்க இப்படியே பேசினா நான் எப்படி பேசறது?" என்று அவள் கோபித்துக் கொள்ள ஓகே "ஓகே சொல்ல வந்ததைச் சொல்லு."

"இல்லை, அக்காவோட பிரச்சினை இப்படி இருக்கும் பொழுது நீங்களும் நானும் கல்யாணம் பத்திப் பேசினா நல்லா இருக்குமா?" என்றாள்.

அவனும் ஒரு நிதானத்துக்கு வந்தான் ஒரு பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னான்.

"ஆமாம், ஆனா அக்கா ரொம்ப ஸ்டபர்ன[illegible]ருக்காங்க. அக்கா இவ்வளவு பிடிவாதமா இருப்பாங்கன்னு நான் நினைக்கலை மச்சான் கொஞ்சம் இறங்கி வந்தா கூட இவங்க விட்டுக் கொடுக்க மாட்டாங்க போல இருக்கே."

"இல்லைங்க, அவங்க ஸ்டாண்ட் கரெக்ட். எல்லாருக்கும் கதை எழுத வந்துடுமா? எல்லாருக்கும் கட்டுரை எழுத வந்துடுமா? அப்படி ஒரு திறமை அவங்களுக்கு இருக்கக் கூடாதுன்னு அவரு எப்படி சொல்லலாம். அவருக்கு இருக்கற மாதிரி அவங்களுக்கும் திறமை இருக்கலாம் இல்லையா? அவங்க போராடறது கரெக்ட்தாங்க" என்றாள் சங்கமித்ரா.

"நான் அதை ஒத்துக்கறேண்டா, அதே சமயத்துல அக்கா சொல்ற மாதிரி குழந்தைங்க ரெண்டு பேரு இருக்காங்களே."

"இல்லைங்க, எனக்கு என்னவோ ரெண்டு பேரும் சீக்கிரமா சேர்ந்துடுவாங்க அப்படின்னு தோணுது. அதுக்கு நாம ஏதாவது ஸ்டெப் எடுக்க முடியும்னா எடுப்போம்" என்றாள்.

"ஓகே, என்ன செய்யறதுன்னு பார்க்கலாம்" என்றான்.

"அதுவரைக்கும் நாம கொஞ்சம் டிஸ்டன்ஸ் கீப்பப் பண்ணி..." என்று இழுத்தாள்.

"எதையாவது ஒண்ணை சொல்லி டிஸ்டன்ஸ் கீப்பப் பண்ணனும். அவ்வளவுதானே விடு" என்று அவன் சிரித்தான். அந்தச் சிரிப்பில் சற்று எரிச்சல் தெரிந்தது.

"இல்லை அப்புறமா நீங்க வட்டியும் முதலுமா?" என்று அவள் வெட்கத்துடன் நிறுத்த அவன் கடகடவென்று சிரித்தான்.

"பேரம் வேறயா? இதோ பார், எதெதை எப்பப்போ எங்கெங்கே எப்படி வாங்கிக்கணும்னு எங்களுக்கு தெரியும். அந்தக் கவலையை நீ விட்டுடு. முதல்லே உங்க அம்மா அப்பாகிட்ட பேசி கன்வின்ஸ் பண்ணு.நான் அவங்களை சீக்கிரமே சந்திக்கிறேன்" என்றான். சரிங்க என்றாள் அவள்.

அதே சமயத்தில் அவளுக்கு ஒரு ஃபோன் வந்தது. கலவரம் ஆனாள், "சரிங்கப்பா வந்துடறேன்ப்பா" என்று சொன்னவள். பாரியிடம் "பாரி அம்மாவுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லையாம் நான் கிளம்பறேன்" என்றாள்.

"எதுக்குப்பா கார் அனுப்பினீங்க? நானே வந்திருப்பேனே?" என்றாள் சங்கமித்ரா.

அதற்கு அந்தப் பக்கம் என்ன பதில் சொன்னார்கள் என்று தெரியவில்லை. அவள் டிபன் பாக்ஸெல்லாம் எடுத்து அவசரமாக ஒரு பக்கம் மூடி வைத்து விட்டு "ப்ளீஸ் பாரி நான் இண்ணைககு லீவ்" என்றாள்.

"ஓகே மேன் லீவ் இட். நீ கிளம்பு" என்றான் அவன். அவள் அவசரமாக ஓடிப் போனாள்.

தன்னுடைய பேக்கை எடுத்துக் கொண்டு ஓடுவதைப் பார்த்தவன் எழுந்து பின்னோடேயே போனான். அவள் சற்று தூரம் வேக நடை நடந்து ஒரு பெரிய காரிலே ஏறினாள்.

அந்தக் கார் கப்பல் போல் இருந்தது. அதைப் பார்த்த உடனே பாரியே அதிர்ந்து போனான். "இந்தப் பெண் யார்? என்று கவலையுடன் கேள்வி எழுந்தது.

முகத்தில் கோபமும் ஏறியது.

அத்தியாயம் - 23

ஒரு வாரமாகவே தன்னிடம் அமர்ந்து பேசுவதற்கு நேரம் கிடைக்காதவன் போல ஓடிக் கொண்டிருக்கிற சகோதரனை ஒருவித கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்தாள் சரஸ்வதி.

கிட்டத்தட்ட சங்கமித்ராவிடம் பேசி தன் அன்பை வெளிப்படுத்தி விடுவது போல அன்று பேசிவிட்டுப் போனானே ஆனால் இப்பொழுது சங்கமித்ராவைப் பற்றிய பேச்சை எடுத்தாலே மேற்கொண்டு பேச மறுக்கிறான்.

அவளைப் பற்றி எந்தத் தகவலும் சொல்லவில்லை அவளும் பேசவில்லை. அவள் உண்மையிலேயே இவளுடைய நிறுவனத்திலே வேலை செய்கிறாளா என்று கூட இவளுக்கு கவலையாகிப்போனது.

எப்படிக் கேட்பது என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

மேலும் இரண்டு நாட்கள் போய்விட்டன. பத்து நாட்களுக்கு மேல் பொறுக்க முடியாமல் சரஸ்வதி சகோதரனிடத்தில் "ஏம்பா, சங்கமித்ரா ரொம்ப பிஸியோ? நீயும் ரொம்ப பிஸி மாதிரி தெரியுது. உட்கார்ந்து பேசக்கூட நேரம் இல்லாம ஓடிக்கிட்டு இருக்கே" என்றாள்.

"இல்லக்கா, ஒரு பெரிய பத்திரிகை ப்ராஜக்ட் எடுத்திருக்கேன். அதுக்காக நேரம் காலம் தெரியாம ஓடிட்டு இருக்கேன். இப்ப எதைப் பத்தியும் யோசிக்க நேரம் இல்லை" என்றான்.

"ஓஹோ" என்றாள் அக்கா இறங்கிப் போன குரலில்.

"சரிப்பா, நீதான் பிஸியா இருக்கே? மித்ராவுக்கு என்ன ஆச்சு? ஒருவேளை நீ வெளிய போயிடறதுனால ஆபீஸ் பொறுப்பை அவள் பார்த்துக்கிறாளோ?" என்றாள்.

"இல்லை" என்றான் சுருக்கமாக.

"புரியலைப்பா" என்றாள் அக்கா.

"புரியறதுக்கு என்ன அக்கா இருக்கு. அந்தப் பொண்ணு கொஞ்ச நாளைக்கு வேலைக்கு வந்தாள் நல்லாப் பழகினா. இப்போ திடீர்னு அவங்க வீட்ல யாருக்கோ உடம்பு சரியில்லையாம். அதனால தொடர்ந்து வர முடியாதுன்னு சொல்லிட்டாப்ல" என்றான்.

சரஸ்வதி திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தாள். "ஏன் தம்பி நீ ஏதாவது பிரச்சினை பண்ணி அவளுக்கு கோபம் வந்து..." என்று இழுத்தாள்.

"அவளுக்கு என்ன கோபம் வர்றது?. எனக்குத்தான்" என்று தன்னை மறந்து சொன்னான். சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டு "அப்படியெல்லாம் ஒண்ணும் நடக்கலை. நானும் ப்ரொபோஸ் பண்ணலை. அவளும் அதை ஏத்துக்கவோ தடுக்கவோ எதுவும் நடக்கலை. செகண்ட் தாட்டுகுகு அப்புறமா எனக்கு ப்ரொபோஸ் பண்ற ஐடியா மாறிப் போச்சு".

"ஏன் தம்பி? உனக்கு எல்லா விதத்துலயும் அந்தப் பொண்ணு பொருத்தமா?" என்று அக்கா இழுக்கவும்.

"அது எப்படி நமக்குத் தெரியும்?. அவ நல்லா பழகறா. நல்ல பொண்ணா தெரியறா ஆனா அவங்க ஃபேமிலி எப்படி, அவங்களோட ஸ்டேட்டஸ் என்னன்னு நமக்கு தெரியுமா?" என்றான்.

"ஓஹோ, அவங்க ஸ்டேட்டஸ் பத்தி ஏதாவது விசாரிச்சியா?"

"விசாரிக்கறது என்ன? நமக்குத்தான் கடைசியாத் தெரிஞ்சிருக்கு" என்றான்.

"சரிக்கா, நான் அப்புறம் பேசறேன். ஐ ஆம் வெரி டயர்ட்" என்று எழுந்தான்.

"தம்பி, இப்படி அவாய்ட் பண்ணாதே. என்ன விஷயம்னு சொல்லு. மேற்கொண்டு என்ன செய்யறதுன்னு யோசிப்போம். உனக்கு அந்தப் பொண்ணை ரொம்பப் பிடிச்சிருந்ததுன்னு எனக்குத் தெரியும்" என்றாள் அக்கா.

மிகவும் கவலையுடன் கேட்கிற அக்காவின் முகத்தைப் பார்த்துவிட்டு மேற்கொண்டு வெட்டிப் பேச அவனுக்கு மனம் வரவில்லை.

நின்று அக்காவை அன்புடன் பார்த்தான். ஆதுரத்துடன் ஒரு பெருமூச்சு விட்டான். "நத்திங் டூயிங். அக்கா விட்ருங்க" என்றான்.

"என்ன தம்பி இப்படி சொல்றே?" என்றாள் அக்கா மறுபடியும்.

சட்டென்று அவன் கோபமானான். "நான்தான் ஜாடை மாடையா சொல்றேனில்லே. விட்ற வேண்டியதுதானே. சும்மா எதுக்கு மேற்கொண்டு பேசிக்கிட்டு. அந்தப் பொண்ணு யார் தெரியுமா? கோவை சில்க்ஸ் காரரோட பொண்ணு" என்றான்.

"என்னது?" என்றாள் அக்கா ஆச்சரியமாக.

"ஆமாம், கோயம்புத்தூர்லயே ரெண்டு பிராஞ்ச். திருப்பூர், சென்னை, சேலம்னு அங்கங்கே பிராஞ்ச். ஒரே பொண்ணு. ஒரே பையன். அந்த ஸ்டேட்டஸ் நம்மளுக்கு ஒத்து வருமா?" என்றான்.

சரஸ்வதி ஊமையாகிப் போனாள். "ஓஹோ, நானும் சேர்ந்து என்கரேஜ் பண்ணிட்டேனேப்பா. ஆனா அந்தப் பொண்ணு உண்மையாவே உன்மேலே..." என்று மேலும்

ஏதோ சொல்லப் போக அவன் வலது கையை உயர்த்தினான்.

"ப்ளீஸ் அக்கா, விட்ருங்க. இது ஒரு அனுபவம். அவ்வளவுதான். அதுக்கு மேல இதிலே பேசறதுக்கு ஒண்ணும் இல்லை. ப்ளீஸ் அக்கா" என்று சொல்லி விட்டு தன்னுடைய அறைக்குப் போய் அறைக் கதவை சாத்திக் கொண்டு படுத்தான்.

பெரும்பாலும் அறைக்கதவை ஒருக்களித்து சாத்திக் கொள்ள மாட்டான்.

மேற்கொண்டு பேசப் பிரியமில்லை என்று சொல்லு கிறானோ என்று வருத்தத்துடன் அக்கா தன்னுடைய அறைக்குப் போனாள்.

அங்கே குழந்தைகள் இரண்டும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

அமர்ந்தவள் இரண்டு குழந்தைகளையும் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு படுக்கையில் சாய்ந்தாள்.

நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது. நல்ல ஆரம்பம் என்று எவ்வளவு ஹேப்பியாக இருந்தோம் என்று எண்ணிக் கொண்டு பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

அதே நேரத்தில் பாரியின் மனம் பத்து நாட்களுக்கு முன் நடந்த அந்த நிகழ்வை நோக்கி ஓடியது. "கார் அனுப்பறீங் களா அப்பா வந்துடறேன்" என்று சொல்லி விட்டு வெளியே ஓடிய சங்கமித்ராவை அவனும் பின் தொடர்ந் தான். "என்ன மித்ரா? என்ன ஆச்சு?" என்று கேட்டுக் கொண்டே.

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். நான் இன்னிக்கு லீவு என்று சொல்லிக் கொண்டே ஓட "ஓகே லீவ்" என்று தான் அடித்த ஜோக்கை கூட ரசிக்காதவளாக அவள் ஓடவும் அவன் நின்று பார்த்தான்.

தங்களுடைய நிறுவனத்திங்ஞீ ஆபீஸினுடைய போர்ட்டி கோவில் நின்று பார்த்தான். அந்தப் பெரிய கார் வந்து நிற்க டிரைவர் இறங்கி கதவைத் திறந்துவிடுவதுமாக ஒரு காட்சியை அவன் பார்க்க நேர்ந்தது.

அவள் பதட்டத்துடன் காரின் பின் சீட்டில் ஏறி அமர்ந்தாள். நின்று பார்த்துக் கொண்டிருந்த பாரிக்கு முதல் முறையாக அந்தக் கேள்வி எழுந்தது!

ஏதோ வேலைக்கு வந்தாள். நன்றாகப் பழகினாள். தன்னுடைய காதல் பார்வைக்கு பதில் பார்வை தந்தாள். கனியக் கனியப் பேசினாள் என்பதற்காக உடனே நாம் புரொபோஸ் பண்ணுகிற அளவுக்கு போய்விட்டோமே. அவளுடைய சுற்றுப் புறச் சூழ்நிலை பற்றி தெரிந்திருக்க வேண்டாமா. இப்படி ஒரு கப்பல் போன்ற காரில் ஏறிப் போகிற பெண் யாராக இருக்க முடியும் என்று சிந்தனையில் ஆழ்ந்தான்.

அதே நேரத்தில் செந்தில் அங்கே தன்னுடைய டு விலரில் வந்து இறங்கினான். "அண்ணே நம்ம மித்ரா அந்தக் காரில் போனதைப் பார்த்தீங்களா?" என்றான்.

சொல்லி விட்டு லேசாக உதட்டைப் பிதுக்கிக் கொண்டு தன்னுடைய டி.வி.எஸ். பிஃப்டியை தட்டிக் கொண்டான். "நமக்கு வாய்த்தது இந்த எக்ஸ்.எல்.தான் அங்க பாருங்க. எக்ஸலண்ட் கார்" என்றான்.

சிந்தனையுடன் திரும்பிய பைந்தமிழ் பாரி சொன்னான். "அதாண்டா. நானும் பாக்கறேன். இத்தனை நாள் சங்கமித்ரா இப்படி ஒரு கார்ல போகக் கூடிய பொண்ணு அப்படிங்கற மாதிரியெல்லாம் நீங்களும் சொல்லலையே?" என்றான்.

"அதாண்ணே. ஏண்ணே, நம்மளும் அதைப் பத்தி விசாரிக்கவே இல்லை" என்றான்.

"அந்த மடத்தனத்துக்குத்தான் இப்ப வருத்தப்படறேன்" என்றான்.

செந்தில் சிந்தனையுடன் அண்ணனைப் பார்த்தான்.

"என்னண்ணே? எனி திங் ராங்?" என்றான்.

"எவ்ரி திங் இஸ் ராங்" என்றான் பைந்தமிழ் பாரி.

"ஏண்ணே என்னாச்சு?" என்றான்.

தன் கீழ் பணி புரிகிறவர்களில் செந்தில் கொஞ்சம் பக்குவமானவன் என்பதால் தன்னுடைய சொந்த வேலைகளுக்காகவோ அல்லது தேவைகளுக்காகவோ அவன் செந்திலை மட்டும்தான் அழைப்பான். தன்னுடைய குடும்ப விவகாரங்களைக் கூட சில நேரங்களில் அவன் பகிர்ந்து கொண்டது உண்டு.

"அதை ஏண்டா கேட்கறே?" என்று பெருமூச்சு விட்டான்.

"எண்ணண்ணே விஷயம்?" என்று அவன் பாரியின் பின்னாலேயே போனான்.

தளர்ந்த நடையுடன் பாரி தன்னுடைய அலுவலகத்தில் தனக்கென்று உள்ள அந்தக் கேபினில் போய் அமர்ந்தான்.

செந்திலும் விட்டதைப் பாய்ந்து பிடிப்பவன் போல பின்னாலேயே போய் எதிரில் அமர்ந்தான். "அண்ணே சொல்லுங்கண்ணே" என்றான்.

"ஒண்ணும் இல்லடா? இந்த மித்ராப் பொண்ணு யாருன்னு தெரியலை.பெரிய பணக்காரப் பொண்ணு மாதிரி தெரியுது. நான் வேற ஆழம் தெரியாம கால விட்டுட்டேன்."

"ஏண்ணே ஒரு பக்கமா இல்லை ரெண்டு பக்கமுமா"

"இல்லடா. அவளுக்கும் இன்ட்ரஸ்ட் இருந்த மாதிரித் தான் தெரிஞ்சது. என்கரேஜிங்காதான் பேசினா. சொல்லப் போனா என் வாயைப் பிடுங்கி வரவச்சான்னு வையேன். ஆனா யோசனையா இருக்குடா" என்றான்.

"என்னண்ணா யோசனை? பெரிய வீட்டுப் பொண்ணா இருந்தா என்ன?" என்றான் செந்தில்.

"ஆமாம், அவ பட்டுப் புடவைக்கு நான் முக்காலி தூக்கிட்டுப் போகணும். இல்லேன்னா அவங்க வசதிக்கு நான் வளைஞ்சு கொடுக்கணும். நாட் அட் ஆல்" என்றான்.

"ஏண்ணே அப்படி நினைக்கிறீங்க?. உங்களோட கவுரவத்தைக் காப்பத்தற பொண்ணா உங்களோட தகுதிக்கு தகுந்த மாதிரி வாழற பொண்ணா இருந்தா?" என்றான்.

"டேய். எந்த உலகத்துலடா இருக்கறே? நான் பத்திரிக்கைகாரன்டா. எத்தனை காலேஜ்ல பார்க்கறேன். பையனுக்கு பாக்கெட்ல பணம் இருந்தாத்தாண்டா பொண்ணு கூட டேட்டிங் போறா. இங்க டேட்டிங் கெல்லாம் நடக்குது அது தெரியுமா உனக்கு?".

செந்தில் "அந்தக் கண்றாவி யெல்லாம் வேற நடக்குதா?" என்றான்.

"அப்படி இருக்கையில நம்ம ஸ்டேட்டஸ்கெல்லாம் இந்த மாதிரி பொண்ணெல்லாம் அமையாது. அமைஞ் சாலும் ஒத்து வராதுடா. லைஃப்ல பீஸ் ஆப் மைண்ட் இருக்காது. பேசாம சொல்லிட வேண்டியதுதான்" என்றான்.

"என்ன சொல்லப்போறீங்க?" என்று கேட்டான் செந்தில்.

"நான் சொல்லப்போறது இல்லை. நீ தான் ஃபோன் பண்ணி சொல்லப் போறே" என்றான் பைந்தமிழ் பாரி.

"அண்ணா. என்னை எதுவும் வம்புல மாட்டி விட மாட்டீங்களே?"

"என்னடா உன்னை எதுக்கு வம்புல மாட்டி விடப் போறாங்க? அண்ணனுக்கு தேவையான இந்த ஹெல்ப் கூட பண்ண மாட்டியா?" என்றான்.

"கண்டிப்பா பண்றேண்ணே. உங்களுக்காக உயிரை வேண்ணாலும் கொடுப்பேன்" என்றான்.

"உன் உயிர் ஒரு காசு பெறாது. அதை வச்சுட்டு என்ன பண்றது. அதுக்கு ஏதாவது கிட்னி, கண்ணு, காது கொடுக்கறேன்னா கூட பரவாயில்லை".தன் அதிர்ச்சியை மறைத்துக கொள்ள அவன் கேலியில் இறங்கினான்.

"அண்ணே ஆனாலும் நீங்க என்னை ரொம்ப டேமேஜ் பண்றீங்க" என்றான்.

"சரி, சரி, விஷயத்துக்கு வா" என்றான்.

"சொல்லுங்கண்ணே!" என்றான் செந்தில்.

"இதோ பார் செந்தில். நீ என்ன செய்வியோ? ஏது செய்வியோ, நாசூக்கான முறையில சங்கமித்ரா இனிமேல்

இந்த ஆஃபீஸுக்கு வரத் தேவையில்லைன்னு சொல்லிடு. அது புண் படுத்தற மாதிரி சொல்லுவியோ அது பண் படுத்தற மாதிரி சொல்லுவியோ அது உன்னோட சாமர்த்தியம்''.

செந்தில் திடுக்கிட்டுப்போனான். "அண்ணே, என்னண்ணே. வரட்டும்ண்ணே. அப்புறம் முடிவு எடுத்துக்குவோம்ண்ணே" என்றான்.

''அந்த வேலையே வேண்டாம்டா. இந்தப் பாயிண்ட்ல ஒதுங்கிக்கறதுதான் மரியாதை. அவளுக்கும் மரியாதை எனக்கும் மரியாதை. அது மட்டும் இல்லை அந்தப் பொண்ணு யாருன்னு விசாரி'' என்றான்.

''அது வேண்ணா பண்றேண்ணே'' என்றான் செந்தில்.

பிறகு யோசனையோடு ''அண்ணே எப்படியும் அந்தப் பொண்ணு ரெண்டு நாள் லீவு சொல்லியிருக்கு. அதுக்குள்ள கண்டு பிடிச்சிடுவோம். அப்புறம் முடிவு எடுத்துக்குவோம்" என்றான்.

''ம்...'' என்றான் அரைகுறை மனதோடு பாரி. ஆனால், விசாரித்த செந்திலே திகைத்துப்போனான்.

அடுத்த நாள் மாலை வந்தான். ''அண்ணே .அந்தப் பொண்ணு யார் தெரியுமா?'' என்றான்.

''யாரு?'' என்றான் பைந்தமிழ் பாரி.

''அந்தப் பொண்ணு கோவை சில்க்ஸோட வாரிசு" என்றான்.

''என்னது?'' என்று அதிர்ச்சியானான் பாரி.

''ஆமாண்ணா. கோயம்புத்தூர்ல ரெண்டு கடை சென்னையில ஒரு கடை, திருச்சியில ஒரு கடை

எங்கெங்கோ கடை இருக்கு. ஒரே பொண்ணு, ஒரே பையன். பையன் கோடீஸ்வரன் வீட்ல கல்யாணம் பண்ணி இருக்கான். இது என்னண்ணா, உங்ககிட்ட வந்து புரொபோஸ் பண்ணிட்டு இருக்கு'' என்றான்.

கிட்டத்தட்டத் தலையில் கை வைக்காத குறையாக அமர்ந்து கொண்டான் பாரி.

செந்தில் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு ''ஆமாண்ணா, நீங்க சொன்னது கரெக்ட்தான். ஒதுங்கறதுன்னு முடி வெடுத்தா இந்தப் பாயிண்ட்ல ஒதுங்கிடறதுதான் நல்லது'' என்றான்.

''ஆமாடா, ப்ளீஸ் என்னவாவது சொல்லி வரவேண்டான்னு சொல்லிடுடா.''

''அது நான் பார்த்துக்கறேண்ணே. நீங்க ஓர்ரி பண்ணிக் காதீங்க'' என்றான்.

அதே போல என்ன சொன்னானோ தெரியவில்லை. சங்கமித்ரா அதற்குப் பிறகு வரவில்லை என்பது ஒரு பக்கம். ஆனால், இடையிலே இரண்டு மூன்று முறை போன் செய்தும் அவன் தொடர்பை துண்டித்து விட்டான்.

யோசித்துக் கொண்டே படுத்திருந்தவன் பக்கத்தில் செல்ஃபோன் ஒலித்தது. யாரென்று பார்க்காமல் சட்டென்று எடுத்து காதுக்குக் கொடுத்தான். ''ஹலோ'' என்றது சங்கமித்ராவின் குரல்.

இதை எதிர்பார்க்காத பாரி திகைத்துப் போனான். ''இவ்வளவு கோழையா? நீங்க இப்படி ஓடி ஒளியறீங்க. நான் உங்களை என்னமோ நினைச்சேன்'' என்றாள் மித்ரா கோபமாக.

"நான் கோழை, ஒண்ணுத்துக்கும் ஆகாதவன். நீ என்ன வேண்ணா நினைச்சுக்கோ. ஐ டோன்ட் கேர். ஆனா இனிமேல் ஃபோன் பண்ணாதே" என்றான்.

"ஏன் ஏன்?" என்று பதறினாள்.

"அது அப்படித்தான்" என்று அவன் செல்ஃபோனை ஆப் செய்து விட்டான்.

அந்தப் பக்கம் சங்கமித்ரா உறைந்து போனாள்.

அத்தியாயம் - 24

மனமெல்லாம் கனத்துக் கிடந்தது பைந்தமிழ் பாரிக்கு மிக குறுகிய காலமே என்றாலும் கூட இந்த ஒரு மாத காலத்தில் அவன் தான் முழுமையான ஒரு இளைஞன் என்பதை பரிபூரணமாக உணர்ந்தான்.

எந்த வேலை செய்து கொண்டிருந்த பொழுதும் அவனுக்குள்ளே மித்ராவின் நினைப்பு ஓடிக் கொண்டே இருந்தது. அது ஒரு சுகமாகவும் இருந்தது. இரவு படுக்கும் பொழுது காலை விழிக்கும் பொழுதும் சங்கமித்ராவின் முகம் சிரித்த முகமாக அவன் நினைவுகளில் அலை மோதியது.

இந்தப் பெண் தன் வாழ்க்கையில் வசந்தத்தை ஏற்படுத்த வந்தவள் என்ற எண்ணம். அவனுக்குள்ளே பரவிப் பரவி ஒரு பரவசத்தை கொடுத்தது.

இத்தனை அனுபவத்தையும் ருசித்து அனுபவித்தவனுக்கு இப்பொழுது ஒரு பெரிய வெறுமை ஏற்பட்டாற்போல

தவறு செய்து விட்டோம். அவள் யார் என்ன என்று தெரிந்து கொண்டதற்குப் பிறகு பழகியிருக்க வேண்டும். உடனே இன்னொரு மனது கேட்டது. "அட பைத்தியக் காரா, அப்படியெல்லாமா அன்பு வரும், அப்படி எல்லாமா காதல் வரும்?.

நீதானே சொன்னாய் செம்புலப் பெயனீர் போல, அப்படிப் பார்த்த உடனேயோ பழகியவுடனேயோ ஈர்ப்பதற்கு பெயர்தான் காதல். ஆலோசித்துத் தரம் பிரித்து கூறு போட்டு அதற்குப் பிறகு வந்தால் அதற்குப் பெயர் காதல் இல்லை. அது கிட்டத்தட்ட நிச்சயிக்கப்பட்ட திருமணம் மாதிரித்தானே?" என்று கேட்டது.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டுக் கொண்டான். உள்ளுக்குள்ளே பெரிய போராட்டம் நடந்து கொண்டிருந்தது என்றால் அதை விட இன்னொரு பெரிய தலைவலியும் இருந்தது.

தன் மனதில் இருக்கிற உற்சாகமின்மையை எங்கே அக்கா புரிந்து கொண்டு விடுவாளோ என்ற கவலையும் அவனுக்கு இருந்தது. அதனால் சரஸ்வதியின் முன்னால் நடிக்க வேண்டியிருந்தது.

அந்த நடிப்பு, செயற்கைத் தனம் தூக்கலாகத் தெரிந்து விடக்கூடாது என்று எச்சரிக்கையாக இருக்க வேண்டி இருந்தது. இருந்தாலும் அக்கா தன்னைப் புரிந்து கொண்டு விட்டாள்.

தான் செயற்கையாகத்தான் உற்சாகம் காட்டுகிறோம் என்பதைப் புரிந்து கொண்டு விட்டாள் என்பது அவனுக்குத் தெரிந்தது.

இரண்டு மூன்று முறை அவனிடம் ஜாடையாகக் கூட அவள் பேசிவிட்டாள். "பேக்கிரவுண்டை பத்தி என்னப்பா

இருக்கு. உனக்கும் அவளுக்கும் பிடிப்பிருக்குன்னா அதுதான் முக்கியம்'' என்று ஆனால், பாரிக்கு ஒரு பெரிய அச்சம் இருந்தது.

அந்தஸ்து வேறுபாடு என்பது எப்படி இருந்தாலும் தன்னுடைய வாழ்க்கையில் நாளைக்கு பிளவு ஏற்படுத்தும் என்று அவனுக்கு தோன்றியது.

ஏதேதோ எண்ணிக் கொண்டு படுத்திருந்தான். இரவு பன்னிரண்டு மணி இருக்கும். தூக்கம் வரவில்லை. புரண்டு படுத்தான். செல்ஃபோன் மணி சிணுங்கியது.

அரைத் தூக்கத்திலேயே யோசிக்காமலேயே செல் போனை கையிலே எடுத்து விட்டான். அந்தப் பக்கம் சங்கமித்ரா ''ஹலோ, நான் சங்கமித்ரா பேசறேன் போனைக் கட் பண்ணிடாதீங்க'' என்று அவள் சொன்ன வுடனேயே அவன் கை அதிர்ச்சியாக நின்றது.

ஏன் என்றால் துண்டித்து விடலாம் என்று தான் அவன் நினைத்தான். ஆனால் சங்கமித்ராவின் குரலில் தெரிந்த ஏதோ ஒன்று. தவிப்பு, காதல், அன்பு எது என்ற தெரியவில்லை. ஆனால், இவனை இழுத்துப் பிடித்தது.

இவன் ''சொல்லு மித்ரா'' என்றான் அடங்கிய குரலில். ''எதுக்காக இப்படி பயந்து ஓடறீங்க?'' என்றாள் அவள் அந்தப் பக்கம் இருந்தது.

''நான் ஒண்ணும் பயந்து ஓடலை. நமக்குள்ள ஒத்து வராது. பிரிஞ்சிடலாம்'' என்றான் இவன்.

''அதைத்தான் எதை வச்சு முடிவு பண்ணினீங்க?''ன்னு கேட்கறேன் என்றாள் அவள்.

''சாரி மித்ரா, முடிவு பண்ணியாச்சு. அதுக்கப்புறம் அதைக் கூறு போட்டு அலசறதுல என்ன இருக்கு. உனக்கும் எனக்கும் ஒத்து வராது'' என்றான்.

அவள் ''உங்களுக்கும் எனக்குமா? இல்லை எங்க அப்பா பணத்துக்கும் உங்க ஈகோவுக்கும் ஒத்து வராதா?'' என்று கேட்டாள்.

அவன் சற்றே திடுக்கிட்டுப் போனான். ''நீ என்ன வேண்ணா வச்சுக்கோ. அப்படித்தான் வச்சுக்கோயேன். ஆனால், இதைத் தொடர முடியாது மித்ரா. புரிஞ்சுக்கோ''

''ஏன் முடியாதுன்னு சொல்லுங்க?'', என்றாள் அவள்.

இல்லை, மித்ரா உன்னுடைய தரத்துக்கும், உன்னுடைய வாழ்க்கை நிலைக்கும் என்னோட வாழ்க்கை நிலைக்கும் பெருத்த வேறுபாடு இருக்கு. இது ஒத்து வராது. ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட்'' என்றான்.

''இப்படி ஒரு வேறுபாடு இருக்குன்னு எனக்குத் தெரியும் தானே. தெரிஞ்சு தானே நான் உங்க கிட்ட பழகினேன் அப்ப நான் உங்க லெவலுக்கு இறங்கி வந்து'' என்றாள் அவள்.

சொல்லும் போதே அவள் தவறான வார்த்தையை விட்டு விட்டோம் என்று தெரிந்து கொண்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''அதான், அதைத்தான் நான் சொல்றேன். நீ என்னைக் கல்யாணம் பண்ணினா என்ன நினைப்பே. நீ ஏதோ எங்க லெவலுக்கு இறங்கி வந்துட்ட மாதிரித்தான் நினைப்பே. உன்னை உன்னுடைய சிம்மாசனத்தில் இருந்து இறக்கறதுல எனக்கு விருப்பம் இல்லை'' என்றான் அவன் கிண்டலாக.

"சாரி சாரி தப்பான வார்த்தையா வந்துடுச்சு. இல்லை நான் இறங்கின்னு இல்லை, உங்களைத் தேடி வந்தேன் அப்படின்னு வச்சுக்கோங்க".

"நீ எதுக்காக தேடி வந்தேன்னு எனக்குத் தெரியலை. என்னைப் பொறுத்த வரைக்கும் ஒரு ஸ்டாஃபா வந்துருக்கே அநேகமாக நடுத்தரக் குடும்ப பொண்ணாக இருக்கும். அப்படின்னு நினைச்சுதான் உங்கிட்ட பழகிட்டேன்" என்றான்.

"சரி, இப்ப என்ன பண்ணலாம் சொல்லுங்க" என்றாள் அவள்.

"ஒண்ணும் பண்றதுக்கு இல்லை மித்ரா. நீ உன் வழியைப் பார்த்துக்கோ. நான் என் வழியைப் பார்த்துக்கறேன்" என்றாள்.

"நான் என் வழியைத் தெரிஞ்சுட்டுதான் தேர்ந்தெடுத்தேன். நீங்க இப்ப பயப்படறீங்க. உங்க மேலே உங்களுக்கு நம்பிக்கை இல்லை" என்றாள் அவள்.

"வேணாம். மித்ரா வார்த்தைகளால திருப்பித் திருப்பிப் பேசி என்னத்துக்கு ஆகப் போகுது" என்றான் அவன்.

"அப்படி இல்லைங்க. நாம நேர்ல பேசணும்" என்றாள்.

"இல்லையில்லை. நான் நேர்ல பேசறதா இல்லை. ஐ ஆம் சாரி மித்ரா. ப்ளீஸ் டோண்ட் டிஸ்டர்ப் மீ." என்று சொல்லி விட்டு செல்ஃபோனை துண்டித்து விட்டான்.

அந்தப் பக்கம் சங்கமித்ரா செல்ஃபோனை கையிலே வைத்துக் கொண்டு கண்கள் கலங்க உதட்டைக் கடித்துக் கொண்டு தன்னுடைய படுக்கையில் சாய்ந்தாள். இந்தப் பக்கமும் இதுவரையில் இல்லாத ஒன்றை, பாரி தன் வாழ்க்கையிலே செய்யாத ஒன்றைச் செய்தான்.

படுக்கையில் குப்புறப் படுத்துக் கொண்டு சத்தமே வராமல் குலுங்கிக குலுங்கி அழுதான்.

பூத்து மலர்வதற்கு முன்பாகவே கருகிப் போன மொட்டு ஒன்று போல தன்னுடைய காதல் கருகிப் போனதை எண்ணி அவன் ஆழ்ந்த வேதனையில் மூழ்கி விட்டான்.

எப்பொழுது தூங்கினோம் என்று தெரியாத அளவிலே அப்படியே உறங்கி விட்டான்.

எப்போதும் கதவை ஒருக்களித்து வைத்திருப்பதோடு சரி. அறைக் கதவை சாத்துவது இல்லை என்பதால் அவன் இப்பொழுதும் அப்படியேதான் வைத்து விட்டு உறங்கினான்.

ஆனால் இரண்டு மணி அளவிலே ஏதோ உந்துதல் காரணமாக எழுந்த சரஸ்வதி இவனுடைய அறையை நோக்கி வந்தாள்.

லேசான கண்ணீர்கோடு கண்களுக்குப் பக்கத்தில் தெரிய அவன் உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த உடனே சரஸ்வதிக்கு அடிவயிறெல்லாம் பிசைந்தது.

வீட்டில் கடைசிப் பிள்ளை என்பதால் அவன் செல்லமாகத்தான் வளர்ந்தான். ஏழ்மையோ, வறுமையோ அவர்களுக்கு இல்லை என்பதால் ஓரளவுக்கு நல்ல முறையிலேதான் அவனை வளர்த்தார்கள்.

அதனால் அவன் இதுவரையிலும் அழுது அவர்கள் பார்த்ததில்லை. இப்பொழுது தன்னை மறந்து அவன் கண்ணீர் விட்டு அழுகிறான் என்று எண்ணியவுடனே சரஸ்வதிக்கு வேதனை பொங்கிக் கொண்டு வந்தது. இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டே தன்னுடைய அறைக்கு வந்தாள்.

தன் கணவரிடம் இருந்து தான்பிரிந்திருக்கிறோம் என்பது கூட இப்பொழுது அவளுக்கு பெரிய வேதனையாக தோன்றவில்லை. புறக் காரணங்களுக்காக தன்னுடைய அன்பைப் புதைத்துக் கொள்கிற தம்பியினுடைய அறியாமையே அவளுக்கு பெருத்த வேதனையை ஏற்படுத்தியது.

தெளிவான முடிவெடுக்க வேண்டிய அவசியம் இப்பொழுது சரஸ்வதிக்கு இருந்தது.

அவளும் படுக்கையிலே அமர்ந்து கொண்டு சற்று நேரம் யோசித்துக் கொண்டிருந்தாள். பிறகு முகத்திலே உறுதி ஏற்பட்டது. அப்படித்தான் செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டு படுக்கையிலே படுத்தாள். அந்த முடிவு எடுத்ததற்குபிறகு அவளுடைய முகத்திலும் மனத்திலும் நிம்மதி தோன்றியது.

★ ★ ★

''தம்பி எடுத்துட்டுப் போயிடறியா எப்படி?'' என்று கேட்டுக் கொண்டே சரஸ்வதி சமைத்துக் கொண்டிருந் தாள். ''நீ ராத்திரி மூட் அவுட் ஆனியா கஷ்டப் பட்டியா?'' என்று எதுவுமே அவள் கேட்கவில்லை. அவனும் அதைப் பற்றி எதுவும் பேசிக்கொள்ளவில்லை.

இருந்தாலும் சரஸ்வதி மெதுவாக ''மித்ரா, எதுவும் அதுக்கப்புறம் பேசினாளா?'' என்று கேட்டாள்.

சகோதரியிடம் பொய் சொல்ல விரும்பாதவனாக ''பேசினா'' என்றான்.

''எப்பத் தம்பி?'' என்று கேட்டாள்.

''அவ பேசினா. நிறைய தடவை ட்ரை பண்ணினா. நான் ரெஸ்பான்ஸ் கொடுக்கலை. நேத்து நைட் கூப்பிட்டா. அது... நான் தெரியாம எடுத்துட்டேன்'' என்றான்.

ஏதோ பாத்திரத்தை எடுத்துக் கொண்டு சமையலறை நோக்கி போன சரஸ்வதி சட்டென்று நின்றாள். திரும்பி வந்தாள்.

''தம்பி'' என்றாள். அவன் நிமிர்ந்து சகோதரியைப் பார்த்தான். முகத்தில் சொல்லவொண்ணாத வேதனை தெரிந்தது.

''ஏன் தம்பி?'' என்றாள் சரஸ்வதி அன்பை தேக்கிக் கொண்டு. அவன் ஒரு கையாலாகத கோபத்துடன் ''என்னை என்ன பண்ணச் சொல்றே?.அவங்க ரேஞ்ச் என்னன்னு தெரியுமா அவங்ககிட்ட போய் கையை கட்டிட்டு நிக்க முடியுமா? அவ நேத்து கூட அவ பேச்சுல சொல்றா. உங்க வசதி எனக்குத் தெரியும். தெரிஞ்சு தானே நான் இறங்கி வந்து அப்படிங்கறா அவ இறங்கி வர்றாளாம்.நாம கீழ இருக்கோம் அவ மாடில இருக்கா அவ இறங்கி வர்றா அப்படி எல்லாம் போய் ஒண்ணும் அவமானப் படணும்னு அவசியம் இல்லை. என்னக்கா, கொஞ்ச நாளைக்கு கஷ்டமா இருக்கும். அப்புறம் சரியாப் போயிடும்.''

சரஸ்வதி அவனை ஆழ்ந்த வேதனையுடன் பார்த்தாள். ''ஏன் தம்பி அப்படியெல்லாம் நினைச்சாப்ல பக்கத்தைப் புரட்டிப் போடற மாதிரி புரட்ற ஆள் நீயும் இல்லை. அந்தப் பொண்ணும் இல்லைன்னுதான் நினைக்கிறேன்.''

''அவ எப்படியோ ஐ டோன்ட் கேர். நான் என்னை மாத்திக்கப் போறேன். ஒரு ஒரு வருஷம் டைம் கொடு.

அதுக்குள்ள உங்க பிரச்சினை தீரட்டும். அதுக்கப்புறம் நானே ஒரு பொண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கிறேன். அப்ப கேட்கறேன். அந்த டைம்ல எனக்கு பொண்ணு பார்த்துக் கொடு. போதுமா?'' என்றான்.

அவன் பேசுகிற தோரணையைப் பார்த்தவுடனே மேற்கொண்டு அவனிடம் பேசுவதற்கு வழியில்லாமல் சரஸ்வதி நகர்ந்தாள்.

''அக்கா'' என்றான் மறுபடியும். அவள் திரும்பி வந்தாள். ''நீ ஒண்ணும் ரொம்ப வொரி பண்ணிக்காதே. வாழ்க்கையில ஏதோ கட்டத்துல ஏதோ ஒருத்தரை நேசிக்காம யாருடைய வாழ்க்கையும் இருக்காது. அட்லீஸ்ட் பொண்ணு பார்க்க வந்த ஒரு மாப்பிள்ளையை யாவது ஒரு பொண்ணுக்கோ ஒரு பையனுக்கோ பிடிச்சுப் போய் மாறி இருக்கும். அதனால நீ இதைப்பத்தி வொரி பண்ணிக்க வேண்டியதில்லை.மணவறையில உட்கார்ந்து மாறுவதெல்லாம் இருக்குக்கா.''

''சரி தம்பி'' என்றாள் சரஸ்வதி.

''உன் இஷ்டம்'' என்றாள். பிறகு நகர்ந்துவிட்டாள்.

அவன் மறுபடியும் கூப்பிட்டான். ''ஏன் அக்கா, இப்படி ஒத்த வார்த்தையே பேசறே? ரெண்டு திட்டுத் திட்டு இல்லைன்னா சண்டை போடு'' என்றான்.

சரஸ்வதி வேதனையுடன் புன்னகைத்தாள். ''நீயே அவஸ்தையில இருக்கே. நீயே உனக்குள்ளே போராடிட்டு இருக்கே. நீயே பொய்யான சமாதானங்கள் சொல்லி உன்னைத் தேத்திட்டு இருக்கறே. இப்ப நான் வேற இடையில புகுந்து அதை இதை பேசினா உனக்கு கஷ்டமா இருக்குமில்லே''.

''எதையாவது பேசுக்கா?'' என்றான் அவன்.

''நான் பேசட்டுமா?'' என்றாள் அக்கா.

''பேசு'' என்றான்.

''உன்னால எல்லாம் மித்ராவை மறக்க முடியாது. மித்ராவும் உன்னை மறந்துட்டு இருந்திட மாட்டா. இதை எப்படி சரிக் கட்டறதுன்னு பாரு. அதைத்தான் நான் சொல்லுவேன்'' என்றாள்.

''அக்கா, அது உண்மைதான். இல்லாட்டி கல்யாணம் பண்ணிக்காம இருந்துட்டுப் போறேன் விடு''.

''என்ன தம்பி, அம்மா அப்பா...''

''என்ன அம்மா அப்பாவுக்கு வாரிசு வேணுமா. இப்ப எல்லாரும் வாரிசைக் கொடுத்து என்னாச்சு பாப்புலேஷன் தான் அதிகமாச்சு. ஒண்ணும் பெரிய பிரச்சினை இல்லை விடு'' என்றான்.

''சரி தம்பி பார்க்கலாம். நாம இதை ரெண்டு நாள் கழிச்சு பேசலாம்'' என்று சொன்னதற்கு பிறகு ''உனக்கு டிபன் பாக்ஸ்ல எடுத்து வச்சுட்டு இருக்கேன்'' என்றாள்.

''இல்லை, இல்லை, நான் இங்கே வந்து சாப்பிட்டுக்கறேன். எனக்கு அங்கே தனியா சாப்பிடக் கஷ்டமா இருக்கு'' என்றான்.

''சரி, சரி அதுவும் ரொம்ப நல்லது. நீ வரும் பொழுது நான் சூடா ஏதாவது செஞ்சு வைக்கிறேன். ரெண்டு பேரும் பேசிட்டே சாப்பிடலாம் என்ன?''.

தன்னைக் குழந்தை போல் தேற்றுகிற அக்காவை அன்புடன் பார்த்தான். ''சரிக்கா'' என்று சிரித்தான்.

அவளும் புன்னகைத்தாள்.

ஒரு வித வாட்டமான முகத்துடனே கிளம்பிப் போகிற சகோதரனை வழியனுப்பி விட்டு சரஸ்வதி அந்த சின்ன டைனிங் டேபிளின் மீதிருந்த பொருட்களை ஒழுங்கு படுத்தி விட்டு சமையலறைக்குப் போக நினைத்தாள். அதே நேரத்தில் செல்ஃபோன் ஒலித்தது. கையிலே எடுத்தாள் "அப்படியா" என்றாள் பரபரப்பாக கேட்டுக் கொண்டே போய் கதவைத் திறந்தாள்.

கதவுக்கு வெளியிலே நின்று கொண்டிருந்த அந்த மனிதரைப் பார்த்த உடன் வியப்படைந்தாள். அவள் அவரை எதிர்பார்க்கவில்லை.

அத்தியாயம் - 25

"அக்கா, அக்கா, நியூஸ் தெரியுமா?" என்று உற்சாகமாய் வந்தான் பைந்தமிழ் பாரி." என்னப்பா? என்றாள் அவளும்.

"அக்கா, நம்ம பத்திரிகையில சென்னையில ஒரு பெரிய விழா நடக்குதுக்கா. அதுல உனக்கும் பாராட்டு"

"ரியலி" என்று ஆச்சரியமானாள் சரஸ்வதி.

"புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கிறார்களாம் அது மாதிரி உனக்கும் ஒரு பாராட்டு கொடுக்கிறாங்களாம்" என்றான் பைந்தமிழ் பாரி உற்சாகமாக.

"எதுக்குப்பா?" என்றாள் அவள்.

"நாம கொடுங்கன்னு கேட்கலையே. அவங்க கொடுக்கறாங்க. அவங்க பாராட்டணும்னு நினைக்கிறாங்க பாராட்டட்டுமே" என்றான் அவன்.

"என்னமோ போ ஒரே ஒரு கதை எழுதியிருக்கேன். அதுக்கு போய் இப்படி தூக்கி வைக்கணுமா?" என்றாள் அவள்.

"அக்கா உனக்குப் பாராட்டு விழா வைங்கன்னு நீ போய் கேன்வாஸ் பண்ணினியா. அவங்களா வைக்கிறாங்க. அதை ஏத்துக்கறதுதான் மரியாதை" என்றான்.

"சரி தம்பி, நீ கூட இருப்பேதானே? எனக்கு இந்த பப்ளிக் ஃபங்ஷன் எல்லாம் அதிகமா பழக்கம் இல்லை" என்றாள்.

"ஹலோ, மேடைப் பேச்சாளரா நீ? அப்படிப் பேசுவியே. இப்ப என்ன?" என்றான்.

"அதுதான் இடையிலே எல்லாம் மாறிப் போச்சே" என்றாள்.

"இடையிலே மாறினதெல்லாம் இப்ப மாறிடப் போகுதில்லே. இந்தச் சூழ்நிலைக்கு தயார் ஆயிக்கோ" என்றான்.

"சரிப்பா, சரிப்பா" என்றாள் சரஸ்வதி அவனை ஆசுவாசப்படுத்துவது போல.

"இன்னொரு விஷயம் தெரியுமா?" என்றான் "அம்மாவும் அப்பாவும் வரப்போறாங்கோ" என்றான் இவன்.

"அப்படியா? நீ அவங்களுக்கு சொல்லிட்டியா?"

"இப்பதான் சொன்னேன். முதல்ல பத்திரிகை ஆசிரியர் கிட்ட இருந்து நியூஸ் வந்தது. உடனே அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சொன்னேன்" என்றான்.

"ரொம்ப சந்தோஷம்பா, ரொம்ப சந்தோஷம்" என்று டைனிங் டேபிளின் அந்தப் பக்கத்து சேரில் அமர்ந்தவள் சட்டென்று கலவரத்துடன் அவனைப் பார்த்தாள். "தம்பி, என்ன இப்படிப் பண்ணிட்டே?" என்றாள்.

"என்ன பண்ணிட்டேன்?" என்றான் அவன் புரியாதவன் போல.

"ஏம்பா நான் இங்கே இருக்கேன். நான் இங்கே இருக்கறது அம்மா அப்பாவுக்குத் தெரியாது. நீ வேற விழாவுக்கு வரச் சொல்லிட்டியே?" என்றாள்.

"ஐயோ, அது ஒண்ணு இருக்கோ?. நான் அதைப்பத்தி யோசிக்கவே இல்லையே?" என்றான்.

"வேண்டாம்பா. அம்மா அப்பாவுக்குத் தெரிஞ்சா ரொம்ப சங்கடமாயிடும்" என்றாள் அக்கா. "அதுக்காக உனக்கு ஒரு பெரிய பாராட்டு விழா நடக்கும்போது அவங்க வரவேண்டாமா?" என்றான் பாரி.

"வரணும்தான். எனக்கும் ரொம்ப ஆசையாத்தான் இருக்கு. என்ன பண்றது?" என்றாள் சரஸ்வதி.

பாரி சற்று நேரம் குறுக்கும் மறுக்கும் நடந்து விட்டு யோசித்தான். "ஒரு ஐடியா அக்கா. நீ கதை எழுதறதுக்கு இங்கிருந்தாத்தான் வசதிப்படும்னு வந்திருக்கே. இங்கே நீ ரெண்டு மாசம் இருக்கப் போறே. ஓகேவா?".

"அது சரி. உடனே மருமகனைப் பார்க்கறேன்னு அப்பாவும் அம்மாவும் அங்கே போனாங்கன்னா?" என்றாள்.

"ஏங்கா, எப்பவாவது அம்மாவும் அப்பாவும் மச்சான் கிட்ட நல்லா பேசியிருக்காங்களா? எப்பவும் ஒதுங்கித் தானே இருப்பாங்க. மச்சானும் கதை எழுதிட்டு இருக்காரு. டிஸ்டர்பன்ஸை விரும்ப மாட்டாருன்னு எதையாவது சொல்லி சமாளிச்சுக்கலாம் அக்கா. அம்மா அப்பா வரட்டுங்க்கா" என்றான் பைந்தமிழ் பாரி.

"சரிப்பா, உன் இஷ்டம், எனக்கும் தான் அவங்க வந்தா நல்லா இருக்கும். ஆனா சொதப்பிடக் கூடாது. ரொம்ப சங்கடப்படுவாங்க" என்றாள் சரஸ்வதி.

"பார்க்கலாம், பார்க்கலாம், என்ன நடக்குதுன்னு பார்க்கலாம்" என்றான் பைந்தமிழ் பாரி.

ஆனால், அம்மா அப்பா விழாவிற்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே வந்து அவர்கள் வீட்டில் தங்கினார்கள். சகோதரர்கள் இரண்டு பேரும் மிக சாமர்த்தியமாக சரஸ்வதியின் பிரிவைப் பற்றி அவர்களுக்கு எதுவுமே தெரியாத அளவுக்கு மறைத்து விட்டார்கள்.

குழந்தைகளுக்கும் ஏற்கனவே பயிற்சி கொடுத்து விட்டார்கள். இதெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும் அவர்களுக்குப் பெரியதொரு ஆச்சரியம் காத்துக் கொண்டிருந்தது.

விழா மேடை களை கட்டியிருந்தது. சரஸ்வதி தன் தாய் தந்தையருடனும், குழந்தைகளுடனும், சகோதரனுடனும் காரில் போய் இறங்கினாள்.

சற்று நேரம் கழித்து இன்னொரு காரிலே வனமாலி ஐம் என்று வந்து இறங்கினான்.

எல்லாவற்றைக் காட்டிலும் சரஸ்வதிக்கும் பைந்தமிழ் பாரிக்கும் அதிர்ச்சியாக இருந்தது என்னவென்றால் வனமாலி சிரித்துக் கொண்டே சரஸ்வதியை நோக்கி வந்தான். "என்ன பாராட்டெல்லாம் அமர்க்களப் படுது போல இருக்கு" என்றான்.

சரஸ்வதிக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. "அது வந்து, வந்து" என்று இழுத்தாள். "ஒண்ணும் வர

வேண்டாம். உட்காரு'' என்று சொல்லிவிட்டு. அவள் அருகிலே இருந்த சேரிலே சற்று நேரம் அமர்ந்தான்.

மாமனாரும் மாமியாரும் வந்திருப்பதை பார்த்து விட்டு அவர்களிடத்திலே போய் வணக்கம் சொன்னான். அவர்கள் பதைபதைத்துப் போய் எழுந்து நின்று ''இல்லை நீங்களும் ஏதோ கதை எழுதிட்டு இருக்கீங்க. டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னான் பாரி. அதனாலதான் வரலை. சரஸ்வதியும் ஏதோ கதை எழுதறேன்னு இவங்க வீட்ல வந்து ரெண்டு மாசம் இருக்கறதா சொன்னான். அதான்'' என்று இழுத்தார்கள்.

''ஓஹோ, இப்படி கதை நடக்குதா?'' என்பது போல சரஸ்வதியையும் பாரியையும் மாறி மாறிப் பார்த்தான்.

சரஸ்வதியும், பாரியும் இவன் குட்டை உடைத்து விடக் கூடாதே என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார்கள். வனமாலி கடகடவென்று சிரித்தான். ''அப்படியா சொன்னாங்க? நிஜம்தான். ஆனா, நீங்க வந்தா எனக்கு ஒண்ணும் டிஸ்டர்பன்ஸ் இல்லையே?'' என்றான்.

''இருக்கட்டும் மாப்ளே, நாங்க நாளைக்கு வர்றோம்'' என்றார் மாமனார்.

''வாங்க, வாங்க, தாராளமா வாங்க, என்ன இவ கதை எழுதறேன்னு இங்க வந்து உட்கார்ந்துட்டா. ரெண்டு மாசமா சமையல்காரங்க சாப்பாடு சாப்பிட்டுட்டு இருக்கேன். அந்த சாப்பாட்டை நீங்களும் சகிச்சுக்கணும்'' என்றான் வனமாலி.

வனமாலி கூட இப்படியெல்லாம் வேடிக்கையாகப் பேசுவானா என்று குழந்தைகள் ஆச்சரியமாக அம்மாவைப் பார்க்க அவள் மெல்ல குழந்தைகளுடைய தோளைத்

தட்டினாள் ''பேசாம இருங்க'' என்பது போல. குழந்தைகள் இரண்டு பேரும் கப்பென்று வாயை மூடிக் கொண்டார்கள்.

''சாரிங்க'' என்றாள் சரஸ்வதி...

''உட்காரு, உட்காரு சாரியாவது சுடிதாராவது'' என்று சொல்லிவிட்டு அவன் ''நீங்க உட்காருங்க'' என்றான் மாமனாரையும் மாமியாரையும் பார்த்து. ''சரிங்க மாப்ளே'' என்று அவர்கள் அந்தப் பக்கம் அமர வனமாலியும் சரஸ்வதியும் அருகருகே அமர குழந்தைகள் அதற்குப் பக்கம் அமர பாரி அந்தப் பக்கம் அமர்ந்து கொண்டான்.

பக்கத்திலே அமர்ந்தால் வனமாலி ஏதாவது வாயைப் பிடுங்குவான் என்று தோன்றியது. என்ன செய்யப் போகிறானோ என்று இருவருக்குமே கலக்கமாக இருந்தது. ஆனால், எதையுமே காட்டிக் கொள்ளாமல் வனமாலி அமர்ந்திருந்த தோரணையைப் பார்த்தாள்.

பாரிக்கே கொஞ்சம் ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஒரு பத்து பதினைந்து நிமிடங்களுக்குள்ளாக விசுவமும் வந்து சேர்ந்தான்.

பாரி விசுவத்தைத் தள்ளிக் கொண்டு சற்று தொலை வுக்குப் போனான். ''என்ன சார், உங்க ஆத்தர் ஒரேயடியா ரொம்ப மெக்னானிமஸா பிஹேவ் பண்றாரு?'' என்றான்.

''அதான் எனக்கும் ஒண்ணுமே புரியலை. உண்மை என்னன்னா இந்த சமையல் காரங்க தான் அவருக்கு புத்தி வரவச்சுட்டானுங்க'' என்றான் விசுவம்.

''புரியலை'' என்றான் பாரி.

''பின்னே, இவரு நினைச்சுட்டாரு. காசு இருந்தா உலகத்தையே புரட்டிப் போட்டுடலாம்னு அவனுங்க

ஆக்கிப் போடற சோத்தைச் சாப்பிட்டே ஒரு வழி ஆயிட்டாருன்னு நினைக்கிறேன்'' என்றான்.

''வெறும் சாப்பாடு மட்டுமா மாத்திடுச்சுன்னா நினைக்கறீங்க?'' என்றான் பாரி.

''இல்லைப்பா. அவரும் மனுஷன் தானே? குழந்தைங்க இல்லை. ஒய்ஃப் இல்லை. தானே தனியா உட்கார்ந்துக் கிட்டு கதை எத்தனை எழுத முடியும்?. இப்போ சமீபமா என்ன சொல்றாருன்னா கதையும் ஓட மாட்டேங்குதுங் கறாரு'' என்றார்விசுவம்.

பாரி சிரித்தான்.

''சிரிக்காதய்யா. அக்காவும் தம்பியும் போட்டுப் புரட்டி எடுத்துட்டீங்க. பயங்கர ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டீங்க'' என்றார்.

''அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லைங்க சார். அவரும் மற்ற மனிதர்களும் முக்கியமானவங்க தான் அதுவும் வைஃப்பும் ஒரு மனுஷின்னு புரிஞ்சுக்கணுமா வேண்டாமா?'' என்றான் பாரி.

''அது நிசம் தாய்யா. நானும் சான்ஸ் கிடைக்கறப்ப சொல்லிட்டு இருக்கறேன். ஏதாவதுன்னா இவன் என்ன அக்காவா தள்ளிக் கொடுத்துட்டுப் போறதுக்கு அப்படின்னு லைட்டா ஒரு பிட்டைப் போடுவேன். நீ வேற ஏன்யா?. அப்படின்னு சும்மா சொல்லுவாரு. ஆனா ஒத்துக்குவாரு. அப்படியெல்லாம் ஒண்ணும்இல்லை. அவ என்ன பெரிய இவளா அப்படின்னெல்லாம் ஒண்ணும் பேசறது இல்லை.''

''இப்போதைக்கு அக்கா வந்தா போதும்னு நினைக் கிறார்னு நினைக்கிறேன். அப்ப ரெண்டு பேத்தையும் இணைச்சு விட்டுடலாமா?'' என்றான்.

''கண்டிப்பா. அதுக்குத்தானே எல்லாரும் பாடுபட்டுட்டு இருக்கோம்'' என்றான் விசுவம்.

''இல்லை,கதை எழுதக் கூடாது அப்படி இப்படின் னெல்லாம் கண்டிஷன் வேற போடறாரே'' என்றான் பாரி.

''அதெல்லாம் சும்மா வெத்து வேட்டு. எல்லாத்தையும் செஞ்சுட்டு என் டைம்லே நான் பண்ணிக்கறேன்னா சரின்னுடுவாருன்னு நினைக்கிறேன். பார்க்கலாம் இன்னைக்கு எப்படி நடந்துக்கறாருன்னு பார்க்கலாம்'' என்றார் விசுவா.

வனமாலி அன்றைக்கு மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டான்.

சரஸ்வதியின் அருகிலே விழா மேடையிலே வனமாலியை அமர வைத்தார்கள். மெல்ல சிரித்துக் கொண்டு சரஸ்வதியிடம் திரும்பி ''நீ கூப்பிடலைன்னாலும் ஆசிரியர் கூப்பிட்டாரு. அவருக்கு ஒரு மரியாதை கொடுக்கணும் இல்லை. என்ன இருந்தாலும் பொது இடத்துல உன்னை விட்டுக் கொடுக்க முடியாதில்லே. அதான் வந்தேன்'' என்றான்.

சொல்லுவதை கெத்தாக சொன்னாலும் அந்தக் குரலிலே ஒரு நெகிழ்ச்சி இருந்ததை புரிந்து கொண்டாள் சரஸ்வதி. அவனைப் பார்த்து அன்புடன் சிரித்தாள். ''தாங்க்ஸ்ங்க'' என்றாள். அந்தப் பார்வையால் கவரப்பட்டவன் போல வனமாலி ஒரு நிமிடம் திணறிப் போனான்.

''சரி, சரி விடு விடு'' என்று திரும்பி அமர்ந்து கொண்டான்.

உண்மையாக அவள் அந்தப் பாராட்டுப் பத்திரத்தைப் பெறும் பொழுதும் நினைவுப் பரிசைப் பெறும் பொழுதும்

அவளைப் பற்றிச் சொல்லும் பொழுதெல்லாம் கைதட்டல் எழும் பொழுதும் அவன் ஒரு அழுத்தமாகவே அமர்ந்து பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான்.

பாரி சுத்தமாக இதை எதிர்பார்க்கவில்லை. விழா முடிந்தவுடன் வனமாலி இறங்கி வந்தான்.

''தாங்க்ஸ், மச்சான் தாங்க்ஸ்'' என்றான் அவன் உணர்வுப்பூர்வமாக வனமாலியினுடைய கையைப் பிடித்துக் கொண்டு.

''அடப் போப்பா, எம் பொண்டாட்டி பரிசு வாங்கறா. இதுக்கு நான் வந்திருக்கிறேன். நீ என்ன தாங்க்ஸ் சொல்றது. நீ மூணாவது மனுஷன்யா'' என்றான் வனமாலி சிரித்துக் கொண்டே.

''அதிலே என்ன சந்தேகம்?'' என்றான் பாரியும் ஆத்மார்த்தமாக.

வனமாலி பாரியினுடைய தோளைத் தட்டிக் கொடுத்து விட்டு ''சும்மா விளையாட்டுக்குச் சொன்னேம்பா.'' என்றான்.

''இல்லை. மச்சான் நீங்க ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்துட்டா நான் மூணாவது மனுஷன் தான். நீங்க ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்து சந்தோஷமா ரெண்டு பேர்த்தோட திறமையையும் வளர்த்துட்டீங்கன்னா அதைப் பார்த்து சந்தோஷப்படக் கூடிய முதல் ஆள் நான்தான்''.

வனமாலி லேசாக சிரித்துக் கொண்டான். ''அப்ப நான் கிளம்பறேன்'' என்றான். அந்த நேரத்திலாவது ''சரி எப்ப உங்க அக்காவைக் கொண்டு வந்து விடுவே?'' என்று கேட்பானோ என்று ஆசையாக இருந்தான் பாரி. ஆனால் வனமாலி அப்படி ஒன்றும் கேட்கவில்லை.

சரஸ்வதியிடம் ''எழுதற கதையை சீக்கிரம் எழுதி முடி'' என்று சொல்லி விட்டு மாமனார் மாமியாரிடமும் விடைபெற்றுக் கொண்டு நகர்ந்தான்.

குழந்தைகள் இரண்டு பேரும் குறுகுறு என்று பார்த்துக் கொண்டிருப்பதை பார்த்தவுடன் இரண்டு கைகளையும் அசைத்து அருகே வாங்க என்பது போல காட்டினான். குழந்தைகள் இரண்டு பேரும் தயங்கிக் கொண்டே அவனிடம் போனார்கள்.

மெல்ல சேர்த்துக் கொண்டான். ''என்ன பேய் பிசாசைக் கண்ட மாதிரி ஒதுங்கறீங்க?'' என்றான்.

''இல்லைப்பா. உங்களுக்கு கோபமோ?'' என்றாள் மகள்.

''நான் யாருக்கிட்ட கோச்சுக்கறது? உங்க கிட்டதான் கோச்சுக்கணும்'' என்றான்.

குழந்தைகளுக்கு அது புரியவில்லை. ''சரிப்பா'' என்றார்கள்.

மெல்லக் குனிந்து ''எப்ப வர்றீங்க?'' என்றான்.

''நீ அம்மாவைக் கூப்பிடவே மாட்டேங்கறீயே?'' என்றாள் மகள்.

''உங்க அம்மாவை என்ன கூப்பிடறது? அது அவ வீடு அவ எப்ப வேணாலும் வர வேண்டியதுதானே?'' என்று சொல்லி விட்டு.

இரண்டு பேர் கன்னங்களிலும் முத்தம் கொடுத்து விட்டு நகர்ந்து போனான். போனதற்குப் பிறகு ''ஹேய்'' என்று கத்திக் கொண்டு அம்மாவை வந்து கட்டிக் கொண்டார்கள்.

பாரி ஆர்வமாக "தாத்தா பாட்டிக்கு தெரியாம சொல்லுங்க. என்ன சொன்னாரு?" என்று கேட்டான்.

"அம்மாவை கூப்பிடலையேப்பான்னு இவ கேட்டா" என்றான் வெங்கட்.

"அதுக்கு?" என்றான் பாரி ஆர்வமாக.

"அம்மாவை என்ன கூப்பிடறது? அது அவ வீடு. அவ எப்ப வேணாலும் வர வேண்டியதுதானே அப்படின்னு சொன்னாரு"

பாரி மகிழ்ச்சியாக சகோதரியினுடைய முகத்தைப் பார்த்தான். ஆனால், அவள் முகத்தை இறுக்கமாகவே வைத்துக் கொண்டு நின்றாள்.

"அக்கா" என்றான் அடிக்குரலில்.

"இல்லை தம்பி. பாதி தான் இறங்கி இருக்கு. ஈகோ இன்னும் கொஞ்சம் இருக்கு" என்றாள்.

"அது சரி, இப்ப என்ன பண்ணலாம்?" என்றான் அவன்.

"கொஞ்சம் பொறுக்கலாம்..." என்றாள்.

அதே நேரத்தில் கூட்டம் கலைந்து கொண்டிருந்தது. முக்கியமானவர்கள் எல்லாம் அவளிடத்தில் பேசினார்கள். வணக்கம் தெரிவித்து விட்டு எல்லோரிடமும் பேசிக் கொண்டிருந்துவிட்டு அவர்கள் கிளம்பினார்கள்.

காரில் ஏறியதும் செல்ஃபோன் அடித்தது. சரஸ்வதியின் செல்போன் அவள் போனைக் கையில் எடுத்தாள். "ஐயா, நீங்களா? ரொம்ப சந்தோஷங்க. எனக்கு கொஞ்சம் டைம் கொடுங்க. ஒரு ஒருவாரம் டைம் கொடுங்க. அதுக்குள்ளே ஏதாவது ஒரு முடிவு பண்ணிடலாம்,பயப்பட வேண்டாம், நல்ல முடிவாவே எடுத்தர்ல்லாம்" என்றாள் சரஸ்வதி.

"யார்?" என்பதைப் போல அம்மா அப்பா, பாரி மூவரும் பார்க்க "இது வேற ஒரு விஷயம். நான் அப்புறம் சொல்றேன்" என்று சொல்லி விட்டு செல்ஃபோனை ஆப் செய்தாள்.

இது வரையிலும் அக்கா தன்னிடம் அப்படி சொல்லியதே இல்லை என்பதால் பாரி சற்றே கவலையுடன் அக்காவைப் பார்த்தான்.அவள் முகத்திலோ மகிழ்ச்சி கவலை இரண்டும் சமமாக இருந்தது.

அத்தியாயம் - 26

"தம்பி, கொஞ்ச நேரம் நீ இங்க வர்றியா?" என்று கேட்டாள்.

"வந்தாப் போச்சு. எங்கே அக்கா வரணும்?" என்று கேட்டான் பைந்தமிழ் பாரி.

"அது தம்பி, நம்ம அம்மாவும் அப்பாவும் இங்க என்னோட இருக்காங்க. அம்மாவுக்கு என்னமோ துணி மணியெல்லாம் எடுக்கணுமாம். ஊருல நம்ம அத்தை வீட்டுக்கு கொஞ்சம் துணியெல்லாம் எடுத்துட்டு வரேன்னு சொல்லியிருக்குதாம். அதனால..." என்று இழுத்தாள் சரஸ்வதி.

பைந்தமிழ் பாரிக்கு அக்கா இழுப்பதைப் பார்த்த வுடனேயே ஏதோ வந்து இறங்கப் போகிறது என்று தோன்றியது. "சரி அதுக்கு நான் வரணும்னு என்ன இருக்கு?" என்றான்.

"இல்லை தம்பி நீதான் வரணுமாம். உனக்குத்தான் நம்ம வத்சலாவோட டேஸ்டெல்லாம் தெரியுமாம். அதான் அம்மா உன்னை வரச் சொல்றாங்க" என்றாள்.

"அக்கா இப்ப நான் கொஞ்சம் பிஸியா இருக்கேனே" என்றான் அவன்.

"பரவாயில்லை தம்பி. ஒரு ஒன் அவர் வரமாட்டியா? அவங்க என்னைக்காவது ஒரு நாளைக்கு ஊர்ல இருந்து வர்றாங்க.அவங்களை திருப்திப் படுத்தி அனுப்பக் கூடாதா?" என்றாள் கெஞ்சுவதுபோல

"சரிக்கா" என்றான் அரை மனதாக.

அவளிடம் பேசிக் கொண்டே தன்னுடைய மேஜை மீதிருந்த ஃபைல்களை எடுத்து ஒழுங்கு படுத்தினான். செந்திலிடம் "செந்தில் நீ அந்த ராகவன் சார் வரச் சொன்னாரு இல்லை. போயிட்டு வந்துடு" என்று சொல்லி விட்டு.

"எங்கே வரணும் அக்கா?" என்றான்.

"தம்பி, கோவை சில்க்ஸ்ல இருக்கோம்பா" என்றாள் அக்கா.

சட்டென்று தன்னுடைய சக்தி முழுவதும் வடிந்து விட்டாற் போல உணர்ந்தான் பைந்தமிழ்பாரி.

"கோவை சில்க்ஸா? அங்கே எதுக்கு அக்கா?" என்று இழுத்தான்.

"என்ன தம்பி பேசறே? கோவை சில்க்ஸ்க்கு நீ வந்தா என்ன? அந்தப் பொண்ணு இங்கே இருக்கவா போகுது. அவங்க அப்பா கூட ஏரியாவில காணோம்" என்றாள்.

"அவங்க அப்பாவை உனக்கு எப்படித் தெரியும்?" என்றாள் பைந்தமிழ் பாரி.

சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள் சரஸ்வதி உளறி விட்டோம் என்பதைப் புரிந்து கொண்டு.

"பேப்பர்ல எல்லாம் பார்த்திருக்கேன்பா. அட்வர்டைஸ் மெண்ட் எல்லாம் எத்தனை பார்த்திருக்கோம்.?"

"சரி, ஆனாலும் நீ ஏதோ என்னை சிக்கல்ல மாட்ட வைக்கப் போறியோன்னு தோணுது" என்றான் பைந்தமிழ் பாரி.

"ஆமாம்பா, சிக்கல் சரஞ்சரமா வச்சுகிட்டு இருக்கேன். எப்படா உன்னை அதுல மாட்டிவிடுவோம்னு கவலைப் பட்டு காத்துட்டு இருக்கேன். ஒரு ஒரு மணி நேரம் பெத்தவங்களுக்காக வந்து துணி மணியை செலக்ட் பண்ணிக் கொடுத்தீன்னா அவங்க பாட்டுக்கும் நிம்மதியா கிளம்பிப் போவாங்கள்லே?" என்றாள்.

"சரிக்கா, நான் வரேன்" என்று சொல்லி விட்டு கிளம்பினான். இவன் பேசுவதை பார்த்துக் கொண்டிருந்த செந்தில் உள்ளூர சிரித்துக் கொண்டான்.

"டேய், செந்தில், கொஞ்சம் ஒழுங்காப் பார்த்துக்கடா" என்று சொல்லிவிட்டு வண்டியை எடுத்தான். அதற்கு முன்பாக அக்காவிடம் கேட்டுக் கொண்டான். "அக்கா எதிலே போனீங்க?" என்று.

"நாங்க ஆட்டோல வந்தோம் தம்பி" என்றாள் அக்கா.

"சரி, நான் காரை எடுத்துட்டு வரேன்" என்று சொல்லி இவன் தன்னுடைய புதிய காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

ஒரு வழியா வரேன்னு சொல்லிட்டான் என்று எண்ணிக் கொண்டே மகிழ்ச்சியாக பெற்றோரைப் பார்த்தாள் மித்ரா.

"வர்றேன்னு சொல்லிட்டாம்மா" என்றாள் அம்மா விடம்.

அம்மா சிவகாமியும், அப்பா சொக்கலிங்கமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

நடக்கப் போவது என்ன என்பதை சரஸ்வதி மட்டுமே முழுமையாக அறிந்தவள் என்பதால் அவள் ஒரு விதமான ஆர்வப் படபடப்புடன் காத்துக் கொண்டிருந்தாள்.

"அக்கா, எந்த செக்ஷன்ல இருக்கீங்க?" என்று ஃபோன் வந்தது.

"தம்பி மேல வாப்பா மேலே. சாரி சுடிதாரெல்லாம் இருக்கற செக்ஷனுககு வா" என்று சொல்லிவிட்டு போனை ஆப் செய்து விட்டு திரும்பினாள் சரஸ்வதி.

சற்றும் எதிர்பாராத விதமாக கோவை சில்க்ஸின் உரிமையாளரே வந்தார்.

சுற்றிலும் பார்த்துக் கொண்டு ரவுன்ட்ஸ் வந்து கொண்டிருந்த அவர். இவனைப் பார்த்த உடனே வணக்கம் செய்து விட்டு மற்ற இருவரையும் மாறி மாறி பார்த்தார். "இது எங்க அம்மா சிவகாமி, அது எங்க அப்பா சொக்கலிங்கம்" என்று அறிமுகப் படுத்தினாள் சரஸ்வதி.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். வாங்க வாங்க" என்று அவர்களை வரவேற்றார் அவர். அதற்குள்ளாக கடையின் மேனேஜர் எதற்கோ அவரை அழைத்தார். "ஐயா ஒரு வேலை"என்று. "சரிம்மா, நீங்க துணிமணி எடுத்துட்டிருங்க. நான் பத்து நிமிஷத்துல கூப்பிடறேன்" என்று சொல்லி விட்டு நகர்ந்தார் உரிமையாளர் தணிகாசலம்.

"அப்பாடா," என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் சரஸ்வதி. உண்மையாகவே ஊரிலிருந்த வத்சலாவுக்கு

துணிமணிகள் எடுத்துக் கொண்டு வருகிறேன் என்றுதான் சொல்லியிருந்தார் சிவகாமி.

"சரிடி, அவன் வர்றதுக்குள்ளே நாம கொஞ்சம் துணிமணியெல்லாம் பார்க்கலாம்" என்று பார்க்க ஆரம்பித்தார்கள்.

ஒரு விதமான அவஸ்தையான உணர்வுடன் வந்து சேர்ந்தான் பைந்தமிழ் பாரி. "ஏங்கா லேடிஸுக்கு எடுக்கறதுக்கு என்னை எதுக்கு அக்கா கூப்பிடறே?" என்று புலம்பிக் கொண்டே வந்தான்.

"புலம்பாதடா, உன்னோட டேஸ்ட் நல்லா இருக்கும். நாங்க தான் காமா சோமான்னு செலக்ட் பண்ணுவோம்" என்றாள் சரஸ்வதி.

"யாரு, நீயா காமா சோமான்னு செலக்ட் பண்ணுவே?" என்றான் கடுப்புடன்.

"சரி, சரி கோச்சுக்காதே. துணி மணியைப் பாரு" என்றாள்.

அவர்கள் எல்லோரும் துணி மணியை தேர்வு செய்து கொண்டிருந்தார்கள்.

பைந்தமிழ் பாரி உண்மையிலேயே பொருத்தமான துணி மணிகளைத் தேர்ந்தெடுப்பதில் வல்லவன்தான். விளை யாட்டுப் போல சகோதரியிடம் சொல்வான். "அந்த துணி மணிகளை பார்க்கும் போது எப்படி இருக்குன்னு நினைக்கக் கூடாது. செலக்ட் பண்ணக் கூடாது. அதை உடுத்தும் பொழுது அது எப்படி இருக்கும் அப்படின்னு அந்த பிக்சரை மனசுல கொண்டு வரணும். அப்ப தான் செலக்ஷன் நல்லா இருக்கும்" என்று சொல்லுவான்.

"ஆமாடா, மச்சான் கூட போய் துணி எடுக்கும் பொழுது அதை உடுத்திப் பார்க்கற மெண்டாலிட்டி யெல்லாம் எனக்கு இருக்குமாக்கும். எதையோ ஒண்ணு எடுத்துக் கொடுத்தாப் போதும்ன்னு வந்துடுவேன்." என்று சொல்லிச் சிரிப்பாள் சரஸ்வதி.

"அதான்க்கா. நீ உன் பர்சனாலிட்டியையே உன் டிரஸ் செலக்ஷனால கெடுத்துக்கறே" என்று சொல்லி அவனும் வருடத்திற்கு ஒரு முறை சகோதரியை அழைத்துக் கொண்டு போய் அவளுக்கு வேண்டும் மட்டும் துணி மணிகள் வாங்கிக் கொடுப்பான்.

குழந்தைகளுக்கும் மிகப் பொருத்தமாகவும் அழகாகவும் தேர்ந்தெடுப்பான். இப்போது அதையே காரணமாக பிடித்துக் கொண்டாள் சரஸ்வதி.

"அக்கா இந்தச் சுடிதார் நல்லா இருக்கு பார். செலக்ட் பண்ணு. இந்த சாரி" என்று சற்று கழித்து அவன் அதிலே கொஞ்சம் ஒன்றித்தான் போனான்.

அவர்கள் அப்படி தேடிக் கொண்டிருக்கையிலேயே அவனுக்கு ஒரு போன் வந்தது. ஃசெல் போனைக் கையில் எடுத்துக் கொண்டு அந்த மாடியின் ஓரமாக ஒருபகுதிக்குப் போனான்.

சற்று உள்ளடங்கி இருந்தது. அங்கே நின்று கொண்டு ஃபோன் பேசிக் கொண்டே திரும்பியவன் சற்றே அதிர்ந்து போனான்.

ஏனென்றால் அந்தப் பகுதியின் கவுண்டரில் அமர்ந்து பில் எழுதிக் கொண்டிருந்தாள் சங்கமித்ரா. சற்று திகைத்துத் தான் போனான்.

சட்டென்று தன்னை உள்ளே மறைத்துக் கொண்டான்.

ஃபோனில் ஏதோ ஒரு சிந்தனையுடன் ஏதோ பதில்களைச் சொல்லி விட்டு துண்டித்துக் கொண்டான். உள்ளடங்கிய படியே நின்று சற்று நேரம் சங்கமித்ராவை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

எப்பொழுதும் ஆழ்ந்த சிந்தனையிலே இருக்கும் பொழுது அவனுடைய இடது கை இடது புற விலா எலும்புகளை சற்றே நீவிக் கொள்ளும். அதுபோல தனது இடது புற மார்பின் கீழ்பகுதியை நீவிக் கொண்டே அவளைப் பார்த்தான். நன்றாக வித்தியாசம் தெரிந்தது.

சங்கமித்ரா கண்களில் உயிரே இல்லாமல் முகம் இருளடித்தாற்போன்ற ஒரு தோற்றத்துடன் தான் அமர்ந்திருந்தாள்.

பாரியின் நெஞ்சுக்குள் ஏதோ பிசைவது போல இருந்தது. உள்ளத்து அன்பெல்லாம் முகத்தில் தெரிய மிகுந்த வேதனையுடன் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

இதற்குள்ளாக சரஸ்வதி "தம்பி" என்று குரல் கொடுக்க சட்டென்று தன்னை சமாளித்துக் கொண்டவனாக அக்காவின் அருகில் வந்தான்.

"பாருக்கா, இதுக்குத்தான் நான் வர மாட்டேன்னேன். மித்ரா அங்க உட்கார்ந்திருக்கா பாரு" என்று முணு முணுத்தான்.

"உட்கார்ந்துட்டுப் போகட்டுமே தம்பி. அதுதான் ஒண்ணும் இல்லைன்னு ஆயிடுச்சே. நீ எதுக்கு கண்டுக்கறே?" என்றாள் சரஸ்வதி.

அக்காவின் மேல் கோபப் படவும் முடியவில்லை. அம்மா அப்பாவிற்கு வேறு இது தெரிந்துவிடப் போகிறது என்ற ஒரு விதத் தவிப்புடன் அவன் நின்று கொண்டிருந்தான்.

அதற்குள்ளாக அவர்களைப் பார்த்த சங்கமித்ரா இறங்கி வந்தாள்.

"சரஸ்வதி அக்கா" என்று அவளிடம் ஆசையாகப் பேசப் போனாள். அவனிடம் திரும்பி "வாங்க" என்று லேசான தலையசைப்புடன் சரஸ்வதியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். "அக்கா, நீங்க வரேன்னு ஃபோன் பண்ணியிருக்கலாமில்லே?" என்றாள்.

"இல்லம்மா, திடீர்னு அம்மாவும் அப்பாவும் துணி மணி எடுக்கணும்னு..." என்று திரும்பியவள் மறுபடியும் அறிமுகப்படுத்தினாள்.

அவள் ஒரு படபடப்புடன் வணக்கம் சொன்னாள்.

பட்டும் படாதவன் போல சற்றுத் தள்ளி நின்று கொண்டான் பைந்தமிழ்ப் பாரி. ஆனால் அவன் முகத்து வேதனையும் அவன் பரிதவிப்பும் முழுதாக அவன் முகத்திலே தெரிந்தது.

சங்கமித்ரா பேசிக் கொண்டே இருந்தவள் லேசாகத் திரும்பி அவனைப் பார்த்தாள்.

பைந்தமிழ் பாரி சட்டென்று ஃபோனிலே யாரிடமோ பேசுவது போல நகர்ந்து விட்டான். சங்கமித்ராவின் முகம் வாடி விட்டது.

"இருங்க, உங்களுக்கு இங்கயே காஃபி கொண்டு வரச் சொல்றேன்" என்று சங்கமித்ரா பரபரப்புடன் நகர்ந்து போனாள்.

அம்மா அப்பா சரஸ்வதி மூன்று பேரும் ஒரு சேரில் அமர்ந்திருக்க இருப்புக் கொள்ளாதவனாக அந்த நீளமேஜையின் மேல் வலது கையை ஊன்றிக் கொண்டு நின்று கொண்டிருந்தான் பைந்தமிழ் பாரி

அந்த நேரத்தில் ஏதோ ஒரு அலுவலர் வந்து அவனை அழைத்தார். "உங்களை முதலாளி பார்க்கணும்னு சொன்னாங்க" என்றான்.

"என்னையா? என்னை எதுக்குப் பார்க்கணும்னாரு?" என்றான்.

"தெரியலை சார். உங்களை வரச் சொன்னாரு?" என்றான் அந்தப் பணியாள்.

அக்காவைத் திரும்பிப் பார்த்து விட்டு போனான் பைந்தமிழ் பாரி. "தம்பி, வாங்க தம்பி" என்று எழுந்து வரவேற்றார் தணிகாசலம்.

"ஐயோ, நீங்க எதுக்கு எழுந்திருச்சுட்டு? உட்காருங்க" என்றான் அவனும் பணிவுடன்.

"இல்லை தம்பி, உங்ககிட்ட ஒரு விஷயம் பேசணும்" என்று அமர்ந்தார்.

அவன் கேள்விக் குறியுடன் அவருடைய முகத்தைப் பார்த்தவாறு அமர்ந்தான். அதற்கு பிறகு அவர் ஒரு ஐந்து நிமிடங்கள் படபடவென்று பேசினார்.

அவர் பேச்சை எதிர்பார்க்காத பாரி கொஞ்சம் திகைத்துத் தான் போனான். பேச்செழாமல் அமர்ந்து விட்டான். "சரிங்க தம்பி, இது என் கடமை. நான் சொல்லிட்டேன். இதுக்கு மேற்கொண்டு என்ன பண்றீங்களோ பண்ணுங்க" என்றார்.

அதற்குள்ளாக அவருக்கு யாரோ செல்ஃபோனில் அழைப்பு கொடுத்தார்கள். "அப்படியா சென்னைக் காரரா ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம்" என்று சொல்லி விட்டு "தம்பி. நான் ஒரு ரெண்டு நிமிஷம் பேசிட்டு வந்துடறேன். நான் உங்க அம்மா அப்பாகிட்ட போய் பேசறேன். நீங்க இங்கே

ட்கார்ந்து யோசிங்க'' என்று சொல்லி விட்டு அந்த அறையை விட்டு வெளியே போனார்.

பாரி ஒரு நிமிடம் மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் சுற்றும் முற்றும் பார்த்தான்.

பெரிய மேஜை அதற்கு இந்தப் புறமாக நான்கு ஐந்து சேர்கள். அதற்கு அந்தப் புறமாகவும் அவர் அமர்வதற்கான சேரைச் சுற்றிலும் அழகழகான ஓவியங்கள் என்று அந்த அறையிலே கூட கலை ரசனை தெரிந்தது.

நீண்டதொரு பெருமூச்சு விட்டுவிட்டு திரும்பினான். அந்த கேபின் கதவை யாரோ திறந்து கொண்டு உள்ளே வருவது போல தெரிந்தது. கேபின் கதவை நன்றாக மூடிவிட்டுத்திரும்பிய அந்த உருவம் மித்ரா. சங்கமித்ராவே தான்.

இப்பொழுதும் சங்கமித்ராவை சமாளிப்பதற்காக என்ன செய்யலாம் என்று அவன் யோசித்துக் கொண்டிருக் கையிலே அவனுக்கு ஒரு ஃபோன் வந்தது. செல்போனை கையில் வைத்துக் கொண்டு பதில் பேசிக் கொண்டே வெளியே நகர முயற்சித்தான்.

ஆனால், அது நடக்கவில்லை. கோபமாகத் திரும்பி மித்ராவைப் பார்த்தான். அவளும் அதே கோபத்துடன் அவனைப் பார்த்தாள்.

அத்தியாயம் - 27

தன் மார்பில் புரண்டு அழுகிற மித்ராவை ஒரு வேதனை யுடன் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் பைந்தமிழ் பாரி.

''ஏய், என்னத்துக்கு இப்படி அழறே?'' என்றான் குழைந்து போன குரலில்.

''முடிஞ்சதா? உங்களால முடிஞ்சுதா? என்னை விட்டுட்டு இருக்க முடிஞ்சுதா? என்னால முடியலை'' என்று அழுதாள்.

''சரி விடு, இப்ப எதுக்கு?'' என்றான் அவன் மேற் கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல்.

''நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்க. சத்தியமா சொல்லுங்க'' என்று அவள் மறுபடியும் மறுபடியும் கேட்க "இங்கே பார். நான் எப்ப இல்லைன்னு சொன்னேன். நான் உன்மேல வச்ச பிரியம் உண்மை இல்லைன்னு சொல்லலையே? நீ என் மேல வச்ச பிரியம் உண்மை இல்லைன்னு சொல்ல லையே? இது ஒத்து வராதுன்னு தானே சொன்னேன்'' என்றான்.

''அதான் எங்க அப்பா சொன்னதை கேட்டீங்கள்லே. நான் எங்க அப்பாகிட்ட சொல்லிட்டேன். இந்த சொத்து தான் நம்மளை பிரிக்குது. இந்த சொத்துதான் உங்களுக்கும் எனக்குமான இடையில ஒரு பெரிய சுவரா நிக்கப் போகு துன்னா எனக்கு அது வேண்டாம்னு சொல்லிட்டேன்'' என்றாள்.

''ஏய், என்ன நீ.?''

''இல்லை பாரி இது நிச்சயமா முடியாது. இதுக்கு அப்புறம் ஒவ்வொரு மூச்சு விடறதும் எனக்கு கனமாத்தான் இருக்குது. அப்படி எத்தனை நாளைக்கு வாழ முடியும்? சொல்லுங்க''.

அவன் நெகிழ்ந்து போனவனாக அவள் தலையைக் கோதிக் கொடுத்தான். "கஷ்டம்தான். நான் மட்டும் என்ன சந்தோஷமாவா இருந்தேன்னு நினைச்சே?" என்றான்.

"நீங்க என்ன சொல்றீங்களோ அப்படி நான் இருக்கேன்."

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். "சொல்ற துக்கு நல்லாதான் இருக்கும். கொஞ்ச நாள்ல சலிச்சுப் போயிடும்" என்றான்.

"அப்படி எல்லாம் இல்லை. நீங்க என்னைப் புரிஞ்சுக் கலை" என்று அவள் பிடிவாதமாக இருப்பதை பார்த்த உடனே அவனுக்கு சிரிப்பு வந்தது.

"இங்கே பாரு மிதரா. என்னுடைய வருமானத்துக் குள்ளே என்ன வசதிகள் கொடுக்க முடியுமோ கொடுப் பேன். அந்த வசதிகளுக்குள்ளே உன்னால வாழ முடியு மான்னு பார்த்துக்கோ. எந்த இடத்துலேயும் உங்க அப்பா வோட மருமகனா என்னை நான் அறிமுகப்படுத்திக்க மாட்டேன். அந்த ஐடெண்டியை நான் விரும்பவும் மாட்டேன். ஒரு கட்டத்துக்கு அப்புறம் உனக்கு கோபம் வரும். வலிக்கும். நல்லா யோசிச்சுக்கோ" என்றான் பாரி.

"சரி, இது அளவு மீறின சுய மரியாதையாத்தான் தெரியுது. பரவாயில்லை. உங்களோட இந்த கன்டிஷன்ஸை நான் ஏத்துக்கறேன். எல்லாத்தை விட நீங்க எனக்கு முக்கியம்" என்றாள்.

"அது மட்டும் இல்லை மிதரா. நீ பான் வித் சில்வர் ஸ்பூன். உன்னோட வசதிகளே வேற. ஆனா என்னோட வசதி லெவல் வேற. நீ சர்வ சாதாரணமா மூவாயிரம் ரூபா

புடவை கட்டுவியா இருக்கும். ஆனால், என்னால முன்னூறு ரூபாய் புடவைதான் வாங்கிக்கொடுக்க முடியும் யோசிச்சுக்கோ" என்றான்.

அவள் சிரித்தாள். "நீங்க என்னைப் புரிஞ்சுக்கவே இல்லைங்க. நான் எதுக்கு முக்கியத்துவம் கொடுப்பேன்னு புரிஞ்சுக்கலை. நீங்க மட்டும் என்னை குடிசையிலா வைக்கப் போறீங்க. அது நமக்கு சொர்க்கம். டூ வீலர் ஓட்டுவேன். நீங்க வண்டி வச்சிருக்கீங்க. நானும் கூட எங்காவது வேலைக்குப் போவேன்" என்றாள்.

அவன் குபீரென்று சிரித்தான். "நீயா? வேலைக்கா?" என்றான்.

"சரி வேணாம். எங்க அப்பாவோட கன்சர்னுக்கே வந்து நான் ஒரு சம்பளம் வாங்கிக்கறேன்" என்றாள்.

"அது உன் இஷ்டம். ஆனா நாளைக்கு எந்தப் பிரச்சினையும் வராம பார்த்துக்க வேண்டியது உன் பொறுப்பு. என் சுயமரியாதைக்காக மட்டும் நான் பேசலே. ஒன்ஸ் நீ என் வீட்டுக்கு வந்தா. உன்னோட சுயமரியா தையும் அதிலே அடங்கியிருக்கு" என்றான்.

"ஐயோ. லெக்சர் தாங்கலை" என்று சிரித்தாள் மிதரா.

அவனும் சிரித்தான்.

"லெக்சர் வேண்டாம். அப்ப என்ன வேணுங்கறே?" என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

அவள் சட்டென்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். அவன் சட்டை பட்டனை திருகிக் கொண்டே சொன்னாள். "ரொம்ப ரொம்ப வறுத்தெடுத்திட்டீங்க" என்றாள் சோகமாக.

"நான் என்னமோ உன்னை சந்தோஷமா வறுத்தெடுத்த மாதிரியும் நான் என்னமோ சந்தோஷமா நடமாடிட்டு இருந்த மாதிரியும் கதை சொல்றே".

"தெரியும். சதிக்கா சொன்னாங்க" என்றாள்

"சதிக்காவா, சதிக்காதான் எல்லா சதியும் பண்ணிட்டாங்க".

"அவங்களுக்கு புரிஞ்சது கூட உங்களுக்குப் புரியலையே. உங்க அம்மா அப்பா கூட ஓகே பண்ணிட்டாங்க தெரியுமா?" என்றாள்.

அவன் சட்டென்று அவளை ஓரடி தள்ளி நிறுத்தி அவள் முகத்தைப் பார்த்தான். "என்ன சொல்றே?" என்றான்.

"ஆமாம், சரஸ்வதிக்கா, உங்க அம்மா அப்பாகிட்ட பேசியாச்சு. அவங்களும் ஒத்துக்கிட்டாங்க. அதான் இப்ப நாடகம் கடைக்கு வந்து" என்றாள்.

"ஓஹோ, இத்தனையெல்லாம் நடந்திருக்கா?" என்றான் அவன்.

"ஆமாம், இதுக்கு ஆரம்ப பிள்ளையார் சுழி யார் தெரியுமா? எங்க அப்பாதான். அவரு வந்து உங்க அக்காவைப் பார்த்து எல்லா விளக்கமும் சொன்னாரு" என்றாள்.

"இது எப்ப நடந்தது?"

அது நடந்து நாலைந்து நாளாச்சு. அதனால தான் உங்க அம்மா அப்பா உடனே கிளம்பாம இருந்துபேசி முடிச்சுட்டு போகலாம்னு இருக்காங்க."

"அடேங்கப்பா, ஒரு வில்லங்கமான கூட்டமே வேலை செஞ்சிருக்கீங்க. அக்காவே எனக்கு வில்லியா போனாளா?" என்றான்.

"ஹலோ, ஹலோ, வில்லியா? அவங்க உங்களை என்கூட சேர்த்து வைக்கறதுக்காக இவ்வளவு பாடுபட்டிருக்காங்க அவங்க வில்லியா?" என்றாள் அவள் உண்மையிலே கோபத்துடன்.

"ஓகே, ஓகே, இந்த மாதிரி இப்பத்தானே பேச முடியும். இதுக்கு நீ கோபிச்சுக்குவியா? கோபிச்சுக்கயேன்" என்றான்.

"ஓஹோ, எங்க கோபத்தைக் கண்டால் அப்படி இருக்குதா?" என்றாள்.

அவன் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு மெல்லக் குனிந்து அவள் காதருகில் சொன்னான். "பெண்கள் கோபத்திலே நிறைய விஷயம் இருக்கு தெரியுமா?".

அவள் கேள்விக் குறியாக அவனைப் பார்த்தாள்.

அவன் அவ்வளவு நெருக்கமாக இருப்பதிலே அவளுக்கு கொஞ்சம் நடுக்கமாகவும் இருந்தது. "ம்... கோபத்துக்கு அப்புறம் சமாதானம் நடக்குமில்லே. அப்ப நிறைய விஷயம் கிடைக்கும். அது ரொம்ப சுவாரஸ்யம் தெரியுமா?" என்றாள்.

உடனே அவள் கோபிப்பவள் போல் நகர்ந்து கையை "எடுங்க" என்றாள். அவன் சிரித்துக் கொண்டே கையை எடுத்து விட்டு "எத்தனை நாளைக்கு மிரட்டுவே?. இப்ப தான் எல்லா மேலிடத்தையும் வளைச்சுப் போட்டு தயாரா நிக்கிறியே? எத்தனை நாளைக்கு மிரட்டுவே?" என்றான்.

அவள் சோகப் பெருமூச்சு விட்டாள். "எத்தனை நாளைக்கு? கல்யாணம் வரைக்கும்தான்" என்றாள்.

அவள் நடிப்பைப் பார்த்து அவன் சிரித்தான்.

"சரி, ரொம்ப நேரம் உள்ளே இருந்தா ஏதாவது நினைச்சுக்கப் போறாங்க" என்றான் அவன் லேசான

தவிப்புடன். "இல்லை, அக்கா சொல்லித்தான் அனுப்பிச் சாங்க. அரை மணி நேரம் வேண்ணாலும் டைம் எடுத்துக்கோ. ஆனா அவனை மட்டும் விட்டுடாதே. அப்படின்னு சொல்லி அனுப்பிச்சாங்க" என்றாள்.

அவன் முகம் சிவந்து போனது. "அக்கா இதெல்லாம் செய்யறாளா?" என்றான்.

"இப்ப என்ன? அக்காகிட்ட நேரடியா போய் சண்டை போடுவீங்களாக்கும்?" என்றாள் மித்ரா கேலியாக.

"அந்த வழக்கம்தான் கிடையாதே. அக்காகிட்ட நான் சண்டை போடவே முடியாது. அவங்க என்னோட ஃபேவரிட் ஆச்சே" என்றவன் சிரித்துக் கொண்டே சட்டென்று அவளை அருகில் இழுத்தான். "ரொம்ப நேரமா விளையாட்டு காட்டறே,கொஞ்ச நாளா ரொம்பவே கடுப்படிச்சுட்டே" என்று குனிந்தான்.

பரிசுகளை வாரி இறைத்தான், சற்று கழித்து நிமிர்ந்தான்.

அவனை நிமிர்ந்து பார்கக முடியாமல் தவிக்கிற அவள் கன்னத்தை ஒற்றை விரலால் தட்டி விட்டு சிரித்தான்.

"இப்பப் புரியுது, நீயில்லாம இருக்கிறது கஷ்டம்தான்" என்றவன் தன்னை மீட்டுக்கொண்டு

"சரி வெளியே போகலாம் மித்ரா." என்று வெளியே வர எத்தனிக்கையில் "வரலாமா" என்ற குரல் கேட்டது. மித்ரா அவசரமாக போய் கதவைத் திறந்தாள்.

தணிகாசலம் உள்ளே வந்தார்.

மகள் முகத்தையும் பாரியினுடைய முகத்தைப் பார்த்த வுடனேயே அவருக்கு ஓரளவுக்கு விஷயம் புரிந்தது.

அவர் முகத்திலும் மகிழ்ச்சி பரவியது. எதிரில் இருந்த சேரில் போய் அமர்ந்தார். "உட்காருங்க ரெண்டு பேரும்" என்றார்.

மித்ரா "இல்லைப்பா, நான் அவங்களையும் கூட்டிட்டு வந்துட்டு ஸ்நாக்ஸ் எடுத்துட்டு வர்றேன். என்று ஓடினாள்.

"தம்பி, பணத்தை வச்சு ஒருத்தங்களை அளவெடுக்கறது எல்லா நேரத்துலயும் எடுபடாது தம்பி. நீங்க நினைக்கிற மாதிரி நாங்க ஒண்ணும் பரம்பரைப் பணக்காரங்க கிடை யாது. முதல்ல ஒரு தெரு மூலையிலே வண்டில துணிகள் போட்டு வித்துருக்கேன் நான். அதுக்கப்புறம் ஒரு சின்ன கடை பிடிச்சேன். அப்படி முன்னேறினதுதான். அதுனால என் குழந்தைங்களையும் நான் ஒண்ணும் பணக்காரங்களா வளர்க்கலை. பணம் ஒரு பக்கம். தொழில் ஒரு பக்கம். அப்படின்னாலும் அவங்களை எளிமையான வாழ்க்கைக்குத் தான் பழக்கியிருக்கேன்".

"நீங்க பொண்ணு எடுத்திருக்கறது பெரிய பணக்கார வீட்லே" என்று இழுத்தான்.

"இருந்துட்டுப் போகட்டும். அதுக்கும் இதுக்கும் என்ன இருக்கு. அந்தப் பொண்ணு என் மகனுக்கு புடிச்சது அமைஞ்சது. இந்த மாப்பிள்ளை என் மகளுக்கு புடிச்சது அமைஞ்சது"

அவன் தர்ம சங்கடத்துடன் அவரைப் பார்த்தான். "இல்லைங்க, நான் எதுக்காக அப்படி சொன்னேன் அப்படின்னா நான் நிறைய கேள்விப்பட்டிருக்கேன். ஒரு ஆர்வத்துல ஒரு ஆசையில நடுத்தர குடும்பங்கள்ல கல்யாணம் பண்ணிப்பாங்க. ஆனா அதுக்குப் பிறகு அவங்க எதிர்பார்க்கிற வாழ்க்கைத்தரம் இங்க கிடைக்கலைங்கற

போது நாளைக்கு பிரச்சினைகள் வரும். அதனால தான் நான் சொன்னேன்.வேற எந்தக் காரணத்துக்காகவும் இல்லை. இதை மித்ரா முதல்லேயே எங்கிட்டே சொல்லியிருக்கலாம்.''

''அதுக்கான அவசியமே வரலை தம்பி. நீங்க அவளோட ஃபேமிலி பேக்கிரவுண்ட்டை கேட்டுக்கலையே தம்பி'' என்றார் தணிகாசலம்.

பாரி நீண்ட தொரு பெருமூச்சு விட்டான். ''அதுவும் உண்மைதான்'' என்று ஏற்றுக் கொண்டான். அதற்குள்ளாக அம்மாவும் அப்பாவும் சரஸ்வதியும் உள்ளே வந்தார்கள்.

சரஸ்வதி தம்பியின் அருகிலே வந்து அமர்ந்தாள். அவனுடைய முகத்தைப் பார்க்க அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. கடந்த சில நாட்களாக அவனுடைய முகத்திலே தேங்கி இருந்த இறுக்கமெல்லாம் மறைந்து போக ஒரு தெளிவுடனும் பாரமற்ற லேசான ஒரு மன நிலையுடனும் அவன் அமர்ந்திருப்பதைப் பார்த்து அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

''அக்கா, நீ பயங்கரமான ஆளு'' என்று கிசுகிசுத்தான்.

''உன்னோட அக்காவாச்சே'' என்று அவளும் கிசுகிசுத்தாள்.

''உட்காருங்க அய்யா'' என்று தணிகாசலம் மிகவும் பணிவாக பாரியின் தந்தையை வரவேற்க ''வணக்கங்க ஐயா'' என்று எதிரே வந்து அமர்ந்தார்.

''சரஸ்வதி எல்லா விவரத்தையும் சொல்லுச்சு. நமக்கு என்னங்க அய்யா குழந்தைங்களோட சந்தோஷம்தான் முக்கியம். ரொம்ப மனக்குழப்பத்துல இருக்கறான். வேண்டாம்னு முடிவு பண்றான் அப்படினெல்லாம்

சொல்லுச்சு. அதுக்கப்புறம் நானும் வைஃபும் சரஸ்வதியும் உட்கார்ந்து பேசினோம். மனசு நிம்மதியா இருக்கறதுதானே முக்கியம். மத்ததெல்லாம் ஒண்ணும் முக்கியமே இல்லை. எல்லாம் ரெண்டாம் பட்சம்தானே அதனால பண்ணி வச்சிடலாம் அப்படின்னு நான் முடிவு பண்ணினேங்க.அதுக்குத்தான் இங்க தங்கறதை கூட ஒரு வாரத்துக்கு தள்ளிப் போட்டேன். ஊருக்குப் போறதைக் கூட.'' என்றார்.

''ரொம்ப சந்தோங்கய்யா. ரொம்ப சந்தோஷம்'' என்றார் தணிகாசலம்.

''அம்மா அவங்களை வரச் சொல்லி...'' என்றார் அப்பா.

''கடையில எதுக்குங்க? இன்னிக்கு சாயங்காலம் நம்ம வீட்டுக்கு வந்துடறீங்களா. அது பொண்ணு பாக்கற நிகழ்ச்சி எப்படி வேண்ணா வச்சுக்கலாங்க. நான் காமாட்சிக்கிட்ட பேசிடறேன். என் பையன் பிரபு குமார் அவன் கிட்டயும் பேசிடறேன். எல்லோரும் மித்ராவின் விருப்பத்துக்கு குறை சொல்ல மாட்டாங்க. இருந்தாலும் முறையாக பண்ணிடுவோம்'' என்றார் அவர்.

மிகுந்தமகிழ்ச்சியுடன்தலையாட்டினார்கள்பெற்றோர்கள். பைந்தமிழ் பாரி இதையெல்லாம் பேச்சற்றுப் போய் பார்த்துக் கொண்டிருந்தான்.

சரஸ்வதி அவன் முகத்தை புன்முறுவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த சமயத்தில் கதவு திறக்க உதவியாளர் ஒருவர் ஒரு தட்டிலே அவர்களுக்காக முந்திரி பக்கோடா இனிப்பு வகை என்று சிறிய சிறிய கப்புகளில் வைத்து அழகாக ஸ்பூனோடு கொண்டு வர அறைக்குள்ளே வந்தவுடன் அந்த தட்டை வாங்கிக் கொண்டாள் மித்ரா. அவளே பரிமாறினாள்.

அவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக கையிலே எடுத்துக் கொண்டார்கள். "நீயும் உட்காரும்மா" என்றார் பாரியின் அப்பா. அவள் "இல்லை பரவாயில்லை" என்றாள்.

"ம்மா, இதெல்லாம் இப்படி நிக்கறதெல்லாம் அந்தக் காலம்மா. நீ அப்படி அவன் பக்கத்தில் உட்காரு" என்றார் அவர் சிரிப்புடன். அவள் வெட்கத்துடன் அமர்ந்து கொண்டாள்.

"சரி, எல்லாம் நல்லபடியா போயிட்டு இருக்கு. இன்னைக்கு சாயங்காலம் பெண் பார்க்க வந்துடுங்க. நாள் நல்லாயிருக்கு" என்று அப்பா சொல்வதை அவள் வெட்கத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த நேரத்தில் பாரியின் கை மெல்ல அவளது கையை அழுத்தியது. அவள் மற்றவர்கள் அறியாமல் அவனைப் பார்த்தாள். "பெரிய திட்டமெல்லாம் போட்டுப் பண்ணியிருக்கே. இரு. வச்சுக்கறேன்" என்று கிசுகிசுத்தான் அவளிடம்.

"பார்க்கலாம், நானும் தயாரா தான் இருக்கிறேன்". என்றாள் அவளும் கிசுகிசுப்பாக. இதை எதிர்பார்க்காத அவன் லேசாக சிரித்து விட்டான்.

இவர்கள் இரண்டு பேரும் கிசுகிசுவென்று பேசுவதை மற்றவர்கள் மகிழ்ச்சியுடன் கவனித்துக் கொண்டாலும் கவனிக்காததைப் போல நடித்தார்கள்.

அதே சமயத்தில் தணிகாசலத்தின் பக்கவாட்டில் இருந்த ஃபோன் ஒலித்தது. எடுத்தார் "இல்லை காமாட்சி இரு, நான் நேர்ல சொல்றேன். அட அவசரப்படாதே" என்று அவர் இங்கிருந்து சொன்னார்.

பாரி லேசாக மித்ராவை திரும்பிப் பார்க்க மித்ராவின் முகத்தில் கலவரம் தோன்றியது.

அத்தியாயம் - 28

"என்னடா தம்பி, நிச்சயதார்த்தம் மூணு நாள்ல இருக்கு. ஒரு சத்தம் இல்லாம அமைதியா நடமாடிட்டு இருக்கே?" என்றாள் சரஸ்வதி கவலையுடன்.

"அக்கா, மலையாட்டம் நான் இருக்கேன். நீ எதுக்குக்கா கவலைப்படறே?" எல்லா ஏற்பாட்டையும் நான் பார்த்துக்கறேன். நீ தான் கூப்பிட வேண்டியவங்க லிஸ்டெல்லாம் குடுத்துட்டியே. அவங்க எல்லாருக்கும் ஃபோன் பண்ணிச் சொல்லிட்டேன்" என்றான்.

"அது சரிப்பா. எந்த இடத்துல நடக்குதுன்னு எனக்குகூட சொல்ல மாட்டேங்கறீங்க".

"அக்கா, நம்ம ஃப்ரெண்டோட பங்களாவுல நடக்கு துக்கா. அந்த அட்ரஸை நீ சொல்றதை விட நான் சொன்னா தான் சரியா இருக்கும். அதுக்காகத்தான் லிஸ்ட்டை மட்டும் உங்கிட்ட இருந்து வாங்கிட்டேன். சொல்றதை எல்லாம் நான் சொல்லிக்கிறேன்" என்றான்.

"சரி" என்றாள் சரஸ்வதி அரை மனதுடன். "உன் ஃப்ரெண்ட்ஸ் யாராவது இருந்தாலும் சொல்லுக்கா, கூப்டர்லாம்" என்ற அவன் திரும்பி "அப்பா, ஊரில் இருந்து எத்தனை பேர் வராங்க" என்று கேட்டான்.

"நிறைய பேர் எல்லாம் வரச் சொல்லலைப்பா. மொத்தமா ஒரு முப்பது நாற்பது பேரு. ரெண்டு வேன்ல வர்றாங்க. அவ்வளவுதான்" என்றார்.

"போதுமேக்கா. மொத்தமா நூறு பேரு அவங்க வீடு நம்ம வீடு அதுக்கு மேல கிரவுட் வேண்டாமே" என்றான் அவன்.

"சரிப்பா, உன் இஷ்டம் ஆனா என்ன பாவம் தணிகாசலத்துக்கும் காமாட்சிக்கும் தான் கொஞ்சம் கிராண்டா செய்யலாமேன்னு இருக்குது பாவம்" என்றார் அப்பா.

"அப்பா கிராண்டா செய்யறது அப்படின்னா அந்த அளவுக்கு நாமளும் செய்யணும். தேவையில்லைப்பா. எனக்கும் அப்படி இஷ்டம் இல்லை.மித்ராவும் ஓகே சொல்லிட்டா".

"அது சரி, அந்தப் பிள்ளைக்கு நீ சரின்னு சொன்னதே போதும்னு இருக்கு. ஏம்பா அவங்க அப்பா விருப்பப்படி செஞ்சுட்டுப் போகட்டுமே, நீ உட்காரு மொதல்ல நான் உங்கிட்ட பேசணும்" என்றார்.

பாரி அரை மனதாக எதிரிலே சேரில் அமர்ந்தான். "இங்க பாரு தம்பி. அவரு மகனுக்கு நல்லா கல்யாணம் பண்ணியிருக்காரு. மகளுக்கும் கல்யாணம் பண்ணனும்னு நினைக்கிறாரு. விட்டுடு"

"சரிப்பா நீங்க சொல்லிடுங்க ஓவர் கிராண்டாவும் இல்லாம, ரொம்ப சிம்பிளாவும் இல்லாம ஒரு மீடியமா நடத்தச் சொல்லுங்க" என்றான்.

"இல்லப்பா, நான் வேற ஐடியா சொல்றேன். நம்ம நெருங்கின சொந்தம் எல்லாம் மொத்தமா ஒரு ஐநூறு பேரை கூப்பிட்டு எல்லாத்தையும் சேர்த்தி காலையில கல்யாணத்தைப் பண்ணிடுவோம். ரிஷப்சன் வேண்ணா அவங்க இஷ்டப்படி கிராண்டா இருக்கட்டும். விட்டுடு"

"சரிப்பா" என்றான் அவன். ஆக்சுவலா ரிஷப்சன் நம்ம தான் வைக்கணும்" என்றான்.

"இல்லைப்பா. அவங்க தான் பெரிய இன்டஸ்ரியலிஸ்ட்ஸை எல்லாம் கூப்பிடணுங்கறாங்க. அதனால ரிஷப்சன் அவங்க வச்சுக்கட்டும். விட்டுடு" என்று சொல்லி சமாதானப்படுத்தி அவனை ஒத்துக் கொள்ள வைத்தார்கள்.

ஆனாலும் சரஸ்வதிக்கு நிச்சயதார்த்தத்தை எங்கே வைக்கிறார்கள் என்று ஏன் சொல்லமாட்டேன் என்கிறார்கள் என்று சற்று கோபமாகவே இருந்தது.

அக்காவின் கோபத்தை புரிந்து கொண்ட பாரி. தனியாக சமையலறையில் போய் "அக்கா நீ எனக்கு தெரியாம என்னென்ன சதி வேலை செஞ்சே? நான் ஏதாவது கோவிச்சுக்கிட்டேனா?" என்றான்.

"போடா, நான் உனக்கு கெடுதலா செஞ்சேன். நான் செஞ்சது எல்லாமே நல்ல விஷயம் தெரியுமா?" என்றாள்.

"அது என்னமோ சரிதான்க்கா. எப்படியோ எல்லா பெரியவங்களையும் ஒண்ணா ஒரு இடத்துக்கு வரவச்சு கிடுக்கிப் பிடி மாதிரி ஒரு பிடி போட்டு என்னை சிக்க வச்சுட்டீங்க" என்றான்.

"தம்பி நெஜமா சொல்லு. இப்படி மாட்டினதுல உனக்கு சந்தோஷம்தானே. உனக்கு ஒண்ணும் வருத்தம் இல்லையே?" என்றாள்.

"அக்கா மித்ராதான் என்னுடைய லைப் பார்ட்னர்னு நான் முடிவு பண்ணி வச்சிருந்தேன். அது நழுவிப் போற மாதிரி ஒரு சூழ்நிலை வந்தபோதுகூட அவளைத் தவிர வேறு யாரையும் அந்த இடத்துல வைக்கிறது இல்லைன்னு தான் நான் முடிவு பண்ணி வச்சிருந்தேன்.அந்த வகையில

மித்ராதான் என் லைஃப் பார்ட்னரா வர்றது எனக்கு ரொம்ப சந்தோஷம்தான். ஆனால், இப்பவும் எனக்கு இந்த பொருளாதார ஏற்றத் தாழ்வுனால ஏதாவது பிரச்சினை வருமோ என்ற பயம் இருக்கு.''

''அதை விடுப்பா. அதை நான் பார்த்துக்கறேன். அதை நான் மித்ராகிட்ட கிளியரா பேசியிருக்கேன். மித்ரா விருப்பப்பட்டு தான் இந்த கல்யாணம் நடக்குது. நீ ஒண்ணும் அவளைக் கொண்டு போய் குடிசையில வைக்கப் போறது இல்லையே. ஒரு அப்பார்ட்மெண்ட்ல டீசண்டா தான் வைக்கறே. இன்னைக்கு கோடீஸ்வரங்களெல்லாம் அப்பார்ட்மெண்ட்ல தான் இருக்காங்க. போக்குவரத்துக்கு ஒரு கார் இருக்கு. வேண்ணா ஒரு கார் அப்பா வாங்கிக் கொடுத்துக்கட்டும்.''

''அந்தப் பேச்சே இருக்கக் கூடாது'' என்றான் அவன்.

''சரி விடு பார்த்துக்கலாம்'' என்று சொல்லி விட்டாள் அக்கா.

''சரி நீ இந்த நிச்சயதார்த்தத்தைப் பத்தி எனக்குச் சொல்லு''.

''அக்கா டோண்ட் வொர்ரி அக்கா. ஃப்ரெண்டோட பங்களாவுல நடக்குது. எல்லா ஏற்பாடும் நாங்க பார்த்துக்கறோம். நீங்க அப்பா அம்மாவுக்கு வேணுங்கறதை சமைச்சு கிமைச்சு போட்டு அவங்களை சந்தோஷப்படுத்து. ஏதாவது ஷாப்பிங் பண்றீங்களா. பண்ணுங்க.நீ அம்மா அப்பாவெல்லாம் போய் நிச்சயத்துக்கு புடவை எடுத்துட்டு வாங்க. அதெல்லாம் உன்னோட டிபார்ட்மெண்ட். ஹாப்பியா இரு.''

'' ''

''அந்த நிச்சயத்தன்னைக்கு மூணு மணிக்கு கிளம்பினா போதும். நான் கார் அனுப்பறேன். அப்ப வந்தா போதும்'' என்றான்.

''சரிப்பா'' என்றாள்.

''ஏன்க்கா, நிச்சயத்துக்கே எல்லாரையும் நேர்ல கூப்பிடணும்னு நினைக்கறியா?'' என்றான்.

''இல்லை, நேர்ல போய் அழைச்சு பண்ணினா தானே நல்லாயிருக்கும்'' என்றாள். இத்தனைக்கும் நடுவில் இவ்வளவெல்லாம் செய்கிற பாரி தன்னுடைய கணவரைப் பற்றி பேசவில்லையே. தன்னுடைய கணவரை அழைக்க வேண்டும் என்று கூட நினைக்க வில்லையே என்ற எண்ணமும் தோன்றியது.

அதை வெளிப்படையாகக் கேட்கவும் பயமாக இருந்தது.

அக்காவை ஓரக்கண்ணால் பார்த்த பாரி. ''ஏதோ கேட்கணும் போல இருக்குதோ, கேளு'', என்றான்.

''இல்லை இல்லை'' என்று அவள் வாயை மூடிக் கொண்டாள்.

புன்சிரிப்போடு நகர்ந்த பாரி மனதுக்குள் நினைத்துக் கொண்டான். ''சதியா, சதி ம் சதி வேலை பண்றீங்களா? எங்களுக்கும் தெரியும்'' என்று நினைத்துக் கொண்டு அந்தப்புறம் போனான்.

சரஸ்வதிக்கு நிச்சயதார்த்த அன்றைக்கு கூட தன்னுடைய கணவனைப் பற்றி யாரும் பேசவில்லையே என்ற வருத்தம் கூட இருந்தது.

என்னதான் பிரிந்திருந்தாலும் அவரை அழைக்காமல் நிச்சயதார்த்தமா என்று வருத்தத்தோடு தான் இருந்தாள்.

அதை எப்படிக் கேட்பது. அவர்களே புரிந்து கொள்ள வேண்டும் அல்லவா? என்று எண்ணியவள் குழந்தைகளை விட்டு கேட்கலாமா என்று நினைத்தாள். அது இன்னும் அசிங்கமாக போகும் என்று எண்ணிக் கொண்டு அரை மனதாக புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.

"அம்மா, அந்த நிச்சயதார்த்தப் புடவை, ஆரம் வாங்கினேமே. அதெல்லாம் எடுத்து வச்சுட்டியா "என்று கேட்டார் அப்பா.

அம்மா சிவகாமி "ஆமாடி, எல்லாம் இந்த சூட்கேஸ்ல வச்சு ரெடி பண்ணு. நாங்க ஒரு ரெண்டு மணிக்கு முன்னாடி போயிடறோம். போயிட்டு பாரி என்னமோ உனக்கு கார் அனுப்பறானாம். அதுக்கப்புறம் நீ கிளம்பி வந்தா போதுமாம்" என்றாள்.

"அது ஏன் நான் மட்டும் தனியா கடைசியா வரணும்?" என்று கேட்டாள் அவள்.

"முக்கியமான ஒரு விருந்தாளி வர்றாங்களாம். அவங்களை கூட்டிட்டுத்தான் நீ வரணுமாம்" என்று சொல்லி விட்டு அம்மா நகர்ந்தாள். அம்மா அப்படி நகரும் போது ஏதோ சிரிப்பை அடக்கிக்கொண்டு போகிறாற்போல இருந்தது.

"எல்லாருமா சேர்ந்து உங்க மருமகனை மறந்துட்டீங் கள்லே?" என்று வாய்க்குள் முணுமுணுத்தாள்.

இரண்டு எட்டு சென்ற அம்மா திரும்பி வந்து "என்னடி என்னமோ சொன்னயோ?" என்றாள்.

"ஒண்ணும் இல்லை" என்றாள் சரஸ்வதி.

அம்மா மறுபடியும் சிரித்துக் கொண்டே நகர்ந்து விட்டாள். இரண்டு மணி அடித்ததும் அம்மா அப்பா, பாரி குழந்தைகள் எல்லோருமாக கிளம்பி விட்டார்கள்.

அப்பார்ட்மெண்டை பூட்டிவிட்டு இவள் மட்டும்தான் கிளம்ப வேண்டும். இவளும் தயாராக அமர்ந்து கொண்டிருந்தாள்.

மூன்று மணி இருக்கும். காலிங் பெல் அடித்தது. யார் அந்த விருந்தாளி என்று ஆவலாகப் போய் கதவைத் திறந்தவள் திகைத்து நின்று விட்டாள்.

வனமாலி அங்கே நின்று கொண்டிருந்தான்!

"என்ன? உள்ளே வாங்கன்னு கூப்பிட மாட்டியா?" என்று கேட்டான். அவள் படபடப்பாகி "வா... வாங்க வாங்க" என்று அழைத்தாள்.

"எப்படி என்னை விடப் போச்சு?" என்ற கேட்டால் என்ன சொல்வது என்று எண்ணிக் கொண்டே ஓரக்கண்ணால் பார்த்தாள்.

அவனும் ஏதோ விசேஷத்துக்குப் போகிறவன் போல தயாராகத்தான் இருந்தான்.

"என்ன திடீர் விசேஷமெல்லாம் நடக்குது. நீ இங்கே உட்கார்ந்துட்டு இருக்கறே,?" என்றான்.

"இல்லை தம்பிதான் மூணு மணிக்கு யாரோ விருந்தாளி வருவாங்க. அவங்களோட வான்னு சொன்னான்" என்று மென்று விழுங்கினாள்,

"ஹை, இந்த வேலையெல்லாம் பண்றானா?" என்று கடகடவென்று சிரித்தான் வனமாலி.

"அப்புறம் நான் இப்ப எதுக்கு வந்திருக்கேன் தெரியுமா?"

"ஏங்க காபி ஏதாவது ஸ்வீட்டு, காரம்?", என்றாள்.

"எனக்கே உபசரணையா. சரி உன் ஆசையை எதுக்குக் கெடுப்பானேன். குடு" என்றான்.

அவள் அவசர அவசரமாக ஓடிப் போய் ஒரு தட்டில் மைசூர் பாகும் கொஞ்சம் மிக்சரும் கொண்டு வந்து கொடுத்தாள்.

"கொஞ்சம் காஃபி போடறேங்க" என்றாள்.

"போடு, போடு, உன் கை காஃபி குடிச்சு எத்தனை நாளாச்சு. ஆறு மணிக்கு மேலதானே நிச்சயதார்த்தம். போட்டுட்டு வா" என்று உட்கார்ந்தான்.

"நிச்சயதார்த்தமா? இவருக்கு தெரிந்திருக்கிறதே?" என்று அவள் ஆச்சரியத்துடன் ஓடிப் போய் காபி போட்டுக் கொண்டு வந்தாள்.

"போடறதுதான் போடறே. உனக்கு ஒரு கப் சேர்த்துப் போட்டுட்டு வா" என்றான் வனமாலி.

மிகவும் சுவாதீனமாக அவன் நடந்து கொள்ளுவது அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இரண்டு பேருக்குமாக காஃபியை போட்டுக் கொண்டு வந்தாள்.

அவனுக்கு கொடுத்து விட்டு நின்று கொண்டிருந்தாள். "உட்காரு, நீயும் காஃபி சாப்பிடு" என்றான்.

அவளுக்கு உலகமே தலைகீழாக சுற்றுவது போல் இருந்தது. தன்னிடமும் சிரிக்கிறாரே என்று எண்ணிக் கொண்டு தயக்கத்துடன் எதிரிலே அமர்ந்தாள்.

"என்ன புது வழக்கமா இருக்குன்னு பார்த்தியா? நானும் கொஞ்சம் பழகிட்டேன்னு வச்சுக்கோ. அம்மணி, இத்தனை நாளா இல்லாம இருந்ததுனால ஒரு நல்ல காஃபி கூட கிடைக்கலை. என்னமோ வாழ்க்கையே ஆடிப் போன மாதிரி ஆயிடுச்சு. அதான் வேற வழியில்லாம அப்படியே சரண்டர் ஆயிடறதுன்னு வந்துட்டேன்" என்றான்.

காஃபியைத் தன் வாயருகிலே கொண்டு போன சரஸ்வதி திகைத்துப் போய் அப்படியே கையை நிறுத்தி விட்டாள்.

"என்ன ஆச்சரியமா இருக்கா?. என்னடா வேதாளம் வேதம் ஓதுதேன்னு பார்க்கிறியா. அடிவாங்கிடுச்சுல்ல அதுதான்" என்றான் அவன்.

அவளுக்கு நம்பவே முடியலை. "குடி, குடி, காஃபியைக குடி" என்றான்.

பேசுவது அதே தெனாவெட்டாக இருந்தாலும் அவன் சொல்லுகிற விஷயம் அவளுக்குள்ளே இறங்கியது. மெது மெதுவாக இறங்கியது. காபியின் சுவை கூடியது.

இரண்டு பேருமே சற்று நேரம் மவுனமாக காபியை அனுபவித்துக் குடித்தார்கள்.

"அப்பாடா, இவ்வளவு நிம்மதியா காஃபி குடித்து ரெண்டு மாசம் ஆச்சு புள்ளே. கொஞ்சம் கூட யோசிக்காம இப்படி கழட்டி விட்டுட்டு வந்துட்டியே" என்றான் வனமாலி.

அவள் முகம் சிவந்து போனது. "ஆனாலும் வைராக் கியம்தான். என்ன? உனக்கு எழுதணும். எழுது போ."

அவள் பேச்செழாமல் பார்த்துக கொண்டிருந்தாள்.

"நானும் சும்மா ஒரு அறிவுஜீவியைப் போட்டு வறுத்து எடுத்து என்னத்தை சாதிக்க போறேன். என்ன என் கூட போட்டி போடறேங்கறியா? போடு. ரெண்டு பேரும் போடலாம் போட்டி" என்றான்.

அவள் தன்னை மறந்து புன்னகைத்தாள்.

சற்று நேரம் அவளை விழுங்குவது போல பார்த்தான். வனமாலியிடம் இப்படி ஒரு நடவடிக்கையை எதிர் பார்க்காத அவள் வெட்கத்துடன் தலையைக் குனிந்தாள்.

"இதோ பாருடா, ரெண்டு குழந்தைங்க ஆச்சு. ஆனாலும் இந்த ரொமான்ஸ் பண்ற புத்தி போகுதா. கதாசிரியன் இல்லே? அப்புறம் நீ வேற கதாசிரியை ஆயிட்டே. ரொமான்ஸ் எல்லாம் வரிஞ்சு வரிஞ்சு எழுதறயே. கொஞ்சம் நாமளும் ப்ராக்டிஸ் பண்ணிக்கலாம்" என்றான்.

சட்டென்று எழுந்தான். அவள் காஃபி தம்ளரை கீழே வைத்து விட்டு பதைத்துப் போய் எழுந்து நின்றாள். "கொஞ்சம் இப்படி வர்றது" என்று அருகிலே இழுத்தான்.

"என்ன இது விடுங்க. நாம என்ன சின்னக் குழந்தைங்களா".

"ஹேய், சின்னக் குழந்தைகளுக்கு இல்லை. இந்த வயசுலதான் ரொமான்ஸ் வேணும். நடுத்தர வயசுலதான் ரொம்ப வேணும்" என்றவன் இழுத்து மெல்ல அவள் நெற்றியிலே இதழ் பதித்தான். "அதுவும் கூட இயல்பா வரமாட்டேங்குது. சரி விடு. கத்துக்குவோம்" என்றவன் விட்டு விலகினான்.

"சரி போய் முகம் கழுவிட்டு வந்துடு. ஏன்னா முக்கியமான விசேஷத்துக்கு கூட்டிட்டுப் போக வந்திருக்கேன்".

அவள் புரியாதவளாக அவன் முகம் பார்த்தாள்.

"உனக்கு விஷயம் தெரியாதா? நான் இப்ப எதுக்கு வந்திருக்கேன் தெரியுமா? என் மச்சினனுக்கு, புரியுதா என் மச்சினனுக்கு நம்ம வீட்ல நிச்சயதார்த்தம் வச்சிருக்கு. அதுக்கு உன்னை கூட்டிட்டுப் போறதுக்கு வந்திருக்கேன்" என்றான்.

அவள் உணர்ச்சி வயமானாள்.

கண்களில் லேசாக கண்ணீர் திரண்டது. "அப்படியா?" என்று இளகியவள் ஒரு எட்டு எடுத்து வைத்து அவன் மார்பிலே சாய்ந்து கொண்டாள்.

அவள் முகத்திலே தோன்றிய நிம்மதியைப் பார்க்க அவனுக்கும் ஆசையாக இருந்தது.

"இந்தப் பையன் பார்த்தீங்களா? இப்படி என்னை ஏமாத்திட்டான். எனக்கும் சரியான கோபம். உங்களைப் பத்தியே பேசலை. என்ன இருந்தாலும் மச்சானைப் பத்தி பேசவே இல்லையே பாரு. அப்படின்னு பொருமிட்டுதான் உட்கார்ந்திட்டு இருந்தேன்"

"அது உன்னைப் பழிவாங்கறானாம். நீ திட்டம் போட்டு ஜவுளிக்கடையில கொண்டு போய் நிக்க வச்சு அவனை கார்னர் பண்ணி இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்க வச்சுட்டியாம். அதே மாதிரி இரு உனக்கும் வேட்டு வைக்கிறேன்னு இப்படி பண்ணியிருக்கான் பய.இதுவும் ஒரு சதி வேலைதானே."

அவள் கலகலவென்று சிரித்தாள். "மச்சானும் மச்சினனும் ஒண்ணா சேர்ந்துட்டீங்களாக்கும்".

"அட போடி, இதுக்கு ஒண்ணா சேரலைன்னா எப்படி?ஒரே ஒரு மச்சினன் அவன் கல்யாணத்தை கிராண்டா நடத்த வேண்டாமா? அப்புறம் நம்ம உரிமையை விட்டுக் கொடுத்தற முடியுமா?" என்றான்.

அவள் மறுபடியும் நிறைவாக புன்னகைத்தாள். "ஏய், நீ இப்படி சிரிச்சுப் பார்த்து எத்தனை நாளாச்சு" என்று அவன் மறுபடியும் நெருங்க அவள் இடம் கொடுத்தாள்.சற்றுக் கழித்து

"பேசாம இருங்க .விசேஷத்துக்கு நேரமாச்சு" என்றவள். "இருங்க, நான் முகம் கழுவிக் கொண்டு வந்துடறேன்" என்றவள் ஓடிப் போய் முகம் திருத்திக் கொண்டு வந்தாள்.

"அப்ப கிளம்புவோமா?" என்றான்.

"தாராளமா கிளம்பலாம்ங்க" என்றாள்.

"இங்க பாரு, இன்னிக்கு போனா அப்படியே அங்க இருந்துக்க வேண்டியதுதான். அப்புறமா வந்து திங்க்ஸெல்லாம் எடுத்துக்கலாம். சரியா" என்றான்.

அவள் சரி என்பது போலத் தலையை உருட்டினாள். அவள் உருட்டுகிற வேகம் பார்த்து அவன் சிரித்தான்.

மெல்ல அவள் காதைத் திருகி விட்டு "இனிமே தான் உன் கிட்ட எப்படி ரொமான்ஸ் பண்றதுன்னு கத்துக்கணும். டவுட் இருந்தா அந்தப் பையன்கிட்ட கேட்டுக்கலாம்" என்றான்.

"எந்தப் பையன் கிட்டே?" என்றாள் அவள்.

"பாரிகிட்டேதான்" என்றான் அவன்.

"விடிஞ்சுது" என்று சிரித்தாள் சரஸ்வதி.

கலகலவென்று சிரித்துக்கொண்டு இருவரும் ஒன்றாக அந்த அப்பார்ட்மெண்டை விட்டு வெளியே கிளம்பும் போது செல்ஃபோன் ஒலித்தது.

சரஸ்வதியின் செல்போன். காதுக்குக் கொடுத்தாள். அக்கா எப்படி பழிவாங்கினேன் பார்த்தியா. நீ மட்டும் தான் சதி பண்ணுவியா? நானும் சதி பண்ணுவேன். விருந்தாளி வந்துட்டாரா? டக்குன்னு புடிச்சுக்கோ. ரெண்டு பேரும் பத்திரமா அரை மணி நேரத்துக்குள் வந்து சேருங்க" என்றான்.

"இருடா, உங்கிட்ட வந்து நேர்ல பேசிக்கிறேன்" என்று சிரித்துக் கொண்டே அவள் பேசுவதை அவன் ஆசையுடன் விழுங்குவது போல் பார்த்துக் கொண்டிருந்தான்.

பேசுகையிலேயே அவள் முகம் சிவந்தது.

சிவந்த முகத்தில் ஒரு கம்பீரம் தெரிவது போல் உணர்ந்தான் வனமாலி.

அத்தியாயம் - 29

நிச்சயதார்த்தம் வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தது.

அழகுப் பதுமையாக சங்கமித்ராவை அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

பைந்தமிழ் பாரி கூட்டத்தோடு கூட்டமாக ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தான். "ஏய், மாப்பிள்ளை நின்னுட்டு இருக்காருப்பா. கூட்டிட்டு வந்து உட்கார வைங்க" என்றான் செந்தில்.

"டேய் போடா, நீ வேலையைப் பார்த்துட்டு" என்று சிரித்தான் பாரி.

"அண்ணே நீங்க இப்படி நின்னுட்டு இருந்தா நல்லா இருக்கா? சேர்ல வந்து உட்காருங்க" என்றான்.

"உனக்கு விஷயம் தெரியலைடா. அங்க நின்னாதான் அண்ணன் நல்லா பார்க்கறதுக்கு வசதியா இருக்கும். அதுக்குத்தான் அங்க நிக்கறாரு" என்றான் ஸ்டீபன்.

"ஆமாடா, ஆராய்ச்சி பண்ணி காரணம் கண்டு பிடிச்சுட்டீங்க" என்று பைந்தமிழ் பாரி சிரித்துக் கொண்டே எல்லாரும் உட்கார்ந்து கொண்டிருந்த வரிசைக்கு வந்து இரண்டாவது வரிசையிலே அமர்ந்தான்.

"மாப்பிள்ளையை கூப்பிட்டு உட்கார வைங்க" என்று யாரோ குரல் கொடுத்தார்கள். அவனையும் அழைத்தார்கள்.

இரண்டு பேரையும் ஒரு சோபாவில் அமர்த்தி இரண்டு பேருக்கும் நலங்கு வைத்தார்கள். அவன் இதை எதிர்பார்க்க வில்லை.

அம்மாவும் அப்பாவுமாக பெண்ணிற்கு புடவை, நகை வைத்துக் கொடுக்க அவள் அந்தப் புடவையை உடுத்திக் கொண்டு வந்து அமர்ந்தாள். அப்படி அமர்ந்ததற்குப் பிறகு பைந்தமிழ் பாரி கீழே இறங்கி அமர்ந்து விட்டான்.

எல்லோரும் நலங்கு வைத்துக் கொண்டிருந்தார்கள். வனமாலி முக்கியமான பங்காற்றிக் கொண்டிருந்தான்.

வீட்டுக்கருகே கார் வந்த போது சரஸ்வதி வீட்டைப் பார்த்த உடன் திகைத்துப் போனாள்.

அந்தப் பங்களாவின் முன் பகுதியில் பெரியதாக ஒரு ஷாமியானா போடப்பட்டு இன்னொரு பக்கத்திலே பந்தி பரிமாறுவதற்காக ஒரு ஷாமியானா போடப்பட்டு என்று அவர்களுடைய பங்களாவே இப்போது களையோடு காட்சி தந்தது. "பார்த்தியா எல்லா ஏற்பாடும் நம்மளதுதான்

என்றான் வனமாலி. சட்டென்று நினைவு வந்தவன் போல காரை உள்ளே விடாமல் மறுபடியும் திருப்பினான்.

அவள் மகிழ்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்.

"இந்த புத்தி வர்றதுக்கு இவ்வளவு நாளாச்சான்னு கேட்கறியா?" என்றான்.

"ஐயோ, நான் அதெல்லாம் ஒண்ணுமே சொல்லலைங்க" என்றாள் அவள்.

"சொல்லாட்டி என்ன காதளவோடிய கண்கள்னு வர்ணிச்சிருப்பாங்களே, அந்த மாதிரி அந்தக் கண் எல்லா வேலையும் பண்ணுது. பேசுது தூங்கவே விடலை என்னை. இத்தனை நாளா என்றார் காரை ஓட்டிக் கொண்டு.

"ஏன் டிரைவர் வரலையா" என்று பேச்சை மாற்றினாள்.

"நான் வேணும்னுதானே விட்டுட்டு வந்தேன். அவனை வச்சுக்கிட்டு இப்படியெல்லாம் பேச முடியுமா?" என்றான் அவன்.

"வெங்கட், நிவேதிதான்னு இரண்டு குழந்தைகள் இருக்கு தெரியுமா?" என்றாள் அவள்.

"இதோ பார். இன்னொண்ணுக்கும் நான் ரெடி. நீ ரெடியா?" என்றான்.

"சும்மா இருங்க" என்றாள் அவள் வெட்கத்துடன்.

"இங்க பாரு, இப்போ நான் உங்கிட்ட வெளிப்படையா சொல்றேன். நீ கதை எழுதலாம். உனக்கு எது பிடிக்குதோ அதை செய்யலாம். எனக்குத் தெரியும் நீ குடும்பத்தை விட்டுக் கொடுக்க மாட்டே அப்படின்னு. ஒரு கணவனா நான் பெரிசா இதுவரைக்கும் என்னோட கடமைகளை யெல்லாம் செஞ்ச மாதிரி தெரியலை. இனிமே திருத்திக்கப்

பார்க்கறேன்'' என்றவன். காரை ஒரு பார்க்குக்குள் செலுத்தினான்.

சரஸ்வதி இதை எதிர்பார்க்கவில்லை. ''ஏங்க நேரமாச்சுங்க'' என்றாள்.

''சும்மா இரு அதான் உன் தம்பி அரை மணி நேரம் குடுத்துருக்கான்ல. ஒரு ஐந்து நிமிஷத்துல ஒண்ணும் ஆயிடாது'' என்றான்.

அவள் அமைதியாகி விட்டாள். அழகான ஒரு கொடி பந்தல் அமைந்திருந்த ஒரு இடத்திலே இருந்த சிமெண்ட் பெஞ்சிலே அவனை அமர வைத்தான்.

''சரசு, நான் கூப்பிட்ட உடனே கிளம்பிட்டே. ஏன்னா நான் வந்து பார்த்து உன்னைக் கூப்பிட்டதே பெரிய விஷயம்னு நீ நினைச்சுட்டே. என்னமோ ஒரு பந்தா. வந்து கூப்பிட்ட உடனே என் ஒய்ப் வந்துடுவா அப்படிங்கற நம்பிக்கையிலதான் நான் வந்தேன். நீ அந்த நம்பிக்கைக்கு மதிப்பு கொடுத்தியே தாங்க்ஸ்'' என்றான்.

அவள் நெகிழ்ந்து போனாள். ''என்னங்க இப்படி யெல்லாம் பேசிட்டு நீங்க எப்பவும் போல இருங்க'' என்றாள்.

''எப்பவும் போலவா? ஒரு அடிமைமாதிரி நடத்திட்டு நோ நோ அதெல்லாம் முடிஞ்சது. அதெல்லாம் மாறியாச்சு. இப்ப நான் ஒரு காரியம் செய்யப் போறேன்'' என்றான்.

அவள் பயந்து போனாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். ''என்ன செய்யப் போறீங்க?'' என்றாள்.

அவன் கலகலவென்று சிரித்தான். ''அடி பைத்தியம். இங்க வச்சா ரொமான்ஸ் பண்ணுவேன். நான் உன்கிட்ட மன்னிப்பு கேட்கறேன்'' என்றான்.

சரஸ்வதி திடுக்கிட்டு போனாள். ''என்னங்க வேணாம் ப்ளீஸ்'' என்றாள்.

''இல்லை சரஸ்வதி'' என்று அவளது இரண்டு கைகளையும் தன்னுடைய கைகளில் கோர்த்துக் கொண்டு ''ஐ ஆம் சாரி, என்னை மன்னிச்சிடு சரஸ்வதி'' என்றான்.

அவள் கண்களில் கண்ணீர் திரண்டது. ''வேணாங்க. நம்மளுக்குள்ளே எதுக்கு மன்னிப்பு?'' என்றாள்.

''இல்லை இல்லை, நீ கோபிச்சுட்டு இருந்து நான் கூட்டிட்டு போறேன்ல. இந்த விஷயத்துக்காக மன்னிப்பு கேட்கலை. இத்தனை நாளும் ஒரு பெண்ணை எப்படி நடத்தணும்னு தெரியாம இருந்திருக்கேன் பார்த்தியா? அதுக்காக மன்னிப்பு கேட்கறேன். இந்த இரண்டு மாசங்கள் எனக்கு எல்லாத்தையும் புரிய வச்சது. ஒரு பெண் எப்படி வீட்டை நிறைவா வச்சுக்கறா. அவள் எப்படி வீட்ல ஒரு சக்தி. அவளுடைய அந்த ஆரான்னு சொல்றாங்களே அது மாதிரி அவளுடைய அன்பின் அலைகள் எப்படி வீடு பூரா நிறைஞ்சிருக்கு. இது அத்தனையும் புரிஞ்சுக்கிட்டேன் சரஸ்வதி.

.....!

''ஒவ்வொரு நாளும் காலையில எழுந்திருச்சா ஒரே வெறுமையா இருக்கும். என்ன இருக்கு இந்த வீட்ல. குழந்தைகளும் நீயும் இல்லாமன்னு ரொம்ப நொந்து போயிட்டேன்'' என்றான்.

''ப்ளீஸ், நீங்க இந்த மாதிரியெல்லாம் பேசாதீங்க. நீங்க இப்படி பேசினால் அது உங்களுக்கு சூட்டே ஆகலை.''

''பரவாயில்லை இப்படிப் பழகிக்குவோம். நீயும் இனிமேல் நான் எந்தத் தப்பை செஞ்சாலும் ஓபனா சொல்லு. பயந்து பயந்து இருக்காதே என்ன?'' என்றான்.

அவள் மகிழ்ச்சியுடன் தலையாட்டினாள். "இப்ப மகிழ்ச்சியா போகலாமா? நம்ம பங்களா உள்ளே எப்படி இருக்குன்னு வந்து பாரு" என்று அழைத்துக் கொண்டு வந்தான்.

உண்மையிலேயே சரஸ்வதி நெகிழ்ந்து போய் இருந்தாள். தம்பியிடம் தனியாக "எப்படிடா, எப்படி இதெல்லாம்?" என்று கேட்டாள்.

"அது ஒண்ணும் இல்லைக்கா அப்படியே அடிச்சு அடிச்சு கனிஞ்சு போயிருந்த நிலைமையில நானும் அப்பா அம்மா எல்லாரும் ஒரு நாள் போனோம். அப்பா அம்மா உங்களுக்குள்ள பிரிவு இருக்கற மாதிரியே தெரியாத மாதிரியே நடந்துட்டாங்க" என்றான்.

"தெரியாத மாதிரின்னா? அப்பத் தெரிஞ்சு போச்சா?" என்றாள் சரஸ்வதி.

"அப்புறம் எத்தனை நாளைக்கு மறைக்கிறது? ஒரு நாள் சொன்னேன். நீ எப்படி எனக்கும் மித்ராவுக்கும் என்ன இருக்குன்னு சொன்னியோ. அது மாதிரி நானும் என்ன நடந்துட்டு இருக்குதுன்னு சொன்னேன்" என்றான்.

"ஓஹோ" என்றாள்.

"அப்பா அம்மா வருத்தப்பட்டாங்க. ஆனா அப்பா உடனே என்ன சொன்னாரு தெரியுமா. இப்பவும் ஹோப் இருக்கு தம்பி. இந்த விழாவுக்கு ஆகட்டும், எங்ககிட்ட வந்து பேசும்போதாகட்டும் மாப்பிள்ளை பிரிஞ்சிருக் கோம்ங்கறதை சொல்லலை. அவரும் அது தெரியாம தானே இருக்கணும்னு நினைக்கிறாரு. அதே நாடகத்தை நாமளும் நடிப்போம் என்று அப்பா சொன்னாருக்கா".

சரஸ்வதி வாயைப் பிளந்து கொண்டு பார்த்துக் கொண்டிருந்தாள். "ஆமாக்கா, நாங்களே போய் மச்சான் கிட்ட இந்த மாதிரி நிச்சயதார்த்தத்துக்கு ப்ளான் பண்ணனும். நீங்களும் கூட இருந்து நடத்தணும் அப்படின்னு கேட்டோம். அது வரைக்குமே அப்படியே நொந்து போயிருந்தாரா.இந்த வாய்ப்பை விடக்கூடாது அப்படின்னு கப்னு புடிச்சிட்டாரு. அவரும் புரிஞ்சிக் கிட்டாருக்கா. இனிமே நீயும்விட்டுக் கொடுத்துடுக்கா" என்றான்.

"சரிடா தம்பி, உலக அதிசயம் நடந்துச்சு தெரியுமா?" என்றாள்.

"என்ன அக்கா?" என்றான்.

"மன்னிப்பு கேட்டாருடா" என்றாள் அக்கா.

"பின்னே? நாங்களெல்லாம் என்ன பண்றது. வேற வழியே இல்லை. சரண்டர் ஆகித்தான் தீரணும்" என்றான்.

அவள் கலகலவென்று சிரித்தாள். "நாங்க உங்க கிட்ட சரணடைவோம். நீங்க எங்க கிட்ட சரணடைவீங்க. சரண் நாங்களே" என்று சிரிக்கிற சகோதரியைப் பார்த்துட்டு "போதும்டா. என்னமோ மித்ரா வேண்டாம்னு சொன்னே. அன்னைக்கு அந்த ஜவுளிக்கடை யில ஒரு ஓரமா நின்னுட்டு ஐயா நெஞ்சை நீவிட்டு எவ்வளவு வேதனையா பார்த்துட்டு இருந்தீங்க தெரியுமா.அப்ப என் வயிறே கலங்கிடுச்சுடா" என்றாள்.

அவன் ஆச்சரியமாக அக்காவைத் திரும்பிப் பார்த்தான். "அக்கா" என்றான் நெகிழ்ந்து போன குரலில்.

"ஆமாடா இந்த லவ்வர்ஸ் என்ன நினைச்சுக்கறீங்க? நீங்க மட்டும்தான் உலகத்தில இருக்கற மாதிரியும். யாரும்

உங்களை பார்க்காத மாதிரியும் நினைச்சுக்கறீங்க. ஆனா முகத்துல ஒட்டியிருக்கேடா .எழுதி ஒட்டியிருக்கு. அன்னைக்கு நீ பட்ட வேதனையைப் பார்த்துதான்.நான் அவங்க கால்ல விழுந்தாவது கல்யாணத்தை பண்ணி வச்சிடணும்னு நினைச்சேன்'' என்றாள்.

''அக்கா, நீயும் பயங்கரமான ஆளு. நீ ஒரு விஷயத்தை மறைச்சுட்டயில்லே எங்கிட்டே'' என்றான்.

''எந்த விஷயம்?'' என்றாள் சரஸ்வதி.

''தணிகாசலம் மாமா வீட்டுக்கு வந்திருந்தாராம். நீ அதை சொல்லவேயில்லையே'' என்றான் சற்றே ஆதங்கத்துடன்.

''ஆமா தம்பி, போன வாரத்துல வந்திருந்தாரு. வந்ததும் இப்ப உங்கிட்ட பேசினாரே அதே மாதிரி என்கிட்ட பேசினாரு என் பணம் தான் என் மகளோட வாழ்க் கைக்குத் தடையா இருக்குன்னா இப்ப நான் ரொம்ப வருத்தப்படறேம்பா. இந்த பணத்தை ஏன் சம்பாரிச்சேன்னு வருத்தப்படறேன் அப்படின்னு ரொம்ப நொந்து போய் பேசினாருப்பா''

தன்னுடைய அறையிலே பழைய அறையிலே அமர்ந்து கொண்டு சகோதரியும் சகோதரனும் பேசிக்கொண்டிருந் தார்கள்.

பைந்தமிழ் பாரி பெருமூச்சு விட்டான். ''எங்கிட்டயும் அப்படிதாங்கா பேசினாரு. கிட்டத்தட்ட கையைக் காலைப் பிடிக்காத குறையா அவரு வேண்டினதைப் பார்த்து என் மனசு ஒரு மாதிரி ஆயிடுச்சு'' என்றான் பாரி.

''ஆமாப்பா, நீ எப்படி அங்க வேதனையா பார்த்துட்டு இருந்தியோ அதே மாதிரி மித்ரா முகத்தை நானும் பார்த்தேம்பா. உயிரே இல்லப்பா அந்தக் கண்கள்ல.

உயிரில்லாம அந்தப் பொண்ணு நடமாடிட்டிருந்தது. இது என்ன கொடுமை அப்படின்னு நினைச்சுதான் நான் அம்மா அப்பாகிட்ட பேசினேன். அம்மா அப்பாகிட்ட சொல்லித் தான் கூட்டிட்டு வந்தேன். நேரடியா நீ நின்ன கோலத்தையும் அவ நின்ன கோலத்தையும் காண்பிச்சேன். அது மட்டும் இல்ல. மித்ராவும் நீ நிக்கிற கோலத்தைப் பார்த்தா'' என்றாள்.

''எப்படிக்கா?'' என்றான் அவன்.

''நீ நிக்கிறதுக்கு நேர் எதிர்க்க ஒரு கண்ணாடி இருந்தது. அந்தக் கண்ணாடிக்கு நேர் எதிரே ஒரு கண்ணாடி இருந்தது. இந்த கண்ணாடியில் மித்ரா நிக்கிற இடத்துல பார்த்தா தெரிஞ்சது'' என்றாள்.

''ஓ இந்த சிக்சாக் வேலையெல்லாம் நடந்துச்சா?'' என்றான்.

''ஆமாப்பா, அதுக்கப்புறம்தான் அவள் தனியா வந்து உன்கிட்ட பேசினாள்'' என்றாள்.

''என்னக்கா பண்றது இப்பவும் அவங்களோட பொருளா தார நிலை எனக்கு நெருடலாத்தான் இருக்குது. ஆனால் மித்ராவை விட்டுட்டு எனக்கு ஒரு லைஃப் இல்லைக்கா.''

''மடையா மடையா. அது உனக்கு இப்பதான் புரிஞ்சதா எங்களுக்கெல்லாம் எப்பவோ புரிஞ்சது. அதுனாலதான் நான் இந்த ஸ்டெப் எடுத்தேன்'' என்றாள். ''ஆனா நீ தான் அதுக்கு பழிக்கு பழி வாங்கிட்டியே'' என்றாள்.

சிரித்தான் சகோதரன்.

''ஆமா சஸ்பென்ஸ் வச்சு ப்ளான் பண்ணி அம்மா அப்பாவை கடைக்கு வரச் சொல்லி மித்ராவை வரச் சொல்லி என்னையும் வரச்சொல்லி மோத விட்டு என்னென்ன

பண்ணினே. அதேதான் நானும் பண்ணினேன். ஆனா நான் ஒண்ணு எதிர்பார்க்கலைக்கா'' என்றான்.

''என்ன தம்பி?'' என்றாள் அவள்.

''மச்சான் இந்தப் போடு போடுவாருன்னு நினைக்கவே இல்லை'' என்றான்.

''ஆமாம். இப்ப ரொமான்ஸெல்லாம் கூட கொஞ்சம் தூக்கலாத்தான் இருக்கு'' என்றாள் அக்கா வெட்கத்துடன்.

''அப்படிப் போடு,'' என்று பைந்தமிழ் பாரி சிரிக்கவும். குழந்தைகள் உள்ளே ஓடி வரவும் சரியாக இருந்தது.

''மாமா உலக அதிசயம் நடந்துச்சு'' என்றாள் நிவேதிதா.

''என்னடா?'' என்றான் பாரி.

''அப்பா எங்கரெண்டு பேத்தையும் கொஞ்சினாங்க. இங்கெல்லாம் முத்தம் கொடுத்தாங்க இங்கெல்லாம் முத்தம் கொடுத்தாங்க'' என்றார்கள்.

பாரியும் சரஸ்வதியும் ஒருவரை ஒருவர் ஆச்சரியமாக பார்த்துக் கொண்டார்கள். ''ஃபங்ஷன் முடியட்டும். நாளைக்கு உங்களைக் கடைக்கு கூட்டிட்டுப் போய் ஃபைவ் ஸ்டார் சாக்லெட் என்னென்ன ப்ளே திங்ஸ் வேணுமோ வாங்கித்தரேன்னு சொல்லியிருக்காங்க. இனிமே அடிக்கடி வெளியிலே கூட்டிட்டுப் போறேன்னு சொல்லி யிருக்காரு'' என்றார்கள் குழந்தைகள் உற்சாகமாக.

சரஸ்வதி மகிழ்ச்சிப் புன்னகையுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வெங்கட் அம்மாவிடம் மெதுவாக அருகில் வந்து பச்சென்று முத்தம் கொடுத்தான்.

சரஸ்வதி ''என்னடா இது'' என்று சிரித்தாள். அவன் மெல்ல அவள் காதுக்கருகில் ''அம்மா அப்பா இதை ரிலே

பண்றாங்களாம். உங்கிட்ட காதுக்கிட்ட சொல்லச் சொன்னாங்க'' என்றான்.

சரஸ்வதியின் முகம் குங்குமமாக சிவந்து போனது. ''ஐய்யோ இவரு,'' என்று அவள் பல்லைக் கடிக்க பாரி கலகலவென்று சிரித்துக் கொண்டு நகர்ந்து போனான்.

அதே நேரத்தில் சரஸ்வதியின் செல்போன் ஒலித்தது. பார்த்தாள். வனமாலி. அந்தப் பக்கம் இருந்து செல்ஃ போனில் பேசினான். ''என்ன அனுப்பிச்சது வந்து சேர்ந்துதா?'' என்றான்.

''ஆமா, இப்ப நமக்குத்தான் கல்யாணம் ஆகி புதுப் பொண்ணு மாப்பிள்ளை நாம. என்னங்க இப்படியெல்லாம் விளையாடறீங்க'' என்றாள்.

''இனிமேதான் நான் புதுசா விளையாட்டெல்லாம் ஆரம்பிக்கப் போறேன். இப்ப எனக்கு என்ன ஒரு முப்பத்து ஏழு ஆச்சா? உனக்கென்ன முப்பத்து ரெண்டு ஆச்சா? இது என்ன ரொமான்ஸ் பண்ண முடியாத வயசா. பண்ணக் கூடாத வயசா? இரு கண்ணு இரு'' என்றான்.

அவள் வெட்கத்துடன் முகம் சிவக்க. சற்று தூரம் போன பாரி லேசாக திரும்பிப் பார்த்தான். அக்கா ஃபோனில் முகம் சிவக்க பேசிக் கொண்டிருப்பதை ரசித்துக் கொண்டே நகர்ந்தான்.

அத்தியாயம் - 30

அடுப்படி பக்கத்தில் நின்று தோசை வார்த்துக் கொண்டிருந்தாள் சங்கமித்ரா.

குளித்து தலைக்குத் துண்டு கட்டிக் கொண்டு அவள் நின்று கொண்டிருந்த விதமே அழகாக இருந்தது.

"என்ன ரெடியா?" என்று குரல் கொடுத்துக் கொண்டே பாத்ரூமில் இருந்து வெளியே வந்தான் பைந்தமிழ் பாரி அவன் இடுப்பிலே லுங்கியைக் கட்டிக் கொண்டு மேலே ஒரு துண்டைப் போட்டுக் கொண்டு பனியனும் லுங்கியு மாக அவளது பின்புறத்திலே வந்து மெல்லத் தன் இரு கைகளால் அவளை வளைத்துக் கொண்டான்.

"ஐயோ என்னங்க இது? இப்பதான் டவல் கேட்கறேன் சோப்பு கேட்கறேன்னு ஏக ரகளை பண்ணி முடிஞ்சது. நான் உங்களுக்கு டிஃபன் ரெடி பண்ண வேண்டாமா? என்று சொல்லிக் கொண்டே திரும்பி அவன் மார்பிலே சாய்ந்து கொண்டாள்.

"என்னோட கவலையே அதுதான் மித்ரா. நீ இப்ப டிபன் செஞ்சிட்டிருக்கே? நான் சாப்பிட்டாகணுமே? அதுக்குத்தான் என்னைத் தயார் பண்ணிக்கிறேன். நீ கொஞ்சம் அப்படியே சாஞ்சு கொடுத்தீன்னா?" என்று அவன் இழுக்க அவள் செல்லமாக அவன் தோளைத் தட்டினாள்.

"இதுதானே வேண்டாங்கறது. நிஜமா நான் சமையல் பண்ணுவேன். பழக்கம் இருக்கு" என்றாள்.

"என்னமோ சொல்லு. நம்பித்தானே ஆகணும்? என்றான். ஆனால், அவன் வாய் பேசிக் கொண்டிருக்க புதிதாக திருமணமான கணவனின் விளையாட்டுக்களை எல்லாம் அவன் கைகள் செய்து கொண்டிருந்தன.

"ப்ளீஸ் சும்மா இருங்க" என்று அவள் அவனை இழுத்துக் கொண்டு போய் டைனிங் டேபிள் சேரில் அமர்த்தினாள். அவனுக்கும் புறப்பட வேண்டிய அவசியம்

இருந்ததால் "சரி குடு" என்று அவன் சாப்பிட ஆரம்பித் தான்.

"நீயும் சாப்பிட வந்துடு" என்றான். அவளும் தனக்குத் தேவையான தோசையை வார்த்து தட்டில் எடுத்துக் கொண்டு எதிரிலே வந்து அமர்ந்தாள்.

"ம். தேங்காய் சட்னி சூப்பர். ஆனா என்ன டேஸ்ட் வித்தியாசமா இருக்கு" என்றான்.

"இது பொட்டுக்கடலை போடறதுக்கு பதிலா நிலக் கடலை போட்டுச் செஞ்சது" என்றாள்.

"அப்படியா சரி சரி"

"இது சதிக்கா சொல்லிக் கொடுத்தது".

"சதிக்கா பெயரைச் சொல்லாதே. சரியான சதி பண்ணிட்டாளே அவ".

"போதும். போதும் திருப்பித் திருப்பி இப்படியே சொன்னா நிஜமாவே எனக்கு கோபம் வரும். நேற்றைக் கெல்லாம் பார்த்தா என்னமோ ரொம்ப சதியில சிக்கின ஆள்மாதிரியா இருந்தது?" என்றாள் அவள்.

அவன் கலகலவென்று சிரித்தான் "ஏய், நீ அந்தப் பக்கம் நான் இந்தப் பக்கமா" என்றவன் எழுந்தவன் இந்தப் பக்கமாக வந்து அவள் அருகிலே அமர்ந்து கொண்டவன். வழக்கம் போல விளையாடினான். "ஏங்க? ஆபீஸ் போற ஐடியாவே இல்லையா?" என்றாள் அவள் கோபம் போல.

"அதுதான் யோசிக்கிறேன். போகலாமா வேண்டா மான்னு தெரியலை" என்றான்.

பேசிக் கொண்டே நடுவிலே "நான் ஒரு சில முக்கிய மான விஷயங்கள் உங்கிட்ட பேசணும்னு நினைச்சேன்.

இங்கே இப்பதான் நைட்ல பேசற மூடே இருக்கறது இல்லை. பிசியா இருந்துடறோமா?'' என்றான்.

அவள் வெட்கத்துடன் செல்லமாக ஒரு அடி அடித்தாள். அவன் சிரித்தான். ''இந்தப் பக்கத்து அப்பார்ட்மெண்ட் இருக்குல்ல'' என்றான்.

''ஆமா,'' என்றாள் அவள். ''நான் அதை அக்கா பேர்ல வாங்கியிருக்கேன்'' என்றான்.

உடனே அவள் திரும்பி ஆச்சரியமாகப் பார்த்தாள். ''நிஜமாவா?'' என்றாள்.

''ஆமா, மித்ரா'' என்றான்.

''ஓஹோ, நல்ல விஷயம்தான்'' என்றாள் அவள்.

''இதுக்கு அப்பாகிட்ட கூட பணம் கேட்கலை. நானே வாங்கி அக்காவுக்கு பிரசண்ட் பண்றேன்'' என்றான்.

''நல்லதுங்க'' என்றாள் அவள்மகிழ்ச்சியுடன்.

''எதுக்கு இப்படி ஒரு பிரசண்ட்ன்னு கேட்க மாட்டியா?'' என்றான் அவன்.

''என்னங்க இது? உங்க சிஸ்டருக்கு நீங்க கொடுக்கறீங்க. இதுல எதுக்குன்னு என்ன கேள்வி? ரொம்ப அபத்தமால்லே இருக்கு'' என்றாள் அவள்.

''ஆனா, காரணம் இருக்கு'' என்றான்.

அவள் சிந்தனையுடன் அவனைப் பார்த்தாள்.

''இல்லை மித்ரா. திடீர்னு அக்கா வெளிய வர வேண்டிய சூழ்நிலை வந்துடுச்சு. அக்காவுக்குன்னு ஒரு இடம் சென்னையில இருக்கணும். எப்ப வேண்ணாலும் அவ அந்த வீட்ல இருக்கற மாதிரியான ஒரு சூழ்நிலை இருக்கணும்னு தோணிச்சு'' என்றான்.

''கரெக்ட்தாங்க'' என்றாள் அவள்.

''அதனால அக்கா பெயர்ல வாங்கியிருக்கேன்'' என்றான்.

அப்பொழுது அவள் ஒரு சங்கடத்துடன் பார்த்துக் கொண்டு ''நானும் ஒண்ணு சொல்லட்டுமா?'' என்றாள் அவள்.

''சொல்லு'' என்றான்.

''இல்லை. இந்த பக்கத்து ரெண்டு பிளாட்டும் விற்பனைக்கு வருது. அப்பா ஒரு பிளாட்டும், அண்ணா ஒரு பிளாட்டும் வாங்கி எனக்கு பிரசண்ட் பண்றேன்னு சொல்லிக்கிட்டிருக்காங்க. உங்க கிட்ட கேட்க சொன்னாங்க'' என்றாள்.

அவன் கடகடவென்று சிரித்து விட்டான். ''பயங்கர மான ஆளுடி நீ, நேரம் பார்த்து தாக்கறடி'' என்றான்.

அவன் பொதுவாக அவளை மரியாதைக் குறைவாக பேசுவதில்லை என்பதையும் ரொம்பச் செல்லமான நேரங்களில் மட்டும்தான் அவன் அது போல பேசுவது என்பதையும் அவள் புரிந்திருந்தாள்.

''ஏன் என்ன சாமர்த்தியம் கண்டுட்டீங்க?'' என்றாள்.

''கரெக்ட்டா எங்க அக்காவுக்கு நான் ஒரு ஃப்ளாட் வாங்கியிருக்கேன்னு சொல்ற நேரம் பார்த்து நீ இதை சொல்றே. நான் வேண்டான்னு சொல்ல முடியுமா? உடனே என்ன கேட்பே. உங்க அக்காவுக்கு மட்டும் நீங்க வாங்கிக் கொடுத்தீங்களே. அது மாதிரி எங்க வீட்லயும் ஆசைப்படுவாங்கல்ல என்று கேட்பே. விவரம்டி நீ'' என்று சிரித்தான்.

அவளும் சிரித்தாள். ''ஆனா, இதுக்கு சும்மா விட்டுடுவேன்னு நினைக்காதே. நிறைய தண்டனை கொடுப்பேன்'' என்றான்.

''கொடுங்க. நான் வாங்கிக்கிறேன்'' என்றாள்.

அவனும் கொடுத்தான், அவளும் வாங்கிக் கொண்டாள்.

பிறகு ஆழமான குரலில் அவள் சொன்னாள் ''இல்லை அப்பா ஏதாவது செய்யணும்னு ரொம்ப ஆசைப்படறாங்க. அதைக் கேட்டு நீங்க புண்பட்ரவும் கூடாது. எனக்கு பெரிய ஒரு போராட்டமா இருந்தது. ஆனால், நான் கடைசியா சொல்லிட்டேன் நீங்க ப்ளாக் பண்ணி வைங்க. ஆனா நான் அவரு கிட்ட கேட்டுட்டு அவரு சரின்னா தான் நான் ஒத்துக்குவேன்னு'' என்றாள்.

அவன் நீண்ட தொரு பெருமூச்சு விட்டான். ''சரி நீ ஆச்சு உங்க பேரண்ட்ஸ் பிரதர் ஆச்சு'' என்றான்.

''அப்போ நம்மளே யூஸ் பண்ணிக்கலாமா அதை?'' என்றாள்.

''ஏய், உனக்கே அநியாயமா தெரியலை. நமக்கு இந்த ஃப்ளாட் போதாதா ரெண்டு பெட்ரூம் இருக்கு, கிச்சன் இருக்கு, ஹால் இருக்கு, சிட் அவுட் இருக்கு. வேறென்ன வேணும்?'' என்றான்.

''போதும்தான், அப்புறம் என்ன பண்றது அதை வச்சுக்கிட்டு?'' என்றாள்.

''ஒண்ணும் பண்ண வேண்டியதில்லை. வாடகைக்கு விட்டுடு'' என்றான்.

அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள். ''ஆமா, அக்காவோட ஃப்ளாட் சாவி. நம்ம கிட்டதான் இருக்கப்

போகுது. அதை வாடகைக்கு விடப் போறது இல்லை. அக்கா வந்தா தங்கிக்கலாம். உங்க பேரன்ட்ஸோ என் பேரன்ட்ஸோ வந்தா தங்கிக்கலாம். அங்கேயும் இரண்டு பெட்ரூம் ஹால் கிச்சன் எல்லாமே இருக்கேப்பா'' என்றாள்.

அவன் தலையாட்டினான், ''இதோ பாருடா, நாம நடுத்தரக் குடும்பம். கொஞ்சம் கொஞ்சமா தான் முன்னேறணும். எனக்கும் ஒரு உறுத்தல் இருக்கு. வசதியா வாழ்ந்தவ. உன்னைக் கொண்டு வந்து சிறையில் அடைச்ச மாதிரி ஒவ்வொண்ணுக்கும் என்னைக் கேட்கிற மாதிரி வைக்கிறோமோ அப்படின்னு ஒரு வருத்தம் இருந்தது. இந்த அப்ார்ட்மெண்ட்ஸை வாடகைக்கு விட்டுக்கோ, அதுல வர்ற வருமானத்தை உன் செலவுக்கு வச்சுக்கோ''

''ரெண்டு அப்பார்ட்மெண்ட் வருமானத்தை செலவு பண்ற அளவுக்கு எங்க வீட்டுக்காரர் பெரிய பணக்காரர் இல்லைங்க'' என்றாள் அவள்.

அவன் பெருமையாக சிரித்தான் ''அது புரிஞ்சாச் சரி''

''அதனால சிக்கனமா இருந்து நானும் எதிர்காலத்துக்கு சேமிப்பேனாம்'' என்றாள்.

''இங்க பார், இப்படி அப்படின்னுட்டு கடைசியா அடி மடியில கை வச்சு நீங்க கொஞ்சம் வாங்கிக்கங்கன்னு ஆரம்பிக்காதே. நான் ஒத்துக்க மாட்டேன்'' என்றான் அவன்.

''அது தெரியுங்க. உங்களுக்கு யாருங்க கொடுக்கறேன்னு சொன்னாங்க. நாங்க சின்னதா அப்பப்ப கிப்ட் வாங்கிக் கொடுத்துடுவோம். எங்களுக்குன்னு வாரிசு வரும்ல அவங்களுக்கு வச்சுக்குவோம்'' என்றாள்.

அவன் அவளை விழுங்குவது போல் பார்த்தான். "அவ்வளவு தூரம் யோசிச்சாச்சா?" என்றான்.

"ஆமாம், இப்ப என்ன நிச்சயம் நடந்து ஆறு மாசத்துக்குள்ள கல்யாணம் முடிஞ்சிருச்சு. கல்யாணம் முடிஞ்சு இப்ப பதினைஞ்சு நாள் ஆயிடுச்சு. நாள் ஓடிருது இல்லை. அடுத்த தலைமுறை எப்ப வேணாலும் தலை தூக்கலாம் இல்லை?" என்றாள்.

"ஆமா, அழகா ஒரு ஆண், அழகா ஒரு பொண்ணு" என்றான்.

"அதெல்லாம் நம்ம இஷ்டம்னு சொல்ல முடியாது. சப்போஸ் இரண்டுமே ஆணா பிறந்தா அப்புறமா ஒரு பொண்ணு" என்றாள் அவள்.

அவன் கடகடவென்று சிரித்தான். அவள் மறுபடியும் அவன் முகத்தை ஆழ்ந்து பார்த்தாள். "எப்படிங்க சரின்னு சொன்னீங்க?. அந்த ஜவுளிக்கடைக்கு வந்து ஒரே விசிட்ல சரின்னு சொன்னீங்க?" என்றாள் அவள்.

"உங்க அப்பா பேசின பேச்சு. ரொம்ப வேதனையோட சொன்னாரு எம் மகளோட முகத்துல சந்தோஷத்தைக் கொடுக்காத பணத்தை வச்சுட்டு நான் என்ன பண்றதுன்னு தெரியாம முழிச்சிட்டு இருக்கேன்தம்பி. எவ்வளவோ சம்பாதிச்சுட்டேன். ரொம்ப கெட்டிக்காரன், வெற்றி அடைஞ்சுட்டேன்னு நினைச்சேன். ஆனா இப்போதைக்கு நான் ரொம்ப தோத்துப் போனதா நினைக்கிறேன்னு ரொம்ப வருத்தத்தோடு சொன்னாரு. அவ்வளவு வேதனைப் பட்டியா நீ?" என்றான் அவன்.

"பின்னே சாப்பிடப் பிடிக்கலை, தூங்கப் பிடிக்கலை, வாழப் பிடிக்கலை. நரகங்க அந்த நாட்களெல்லாம்" என்றாள் அவள். கண்கள் கலங்கின.

"நோ, நோ, நானும் அதே மாதிரிதான் கஷ்டப்பட்டேன். இனிமே அதைப் பத்தி நாம நினைக்க வேண்டாம். இனிமே நாம சந்தோஷமா இருக்கப் போறோம். உனக்கு எது பிடிக்குதோ அதை செய். உங்க அப்பா ஜவுளிக்கடைக்கு வரச் சொன்னாருன்னா போகணும்னு விருப்பப்பட்டா போ." என்றான் அவன்.

அவள் வாஞ்சையாக அவனைப் பார்த்தாள். "இல்லைங்க, நான் ஜவுளிக்கடைக்குப் போகப்போறது இல்லை. நம்ம கன்சர்னுக்குத்தான் வரப் போறேன்.நாங்கள் இருக்கிறோம். அதை டெவலப் பண்ணலாம்" என்றாள் அவள்.

"ரொம்ப தாங்க்ஸ் டா" என்று மறுபடியும் அவன் பரிசுகளை வாரி இறைத்தான்.

"இன்னொண்ணு தெரியுமா உங்களுக்கு?" என்றாள்.

"நிறையத் தெரியும். உனக்கு எது வேணும்னு சொல்லு அதைச் சொல்லிக் கொடுக்கறேன்" என்றான்.

"இந்த லொள்ளுதானே வேண்டாங்கறது?" என்றாள்.

"ஏய். நீதானே தெரியுமான்னு கேட்டே ?"என்றான்.

"பேச விடுங்க" என்று சொல்லிவிட்டு அவள். "உண்மையிலே நான் எதுக்கு தெரியுமா இந்த கன்சர்னுக்கு வந்து சேர்ந்தேன்?"

அவள் கேள்விக்குறியாக அவளைப் பார்த்தான். "அந்த ஒரு சந்தேகம் எனக்கு இருந்துட்டேதான் இருந்தது மித்ரா".

"நீ வசதியான பொண்ணுன்னு தெரிஞ்ச உடனே எனக்கு இன்னும் அதிகமா போச்சு எதுக்கு வந்து சேர்ந்தேன்னு."

"எங்க அப்பா தான் வந்து சேரச் சொன்னாங்க" என்றாள்.

"அப்படியா?" என்றான் அவன் ஆச்சரியமாக.

"ஆமா, எங்க அப்பா அடிக்கடி சொல்வாங்க இப்போ ஏழைகள்லே மட்டும் ஆதரவு இல்லாதவங்க இருக்கறாங் கன்னு இல்லை. பணக்காரங்கள்ல கூட நிறைய பெற் றோருங்க ஆதரவு இல்லாம தான் இருக்காங்க. அவங்களுக் கெல்லாம் ஆதரவா ஏதாவது ஒண்ணு யாராவது செஞ்சா தேவலைன்னு சொல்லிட்டிருப்பாரு.அதுக்குத் தகுந்த மாதிரி நீங்க இந்த கன்சர்ன் ஆரம்பிச்சீங்களா. ஆனா, நிறைய பேரு சேவை சேவைன்னு சொல்றாங்க ஆனா நுழைஞ்ச பார்க்கும் பொழுது நிறைய ஏமாத்து இருக்குது.எங்க அப்பா இந்த கன்சர்னுக்கு நிறைய ஹெல்ப் பண்ணனும்னு நினைச்சாரு. அதனால தான் என்கிட்ட நீ அங்கே போய் மூணு மாசம் வேலை செய்ம்மா. அவங்க உண்மையா செய்றாங்களான்னு தெரிஞ்சுடும். அதுக்கப்புறம் நாம பெரிய அளவுல செஞ்சுடலாம்னாரு".

"அப்படியா, ஆனா இந்த வசதியானவங்ககிட்டேயே நாம பணம் வசூல் பண்ணிடறமே மித்ரா. அப்ப நமக்கு எதுக்கு அப்பாவோட உதவி ?"என்றான் அவன்.

"இல்லைங்க, இதையே விரிவு படுத்தி ஏழை பாழைங் கள்லயும் ஆதரவு இல்லாதவங்க இருக்காங்கள்ல. வயசான வங்க அவங்களுக்கு ஹெல்ப் பண்ணலாம்" என்றாள்.

"நல்ல யோசனைதான், அப்போ உண்மையான ஆர்வத்தோடுதான் நீ வந்தியா?" என்றான்.

"பின்னே சும்மா பொழுது போக்க வந்தேன்னு நினைச்சீங்களா? கண்டிப்பா இல்லை" என்றாள்.

அவன் மகிழ்ச்சியுடன் அவளை அணைத்துக் கொண்டான்.

"சரி, ஃபியூச்சரை ப்ளான் பண்ணுவோம், உங்க அப்பாவும் உட்கார்ந்து ப்ளான் பண்ணட்டும். என்னோட வருமானம் அவரோட பங்கு எல்லாத்தையும் வச்சு ஏதாவது பண்ண முடியுமான்னு பார்க்கலாம்" என்றான்.

"சரி இப்ப கிளம்பற ஐடியா இல்லையா?" என்றாள் அவள்.

"ஏய் நான் இன்னிக்கு லீவு போடட்டுமா?" என்றான்.

"ம் ஒரு வாரம் லீவு போட்டாச்சு. செந்தில் ஃபோன் பண்ணிட்டே இருக்காரு. நிறைய ஏதோ ஏதோ சால்வ் பண்ணனுமாம். நீங்க வந்தா தான் சரி பண்ண முடியுமாம்." கொஞ்சலாக சொன்னாள் அவள்.

"அவன் கிடக்கறான் தடியன். அவனுக்கு இந்த கஷ்ட மெல்லாம் புரியுமா?" என்றான் எரிச்சலாக.

அவள் சிரித்தாள்.

"என்ன பெரிய கஷ்டம், காலையிலே ஓடிட்டு சாயங் காலம் வந்துடுங்க. இந்த ஒரு ரெண்டு நாள் மட்டும்தான் மத்த நாளெல்லாம் நானும் கூட வந்துடறேன்" என்றாள்.

"ஏய். ஒரு பத்து நாளைக்கெல்லாம் வரவேண்டாம். நீ அங்க வந்தேன்னா எனக்கு வேலையே ஓடாது. அங்கே கலாட்டாவாதான் இருக்கும். சரி பத்து நாள் விட்டு அப்புறம் வருவியாம்."

"அதென்ன பத்து நாள் கணக்கு?" என்றாள்

"இந்த பத்து நாளும் நான் நினைச்சப்ப வருவேன்.எப்ப வேணாலும் வருவேன். அதுக்கு நீ இங்கிருந்தாதான் சௌகரியப்படும்" என்றான் அவன்.

"ஐயோ, ஐயோ" என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

"புரியவே புரியாதா உனக்கு?" என்றான் அவன் கோபத்தோடு.

அவள் செல்லமாக முறைத்தாள். "பின்னே இன்னைக்கு போறீங்களா இல்லையா?" என்றாள்.

"இன்னைக்கு ஒரு நாள் மாத்திரம் இருந்துக்கறேனே. இல்லைன்னா எங்காவது வெளியில போவாமா?" என்றான்.

"மார்னிங் மட்டும் போயிட்டு வந்துடுங்க. ஆஃப்டர்னூன் போகலாம்" என்றாள் அவள்.

அதே நேரத்தில் செல் ஃபோன் ஒலித்தது.

அவள் பார்த்தாள். தணிகாசலத்திடம் இருந்து போன். "அம்மா, உங்க அம்மாவோட ஒரே தொல்லையா இருக்கு பார்த்து நாலு நாளாச்சு பார்க்கணுமாம். இன்னைக்கு மத்தியானம் அங்கே வராளாம்" என்றார்.

"அப்பா இது என்ன கேள்வி ,நீங்க எப்ப வேணாலும் வரலாம்பா" என்றாள் அவள்.

"வரலாம்மா. நீங்க இருக்கீங்களான்னு தெரியணும். ஏதாவதுவேலை இருக்குமோ என்னமோ?" என்றார்.

"சரி, நீங்க இன்னிக்கு மத்தியானம் லஞ்சுக்கு வந்திடுங்க" என்றாள் மகள் ஆசையாக.

"சரிம்மா" என்றார் அரை மணி நேரம் கழித்து பிரபுகுமாரிடம் இருந்து போன் வந்தது.

"ஏய் வீட்லதான் இருக்கீங்களா? நானும் அண்ணியும் வரோம்" என்றான்.

பாரியும் அவளும் சிரித்தார்கள். "சரி வாங்க, அப்பா அம்மா கூட லஞ்சுக்கு வராங்க. நீங்களும் இங்க லஞ்சுக்கு வர்றீங்களா?" என்றாள்.

உடனே அண்ணி பிரபுகுமாரிடம் ஃபோனை வாங்கிக் கொண்டு "எல்லாருக்கும் நீ லஞ்ச் பண்ணிடுவியா என்ன? சரி கவலைப்படாதே. நான் சாம்பார், ரசமெல்லாம் பண்ணி எடுத்துட்டு வந்துடறேன். நீ அங்க பொரியல்மட்டும் பண்ணு" என்றாள்.

"சரிங்க அண்ணி "என்றாள் இவள் சந்தோஷமாக.

சற்றுக் கழித்து சரசுவிடமிருந்து போன் "தம்பி, மித்ராகிட்ட ஃபோனைக் கொடு" என்றாள் அவள்.

மித்ராவிடம் போனைக் கொடுத்தான்."மித்ரா, நீ சமையல் எல்லாம் பண்ணிட்டு இருக்காதே. உனக்கும் சேர்த்து நான் பண்ணி எடுத்துட்டு வரேன்" என்றாள் சரஸ்வதி.

"இல்லைங்க அக்கா. எங்க அப்பா அம்மா வரேன்னாங்க. அண்ணன் அண்ணி வேற வரேன்னாங்க. அண்ணி சாம்பார், ரசம் எல்லாம்எடுத்துட்டு வரேன்னாங்க. நான் இங்க சாதம் வச்சு பொரியல் பண்ணினா போதும்"

"அதைத்தான் வேணாம்னு சொல்றேன். நான் இங்க ஏழெட்டுப் பேருக்கு செஞ்சாச்சு. நான் கொண்டு வரேன். நீ கவலையே படாதே" என்றாள்.

"அக்கா எதுக்குக்கா சிரமம்?" என்றாள்.

"இங்க பாரு. பொண்ணே நீங்க ரெண்டு பேரும் ரெஸ்ட் எடுங்க. அவங்களெல்லாம் வரட்டும். நான் சரியா ஒரு மணிக்கு வரேன். அது வரைக்கும் நீங்க ஃப்ரீயா ரெஸ்ட் எடுங்க" என்று சிரித்தாள் சரஸ்வதி.

வனமாலி அவளிடம் இருந்து போனை வாங்கிக் கொண்டு "ஆமாம்மா, ரெஸ்ட் புரியுதா. அவங்கிட்ட கொடு ?"என்றான்.

பாரியிடம் கொடுத்தாள் மித்ரா வெட்கச் சிரிப்புடன். "ஏய் மாப்ளே, மச்சான் மத்தியானம் உங்க அக்கா சாப்பாடு கொண்டு வராடா. நானும் வரேன் பொண்ணு வீட்ல இருந்தெல்லாம் வராங்களாமா. பத்து பேருக்கு வித விதமா செஞ்சு எடுத்துட்டு வந்துடறோம் விடு.நீயும் மித்ராவும் மதியானம் வரைக்கும் ரெஸ்ட்டு ரெஸ்ட் எடுப்பீங்களாம்" என்று ஒரு மாதிரியாக சொல்லி விட்டு கலகலவென்று சிரித்தான்.

"மச்சான் நீங்க சும்மா இருங்க" என்றான்.

"நாங்க சும்மா இருக்கோம்டா. நீ அப்படி இருக்காதே" என்று சொல்லிவிட்டு வனமாலி போனை துண்டித்துக் கொண்டான்.

"பாருங்க, எல்லாரும் நம்மை கேலி பண்றாங்க" என்று அவன் மார்பில் அடைக்கலம் ஆனாள்.

"எல்லாரும் ரொம்ப கனகாரியமா ரெஸ்ட் எடுக்கச் சொல்லியிருக்காங்க. என்ன அம்மா அப்பா தான் வர முடியலை. நாம இந்த வீக் எண்ட் அங்க போயிடுவோம்".

சரி என்று அவள் மகிழ்ச்சியாக தலையாட்டினாள். "இரு மச்சான். முதல் முதல்ல ஆர்டர் போட்டிருக்காரு. சும்மா

இருக்கக் கூடாது அப்படின்னு. இப்ப என்ன பண்ணலாம்?" என்று அவன் ஆரம்பிக்க...

"ஹலோ. அதெல்லாம் பகல் நேரத்துல கிடையாது" என்றாள் அவள்.

"சரி சரி பகல் நேரத்துல வேண்டாம். நாம சும்மா பேசிட்டாவது இருக்கலாமே" என்று அவளை இழுத்துக் கொண்டு பால்கனி சென்றான்.

மித்ரா "இங்க இருந்து பாரு, ரொம்ப அழகா இருக்கும். இங்க சுத்து வட்டாரத்துல நிறைய வீடுகள் தனி வீடுங்க. மரங்களெல்லாம் நிறைய வச்சிருக்காங்க. பார்க்கறதுககு ரொம்ப நல்லாயிருக்கும். வா வேடிக்கை பார்க்கலாம்" என்றான்.

அவளும் அவன் அருகிலே அமர்ந்து கொண்டாள். எல்லையில்லாத மகிழ்ச்சியுடன் எல்லையில்லாத நிம்மதியுடன். பாரி அப்பொழுது ஒன்று சொன்னான். "மித்ரா ஒரு விஷயம் தெரியுமா? நம்ம வாழ்க்கையில ஏற்பட்ட இந்த நிகழ்ச்சிகள் எல்லாத்துலயுமே ஒவ்வொரு சமயத்திலயும் ஒவ்வொரு திருப்பம். ஆனா அந்தத் திருப்பம் எல்லாமே ஃபோன் கால்ஸ்ல தான் வந்திருக்கு தெரியுமா? எவனோ ஒருத்தன் மிரட்டக் கூட செஞ்சான்" என்றான் அவன்.

"அப்படியா ? என்னையும்தான் . ஆனா அண்ணன் ஆளைக் கண்டு பிடிச்சு டாக்கிள் பண்ணினாரு"என்றாள்.

"அதை விடு திருப்பங்களுககு வா"

"அதான் பேச்சிலே எல்லாம் நடந்திருக்கு. ஏன் நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கறேன்னு சம்மதம் சொன்னது கூட உங்க அப்பா என்கிட்ட பேசின பேச்சினாலதான்"

என்றவன் அவளை சுற்றும் முற்றும் பார்த்து விட்டு தன் அருகிலே இழுத்தான்.

"என்னங்க இது" என்று அவள் கெஞ்ச அறைக்குள்ளே இழுத்துக் கொண்டு போனான். "இங்க பாருப்பா மனசுல எதையும் வச்சுக்காம நாம மொதல்லயே பேசியிருக்கணும், இத்தனை பிரச்சினை வந்திருக்காது. அதனால இனிமே எதை நினைச்சாலும் என்கிட்டே பேசிடணும் நானும் உன் கிட்ட பேசறேன் புரியுதா.உன் மனசுக்குச் சொல்லிரு. பேசிவிடு மனமே பேசிவிடு அப்படின்னு ஒரு ஆணை போட்டுடு."

அவள் குனிந்து "பேசிவிடு மனமே பேசிவிடு"ன்னு ஆணை போட்டிருக்கேன். இப்போ என்னமோ பேசணுங் குதே" என்றாள் அவள்.

"பேசச் சொல்லு" என்றான் அவன்.

அவள் பேசஆரம்பித்தாள். அவன் கேட்க ஆரம்பித்தான். சற்று கழித்து அவன் பேச ஆரம்பித்தான் அவள் கேட்க ஆரம்பித்தாள்.

இருவரும் மகிழ்ச்சியில் இணைந்து சிரித்துக் கொண்டார்கள். இதயங்கள் இரண்டும் அப்படிப் பேசி கொண்டன. அன்பைப் பரிமாறிக் கொண்டன. நிறைவே அங்கே நிறைந்திருந்தது.

(நிறைவுற்றது)